உ

தயவு

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

திருச்சிற்றம்பலம்

திருவருட்பா விரிவுரை

# திருவருள் முறையீடு (பிற்பகுதி)

## பதிப்புரை

திருவருள் துணைகொண்டு திருவருள் முறையீட்டின் பிற்பகுதி வெளிவருகிறது. இந்நூல் திருவருட்பா விரிவுரை வரிசையில் 10-வது ஆகும். இவ்விரிவுரை எழுதி உதவிய பேராசிரியர், உயர்திரு. பாலூர், கண்ணப்ப முதலியார் அவர்களுக்கு என் உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த 10-ஆவது வெளியீட்டிற்குப் பொருளுதவி செய்த அருளாளர், திருச்சி, தொழிலதிபர், **உயர்திரு.பெ.சு.சுந்தரவடிவேலு** அவர்கள். அவர்கள் தம் முயற்சியால் உயர்ந்தவர். அவர்களுக்கு எல்லா நலங்களும் மிகுதியும் பெருக என்று அருட்பெருஞ்ஜோதி ஆண்டவனை மனமொழி மெய்களால் வழுத்துகின்றேன்.

**"கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பே!**
**காணார்க்கும் கண்டவர்க்கும் கண்ணளிக்கும் கண்ணே!**
**வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரமளிக்கும் வரமே!**
**மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதிகொடுக்கும் மதியே!**
**நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநின்ற நடுவே!**
**நரர்களுக்கும் சுரர்களுக்கும் நலங்கொடுக்கும் நலமே!**
**எல்லார்க்கும் பொதுவில்நடம் இடுகின்ற சிவமே!**
**என்னரசே யான்புகலும் இசையுமணிந் தருளே"**

**-திருவருட்பா-விண்ணப்பம்**

திருவருள் ஓர் அரிய ஞானக் கருவூலம். இதில் "மெய்ஞ்ஞான விருப்புடைய" தொடக்க நிலையினருக்கும், "சும்மா இருக்கும் சுகம்" கைவரப்பெற்ற அனுபூதிமான்களுக்கும் அவரவர்களின் தகுதிக்கேற்றவாறு அரும் பொருள் கிடைக்கும். நமது வடலூர் இராமலிங்க அடிகளார், பிரம்ம சமாஜத்தைச் சேர்ந்த ஶ்ரீதர ஸ்வாமி நாயகரவர்களுக்கு முடிவாக "நாமெல்லாம் நமது பக்குவத்திற்குத் தக்கபடி விக்கிரக ஆராதனை செய்து, அதனால் அருளைப் பெற்று, அதனால்

அறிவு விளங்கி, அதனால் பிரம்ம சுகத்தை யனுபவிக்கலாம்" என்று விளக்கியுள்ளார்கள். அன்றியும், திருவடிப் புகழ்ச்சியில்,

**"எங்கேமெய் யன்பருளர் அங்கே நலந்தர**
**எழுந்தருளும் வண்மைப்பதம்"**

என்று புகழ்ந்துள்ளார்கள். அம் முறையில் இறைவனின் திருவிளையாடல்களை மிக அழகாக விளக்குவது இந்திருவருள் முறையீடு.

"திருநீலகண்டம்-இறைவனின் தியாகத்தின் சின்னம்" "இளம்பிறை-இறைவனை அண்டியவர்கள் கைவிடப்படமாட்டார்கள்" பாம்பு-கொடியவர்களுக்கும் இறைவனிடம் புகலுண்டு" "பகையுணர்ச்சி யுடையவர்களும் இறைவனிடம் பகை மறந்து வாழ்வார்கள் என்பதற்குச் சந்திரனும், பாம்பும் எடுத்துக் காட்டு" என்பன போன்ற சீரிய கருத்துக்களைத் தமக்கே உரிய எளிய முறையில் இந்நூலின் உரை ஆசிரியர் ஆங்காங்கு விளக்கியுள்ளார்கள். சன்மார்க்க அன்பர்கள் இந்நூலையும் வாங்கிப் படித்துப் பயனடைவதுடன் வட ஆர்க்காடு மாவட்ட சன்மார்க்க சங்கம் மேற்கொண்டுள்ள முயற்சிக்கும் ஆதரவு தருமாறு வேண்டுகிறேன்.

**வேலூர்,**
**10-6-68.**

**ஊ.வ.தட்சணாமூர்த்தி**
**தலைவர், வ.ஆ.மாவட்ட சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்.**

- - - - -

*This e-book can be downloaded for free from*
*http://www.vallalar.org*

உ

திருச்சிற்றம்பலம்

# உரை ஆசிரியர் முன்னுரை

அருட்பெருஞ்சோதியாம் அம்மை அப்பருடைய திருவருளினால் திருவருட்பாவில் முதல் திருமுறையின் ஆறாவது பகுதியாகிய திருவருள் முறையீட்டின் விரிவுரை இந்த நூலில் முடிவுறுகிறது. இதில் 120 முதல் 232 வரையில் உள்ள பாடல்களுக்குரிய உரைகள் அமைந்துள்ளன. இதற்கு முன்னுள்ள நூலில் ஒன்று முதல் 119 பாடல்களுக்குரிய உரை எழுதப்பட்டுள்ளது என்பதை ஆன்மநேய ஒருமைப்பாடுடைய அன்பர்கள் நன்கு அறிவர்.

திருவருள் முறையீடு மாணிக்கவாசக சுவாமிகள் பாடியுள்ள நீத்தல் விண்னப்பம் போலவும், திருநாவுக்கரசு சுவாமிகள் பாடியுள்ள திருவிருத்தம் போலவும் அமைந்துள்ளது என்பதை ஊன்றிப் படிக்கின்றவர்கள் உணராமல் இருக்க முடியாது. மேலும், ஆழ்ந்து படிக்கும்போது, திருவருள் முறையீடு, நீத்தல் விண்ணப்பத்தை அடி ஒற்றியே பாடப்பட்டுள்ளது என்று கூறினும் தவறில்லை. முன்னவர் விண்ணப்பம் என்றனர். பின்னவர் முறையீடு என்றனர். இதுவே வேறுபாடு. இறைவன் திருமுன் தம் குற்றங்களைக் கூறித் திருவருள் புரியுமாறு வேண்டுவதில் இரண்டும் ஒரே போக்குடையன.

திருவருள் முறையீட்டில் இருநூற்று முப்பத்திரண்டு பாடல்கள் உள்ளன. இவற்றுள் 154 வது பாடல் 183 வது பாடல் முருகனைப் பற்றியும், 184 வது பாடல் விநாயகரைப் பற்றியும் அமைந்து, ஏனைய 229 பாடல்களுள் சிவபெருமானைப் பற்றியே பாடப்பட்டுள்ளன. வள்ளலார் திருவருள் முறையீடு என்னும் தலைப்பில் பற்பல பாடல்களைப் பாட எண்ணியிருந்தார் என்பது இந்நூலில் 232 பாடல்களை மட்டும் காண்பதிலிருந்து புலனாகிறது. ஒருவேளை 232 பாடல்களுக்கு மேலும் பாடப்பட்ட பாடல்கள் நமக்குக் கிடைக்க வாய்ப்பில்லாமல் போயிருக்கலாம். அல்லது 232 பாடல்கள் வரையில் நம் ஐயா பாடி ஏனையவற்றைப் பாடலாம் என்று எண்ணி இருந்து அவற்றிற்குமேல் பாடத் திருவருள் தூண்டுதல் இன்மையின் இந்த அளவில் பாடி நிறுத்தியும் இருக்கலாம்.

நம் ஐயா, விண்ணப்பக் கலி வெண்பாவிலும், நெஞ்சறிவுறுத்தலிலும், சிவநேச வெண்பாவிலும், காப்புச் செய்யுள் பாடிய பின்பே நூலைத் தொடங்கி யுள்ளனர். மகாதேவ மாலையின் முதல் செய்யுள் அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தத்தால் அமைந்து, ஏனைய நூறு செய்யுட்களும் எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தால் பாடப்பட்டுள்ள அமைப்பு முறையினைப் பார்க்கும்போது, மகாதேவ மாலையின் அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் காப்புச்செய்யுள் என்று கொள்ளுவதில் தவறில்லை என்க. ஆனால், திருவருள் முறையீட்டில் அத்தகைய காப்புச் செய்யுள் ஒன்றும் இன்றி, நூலைத் தொடங்கி இருப்பதை நாம் சிறிது சிந்திக்கக் கடமைப் பட்டிருக்கிறோம். இந்தச் சிந்தனையின் பயனாகத் திருவருள் முறையீட்டில் அமைந்துள்ள விநாயகரைப் பற்றிய பாடலும்

(184) முருகப் பெருமானைப் பற்றிய இருபாடல்களும் ( 154, 183) காப்புச் செய்யுள்களாக இருக்கலாமோ என்று கருத வேண்டி இருக்கிறது. ஆனால், ஈண்டு ஓர் ஐயம் அன்றோ இருத்தல் வேண்டும்? ஆனால், ஈண்டு ஓர் ஐயம் எழலாம். அதாவது காப்புச் செய்யுளாயின் நூலுக்கு முன் அன்றோ இருத்தல் வேண்டும்? என்பது. மேலே காட்டப்பட்ட விநாயகர்,முருகர் பாடல்கள் நூலுக்கு இடையில் இருக்கின்றன. முன்னர் இருக்கவேண்டிய அப் பாடல்கள் இடையில் அமைத்திருப்பதற்குக் காரணம் ஒரு வேளை ஏடு எழுதுவோரால் ஏற்பட்ட மாறுதலாக இருக்கலாமோ என்று யூகிக்க இடம் இருக்கிறது. இவ்வாறு காரணம் கருதாமல் இருந்தால் அம்மூன்று செய்யுட்களும் இறைவனைப் பற்றியே பாடிச் செல்லும் பாடல்களுக்கு இடையே அமையக் காரணம் கூற இடம் இல்லாமல் போகும். ஆனால் இடையில் அம் மூன்று பாடல்கள் அமைந்திருப்பதற்குக் காரணத்தை நாம் கற்பித்துக் கூறவேண்டுமானால் நம் ஐயா விநாயகப் பெருமானையும், முருகப் பெருமானையும், இறைவனையும் ஒன்றாகவே கருதிப் பாடியுள்ளார் என்று ஒருவாறு கூறலாம். இது நிற்க.

திருவருள் முறையீட்டில் இறைவன் தமக்கு நேர்முகமாக வந்து திருவருள் செய்த அற்புதச் செயலை 49ஆம் செய்யுளில் நம் ஐயா குறித்துள்ளனர். இதை ஊன்றிச் சிந்திக்கவேண்டும். நெஞ்சிற்கு அறிவுறுத்தும் முறையில் அமைந்த பாடல்களை 116,127,145,180,202, 225, 229ஆம் எண்ணுள்ள செய்யுள்களில் காணலாம். தமிழில் உள்ள செவ்வழிப் பண்ணைப் பற்றிய குறிப்பு 109-ஆம் பாட்டினால் அறிய வருகிறது. பஞ்சாட்சரத்தைப் பற்றிய சிறப்புகள் 91, 136, 192, 229-ஆம் பாடல்களில் அமைந்துள்ளன. உலக வழக்கில் கூறப்படுகின்ற பழமொழிகள் 10,13,61,167,169, 187, 220-ஆம் செய்யுட்களில் குறிக்கப்பட்டுள்ளன.

பொதுவாக 163வது செய்யுள் நால்வர்களின் தமிழைப் புகழ்கிறது. திருஞானசம்பந்தரைப் பற்றி 132, 192-ஆம் பாடலிலும், மாணிக்கவாசகரைப் பற்றி 82, 135-ஆம் பாடல்களிலும், அப்பரைக் குறித்து 133, 136, 152-ஆம் செய்யுட்களிலும், சுந்தரரைப் பற்றி 8, 28, 31, 134, 147, 153, 157, 203 ஆம் செய்யுட்களிலும் புகழ்ந்து பாராட்டிப் பாடப்பட்டிருப்பதைக் காணலாம்.

உவமைகள் பல இதில் எடுத்தாளப்பட்டுள்ளன. அவற்றை 22, 24, 26, 37, 53, 56, 57, 60, 62,63,70, 71, 81, 83, 98,100, 101, 102, 105, 111,115, 117, 118,130, 131, 141,142, 143, 144, 161,162, 174,186,190,191, 194,208, 209, 215, 218, 222,228-ஆம் எண்ணுள்ள பாக்களில் காண்க.

திருவிளையாடல் புராணக் கதைகளும் இதில் குறிக்கப்பட்டுள்ளன. அக்கதைகள் இணைந்துள்ள பாடல்கள் 7, 21, 27, 33, 43, 45, 54, 55, 93, 96, 119, 122, 125, 129, 157, 160 என்பன.

இறைவனை வணங்காத் தலை, காணாக் கண், அவன் புகழைக் கேளாச் செவி, வாழ்த்தா வாய், இவை பயனற்றவை என்பனவற்றை 141, 142, 143, 144 பாடல்கள் நமக்கு உணர்த்துகின்றன.

இறைவனுடைய பெருங்கருணையின் சிறப்புகளும், அவனுடைய சொரூப வடிவத்தின் திருப்பெயர்களும், அவன் தேவாதி தேவனாய் விளங்கும் மேன்மையும், எல்லாவற்றிற்கும் அவனே மூல காரணன் என்பதும் ஐயாவின் முறையீட்டின்

முறைகளும், மற்றும் பல அரிய கருத்துகளும் இந்நூலில் அமைந்திருப்பதைக் காணலாம். இதில் அமைந்துள்ள பாடல்கள் கல்லான நெஞ்சையும் கரையச் செய்யும் என்று கூறுவோமானால், அது மிகை ஆகாது. நம் வள்ளலாரின் இலக்கண இலக்கியப் புலமைகளையும் அவர் அருளாளர்களின் அருந்தொடர்களையும், கருத்துகளையும் இந்நூலில் எடுத்தாண்டுள்ள இடங்களையும் இந்நூலின் உரையில் தெளிவாகக் காணலாம்.

இக்காலத்தில் ஆங்கிலத்தை மிகுதியாகப் படித்து விட்டுத் தமிழை எழுதவும், படிக்கவும் மட்டும் தெரிந்து கொண்டு தமிழைக் குறைகூற முற்படுகின்றவர்களும் இருக்கின்றனர். அவர்கள் தமிழைப் பற்றிக் கூறும் குறைகளில் ஒன்று, தமிழ் இலக்கியங்களில் நகைச்சுவைப் (Humorous) பாடல்கள் இல்லை என்பது. அவ்வாறு இவர்கள் கூறுதற்குக் காரணம் தமிழ் நூல்களை ஆழ்ந்து படியாமையே ஆகும். ஒல்காப் பெருமை வாய்ந்த தொல்காப்பியர் எண் வகை மெய்ப்பாடுகளைக் குறிக்க வந்தபோது, நகைச்சுவையாகிய மெய்ப் பாட்டை முதற் கண் குறிப்பிட்டிருக்கும்போது, தமிழ் இலக்கியங்களில் நகைச்சுவை இல்லை என்று கூற நா எப்படித்தான் துணிந்ததோ யான் அறியேன். தொல்காப்பியர் கூறும் நூல்பா,

**"நகையே அழுகை இனிவரல் மருட்கை**
**அச்சம் பெருமிதம் வெகுளி உவகைஎன்**
**நப்பால் எட்டே மெய்ப்பா டென்ப"**

என்பது. ஆகவே, இலக்கிய நூல்களையும், தோத்திர நூல்களையும் ஊன்றிப் படித்தால் நகைச்சுவைப் பாடல்களைக் காணலாம். இந்த மரபை ஒட்டியே நம் ஐயாவும் திருவருள் முறையீட்டின் 139-ஆம் செய்யுளை நகைச்சுவை அமைந்த பாடலாகப் பாடி இருப்பதைப் படித்து இன்புறவும்.

இன்னோரன்ன அருமை, பெருமைகட்கு உறைவிடமான இந்நூலை, ஆன்மநேய ஒருமைப்பாட்டுணர்ச்சி மிக்க நல்லவர்கள் வாங்கி, வட ஆர்க்காட்டு மாவட்ட சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கத்தினர்க்கு ஊக்கம் அளித்து, அவர்கள் அருட்பா முழுமைக்கும் உரை எழுதி வெளியிட எண்ணியுள்ள எண்ணத்திற்குப் பெருந்துணை செய்ய வேண்டுகின்றேன்.

அடியவர்களை ஈர்த்து ஆட்கொள்ளும் அம்மை அப்பர், அடியேனுக்கும் திருவருள் புரிய என்னை இந்நூலுக்கு உரை எழுதப் பணித்தமைக்கு அப் பெருமானுடைய பொன்னார் திருவடிகளை வந்தித்து வாழ்த்தி வணங்குகின்றேன்.

**"அம்மை அப்பர் அகம்"**
**43, விஜயவிக்னேசுவரர் கோவில்தெரு,**
**சூளை, சென்னை-7.**
**12-6-68.**

**இங்ஙனம்,**
**பாலூர்-கண்ணப்ப முதலியார்.**

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# திருவருள் முறையீடு

## (இரண்டாம் பகுதி)

- - - - -

**அலைஎழுத் தும்தெறும் ஐந்தெழுத் தால்உன்னை அர்ச்சிக்கின்றோர்**
**கலைஎழுத் தும்புகழ் கால்எழுத் திற்குக் கனிவிரக்கம்**
**இலைஎழுத் தும்பிறப் பீடெழுத் தும்கொண்ட எங்கள்புழுத்**
**தலைஎழுத் தும்சரி ஆமோ நுதல்கண் தனிமுதலே.**

(பொ-ரை.) "நெற்றிக் கண்ணையுடைய ஒப்பற்ற முழு முதற் பரம்பொருளே! பிறவிதோறும் அலைந்து அலைந்து வாழ அமைந்த எழுத்தை ஒழிக்கும் பஞ்சாட்சர மந்திரம்கூறி உன்னை வழிபடுகின்றவர்களின் கலைஞான எழுத்துகளுக்கும், உன் திருவடி ஞானத்திற்கும் நான் காட்டக்கூடிய கனிவும், இரக்கமும் என்னிடம் இல்லை; பிறவிகள் தோறும் எழுதப்பட்டுவரும் புழுக்கள் நிறைந்த மக்களாகிய எங்கள் தலை எழுத்து, கலைஞானத்திற்கும், திருவடி ஞானத்திற்கும் சரி ஆகி விடுமா?" (எ-து.)

(அ-சொ.) தெறும் - அழிக்கும். ஐந்தெழுத்து - பஞ்சாட்சர மந்திரம்; அர்ச்சிக்கின்றோர்- வழிபாடு செய்பவர். கலைஎழுத்து-கலைஞான எழுத்து. கனிவு-உருக்கம். பிறப்பீடு-பிறவிதோறும். கால்-எழுத்து திருவடி ஞான எழுத்து.

(இ-கு.) அலை எழுத்து, வினைத்தொகை. ஐந்தெழுத்து, தொகைக் குறிப்பு. கனிவிரக்கம், உம்மைத்தொகை.

(வி-ரை.) மக்களுக்கு மூன்று வகையான வினைகள் உண்டு. அவை, சஞ்சிதம், பிராரர்த்தம், ஆகாமியம் என்பன. சஞ்சித வினையாவது முன்பிறவியில் தேடிக் கொண்ட வினையும், அனுபவித்தது போக மிகுந்துள்ள வினையும் ஆகும். பிராரர்த்த வினையாவது முன்பிறவியில் தேடிய வினையை இப்பிறவியில் அனுபவிக்கும் வினை. ஆகாமிய வினையாவது இந்தப் பிறவியில் தேடிக் கொள்ளும் பாவ புண்ணியங்கள். இந்த வினைகளையே நம் ஐயா இங்குக் குறிப்பிட்டுப் பேசுகிறார். அலை எழுத்துச் சஞ்சித வினையையும் பிறப்பீடெழுத்து, ஆகாமிய வினையையும், தலை எழுத்துப் பிராரர்த்த வினையையும் குறித்து நிற்கின்றன.

ஐந்தெழுத்தின் மாண்மை முதல் வரியில் குறிப்பிட்டனர். இந்த மந்திரம், சஞ்சித வினையை அழிக்கவல்லது. இந்த உண்மையினைத் திருஞான சம்பந்தர்

“இடர்ஆன கெடுப்பன ஐந்தெழுத்துமே” “இம்மைவினை அடர்த்து எய்தும் போழ்தினும், அம்மையினும் துணை அஞ்செழுத்துமே” “வித்தகநீறணிவார் வினைப்பகைக்கு அத்திரமாவன ஐந்தெழுத்துமே” என்று கூறுதல் காண்க. இவற்றை உட்கொண்டே “அலை எழுத்தும் தெறும் ஐந்தெழுத்தும்” என்றனர்.

இறைவனைப் பஞ்சாட்சர மந்திரத்தையே கூறி அர்ச்சிக்கலாம் என்னும் குறிப்பை “அஞ்செழுத்தால் உன்னை அர்ச்சிக்கின்றோர்” என்னும் தொடரில் அறிவுறுத்தி யுள்ளனர். இறைவனுக்கு வடமொழி தென்மொழி இரண்டிலும் அர்ச்சனைகள் நடந்து வந்தன. இந்த உண்மையினைத் திருஞான சம்பந்தர், திருஅச்சிறுபாக்கத் தேவாரத்தில்,

**“தம்மலர் அடிஒன் றடியவர் பரவத்**
**தமிழ்சொலும் வடசொலும் தாள்நிழல் சேர**
**அம்மலர் கொன்றை அணிந்த எம்மடிகள்**
**அச்சிறு பாக்கம தாட்சிகொண் டாரே”**

என்று உணர்த்துதல் காண்க.

இறைவர் சுந்தரரைத் தமிழால் தம்மைப் பூசிக்கக் கட்டளை இட்டார் என்பதைப் பெரிய புராணம்,

**“மற்றுநீ வன்மைபேசி வந்தொண்டன் என்னும் நாமம்**
**பெற்றனை நமக்கும் அன்பில் பெருகிய சிறப்பில் மிக்க**
**அர்ச்சனை பாட்டே ஆகும் ஆதலால் மண்மேல் நம்மைச்**
**சொற்றமிழ் பாடுகென்றார் தூமறை பாடும் வாயார்”**

என்று கூறுதல் காண்க. ஆகவே நாமும் நம் மொழிப்படி ஐந்தெழுத்தால் அர்ச்சனை செய்து இறைவன் திருவருளைப் பெற முந்தவேண்டும்.

கலை எழுத்தாவன ஈண்டுச் சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம், பவம் அதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம், உவமை இலாக் கலை ஞானம், உணர்வரிய மெய்ஞ்ஞானம் என்பன. இந்த ஞானத்தைப் பெற வல்லவர்கள் இறைவனை ஐந்தெழுத்தால் அர்ச்சிக்கின்றவர்களே ஆவார். இதனால்தான் நம் ஐயா “ஐந்தெழுத்தால் உன்னை அர்ச்சிக்கின்றோர் கலை எழுத்து” என்று கூறினார்.

கால் எழுத்து என்பன இறைவனுடைய பரஞானம் அபரஞான மாகிய திருவடிப்பேற்றால் அடையும் பேறு. இதனால்தான் இது “புகழ் கால் எழுத்து” எனப்பட்டது. இறைவனுடைய திருவடி ஞானமாம் பேற்றினைப் பெறுதற்கு மன உருக்கமும், ஜீவகாருண்யமும் மிக மிக இன்றியமையாதன. இவ் விரண்டும் தம்பால் இல்லையே என்னும் ஏக்கத்தால்தான் “கால் எழுத்திற்குக் கனிவு இரக்கம் இலை” என்றார். ஒருவர்க்குத் தலை எழுத்து அமைவதற்குக் காரணம் பிறவிதோறும் ஈட்டும் பாவ புண்ணியங்களைப் பொருத்தது என்பதை உணர்த்தவே “பிறப்பீடெழுத்தும்” எனப்பட்டது. நம் உடம்பு புழுக்கள் மலிந்த உடம்பு ஆதலின் “புழுத்தலை” என்று கூறினார். “புழுத்தலைப் புலையனேன்” என்பது திருவாசகம். தலைமீது வைத்துக் கூறினாரேனும், மற்றைய உறுப்புகள் தோறும் புழுக்கள் உண்டு என்பது தானே

தெரியவரும். மணிமொழியார் "முழுப் புழுக்குரும்பை" என்றும் தாயுமானார் "மொய்த்து வெங்கிருமி தத்து கும்பியை" என்றும் கூறுதல் காண்க.

ஐந்தெழுத்தும் கலை எழுத்தும், கால் எழுத்தும் மூவினைகளை நீக்கும் பெருமை வாய்ந்தவை. ஆனால் என் புன் தலை எழுத்து அந்தப் பெருமைக்கு ஒப்பாகுமா என்பதே நம் ஐயா இந்தப் பாட்டின் மூலம் அறிவிக்க வந்த கருத்தாகும்.

**ஆட்சிகண் டார்க்குற்ற துன்பத்தைத் தான்கொண்டருள்அளிக்கும்**
**மாட்சிகண் டாய்எந்தை வள்ளல் குணம்என்பர் மற்றதற்குக்**
**காட்சிகண் டேன்இலை ஆயினும் முன்அருள் கண்டத்தில்ஓர்**
**சாட்சிகண் டேன்களி கொண்டேன் கருணைத் தடங்கடலே.**

(பொ-ரை.) "கருணை நிரம்பிய பெருங்கடலே! "ஆதிகாரத்தைக் கையில் கொண்டவர்களுக்கு நேர்ந்த துன்பத்தை இறைவன் ஏற்றுக்கொண்டு திருவருள் பாலிக்கும் மாண்பு எங்கள் வள்ளலாம் சிவபெருமானின் குணம்,' என்று அனுபவ ஞானிகள் கூறுவர். அதன் உண்மையினை நான் நேரே என் கண்ணால் பார்த்தறியேன் என்றாலும், முன் ஒரு சமயம் திருப்பாற் கடலில் விடம் தோன்ற அதனைக் கண்டு தேவர்கள் ஓட, அவர்களின் துன்பத்தை ஒழிக்க அவ்விடத்தை நீ உண்டு அதனை உன் கழுத்தில் நிறுத்தியுள்ள காட்சிப் பொருளை மட்டும் கண்டுள்ளேன்; இதனால் மகிழ்வு கொண்டேன்!" (எ-து.)

(அ-சொ.) தடம் - பெரிய. மாட்சி-மாண்பு.

(இ-கு.) தடம்- உரிச்சொல், கடல், உவம ஆகுபெயர், கண்டாய்; முன்னிலை அசைச்சொல். மற்று-அசைச்சொல்.

(வி-ரை.) ஆட்சி கண்டார்கள், திருமால், பிரமன், இந்திரன் முதலிய தேவர்கள். இவர்களின் ஆட்சி, காத்தல் படைத்தல், திசைகாவலராக இருத்தல். வள்ளலார் இங்குக் கூற வந்த கருத்து, சிவனார், தேவர்களின் துன்பத்தை ஏற்று அவர்கட்குத் திருவருள் புரிந்தது போலத் தம் துன்பத்தையும் ஏற்றுத் திருவருள் புரிய வேண்டும் என்பதாம். அப்படி இறைவர் பிறர் துன்பத்தைப் போக்குபவர் என்பதற்கு அவர் கண்டத்தின் கருமையே சாட்சி என்றும் அறிவித்துள்ளனர்.

**கண்கொண்ட நெற்றியும் கார்கொண்ட கண்டமும் கற்பளிக்கும்**
**பெண்கொண்ட பாகமும் கண்டேன்முன் மாறன் பிரம்படியால்**
**புண்கொண்ட மேனிப் புறம்கண்டி லேன்அப் புறந்தைக்கண்டால்**
**ஒண்கொண்ட கல்லும் உருகும்என் றோஇங் கொளித்தனையே.**

(பொ-ரை.) "இறைவனே! கண்ணைத் தன் இடத்தே கொண்ட நெற்றியையும் கரிய விடம் பொருந்தியுள்ள கழுத்தையும் கற்புக்கு உறைவிடமான உமாதேவி விளங்கும் இடப் பாகத்தையும் கண்டேன். ஆனால் முன் ஒரு சமயம் பாண்டியன் பிரம்பால் அடித்த காரணத்தால் புண்பட்ட உடலின் பின்புறத்தை மட்டும் நான் இதுவரையிம் கண்டிலேன். அந்த முதுகின் புண்ணைப் பார்த்தால் உருகாத ஒளியுடைய கல்லுங்கூட உருகிப் போகும் என்று கருதியோ நீ காட்டாமல் மறைத்துக் கொண்டிருக்கிறாய்!" (எ-து.)

(அ-செ.) மாறன் - அரிமர்த்தன பாண்டியன். புறம் - பின்பக்கம் (முதுகு). ஒண்மை-ஒளி.

(இ-கு.) கார்-பண்பாகுபெயர் (கரிய மேகம் போன்ற விடத்தை உணர்த்துவதனால்) ஒண்மை+கொண்ட.

(வி-ரை.) "மாறன் பிரம்படியால் புண் கொண்ட வரலாற்றை" எண்பத்திரண்டாம் பாட்டின் விரிவுரையில் காண்க. இறைவனுக்குப் பிரம்படியாலும், மற்றும் பல காரணங்களாலும் புண் உண்டு என்பதை இராமச்சந்திரக் கவிராயர் மிகவும் இரக்கம் கொண்டு,

**வஞ்சகர்பால் நடந்தலைந்த காலின் புண்ணும்**
**வாசல்தோறும் முட்டுண்ட தலையில் புண்ணும்**
**செஞ்சொல்லை நினைந்துருகும் நெஞ்சின் புண்ணும்**
**தீரும்என்றே சங்கரன்பால் சேர்ந்தேன் அப்பா**
**கொஞ்சம்அல்ல பிரம்படியின் புண்ணும் வேடன்**
**கொடுங்காலால் உதைத்த புண்ணும் கோபமாகப்**
**பஞ்சவரில் ஒருவன்வில்லால் அடித்த புண்ணும்**
**பார்என்றே காட்டிநின்றான் பரமன் தானே**

என்று பாடினார். (122)

**வேய்க்குப் பொரும்எழில் தோளுடைத் தேவி விளங்கும்எங்கள்**
**தாய்க்குக் கனிந்தொகு கூறளித் தோய்நின் தயவும்இந்த**
**நாய்க்குக் கிடைக்கும் எனஒரு சோதிடம் நல்கில்அவர்**
**வாய்க்குப் பழத்தொடு சர்க்கரை வாங்கி வழங்குவனே.**

(பொ-ரை.) "மூங்கிலைப்போன்ற அழகிய தோள்களையுடைய உமாதேவியும், விளங்கும் எங்கள் தாயும் ஆகிய அம்மையாருக்கு மிகவும் மனம் இளகி உன் உடலில் ஒரு பகுதியை அளித்த கருணா மூர்த்தியே! உன் கருணை இந்த நாய்க்கும் கிடைக்கும் என்று ஒரு சோதிடர் கூறுவாரானால் அவர் வாய்க்குப் பழமும் சர்க்கரையும் வாங்கித் தருவேன்" (எ-து.)

(அ-சொ.) வேய்-மூங்கில்; பொரும்-சமமாகும்; எழில்-அழகு.

(இ-கு.) பொரும், உவம உருபு. பழத்தொடு என்பதில் உள்ள ஓடு எண்ணுப் பொருளில் வந்த இடைச்சொல்.

(வி-ரை.) பெண்களின் தோளுக்கு மூங்கிலை உவமை கூறல் புலவர் மரபு. ஆதலின் வேய்க்குப் பொரும் எழில் தோள் எனப்பட்டது. தோதிடம் நல்கல், சோதிடர் சோதிடம் கூறுதல். (123)

**காண்டத்தில் மேவும் உலகீர்இத் தேகம் கரும்பனைபோல்**
**நீண்டத்தில் என்னை நிலைஅல வேஇது நிற்றம்பசும்**
**பாண்டத்தி நீர்நிற்றல் அன்றோ நமைநம் பசுபதிதான்**

**ஆண்டத்தில் என்னை குறையோநம் மேல்குறை ஆயிரமே.**

(பொ-ரை.) "குதிரைமீது அமர்ந்து வரும் உலகீர்! இந்த இடம்பு மன்மதனைப்போல் அழகுடன் வளர்ந்து இருப்பதில் என்ன பயன்? குதிரைச் சவாரி வாழ்வும், அழகும் நீண்ட உடல்வளர்ச்சியும் நிலை அல்ல. இது நிலையாக இருக்கும் என்று எண்ணுதல் ஈரமண்ணால் செய்த பாண்டத்தில் நீர் இருப்பது போன்றதுதான். நம்மை, நம் உயிர்க்கு நாதனாகிய சிவபெருமான் நம்மிடம் ஆயிரம் குறைகள் இருந்தும் நம்மை ஆண்டு கொண்டதில் என்ன குறை?" (எ-து.)

(அ-சொ.) காண்டம்-குதிரை, கரும்பன் - கரும்பு வில்லையுடைய மன்மதன். நீண்டத்தில் - நீண்டு வளர்ந்ததில். பசும்பாண்டம் - ஈரமான மண்பாண்டம். ஆண்டத்தில் - ஆட்கொண்டதில்.

(இ-கு.) நீண்டத்தில் ஆண்டத்தில் என்பதில் உள்ளத் விரித்தல் விகாரம் பற்றி வந்துளது. பசுமை+பாண்டம்.

(வி-ரை.) இறைவன் ஆன்மாக்களை உலக பாசபந்தத்தில் செல்லாமல் இழுத்து ஆட்கொள்ளும் கருணாமூர்த்தி. அவன், மக்களிடம் பல குறைகள் இருந்தாலும் அவற்றையும் பொருட்படுத்தாமல் ஆட்கொள்கின்ற காலமும் உண்டு. இந்த உண்மையினைச் சுந்தரர்,

**"நற்ற மிழ்வல்ல ஞானசம் பந்தன்**
**நாவினுக் கரையன் நாளைப்போ வானும்**
**கற்ற சூதன்நல் சாக்கியன் சிலந்தி**
**கண்ணப் பன்கணம் புல்லன்என் றிவர்கள்**
**குற்றம் செய்யினும் குண்ம்எனக் கருதும்**
**கொள்கை கண்டுநின் குரைகழல் அடைந்தேன்**
**பொற்றி ரள்மணிக் கமலங்கள் மலரும்**
**பொய்கை சூழ்திருப் புன்கூர்உ ளானே"**

என்று பாடிக் காட்டியுள்ளனர்.

இதைத்தான் நம் வள்ளலார், "நம் பசுபதிதான் ஆண்டத்தில் என்னை குறையோ! நம்மேல் குறை ஆயிரமே" என்று கேட்பார் ஆயினார்.

பசு ஈண்டுச் - சீவான்மாக்கள். அவற்றின் தலைவன் சிவபெருமான். ஆகவே அவன் பசுபதி எனப்பட்டான். ஈரமண்ணால் செய்த குடத்தில் நீரை ஊற்றிவைத்தால் அந்த நீர் மண்ணைக் கரைக்கத் தானும்ஒழுகி வெளியே வந்துவிடும். அதுபோல அழகும் உயர்ச்சியும் நம் உடம்பில் இருப்பினும் அவை நிலைக்காமல் அழியும். மக்கள் தமக்கு அழிவு உண்டென்பதைச் சிறிதும் சிந்தியாமல், குதிரை ஏற்றம், யானை ஏற்றம் முதலானவற்றை நடத்தி வீணாகப் பொழுது போக்குகின்றார்களே என்னும் கருணையினால்தான் "காண்டத்தில் மேவும் உலகீர்" என்று விளிப்பார் ஆயினார். இந்த கருத்துக்கு அரண் நம் சுந்தரர் பாடியுள்ள,

**“மத்த யானை ஏறி மன்னர் சூழவரு வீர்காள்**
**செத்த போதில் ஆரும் இல்லை சிந்தையுள் வைம்மின்கள்”**

என்பது. (124)

**வேணிக்கண் நீர்வைத்த தேவே மதுரை வியன்தெருவில்**
**மாணிக்கம் விற்றசெம் மாணிக்க மேஎனை வாழ்வித்ததோர்**
**ஆணிப்பொன் னேதெள் அமுதேநின் செய்ய அடிமலர்க்குக்**
**காணிக்கை ஆக்கிக்கொண் டாள்வாய் எனது கருத்தினையே.**

(பொ-ரை.) “சடைமீது கங்கை ஆற்றை வைத்துள்ள கங்காதர மூர்த்தியே! மதுரையில் பரந்த வீதியில் மாணிக்கம் விற்ற நல்ல மாணிக்கத் தியாகனே! என்னை வாழ்வித்த மாற்றுயர்ந்த பொன்னே! தெளிந்த அமுதமே! உனது திருவடி மலர்க்கு என் கருத்துகளைக் கையுறையாகக் கொண்டு என்னை ஆண்டருள்வாயாக”.(எ-து.)

(அ-சொ.) வேணி-சடை. வியன். பரந்த. ஆணி-உயர்ந்த. காணிக்கை-அன்பளிப்பு.

(இ-கு.) கண், ஏழன் உருபு. வியன், உரிச்சொல்.

(வி-ரை.) “மாணிக்கம் விற்ற செம் மாணிக்கமே” என்னும் தொடரில் உள்ள வரலாற்றை நூற்றுப் பத்தொன்பதாவது பாட்டின் விசேட உரையில் காண்க. (125)

**மாகலை வாணர் பிறன்பால் எமக்கும் மனைக்கும்கட்ட**
**நீகலை தாஒரு மேகலை தாஉண நெல்மலைதா**
**போகலை யாஎனப் பிந்தொடர் வார்அவர் போல்மனன்நீ**
**ஏகலை ஈகலர் ஏகம்ப வாணர் இடம்செல்கவே.**

(பொ-ரை.) “மனமே! சிறந்த கலைவாணர்கள் பிறனிடம் சென்று ‘எனக்கும் என் மனைவிக்கும் உடுத்திக் கொள்ள ஆடை தருக; ஒரு மேகலாபரணம் தருக; நெல்மலை தருக’ என்று அலைபோல அலைந்து சதா கேட்டுக்கொண்டு பின் செல்வர். அப்படிப்பட்ட கலைவாணர்களைப் போல நீயும் செல்வரிடம் சொல்லாதே. காஞ்சி ஏகாம்பரநாதரிடம் சென்று வேண்டியதைக் கேட்பாயாக.” (எ-து.)

(அ-சொ.) மா-சிறந்த. பெரிய, கலைவாணர்-புலவர்கள். கலையில் வல்லவர்கள்.மனை-மனைவி. கலை-ஆடை. மேகலை-இடுப்பு அணி.

(இ-கு.) மனன், அண்மை விளி-மா, உரிச்சொல் பால், ஏழன் உருபு. மனை, இட ஆகுபெயர்.

(வி-ரை.) ஆடை தமக்கும், மேகலை தம் மனைவிக்கும் கேட்டதாக அமைத்துக் கொள்க. இது நிரல் நிரை அணியின்பால் படும். மேகலை என்பது பெண்கள் இடுப்பில் அணியும் அணி. இக்காலத்தில் இதனை ஒட்டியாணம் போன்றது எனக் கூறலாம். நெல் மிகுதியாக வேண்டுதலின் “நெல்மலை”

எனப்பட்டது. ஏகம்பவாணர் சுந்தரர்க்கு இழந்த கண் பார்வையில் ஒரு கண் பார்வையைக் கொடுத்தமையினால் போலும் "ஏகம்பவாணர் இடம் செல்க" என்று நம் ஐயா கூறியதன் நோக்கம். (126)

**ஊர்தரு வார்நல்ல ஊண்தரு வார்உடை யும்தருவார்**
**பார்தரு வார்உழற் கேர்தரு வார்பொன் பணமும் தருவார்**
**சோர்தரு வார்உள் அறிவுகெ டாமல் சுகிப்பதற்கிங்**
**கார்தரு வார்அம்மை ஆர்தரு பாகனை அன்றிநெஞ்சே.**

(பொ-ரை.) "மனமே! இறைவனிடம் சென்று, கேட்டால், ஊரைத் தருவார். நல்ல உணர்வைத் தருவார், உடையைத் தருவார். உலக ஆட்சியைத் தருவார். நிலத்தை உழுது பயிர் செய்வதற்குக் கலப்பையைத் தருவார். பொன்னையும், பொருளையும் தருவார். ஆகையால் நமக்குச் சோர்வைத் தருகின்றவர்கள் நிறைந்த இவ்வுலகில் நம் அறிவு கெடாமல் இன்புடன் வாழ்வதற்கு, இறைவி அமைந்திருக்கின்ற மாதொரு பாக னாகிய அம்மை அப்பர் தவிர மேல்சொன்னவற்றைக் கொடுப்பதற்குரியர் வேறு யார் உளர்? ஆகவே, சிவபெருமானையே தேவையானவற்றைக் கேட்பாயாக." (எ-து.)

(அ-சொ.) ஊண்-உணவு. பார்-நாடு. உழற்கு-உழுவதற்கு. ஏர்-கலப்பை. ஆர்தரு-அமைந்திருக்கின்ற.

(வி-ரை.) அம்மை அப்பர் பெருங் கருணாமூர்த்தி ஆதலின் அவன் வேண்டுவார் வேண்டுவன ஈவான். இந்த உண்மையினைத் திருநாவலூரர், "பொன்னும் மெய்ப்பொருளும் தருவானைப் போகமும் திருவும் புணர்ப்பானை" என்று கூறியருளினார். கருவூர்த் தேவர் தம் திருவிசைப்பாவில் இறைவன் அருள் கொடையை,

**அற்புதத் தெய்வம் இதனின் மற்றுண்டோ**
**அன்பொடு தன்னைஐந் தெழுத்தின்**
**சொற்பதத் துள்வைத் துள்ளம் அள்ளூறும்**
**தொண்டருக் கெண்திசைக் கனகம்**
**பற்பதக் குவையும் பைம்பொன் மாளிகையும்**
**பவளவா யவர்பணை முலையும்**
**கற்பகப் பொழிலும் முழுதும்ஆம் கங்கை**
**கொண்டசோ ளேச்சரத் தானே"**

என்று பாடி யுள்ளனர். (127)

**பண்செய்த சொல்மங்கை பாகாவெண் பால்கடல் பள்ளிகொண்டோன்**
**திண்செய்த சக்கரம் கொள்வான் அருச்சனை செய்திட்டநாள்**
**விண்செய்த நின்அருள் சேவடி மேல்பட வேண்டிஅவன்**
**கண்செய்த நல்தவம் யாதோ கருத்தில் கணிப்பரிதே.**

(பொ-ரை.) "பண் இசை போன்ற மொழியைப்பேசும் உமாதேவியார்க்கு இடப்பாகம் ஈந்த இன்அருளாளா! வெண்மையான திருப்பால் கடலில் உறங்கும்

திருமால், வன்மையான சக்கரத்தைப் பெறுதற்கு உன் திருவடிகளில் தாமரை மலர்களை இட்டு வழிபாடு செய்த அந்தநாளில், தேவலோகத்தை நிலைபெறச் செய்த உன் அருள் நிறைந்த திருப்பாதத்தின்மீது படவேண்டி அவனது கண்செய்த நல்ல தவம்தான் எதுவோ தெரியவில்லையே! என் உள்ளத்தில் இதுபற்றிக் குறித்துச் சிந்திப்பதற்கும் இயலாதவனாக இருக்கின்றேன்" (எ-து.)

(அ-சொ.) பண் - இசை. பள்ளிகொண்டோன் - சயனம் புரியும் திருமால். திண்மை-வலிமை. விண்-தெய்வலோகம். சேவடி-செம்மையான பாதம். கணிப்பு-குறித்தல்.

(இ-கு.) கொள்வான், வான் ஈற்று வினை எச்சம். செம்மை+அடி-சேவடி.

(வி-ரை.) இறைவியின் மொழிகள் இசைபோன்று இருக்கின்றமையின் பண் செய்த சொல் மங்கை எனப்பட்டது.

சலந்தராசூரன் என்பவன் தேவர்களுக்குப் பல துன்பங்களைச் செய்து வந்தான். ஆகவே, அவனைக் கொல்ல இறைவர் தம் கால் பெருவிரலால் பூமியில் ஒரு வட்டம் செய்து அதனையே சக்கராயுதமாகக் கொண்டு சலந்தராசூரனைக் கொன்றார். இதனைப் பரஞ்சோதியார் "சலந்தரன் உடலம் கீண்ட சக்கரப் படையாய் போற்றி" என்று போற்றிப் புகழ்தல் காண்க. இதனால் சக்கரப்படை சிவபெருமானுடையதே என்பதை அறியவும். இன்றும் திருவதிகைத் தலத்திற்குச் சென்று அங்குள்ள ஓவியத்தைக் கண்டால் சிவபெருமான் திருக்கரத்தில் சக்கரம் இருப்பதைக் காணலாம்.

இந்தச் சக்கரத்தைத் திருமால் சிவபெருமானிடமிருந்து பெற ஆயிர மலர்களைக் கொண்டு சிவனார் திருவடிகளை அர்ச்சனை செய்வாராயினர். இறைவர திருமாலின் உண்மை அன்பினை உணர, ஆயிர மலர்களில் ஒரு மலர் குறையுமாறு திருஉளம் கொண்டார். அவ்வாறே ஒரு தாமரை மலர் மறைந்தது. இது குறித்துத் திருமால் உளம் தளராமல், தான் கமலக்கண்ணன், புண்டரீகாட்சன் (தாமரை மலர் போன்ற கண்ணையுடையவன்) என்று பெயர் பெற்றிருப்பதனால், தாமரை மலர்க்குப் பதிலாகத் தன் கண்ணைப் பிடுங்கிச் சிவபெருமான் திருவடிகளில் இட்டுத் தம் பூசையைக் குறைவின்றி முடித்தார். இவ்வாறு பூசித்த இடம் திருவீழிமலை எனும் தலம் ஆகும். இன்றும் அத்தலத்தில் உள்ள உற்சவமூர்த்தியின் திருத்தாளில் கண்ணின் உருவம் இருப்பதைக் காணலாம். இறைவர் திருமாலின் பூசனையை ஏற்று அவர்க்குச் சக்கரத்தை அளித்தனர். இந்த வரலாற்றுக் குறிப்பைத் திருவாசகம்,

**"சலமுடைய சலந்தரன்தன் உடல்தடிந்த நல்ஆழி**
**நலமுடிய நாரணற்கன் றருளியவா றென்னேடீ**
**நலமுடைய நாரணன்தன் நயனம்இடந் தரன்அடிக்கீழ்**
**அலராக இடஆழி அருளினன்காண் சாழலோ**

என்று கூறுகிறது. நம்பி ஆரூரர்,

**"அருமல ரோன்சிரம் ஒன்றருத்தீர்**
**செறுத்தீர்அழல் சூலத்தின் அந்தகனைத்**
**திருமகள் கோன்நெடு மால்பலநாள்**
**சிறப்பாகிய பூசனை செய்பொழுதில்**
**ஒருமலர் ஆயிரத்தில் குறைவா**
**நிறைவாகஓர் கண்மலர் சூட்டலுமே**
**பொருவிறல் ஆழி புரிந்தளித்தீர்**
**பொழில்ஆர்திருப் பத்தூர்ப் புனிதன்நீரே!"**

என்று பாடுதல் காண்க. பரஞ்சோதியார் "வலந்தரும் அதனை மாயோன் வழிபடக் கொடுத்தாய் போற்றி" என்று கூறுதலையும் நினைவு கொள்க. இந்த வரலாற்றையே நம் ஐயா இப்பாட்டில் அமைத்துள்ளார். இதனால் திருமால் கையில் இருக்கும் சக்கரம் சிவபெருமானை வேண்டிப் பெற்றது என்பதை உணர்க. (128)

**மாப்பீட்டு நேர்ந்துண்டு வந்தியை வாழ்வித்த வள்ளல்உள்வெண்**
**காப்பிட்டு மேல்பல பாப்பிட்ட மேனியைக் கண்டுதொழக்**
**கூப்பிட்டு நான்நிற்க வந்திலை நாதனைக் கூடஇல்லாள்**
**பூப்பிட்ட காலத்தில் கூப்பிட்ட போதிலும் போவதுண்டே.**

(பொ-ரை.) "மாவால் ஆகிய பிட்டுக்கு ஆசைப்பட்டு அதனை வாங்கி உண்டு வந்தி என்னும் முதியாளை வாழ வைத்த வள்ளலே! உன் உடம்பில் வெண்ணீற்றைப் பூசி அதற்குமேல் பல பாம்புகளை அணிந்துள்ள உன்னைக் கண்டு வணங்க நான் அழைத்து அழைத்து நின்றாலும், இறைவா, நீ வந்திலையே! தன் கணவனுடன் புணர்ச்சி செய்யக் கூடாத பூப்புற்ற நாளிலும், கணவன் புணர அழைத்தால் மனைவி போவதுண்டே! ஆகவே, நான் அழைத்தால் வரக்கூடாதா?".

(அ-சொ.) மா-மாவு. நேர்ந்து-விரும்பி. வெண்காப்பு-திருநீற்றுக் காப்பு. பாப்பு-பாம்பு. கூடல்-சேர்தல். பூப்பிட்ட-வீட்டுக்கு விலக்காக இருந்த.

(இ-கு.) வள்ளல், அண்மைவிளி, பாப்பு, பாம்பு என்பதன் வலித்தல் விகாரம்.

(வி-ரை.) "மாப்பிட்டு நேர்ந்துண்டு வந்தியை வாழ்வித்த வள்ளல்" என்பதில் அமைந்துள்ள வரலாற்றை எண்பத்திரண்டாவது பாடலின் விசேட உரையில் காண்க. திருநீறு எப்போதும் வெண்மையாகவே இருக்கவேண்டும். வெண்ணிறம் மாறிய திருநீற்றை அணிவது பலவித தீங்கு தருவதாகும். திருநீற்றில் கற்பூரத்தை வைத்துக் கொளுத்துதலும் ஆகாது. வெண் திருநீறு மக்களை என்றும் காப்பது ஆதலின் இது காப்பு என்றே கூறப்படும். இதனை வடமொழியாளர் ரட்சை என்று கூறுவர். சீதைக்கு எல்லா அணிகளையும் அணிவித்தபின் திருநீற்றுக் காப்பையும் இட்டனர் என்பதைக் கம்பர் "கைவளர் மயிலனாளை வலம் செய்து காப்பும் இட்டார்" என்று அறிவித்தல் காண்க. இதனை உள்கொண்டே நம் ஐயா, "வெண்காப்பு இட்டு" என்றனர்.

**என்மேல் பிழைஇலை யான்என்செய் கேன்என் இடத்திருந்தென்
சொன்மேல் கொளாதெனை இல்மேல் துரும்பெனச் சுற்றும்நெஞ்சத்
தின்மேல் பிழைஅது புல்மேல் பனிஎனச் செய்தொழிக்க
நின்மேல் பரம்விடை தன்மேல்கொண் டன்பர்முன் நிற்பவனே.**

(பொ-ரை.) "இரடபத்தின் மீது அமர்ந்து அன்பர்களின் முன் நிற்பவனே! என்மீது தவறு கிடையாது. நான் என்ன செய்வேம்? என்மனம் என்னிடத்தில் இருந்தும் என் சொல்லைத் கேளாமல் வீட்டின் மீதுள்ள துரும்பைப்போல என்னை அலையச் செய்யும் என் மனத்தின் மீதே தவறு உளது. ஆகவே, புல் மீதுள்ள பனி விரைவில் மறைவதுபோல, என் மனத்தின் மீதுள்ள அத்தவற்றையும் உடனே போக்க வேண்டியது உன் பொறுப்பே ஆகும்." (எ-து.)

(அ-சொ.) விடை-இரடபம். பரம்-பொறுப்பு.

(இ-கு.) செய்+க்+ஏன் இதில் உள்ள க் எதிர்கால இடைநிலை. இலை, இடைக்குறை தன், சாரியை. பாரம் என்பது பரம் என நின்றது குறுக்கல் விகாரம்.

(வி-ரை.) இறைவன் இரடப வாகனத்தின்மீது காட்சி கொடுப்பதைப் பெரிய புராணத்தில் பரக்கக் காணலாம். ()

**மைவிட்டி டாமணி கண்டாநின் தன்னை வழுத்தும்என்னை
நெய்விட்டி டாஉண்டி போல்இன்பி லான்மெய்த் நெறிஅறியான்
பொய்விட்டி டான்வெம் புலைவிட்டி டான்மயல் போகம்எலாம்
கைவிட்டி டான்எனக் கைவிட்டி டேல்வந்து காத்தருளே.**

(பொ-ரை.) "கரு நிறம் விட்டு நீங்காத அழகிய கழுத்தையுடையவனே! உன்னைப் போற்றி வழிபடும் என்னை நெய் விடாத உணவுபோல் இன்பம் இல்லாதவன் என்று எண்ணி நான் அன்பில்லாதவன், உண்மை நெறியை உணராதவன், பொய் பேசுவதை விடாதவன், கொடிய அற்பச் செயல்களை விடாதவன், பெண்களின் மையலில் ஈடுபட்டு அந்த இன்பத்தை விடாதவன் என்ற காரணங்களைக் காட்டி என்னைக் கைவிட வேண்டா. எவ்வாறேனும் வந்து காத்தருள்க" (எ-து.)

(அ-சொ.) மை-கருநிறம். மணி-அழகிய. வழுத்தும்-துதித்துப் போற்றும். உண்டி-உணவு. மெய்ந்நெறி-சத்தியமார்க்கம். வெம்புலை-கொடுமைமிக்க இழிந்த செயல்கள். மயல்-பெண் மயக்கம்.

(இ-கு.) மை பண்பாகுபெயர். தன்னை என்பதன் தன், சாரியை, மயல், மையல் என்பதன் முதல் போலி.

(வி-ரை.) நெய் இல்லா உண்டிப்பாழ் என்பது நம் ஒளவையார் கருத்து. அன்ன சுத்திக்கு நெய் இன்றியமையாதது. ஆனால் ஏழைகள் எப்படி நெய்யுடன் உண்ண முடியும்? அதற்காக நெறி தவறா ஏழை மக்கள் ஒரு முறை நெய் வாங்கி, அதனைப் பயன்படுத்தும் வரையில் பயன்படுத்தி விட்டுப் பின், நெய் இருந்த கிண்ணத்தில் ஓர் அறுகம்புல்லை எப்போதும் வைத்திருந்து சோறு கொதித்து

வரும்போது, அதில் அந்த நெய்க்கிண்ணத்திலிருந்த அறுகம் புல்லை எடுத்துச் சோற்றுப் பானையில் தோய்த்து விடுவர். இவ்வாறு தினமும் செய்து அன்னசுத்தி செய்வர். இந்தக் குறிப்பே நெய் விட்டிடா உண்டி எனப்பட்டது. (131)

**நல்அமு தம்சிவை தான்தரக் கொண்டுநின் நல்செவிக்குச்**
**சொல்அமு தம்தந்த எங்கள் பிரான்வளம் சூழ்மயிலை**
**இல்அமு தம்திகழ் பெண்ஆக என்பை எழுப்பியநாள்**
**சில்அமு தம்பெற்ற தேவரை வானம் சிரித்ததன்றே.**

(பொ-ரை.) “இறைவனே! நல்ல ஞானப்பாலை இறைவி கொடுக்க, அதனைப் பருகி உனது நல்ல செவிக்குச் சொல் அமுதம் தந்த எங்கள் பெருமானாகிய திருஞான சம்பந்தர் வளம் மிக்க திருமயிலையில், வீட்டிற்கு அமுதம்போல விளங்க எலும்பைப் பெண்ணாக எழுப்பிய அந்த நாளில், சிறிது அமுதத்தைப் பெற்ற தேவர்களை வானம் நகைத்தது அன்றோ” (எ-து.)

(அ-சொ.) நல் அமுதம் - ஞானப்பால். சிவை-உமாதேவி. சொல் அமுதம்-சொல்லால் ஆகிய அமுதமாம் தேவாரம். பிரான் - பெருமையில் சிறந்த திருஞான சம்பந்தர். மயிலை-மயிலாப்பூர். திகழ்-விளங்கும். என்பை-எலும்பை.

(இ-கு.) அரன் என்பதன் பெண்பால் அரி என்பது போல, சிவன் என்பதன் பெண்பால் சிவை.

(வி-ரை.) சீர்காழியில் சிவபாத இருதயர் என்பவர் வாழ்ந்து வந்தார். அவர் வழக்கம்போல் பிரம்மபுரத் தீர்த்தத்தில் நீராடப் புறப்பட்டபோது, மூன்று வயது நிரம்பப் பெற்ற அவரது பிள்ளை தானும் வரத் தொந்தரவு செய்தது. சிவபாத இருதயரும் தம்முடன் அழைத்துச் சென்றார். குழந்தையைக் குளக்கரையில் நிறுத்தி அவர் நீரில் இறங்கி முழுகலானார். குழந்தைக்குப் பசி மிக்கமையாலும், தந்தையாரைக் காணாமையினாலும் அழத்தொடங்கியது. குழந்தையின் அழுகுரலைக் கேட்டுப் பிரமபுத்தீசர் உமாதேவியுடன் அங்கு வந்து, பார்வதியைப் பால் தருமாறு பணித்தார். தேவியும் பொன் கிண்ணத்தில் பாலைக் கறந்து அதனுடன் ஞானத்தையும் குழைத்து உண்பித்தனர். இதற்குள் தந்தையார் கரை ஏறி வந்து யார் கொடுத்த பாலைப் பருகுகிறாய் என்று கோல் கொண்டு அதட்ட, மூன்று வயது குழந்தை, ஆகாயத்தே உமையோடு காட்சி தந்துகொண்டிருந்த அம்மை அப்பரைச் சுட்டி,

**“தோடுடைய செவியன்விடை ஏறிஓர் தூவெண் மதிசூடி**
**காடுடைய சுடலைப்பொடி பூசிஎன் உள்ளம்கவர் கள்வன்**
**ஏடுடைய மலரான் முனைநாள் பணிந்தேத்த அருள்செய்த**
**பீடுடைய பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன்அன்றே”**

என்று காட்டியது. ஞானப்பால் உண்டதனால் அன்றுமுதல் திருஞானசம்பந்தர் என்னும் பெயரையும் பெற்றது. தமக்கு இறைவி பொன் வண்ணத்தில் பால் கொடுத்ததையும் தந்தையார் தம்மைச் சினந்துகொண்டதையும் பற்றி,

**“போதையார் பொன்கிண்ணத் தடிசில் பொல்லாதெனத்**
**தாதையார் முனிவுறத் தான்எனை ஆண்டவன்**
**காதையார் குழையினன் கழுமல வளநகர்ப்**
**பேதையாள் அவளொடும் பெருந்தகை இருந்ததே”**

என்று பாடி யுணர்த்தியுள்ளனர்.

இவ்வாறு இவர் ஞானப்பால் உண்டு, சொல் அமுதாம் பாக்களைப் பாடியதைத் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள்,

**“பூவால் மலிநீர்ப் பொய்கைக் கரையினியல்**
**பாவால் மொழிஞானப் பால்உண்டு-நாவால்**
**மறித்தெம் செவிஅமுதம் வார்த்த பிராந்தண்டை**
**வெறித்தண் கமலமே வீடு”**

என்றும்,

**“சுட்டுதற் கரிய நின்னை மெய்ஞ்ஞான**
**சொரூபியென் றருமறை அனைத்தும்**
**சொல்லுவ துண்மை என்னநன் குணர்ந்தேன்**
**சுரந்தநின் திருமுலைச் செழும்பால்**
**வட்டிலில் கொச்சைப் பிள்ளைமுன் உண்டு**
**வண்புகழ் ஞானசம் பந்த**
**வள்ளல்என் றிடப்பேர் பெற்றரன் மொழிபோல்**
**மையர்தீர் செய்யுள்செய் தமையால்”**

என்றும் பாடி அறிவித்துள்ளனர்.

ஈண்டு ஓர் ஐயம் பிறக்கலாம். திருஞான சம்பந்தர் சின்னம் சிறுவயதிலேயே எப்படிப் பாடி இருக்க முடியும் என்பதே அவ் ஐயம். அதற்கு விடையாகத் திருஞான சம்பந்தர் வாக்கைக்கொண்டே நிறுவலாம். திருஞான சம்பந்தர் திருநனிப்பள்ளிப் பதிகத்தின் திருக்கடைக் காப்பில் “பதியான ஞானமுனிவன், இடுபறை ஒன்ற அத்தர்பியல் மேல் இருந்து இன் இசையால் உரைத்த பனுவன்” என்று பாடியுள்ளார். அத்தர்பியர் மீது இருத்தலாவது தந்தையாரின் தோள்மேல் இருத்தல். தந்தையாரின் தோள்மீது இருந்து பாடினார் என்பதால் குழந்தைப் பருவத்தினர் என்பதில் ஐயம் உண்டோ? மங்கையர்க்கரசி யாரை நோக்கியும், “அம்மையீர் என்னைச் சின்னம் சிறு பாலன் என்று என்மீது இரக்கம் கொள்ளவேண்டா” என்னும் கருத்தில் “பானல் வாய் ஒரு பாலன் ஈங்கிவன் என்று நீ பரிவெய்திடேல்” என்று பாடி இருப்பதையும் சிந்திக்க. இன்னோரன்ன காரணங்களால் சம்பந்தர் சின்னம் சிறுவயதில் பாடினார் என்பதில் ஐயம் எழ இடம் உண்டோ?

நம் ஐயா திருஞான சம்பந்தரை எங்கள் பிரான் என்று குறிப்பிட்டதில் தனிச்சிறப்புண்டு. வள்ளலார் நால்வர்களையும் போற்றிப் புகழும் கடப்பாடுடையவராயினும், திருஞான சம்பந்தரையே குருவாகக் கொண்டு

வழிபட்டுள்ளார். இதனைத் திருஞான சம்பந்தரைக் குருவாகவே கொண்டு தனித்தமுறையில் நான்கு பாடல்களைக் குருவணக்கப் போக்கில் நம் ஐயா பாடியிருப்பதை நான்காம் திருமுறையில் காணலாம். ஆகவேதான் எங்கள் பிரான் என்றனர்.

திருமயிலையில் சிவநேசச் செட்டியார் என்னும் பெயரினர் ஒருவர் இருந்தார். அவருக்கு ஒரு பெண் மகவு உண்டு. அதனைப் போற்றி வளர்த்து வந்தனர். அப்பெண் கபாலீச்சுரப் பெருமானுக்குப் பூத்தொண்டு செய்து வந்தது. செட்டியாருக்குத் தம் மகளைத் திருஞானசம்பந்தர்க்குத் திருமணம் முடிக்க வேண்டும் என்பது எண்ணம். இப்படி இருக்கையில் ஒருநாள் இவர் மகள் மலர்கொய்கையில் பூ நாகம் தீண்டி விட்டது. அதனால் அப்பெண் இறந்தனள். என்றாலும் செட்டியார் தம் மகளின் உடலைக் கொளுத்தி அவ்வுடலின் எலும்பையும் சாம்பரையும் ஒரு மண் குடத்தில் சேமித்து வைத்து, அதனையாகிலும் திருஞானசம்பந்தருக்கு அளிப்போம் என்று அவர் வருகையினை எதிர்நோக்கி இருந்தார்.

திருஞானசம்பந்தர் கபாலீச்சுரப் பெருமானை வணங்க வந்தபோது, செட்டியார் எலும்புக் குடத்தைத் திருஞான சம்பந்தர் முன்வைத்து நடந்தவற்றையும் எண்ணத்தையும் பணிவுடன் தெரிவித்தார். ஆளுடைய பிள்ளையார் இறைவனை உள்ளத்தில் கொண்டு,

**“மட்டிட்ட புன்னைஅம் கானல் மடமயிலைக்**
**கட்டிட்டம் கொண்டான் கபாலீச்சரம் அமர்ந்தான்**
**ஒட்டிட்ட பண்பின் உருத்திரப் பல்கணத்தார்க்கு**
**அட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்”**

என்று தொடங்கும் பதிகத்தைப் பாடி எலும்பைப் பெண்ணாக்கினார். இந்த வரலாறே “பெண்ணாக என்பை எழுப்பிய நாள்” என்னும் தொடரில் அமைந்துள்ளது. இதன் விரிவைப் பெரியபுராணத்தில் காண்க.

திருஞானசம்பந்தர் திருமயிலையை “மட்டிட்ட புன்னையம் கானல் மடமயிலை” “மைப் பயந்த ஒண்கண் மடநல்லார் மாமயிலை” “வளைக்கை மடநல்லார் மாமயிலை வண்மறுகு” “ஊர்திரை வேலை உலாவும் உயர்மயிலை” “மைப்பூசும் ஒண்கண் நல்லார் மாமயிலை” “மடல் ஆர்ந்த தெங்கின் மயிலை” “மலிவிழா வீதி மடநல்லார் மாமயிலை” “கண்ணார் மயிலை” என்றெல்லாம் புகழ்ந்திருத்தலின், நம் ஐயா மிகச் சுருங்கிய முறையில் “வளம் சூழ் மயிலை” என்று சிறப்பித்துவிட்டனர்.

உமாதேவியார் மயில் உருவில் இங்குச் சிவபெருமானைப் பூசித்தமையால் இது மயிலை எனப்பட்டது. இது மயிலாப்பு என்றும் கூறப்படும். சென்னைக் கோட்டைக்குத் தெற்கே நாலு கல் தொலைவில் உள்ளது. இறைவர் கபாலீசுவரர். இறைவியார் கற்பகவல்லி அம்மையார். இதற்குத் தலவிருட்சம் புன்னை. இதனைக் கோயிலுள் காணலாம். வாயிலார் நாயனார் பிறந்த பதியும் திருமயிலையே. இவரது கோயில் தனியே உளது. கி.பி.பதினாறாம் நூற்றாண்டில் போர்த்து கேசியர் இக் கோயிலைக் கைப்பற்றி, இதனை இடித்து ஒரு கோட்டை கட்டினர். இந்தக் கோவில் கல்வெட்டுகளும், கற்களும் இன்னும் அங்குள்ள பிஷப் வீட்டில்

இருப்பதைக் காணலாம். இப்போதுள்ள கோவில் பின்னால் கட்டப்பட்டது. பழைய கோவில் கடற்கரை ஓரமாக இருந்தது. இதைத் தான் போர்த்துக்கேசியர் இடித்தனர். சம்பந்தரைப் போலத் தேவர்கள் ஞானப்பால் பெருமையினை வானம் சிரித்தது. ()

**சொற்றுணை வேதியன் என்னும் பதிகச் சுருதியைப்பின்**
**பொற்றுணை வார்கழற் கேற்றிஅப் பொன்அடிப் போதினையே**
**நற்றுணை யாக்கரை ஏறிய புண்ணிய நாவரசைக்**
**கற்றுணை யாதிந்தக் கல்துணை யாம்என் கடைநெஞ்சமே.**

(பொ-ரை.) “இறைவனே! தன்னைப்போல வன்மை கொண்ட கல்லைத் துணையாகக் கொண்ட எனது கடைப்பட்ட உள்ளம் ‘சொற்றுணை வேதியன்’ என்று தொடங்கும் பதிகமாகிய வேதத்தை உன் அழகிய இரண்டு திருவடிகளுக்குச் சூட்டி அந்த அழகிய நேர்மையுடைய மலர்களையே நல்ல துணையாகக் கொண்டு கரை ஏறிய புண்ணியராகிய திருநாவுக்கரசரது புகழைக் கற்று உள்ளம் உருகாதிருக்கிறதே! இஃது அறியாமை அன்றோ?” (எ-து.)

(அ-சொ.) சுருதி-வேதம். பொன் - அழகு. துணை-இரண்டு. வார்-நேர்மை. சுழல்-வீரத்தண்டை அணிந்த திருவடி. போது-மலர்.

(இ-கு.) கல்+துணை, சொல்+துணை. வார், உரிச்சொல். கழல், தானி ஆகுபெயர்.

(வி-ரை.) திருவாமூரில் வாழ்ந்த புகழனார், மாதினியார் ஆகிய இருவர்களுக்கும் ஒரு பெண்மகவும், ஓர் ஆண்மகவும் பிறந்தன. பெண்ணுக்குத் திலகவதியார் என்றும், ஆணுக்கு மருள்நீக்கியார் என்றும் பெயர் இட்டனர். இவர்களின் பெற்றோர் இறந்துவிட்டனர். திலகவதியாரை மணக்க ஏற்பாடு செய்யப்பட்ட கலிப்பகையாரும் இறந்துவிட்டனர். ஆகவே திலகவதியார் விதவைக் கோலம்பூண்டு திருவதிகையில் சிவபெருமானுக்குத் தொண்டு புரிந்து வந்தார். மருள்நீக்கியார் சமண மதத்தைச் சார்ந்துவிட்டனர். இதுபற்றி வருந்திய திலகவதியார் தம் தம்பியார் எவ்வாறேனும் மீண்டும் சைவசமயம் புகுதற்குத் திருவருள்புரிய வீரட்டானேசுவரரை வேண்டிவந்தனர். இறைவன் மருள்நீக்கியார்க்குக் கொடிய சூலை நோயைத் தந்தனர். அதனைப் பொறுக்கமாட்டாமல் மருள்நீக்கியார் தம் தமக்கையாரிடம் வந்தனர். அம்மையார் திருநீரு சாத்தி ஐந்தெழுத்து ஓதிக் கோயிலுக்குள் தம் தம்பியாரை அழைத்துச் சென்றார். மருள்நீக்கியார் ‘கூற்றாயினவாறு' என்னும் பதிகம் பாடினார். சூலை தீர்ந்தது. இறைவர் மருள்நீக்கியார்க்குத் திருநாவுக்கரசர் என்னும் திருப்பெயரையும் சூட்டினார். இதை அறிந்த சமணர்கள் இவரை அழைத்துச் சென்று இவரைக் கொல்லப் பலவகை சூழ்ச்சிகளைச் செய்தனர். அவற்றை எல்லாம் இறைவன் திருவருளால் வென்றார். இறுதியில் பெரிய கல்லில் கட்டிக் கடலில் போட்டு விட்டனர். அப்போது அவர்,

**சொற்றுணை வேதியன் சோதி வானவன்**
**பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்**
**கற்றுணை பூட்டியோர் கடலில் பாய்ச்சினும்**
**நற்றுணை ஆவது நமச்சி வாயவே**

என்னும் பஞ்சாட்சரப் பதிகத்தைப் பாடித் திருப்பாதிரிப் புலியூரில் கரை ஏறினார். இவர் கரை ஏறிய இடம் கரை ஏறவிட்ட குப்பம் என்பது. ஆனால் இதுபோது அது வண்டிப்பாளையம் என்று கூறப்படுகிறது.

சமணர்கள் தம்மைக் கல்லொடு கட்டிக் கடலில் எறிந்ததையும் ஐந்தெழுத்தை ஓதிக் கரை ஏறியதையும் திருக்குடி பதிகத்திலும் எடுத்து மொழிந்துள்ளார். அப்பதிகத்தில் வரும் பாடல்,

**கல்லி னோடெனைப் பூட்டி அமண்கையர்**
**ஒல்லை நீர்ப்புக நூக்களன் வாக்கினால்**
**நெல்லு நீள்வயல் நீலக் குடிஅரன்**
**நல்லநாமம் நவிற்றி உய்ந்தேன் அன்றே**

என்பது. இந்த வரலாற்றைப் பெரிய புராணத்தில் பரக்கக் காண்க.

இந்த வரலாற்றுக் குறிப்பை எல்லாம் ஒருங்கு அமைத்து நம் வள்ளலார் இப்பாட்டைப் பாடி அமைத்துள்ளனர், வரலாற்றை மட்டும் பாடாமல் அப்பர் பெருமான் பாடலின் சொல்லையும், தொடரையும் கூட அப்படியே அமைத்துப் பாடியுள்ளதைக் காணலாம்.

பதிகம் என்பது பத்து அல்லது பதினொரு பாடல்களைக் கொண்டது. நம் ஐயா அப்பர் வாக்கைச் சுருதி என்று கூறி இருப்பதை நன்கு சிந்திக்க வேண்டும். சுருதி என்பது வடமொழியில் இருப்பதுதான் என்று கருதக் கூடாது. சைவசமயாசிரியர்கள் வாக்குகள் அனைத்துமே சுருதிகள் தாம் (வேதவாக்குகள்) என்பதை நம்மை உணரச் செய்துள்ளார் நம் வள்ளலார். யாண்டும் வேதம் வடமொழியில் இருக்க வேண்டும் என்று கூறப்படவில்லை. நமது ஒல்காப் பெருமை வாய்ந்த தொல்காப்பியர் மந்திரத்திற்கு இலக்கணம் சொல்லும்போது,

**“நிறைமொழி மாந்தார் ஆணையில் கிளந்த**
**மறைமொழி தானே மந்திரம் என்ப”**

என்று கூறியுள்ளார். இந்த நூற்பாவில் வடமொழியில்தான் மந்திரம் இருக்க வேண்டும் என்னும் குறிப்பு உளதா? என்று நோக்குதல் வேண்டும். மந்திரத்தைத் தமிழில் செய்யுமாறு தம்மை இறைவன் படைத்தான் என்பதைத் திருமூலரும்

**என்னை நன்றாக இறைவன் படைத்தனன்**
**தன்னை நன்றாக தமிழ்செய்யும் ஆறே**

என்று கூறுதல் காண்க.

இந்தச் சந்தர்ப்பத்தில் திருஞானசம்பந்தர் தமிழை “மறை இலங்கு தமிழ் எழில்” “மறை தன்னியல் கலைவல தமிழ்” என்று கூறியதையும் காண்க. (133)

**சடையவ நீமுன் தடுத்தாண்ட நம்பீக்குச் சற்றெனினும்**
**கடையவ னேன்செயும் கைம்மா றறிந் திலன் கால்வருந்தி**
**நடையுற நின்னைப் பரவைதன் பாங்கர் நடத்திஅன்பர்**
**இடைவரும் உன்தன் இரக்கத்தைத் தான்வெளி இட்டதற்கே.**

(பொ-ரை.) "சடையுடைய சடாதரனே, நீ முன் ஒரு சமயம் தடுத்தாட்கொண்ட சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு, கடைப்பட்டவனாகிய யான் கைம்மாறு செய்ய இயலாதவனாக இருக்கிறேன். சுந்தரர், உம்மை உம் கால் வருந்தும்படி நடந்து சென்று பரவை நாச்சியார் கொண்டிருந்த பிணக்கைத் தீர்க்கச் செய்தார் அல்லரோ? இப்படி ஏன் செய்தார்? நீர் உம் அன்பர்களிடத்தில் மிகவும் இரக்கம் கொண்டவர் என்பதை உலகு அறியச் செய்ய வேண்டும் என்பதற்காக அன்றோ? இப்படி உம்மைப் பரவையாரிடம் அனுப்பினார். இத்தகைய உண்மையினை உணர்த்திய அந்த நம்பி ஆருரருக்கு நான் கொஞ்சமேனும் பிரதி உபகாரம் செய்ய இயலாதவனாய் இருக்கிறேனே?" (எ-து.)

(அ-சொ.) நம்பி - நம்பி ஆரூரராகிய சுந்தரர், சற்றேனும்-சிறிதளவாகிலும். கைம்மாறு-மறு உதவி. பரவை-பரவை நாச்சியார். பாங்கர்-இடம்.

(இ-கு.) நம்பி, விகுதி பெறாத ஆண்பால் சிறப்புப் பெயர்.

(வி-ரை.) சுந்தரர் கைலையில் இறைவருக்கு மலர் தொடுத்தணியும் திருத்தொண்டில் ஈடுபட்டிருந்தார். இவரைப் போலவே, கமலினி அனிந்திதை, என்பவர்கள் மலர் தொடுத்து இறைவிக்கு அணியும் தொண்டில் முனைந்திருந்தனர். ஒருநாள் இம்மூவரும் மலர் வனத்தில் சந்திக்க நேர்ந்தது. சுந்தரர் அவ்விருவரை உள்ளத்தால் காதலித்தார். இதனை உணர்ந்த சிவபெருமான், சுந்தரரை நோக்கி, 'உன் எண்ணத்தை உணர்ந்தோம். அதனை நிறைவேற்றற்கு இஃது அன்று இடம். நீ நில உலகில் சென்று பிறந்து இந்த வேட்கையினை முடித்துக் கொள். அம்மங்கையர்களும் உலகில் வந்து பிறப்பர்' என்றனர். இதைக்கேட்ட சுந்தரர், "இறைவனே நான் உலகில் பிறந்தால் உன்னை மறக்க நேரிடுமே. ஆகவே, 'என்னைத் தடுத்தாள வேண்டும்" என்று வேண்டினர். இறைவரும் அவ்வாறே "ஆட்கொள்வோம்" என்றருளிச் செய்தார்.

நம்பி ஆரூரர் நில உலகில் சடையனார் இசைஞானியார் ஆகிய இருவர்க்கும் பிள்ளையாகப் பிறந்து வளர்ந்து மணப்பருவம் உற்றபோது சுந்தரருக்குப் புத்தூர்ச் சடங்கவிச் சிவாசாரியார் மகளை மணமுடிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. மணப்பந்தலில் சுந்தரரும் மணமகளும் அமர்ந்திருந்தபோது, இறைவர் கிழ வடிவம் கொண்டு மணப்பந்தரை அடைந்து, "இந்த மணமகன் என் அடிமை", என்று கூறி வாதாடித் திருமணத்தை நிறுத்தித் தமக்கு அடிமை ஆக்கிக் கொண்டனர். இதுவே இங்கு "நீ முன் தடுத்தாண்ட நம்பி" எனும் தொடரில் அமைந்த வரலாறு. இதன் விரிவைப் பெரியபுராணத்தில் காண்க.

சுந்தரர் இறைவன் திருவருள் பெற்று, இறைவன் உறைவிடங்கள் தோறும் சென்று பாடிப் பரவிக்கொண்டு திருவாரூரை அடைந்தார். அங்குக் கைலையிலிருந்து வந்த கமலினி பிறந்து பரவையார் என்னும் பெயருடன் வளர்ந்து வருகையில் சுந்தரர் அவ்வம்மையாரைக் கண்டு காதலித்து மணந்து கொண்டார்.

சின்னாட்களுக்குப் பிறகு திருவொற்றியூரை அடைந்து இறைவனைப் பாடி வணங்கி வருகையில் அனிந்திகை என்பவர் அங்குச் சங்கிலியார் என்னும் பெயருடன் வளர்ந்து மணப்பருவம் உற்று இருந்தனர். சுந்தரர் அவ்வம்மையாரையும் திருவருள் சம்மதப்படி மணந்தார். பிறகு திருவாரூருக்கு வந்து பரவையார் இல்லம் சென்றபோது, அவ்வம்மையார் சுந்தரரை ஏற்க மறுத்தார். அந்தச் சமயத்தில் சுந்தரர் பொருட்டுப் பரவையாரிடம் தூது சென்று அவ்வம்மையார் சுந்தரரிடம் கொண்ட பிணக்கை ஒழித்தார். இதுவே, "பரவைதன் பாங்கர் நடத்தி" என்னும் தொடரில் அமைந்த வரலாறு. இதனைப் பெரிய புராணத்தில் பரக்கக் காணலாம்.

சுந்தரர் வாக்கைக் கொண்டே இறைவர் தம்மை ஆட்கொண்ட குறிப்பையும், தூதுசென்ற குறிப்பையும், பரவையார் சங்கிலியார் திருமணம் கொண்டமையினையும் உணரலாம்.

**"மண்ணின்மேல் மயங்கிக் கிடப்பேனை வலிய**
**வந்தெனை ஆட்கொண் டானே"**

**"நம்பனே அன்று வெண்ணெய் நல்லூரில் நாயினேன்**
**தன்னை ஆட்கொண்ட சம்புவே"**

**"வாயாடி மாமறை ஓதியோர் வேதியனாகி வந்து**

வெண்ணெய் நல்லூரில் வைத்து ஆளும்கொண்ட" என்னும் வரிகள் இறைவன் தடுத்தாட்கொண்டமைக்குச் சான்றுகள்.

பரவையாரை மணந்தமைக்குச் சான்றாக "மாழை ஒண் கண்பரவையைத் தந்தாண்டானை" என்னும் அடியைக் காட்டலாம். சங்கிலியாரை மணந்தமைக்கு எடுத்துக் காட்டாக,

**"மான்திகழும் சங்கிலியைத் தந்து வருபயன்கள்**
**எல்லாம் தோன்ற அருள் செய்தாய்"**

**"சங்கிலி யோடெனைப் புணர்த்த தத்துவனை"**

**"திருஒற்றி யூர்புக்குச் சார்ந்தனன். சார்ந்தனன் சங்கிலி**
**மென்தோள் தடமுலை"**

எனவரும் அடிகளைக் காட்டலாம்.

தமக்காக இறைவர் பரவையார்பால் தூது சென்றதை, "தூதனை என்தனை ஆள் தோழனை" என்று கூறுவவற்றால் தெளிக.

இப்படி எல்லாம் இறைவர் செய்தது இறைவர்க்கு அன்பர்களிடம் உள்ள இரக்கமே ஆகும்? இந்த உண்மையினைச் சேக்கிழார்

**அன்புவேண்டும் தம்பெருமான் அடியார் வேண்டிற் றேவேண்டி**
**முன்புநின்று விண்ணப்பம் செய்தநமபி முகம்நோக்கித்**
**துன்பம்ஒழிநீ யாம்உனக்கோர் தூத னாகி இப்பொழுதே**
**பொன்செய் மணிப்பூண் பரவைபால் போகின் றோம்என் றருள்செய்தார்**

என்று பாடி உணர்த்தியுள்ளார்.

இந்தக் கருத்துகளை எல்லாம் கொண்டே நம் ஐயாவின் பாடல் விளங்குகிறது. (134)

**திருவாத வூர்எம் பெருமான் பொருட்டன்று தென்னன்முன்னே**
**வெருவாத வைதிகப் பாய்பரி மேல்கொண்டு மேவிநின்ற**
**ஒருவாத கோலத் தொருவாஅக் கோலத்தை யுள்குளிர்ந்த**
**கருவாத நீங்கிடக் காட்டுகண் டாய்என் கனவினிலே.**

(பொ-ரை.) “திருவாதவூரில் தோன்றிய மாணிக்கவாசகர் பொருட்டு அன்று அரிமர்த்தன பாண்டியன் முன்பு சிறிதும் அஞ்சாத வேத வடிவான குதிரை மீது அமர்ந்து யாவரும் காண ஆண்டு நின்று அகலாத குதிரைச் சேவகனாக வந்த ஒப்பற்றவனே! அந்தக் கோலத்தைக் கனவிலாகிலும் மனம் குளிர்ந்து கண்டு இன்பமடைய, மீண்டும் தாயின் வயிற்றில் பிறக்கும் கருவாதனை நீங்கக் காட்டுவாயாக”. (எ-து.)

(அ-சொ.) தென்னன் - பாண்டியன். வெருவாத-அஞ்சாத. பரி-குதிரை. ஒருவாத-நீங்காத. கோலம் - தோற்றப் பொலிவு. ஒருவா-ஒப்பற்றவனே. கருவாதம் - கருவில் பிறப்பதனால் வரும் துன்பம்.

(இ-கு.) பொருட்டு, நான்காம் வேற்றுமைச் சொல்லுருபு. கண்டாய்- முன்னிலை அசைச்சொல்.

(வி-ரை.) திருவாதவூரர் அரிமர்த்தன பாண்டியனிடம் அமைச்சராக இருந்தார். அப்போது குதிரைப் படை குறைந்திருந்ததால் பாண்டியனிடம் பொருள் பெற்றுக் குதிரை வாங்கிவரப் புறப்பட்டார். ஆனால், குதிரை வாங்காமல் திருப்பெருந்துறைக்குச் சென்று கோவில் கட்டி விட்டனர். இந்தச் செய்தியை அறிந்த பாண்டியன் திருவாதவூரை அழைத்துக் கேட்கச் சின்னாட்களில் குதிரை வரும் என்று அவர் கூறினர். அவர் கூறியபடி, சிவபெருமான் தாம் வேதமாகிய குதிரை மீது அமர்ந்து காட்டிலுள்ள நரிகளைக் குதிரைகளாகக் கொணர்ந்து பாண்டியனிடம் ஒப்படைத்து நீங்கினர். இந்தத் தருணத்தில் இறைவர் வேதக் குதிரை மீது வந்த காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தமையின், அதனைத் தம் கனவிலேனும் இறைவனைக் காண நம் ஐயா இப் பாடலின் மூலம் வேண்டுகின்றார். இந்த வரலாற்றைத் திருவாதவூர் புராணத்திலேனும், திருவிளையாடல் புராணத்திலேனும் காண்க.

இறைவர் குதிரைச் சேவகனாக வந்ததை மாணிக்கவாசகரும் தம் திருவாசகத்தில்

**பரிமா வின்மிசை பயின்ந வண்ணமே**
**ஞாலமிகப் பரிமேல்கொண் டுநமை ஆண்டான்**

என்று கூறுதல் காண்க.

இறைவன் பாண்டியன் பரிமா மீது வந்து குதிரையை விற்று ஒப்பந்தம் செய்து கொண்ட காட்சியையும் மணிமொழியார்,

**பாண்டி யன்தனக் குப்பரி மாவிற்**
**றீண்டு கனகம் இசையப் பெறாஅ**
**தாண்டான் எங்கோன் அருள்வழி இருப்பத்**
**தோற்றிய சோதி தோன்றிய தன்மையும்.**

என்று காட்டுதல் காண்க.

வள்ளலார் இறைவன் குதிரை மீது வந்த காட்சியைத் தமக்குக் கனவிலேனும் காட்டவேண்டும் என்று வேண்டிக்கொண்டதற்குக் காரணம்,

**மூவரும் முப்பத்து மூவரும் மற்றொழிந்த**
**தேவரும் காணச் சிவபெருமான் - மாவேறி**
**வையகத்தே வந்திழிந்த வார்கழல்கள் வந்திக்க**
**மெய்பகத்தே இன்பம் மிகும்**
**உள்ள மலம்மூன்றும் மாய உகுபெருந்தேன்**
**வெள்ளம் தரும்பரியின் மேல்வந்த-வள்ளல்**
**மருவும் பெருந்துறையை வாழ்த்துமின்கள் வாழ்த்தக்**
**கருவும் கெடும்பிறவிக் காடு.**

என்று மாணிக்கவாசகரும் அவ் வடிவடியினைப் போற்றிப் பாடி இருப்பதனால் என்க. (135)

**சீர்தரு நாவுக் கரையரைப் போல்இச் சிறியனும்ஓர்**
**கார்தரு மாயைச் சமணால் மனக்கருங் கல்லில்கட்டிப்**
**பார்தரு பாவக் கடல்இடை வீழ்த்திடப் பட்டுழன்றே**
**ஏர்தரும் ஐந்தெழுத் தோதுகின் றேன்கரை ஏற்றரசே.**

(பொ-ரை.) "பொன்னம்பலத்தில் நடனமிடும் நடராசப் பெருமானே! சீர்மையை எவர்க்கும் தருகின்ற திருநாவுக்கரசரைப் போல இந்தச் சிறியவனாகிய நானும் அஞ்ஞானத்தைத் தருகின்ற மாயை ஆகிய சமண சமயத்தாரால் மனமாகிய கருங்கல்லினால் கட்டப்பட்டு உலகில் பாவமாகிய கடலில் வீழ்ந்திட்டு அப் பிறவிக் கடலில் சுழன்று, அழகைத் தருகின்ற சிவாயநம என்னும் ஐந்தெழுத்து மந்திரத்தை ஓதுகின்றேன். என்னையும் முத்திக்கரையில் சேர்ப்பாயாக" (எ-து.)

(அ-சொ.) அரையர்-அரசர். கார்-அஞ்ஞானம். பார்-உலகு. உழன்று-சுழன்று. ஏர்-அழகு. கரை-மோட்சமாகிய கரை.

(இ-கு.) கார், பண்பாகுபெயர். சமண், ஈற்றுக்குறை.

(வி-ரை.) திருநாவுக்கரசர் தம்மை அன்புடன் நேசிக்கின்றவர்களுக்குச் சிறப்பைச் செய்பவர். இதனை அப்பூதி அடிகளாரின் வரலாற்றால் உணரலாம். அவர் திருநாவுக்கரசு எனும் திருப்பெயரைக் கூறிச் சிறப்புற்றார். இத்னை நால்வர் நான்மணிமாலை,

**"உற்றான் அலன்தவம் தீயின் நின் றான்அலன் ஊண்புனலா**
**அற்றான் அலன்நுகர் வும்திரு நாவுக் கரசெனும்பேர்**
**சொற்றான் எழுதியும் கூறியு மேஎன்றும் துன்பில்பதம்**
**பெற்றான் ஒருநம்பி அப்பூதி என்னும் பெருந்தகையே"**

என்று கூறாமாற்றால் உணரலாம். இது குறித்தே, சீர்தரு "நாவுக்கரையர்" என்று புறப்பட்டார். நம் ஐயா அஞ்ஞானத்தைச் சமணராகவும் மனத்தைக் கருங்கல்லாகவும் உருவகப்படுத்தினார். சமணர் என்பது ஈண்டுச் சமண் எனக் குறிக்கப்பட்டுள்ளது அப்பர் கருங் கடலை நீந்தி கடந்து கரை ஏறினார். நம் ஐயா, பாவக்2 கடலை நீந்தி முத்திக் கரையை ஏற இறைவனை வேண்டுகின்றார். ஐந்தெழுத்தாம் பஞ்சாட்சர மந்திரத்தை ஓத ஓத உடல் ஒளி பெறுதலின், "ஏர்தரு ஐந்தெழுத்து" எனப்பட்டது. 'நலம் மிகக் கொடுப்பது நமச்சிவாயவே' என்னும் அப்பர் வாக்கை இங்குச் சிந்திக்கவும். அதனால்தான் "ஏர்தரும் ஐந்தெழுத்து" எனப்பட்டது. 'நலம் மிகக் கொடுப்பது நமச்சிவாயவே' என்னும் அப்பர் வாக்கை இங்குச் சிந்திக்கவும். அதனால்தான் "ஏர்தரும் ஐந்தெழுத்து" எனப்பட்டது.

சிவப்பிரகாச சுவாமிகள் அப்பர் பெருமான் அருக சமயத்திலிருந்து மீண்டது பற்றியும், கடலைக் கடந்து கரை ஏறியதைப் பற்றியும் வியந்து,

**"அருகக் கடல்கடந் தேறிய தோசிலை அம்பிஎனப்**
**பெருகக் கடல்கடந் தேறிய தோசொல் பெருமிடறு**
**கருகக் கடல்விடம் உண்டோன் அடியில் கசிந்துமனம்**
**உருகக் கடல்அன்பு பெற்றசொல் வேந்தே உனக்கரிதே"**

என்று பாடியுள்ளனர்.

நம் ஐயா தம்பாட்டில் "மாயைச் சமண மனக் கருங்கல்" "பாவக்கடல்" "ஏர் ஒரு ஐந்தெழுத்து" முதலான தொடர்களைப் படிக்கும்போது, நம் சேக்கிழார் பாடியுள்ள,

**"இருவினைப் பாசமும் மலக்கல் ஆர்த்தலின்**
**வருபவக் கடலில்வீழ் மாக்கள் ஏறிட**
**அருளும்மெய் அஞ்செழுத் தரசை இக்கடல்**
**ஒருகல்மேல் ஏற்றிடல் உரைக்க வேண்டுமோ"**

என்னும் பாடலை அடி ஒற்றிப் பாடியது என்பது நன்கு புலனாகின்ற தன்றோ?

அப்பர் பெருமானுக்குரிய பெயர்கள் பலவற்றுள் திருநாவுக்கரசர் என்பதும் ஒன்று. இந்தப் பெயர் திருவதிகை வீரட்டானேசுவரரால் வழங்கப்பட்டதாகும். இந்த உண்மையினை,

**"மேவுற்றஇவ் வேலையில் நீடியசீர் வீரட்டம்**
**அமர்ந்த பிரான்அருளால்**
**பாவுற்றலர் செந்தமி ழின்சொல்வளப் பதிகத்தொடை**
**பாடிய பான்மையினால்**
**நாவுக்கர சென்றுல கேழினும் நல்நாமம்**
**நயப்புற மன்னுகஎன்**
**றியாவர்க்கும் வியப்புற மஞ்சுறைவா னிடையேஒரு**
**வாய்மை எழுந்ததுவே"**

என்னும் பெரியபுராணச் செய்யுளால் அறியவும். (136)

**தூக்கமும் சோம்பலும் துக்கமும் வாழ்க்கையைத் தொட்டுவரும்**
**ஏக்கமும் நோயும் இடையூறாம் மற்றை இடரும்விட்ட**
**நீக்கமும் நின்மல நெஞ்சமும் சாந்த நிறைவும்அருள்**
**ஆக்கமும் நின்பதத் தன்பும் தருக அருட்சிவமே.**

(பொ-ரை.) "அருள் வடிவாம் சிவபெருமானே! தூக்கமும், சோம்பலும், துக்கமும், வாழ்க்கையைத் தொடர்ந்துவரும். ஆகையால் நீ ஏக்கமும், நோயும், தடைகளும் மற்றுமுள்ள துன்பம் நீங்கிய நீக்கத்தையும், குற்றம் அற்ற உள்ளத்தையும், பொறுமைத் தன்மையையும் போதும் என்ற மனத்தையும், அருளாகிய உயர்வையும், உன் திருவடிகளில் கொள்ளும் அன்பையும் தந்தருளுவாயாக". (எ-து.)

(அ-சொ.) இடையூறு-தடை. நின்மலம்-குற்றமற்ற. நிறை-மன அமைதி. ஆக்கம்-உயர்வு.

(இ-கு.) பதம் - குறுக்கல் விகாரம்.

(வி-ரை.) இப் பாட்டின் முன் இரண்டு அடிகளில் நாம் நீக்கவேண்டியவை இன்னின்ன என்பதையும், பின் இரண்டடிகளில் இறைவனிடம் வேண்டத் தக்கவை இன்னின்ன என்பதையும், அறிவித்துள்ள விதத்தை நன்கு சிந்திக்கவும். (137)

**பொய்வந்த வாயும் புலைவந்த செய்கையும் புன்மைஎல்லாம்**
**கைவந்த நெஞ்சமும் கண்டேன் இனிநல் கனிவுடன்யான்**
**மெய்வந்த வாயும் விதிவந்த செய்கையும் விறன்பினால்**
**தைவந்த நெஞ்சமும் காண்பதென் றோசெஞ் சடைக்கனியே.**

(பொ-ரை.) "செம்மையான சடையைப் பெற்ற தீங்கனி போன்றவனே! பொய் பேசும் வாயும், கீழத்தரமான செய்கையும், அற்பக் குணமே கைவரப் பெற்ற மனமும் இத்தகையன என்பதை உணர்ந்துகொண்டேன். இனிமேல், நான் உருக்கத்தோடு உண்மையே பேசுகின்ற வாயையும், நல் விதிக்குரிய

செயல்களையும், மேல் ஓங்கிய அன்பினால் வருடப்பட்ட மனத்தையும் காண்பது எப்போதோ தெரியவில்லையே!" (எ-து.)

(அ-சொ.) புலை-கீழ்மைத்தன்மை. புன்மை-அற்பம். மெய்-உண்மை. வீறு-மேல் ஓங்கிய. தைவந்த-வருடப்பட்ட.

(வி-ரை.) இந்தப் பாட்டும் மேல்கண்ட பாட்டின் கருத்தை ஒட்டியதாகும்.

**கங்கைகொண் டாய்மலர் வேணியி லேஅருள் கண்ணிமலை**
**மங்கைகொண் டாய்இடப் பாகத்தி லேஐய மற்றும்ஒரு**
**நங்கைகொண் டால்எங்கு கொண்டருள் வாய்என்று நண்ணும்அன்பர்**
**சங்கைகொண் டால்அதற் கென்சொல்லு வாய்முக்கட் சங்கரனே.**

(பொ-ரை.) "ஐயனே! மூன்று கண்களையுடைய சங்கரனே! கொன்றைமலரை அணிந்துள்ள சடைமீது கங்காதேவியை வைத்துள்ளாய். அருள் நிறைந்த கண்களைக் கொண்ட மலையரசன் பெண்ணாகிய பார்வதி தேவியை இடப்பாகத்தில் வைத்துள்ளாய். மூன்றாவதாக ஒரு பெண்ணையும் மனைவியாக நீ ஏற்றுக்கொள்ள நேர்ந்தால், அப்பெண்ணை எங்கு நீ வைப்பாய் என்று உன்னை அணுகும் அன்பர்கள் சந்தேகம் கொண்டு கேட்டால் நீ என்ன பதில் உரைப்பாய்?" (எ-து.)

(அ-சொ.) ஐய-தலைவ. கண்ணி-கண்களையுடைய. மலைமங்கை-பர்வதராசன் மகளான பார்வதி. நண்ணும் - அணுகும். சங்கை-சந்தேகம்.

(வி-ரை.) இப்பாட்டு நகைச்சுவை ததும்பும் அமைப்பில் அமைந்துளது. ஆங்கிலம் படித்த ஒரு சிலர் தமிழ் இலக்கியங்களில் நகைச்சுவை இல்லை என்று கூறித் தம் அறியாமையை வெளிப்படுத்துவர். இவ்வாறு ஒருசிலர் கூறக்கூடும் என்று உணர்ந்தே நம் தொல்காப்பியனார் எண்வகை மெய்ப்பாடுகள் இன்னின்ன என்று குறிப்பிடும்போது, நகைச்சுவையினையே முதலில் கூறியுள்ளனர். அந்நூற்பா,

**"நகையே அழுகை இளிவால் மருட்கை**
**அச்சம் பெருமிதம் வெகுளி உவகைஎன்**
**றப்பால் எட்டே மெய்ப்பா டென்ப"**

என்பது.

நீதி நூலாகிய திருக்குறளில் கூட நகைச்சுவைக்கு இடம் உண்டு.

**"தேவர்அனையர் கயவர் அவரும்தாம்**
**மேவன செய்தொழுக லான்"**

**"நன்றறி வாரின் கயவர் திருவுடையர்**
**நெஞ்சத் தவலம் இலர்"**

எனும் குறட்பாக்களைக் காண்க.

அழுதழுது அரனடிக்கே அன்பூண்ட மணிவாசகப் பெருமான் திருவாக்கிலும் நகைச்சுவை மிளிர்வதைக் காணலாம்.

**"உழைதரு நோக்கியர் கொங்கைப் பலாப்பழத் தீயின்ஒப்பாய்
விழைதரு வேனை விடுதிகண் டாய்விடின் வேலைநஞ்சுண்
மழைதரு கண்டன் குணம்இலி மானிடன் தேய்மதியன்
பழைதரு மாபரன் என்றென் றறைவன் பழிப்பினையே"**

**"சிரிப்பிப்பன் சீறும் பிழைப்பைத் தொழும்பையும் ஈசற்கென்று
விரிப்பிப்பன் என்னை விடுதிகண் டாய்விடின் வெங்கரியின்
உரிப்பிச்சன் தோலுடைப் பிச்சன்நஞ் சூண்பிச்சன் ஊர்ச்சுடுகாட்
டெரிப்பிச்சன் என்னையும் ஆள்உடைப் பிச்சன்என் றேசுவனே"**

எனும் திருவாசகப் பாடல்களே இதற்குச் சான்று.

சிவபெருமான் மூவர்களின் பாடல்களைப் பற்றித் தம் கருத்து இன்னது என்று கூறுகையில் "என்னப்பன் என்னைப் பாடினான். சம்பந்தன் தன்னைப் பாடினான். சுந்தரன் பொன்னுக்குப் பாடினான்", என்று அறிவித்துள்ளனர். ஆகவே திருநாவுக்கரசர் இறைவனைப் பாடுவதில் மிகவும் முனைந்து ஆழ்ந்திருந்தார் என்பது புலனாகின்றதன்றோ? அத்தகைய வாகீசப் பெருமானே, சிவபரம்பொருளை ஏளனம் செய்வார் போல நகைச்சுவை தோன்ற,

**"வங்க மலிகடல் நாகைக்கா ரோணத்தெம் வானவனே
எங்கள்பெரு மான்ஓர் விண்ணப்பம் உண்டது கேட்டருளீர்
கங்கை சடையுள் கரந்தாய்அக் கள்ளத்தை மெள்ளஉமை
கங்கை அறியில்பொல் லாதுகண் டாய்எங்கள் நாயகனே"**

**"கற்றார் பயில்கடல் நாகைக்கா ரோணத்தெம் கண்ணுதலே
விற்றாங் கியகரம் வேல்நெடும் கண்ணி வியன்கரமேல்
நற்றாள் நெடுஞ்சிலை நாணை வளைத்தகரம் நின்கரமேல்
செற்றார் புரம்செற்ற சேவகம் என்னைகொல் செப்புமினே"**

என்றும் பாடியுள்ள பாடல்களைப் படித்து நகைச்சுவை அழகைச் சுவைப்பீராக இந்தமட்டுமா அப்பர் நகைச்சுவையினைப் பாடி நிறுத்தினார்?

**"இன்றரைக் கண்ணுடை யார்எங்கும் இல்லை இமயம்எனும்
குன்றரைக் கண்ணன் குலமகட் பாவைக்குக் கூறிட்டநாள்
அன்றரைக் கண்ணும் கொடுத்துமை யாளையும் பாகம் வைத்த
ஒன்றரைக் கண்ணன்கண் டீர்ஒற்றி யூர்உறைஉத்தமனே"**

என்றும் பாடி நகைச்சுவையினை மேலும் துய்க்கச் செய்துள்ளார்.

திருஞானசம்பந்தர் பதிகங்களிலும் நகைச்சுவை உண்டு. இதனை,

**"இடறினும் தளறினும் எனதுறுநோய்**

தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே”

“இதுவோஎமை ஆளுமாறு ஈவதொன்றெமைக் கில்லையேல்
அதுவோஉன் தின்அருள் ஆவடுதுறை அரனே”

என்னும் பாடலையும்,

“வாசி தீரவே காசு நல்குவீர்
மாசில் மிழலையீர் ஏசல் கில்லையே”

என்னும் பாடலையும் ஊன்றிப் படித்து உணர்ந்தால் நகைச்சுவை மிளிர்வதை உணரலாம்.

சுந்தரமூர்த்தி சுவாமிகளும் நகைச்சுவைப் பாடல்களைப் பாடுவதில் பின்வாங்கியவர் அல்லர்.

“திங்கள் தங்கு சடையின் மேல்ஓர்
திரைகள் வந்து புரள வீசும்
கங்கை யாளேல் வாய்தி றவாள்
கணப தியேல் வயிறு தாரி
அங்கை வேலோன் குமரன் பிள்ளை
தேவி யார்கோல்தடி ஆளார்
உங்க ளுக்காட் செய்ய மாட்டோம்
ஒண காந்தன் தளிஉளீரே”

என்னும் பாட்டைப் படித்து பாருங்கள்.

இங்ஙனம் எல்லாம் தமக்கு முன்பிருந்த அருளாளர்கள் நகைச்சுவை தோன்றப் பாடி இருத்தலினால்தான் நம் ஐயாவும் நகைச்சுவை விளங்க இப்பாடலைப் பாடினார் என்க.

நம் ஐயாவின் பாட்டில்வரும் “மற்றும் ஒரு நங்கைகொண்டால் எங்குக் கொண்டருள்வாய்” என்னும் வரியைப் படிக்கின்றபோது,

“பாகத்தில் ஒருவன் வைத்தான் பங்கயத் திருந்த பொன்னை
ஆகத்தில் ஒருவன் வைத்தான் அந்தணன் நாவில் வைத்தான்
மேகத்தில் பிறந்த மின்னை வென்றநுண் இடையி னாளே
மாகத்தோள் வீர பெற்றால் எங்ஙனம் வைத்து வாழ்தி”

என்னும் கம்பரது பாடல் நினைவுக்கு வருதல் காண்க. எங்ஙனம் வைத்து வாழ்தி என்பதன் பொருள் நீ எங்கு வைத்து வாழ்வாய் என்பது. எப்படி வாழ்வாய் என்னும் பொருளும் இதற்கு உண்டு. (139)

வாட்கொண்ட கண்ணியர் மாயா விகார வலைபிழைத்துன்

**தாட்கொண்ட நீழலில் சார்ந்திடு மாறென் தனக்கருள்வாய்**
**கீட்கொண்ட கோவணப் பேர்அழ காஎனைக் கேதம்அற**
**ஆட்கொண்ட நீஇன்று வாளா இருப்ப தழகல்லவே.**

(பொ-ரை.) "கீழ் உடையாகிய கோவணத்தை அணிந்துள்ள பேரழகனே! என் குற்றம் நீங்க என்னை ஆட்கொண்ட நீ, இன்று ஆட்கொள்ளாமல் சும்மா இருப்பது அழகாகுமோ? ஆகவே, நான் பொன்போன்று கூரிய பார்வை கொண்ட கண்களையுடைய மாதர்களின் மாயை ஆகிய காமக் கவலையாம் வலையிலிருந்து தப்பி உன் திருவடி நீழலில் அடையும் விதத்தை எனக்குத் திருவருள் புரிவாயாக" (எ-து.)

(அ-சொ.) கீள்-அரைக்கணியும் துண்டு. விகாரம் - காமக்கவலை. கேதம்-குற்றம், துக்கம், வாளா-சும்மா.

(இ-கு.) கீள்+கொண்ட, நீழல், நீட்டல் விகாரம்.

(வி-ரை.) இறைவன் கோவணம் பூண்டு இருப்பினும், அவனுடைய அழகு குறைவுபடாது. பிட்சாடராக இவ்வடிவில் வந்துபோதுதானே தாருகா வனத்து இருடி பத்தினிமார்கள் இவர் அழகில் ஈடுபட்டுத் தம்மை மறந்தனர்? இந்த உண்மையினை வளையல் விற்ற படலத்திலும் நம் ஐயாவின் இங்கித மாலையிலும் பரக்கக் காணலாம். ஆகவேதான் "கீள் கொண்ட கோவணப் பேர் அழகா" எனப்பட்டது. இறைவன் அணிந்துள்ள கீழ் உடைவெறும் நூல் ஆடையால் ஆகிய கோவணம் அன்று. ஔ வேதமகிய உடையாகும். இதனைத் திருவாசகம்,

**"என்னப்பன் எம்பிரான் எல்லார்க்கும் தான்ஈசன்**
**துன்னம்மெய் கோவணமாக் கொள்ளுமது என்னேடீ**
**மன்னுகலை துன்னுபொருள் மறைநான்கே வான்சரடாத்**
**தன்னையே கோவணமாச் சாத்தினன்காண் சாழலோ**

என்று அறிவித்தல் காண்க.

பெண்கள் நம் கண்ணால் மருட்டி மக்களை மாயா விகாரத்தில் ஈடுபடுத்துவதைப் பட்டினத்தடிகள்,

**"பெண்ணாகி வந்ததொரு மாயைப் பிசாசம் பிடித்திட்டென்னைக்**
**கண்ணால் வெருட்டி முலையால் மயக்கிக் கடிதடத்துப்**
**புண்ணாம் குழிஇடைத் தள்ளிஎன் போதப் பொருள்பறிக்க**
**எண்ணா துனைமறந் தேன்இறை வாகச்சி ஏகம்பனே"**

**"காதென்று முக்கென்று கண்என்று காட்டிஎன் கண்எதிரே**
**மாதென்று சொல்லி வருமாயை தன்னை மறலிவிட்ட**
**தூதென்றெண் ணாமல் சுகம்என்று நாடும்இத் துர்ப் புத்தியை**
**ஏதென் றெடுத்துரைப் பேன்இறை வாகச்சி ஏகம்பனே"**

என்று பாடிக் காட்டுதல் காண்க. இந்தப் பாடல்களின் கருத்துச் சுருக்கத்தையே நம் வள்ளலார் "வாட்கொண்ட கண்ணியர் மாயாவலை" என்றனர். (140)

**விட்டுத் தலைவநின் தாள்வணங் கார்தம் விரிதலைசும்**
**மாட்டுத் தலைபட்டி மாட்டுத் தலைபுன் வராகத்தலை**
**ஆட்டுத் தலைவெறி நாய்த்தலை பாம்பின் அடுந்கலைகல்**
**பூட்டுத் தலைவெம் புலைத்தலை நாற்றப் புழுத்தலையே.**

(பொ-ரை.) "முத்தி உலகிற்குத் தலைவனே! உன் திருவடிகளை வணங்காதவர்களின் முடி மயிர் விரிந்ததலையைச் சும்மாட்டுத் தலை என்றும், பட்டிமாட்டுத்தலை என்றும், அற்பமான பன்றித்தலை என்றும், வெறி பிடித்த நாய்த்தலை என்றும், கொல்லத் தகுந்த பாம்பின்தலை என்றும், கல்லால் செய்யப்பட்ட பூட்டின்தலை என்றும், கொடிய கீழ்த்தரமான தலை என்றும், புழு நிறைந்த நாற்றம் பிடித்த தலை என்றும்தான் சொல்லவேண்டும்." (எ-து.)

(அ-சொ.) வீடு-மோட்சம், முத்தி. புன் - அற்பமான. வராகம் - பன்றி. அடும் - கொல்லும். புலை-கீழ்த்தரமான.

(இ-கு.) வீடு+தலைவ.

(வி-ரை.) இறைவன் ஒருவனே முத்தியாகிய பேரின்ப நிலையினைத் தருபவன் ஆதலின், 'வீட்டுத் தலைவ' எனப்பட்டது. ஏனைய தெய்வங்களுக்கு இந்திரபதவி, பிரம்மபதவி, திருமால் பதவிகளைத்தாம் கொடுக்கும் ஆற்றல் உண்டு. சும்மாடு என்பது சுமையின் பாரம் மண்டையில் மிகுதியும் துன்புறுத்தாதிருத்தற்குத் துணியால் சுற்றித் தலையில் வைத்துக்கொள்ளும் ஒருவித துணிச் சுருள். பட்டிமாடு கேட்பார் அற்றுத் திரியும் மாடு. தலையினை நாம் பெற்றிருப்பதன் பயன் இறைவனை வணங்குவதற்காகவே ஆகும். இதனால்தான்,

**"கோளில் பொறியில் குணம்இலவே எண்குணத்தான்**
**தாளை வணங்காத் தலை"**

என்றனர். அப்பரும்,

**"தலையே நீவணங்காய் தலைமாலை தலைக்கணிந்து**
**தலையாலே பலிதேரும் தலைவனை-தலையே நீவணங்காய்"**

என்று அறிவுறுத்தினர்.

சிவபெருமானின் திருவடியை வணங்காத தலை பயன் அற்ற தலை என்பதை விவேக சிந்தாமணி என்னும் நூலும்,

**"திருப்பதி மிதியாப் பாதம் சிவன்அடி வணங்காச் சென்னி**
**இரப்பவர்க் கீயாக் கைகள் இனியசொல் கேளாக் காது**
**புரப்பவர் தங்கள் கண்ணீர் பொழிதரச் சாகாத் தேகம்**
**இருப்பினும் பயன்என் காட்டில் எரிப்பினும் இல்லை தானே"**

என்று கூறுகிறது. (141)

**தெண்ணீர் முடியனைக் காணார்தம் கண்இருள் சேர்குருட்டுக்**
**கண்ணீர் சொரிந்தகண் காசக்கண் புன்முலைக் கண்நகக்கண்**
**புண்ணீர் ஒழுகும் கொடுங்கண் பொறாமைக்கண் புன்கண்வன்கண்**
**மண்ணீர்மை உற்றகண் மாமணி நீத்தகண் மாலைக்கண்ணே.**

(பொ-ரை.) "தெளிந்த கங்கை ஆற்றுநீரைத் தன் முடி மீது கொண்ட கங்காதர மூர்த்தியைக் கண்டு ஆனந்தக் கண்ணீர் பொழியாதவர்களின் கண்கள், இருள் அடர்ந்த குருட்டுக் கண்ணுக்குச் சமம். எந்த நேரமும் தண்ணீர் வடிந்து கொண்டிருக்கும் நோய் பிடித்த கண்ணுக்குச் சமம். ஈளைகட்டும் கண்ணுக்குச் சமம், அற்பமான முலையின் கண்ணுக்குச் சமம், நகக் கண்ணுக்குச் சமம், இரத்தம் ஒழுகும் கண்ணுக்குச் சமம். கொடுமையான கண்ணுக்குச் சமம். பொறாமை கொண்ட கண்ணுக்குச் சமம். அற்பமான கண்ணுக்குச் சமம். கொடுமையான கண்ணுக்குச் சமம், மண்ணின் தன்மை கொண்ட கண்ணுக்குச் சமம். சிறந்த ஒளி அற்ற குருட்டுக் கண்ணுக்குச் சமம், மஞ்சள் காமாலைக் கண்ணுக்குச் சமம்". (எ-து.)

(அ-சொ.) காசம் - ஈளை. அழுக்கு. புன் - அற்பம். நீர்மை-தன்மை. மாமணி-கண்ணில் உள்ள பாபா. நீத்த-நீங்கிய. மாலை-மஞ்சள் காமாலை எனும் நோய்.

(இ-கு.) தெள்+நீர்; கண்+நீர்.

(வி-ரை.) நாம் கண்களைப் பெற்றதன் பயன் இறைவனைக் கண்ணாரக் கண்டு மகிழ்வதற்காகவே ஆகும். இதனால்தான் நம் தாண்டக வேந்தர் "கண்காள் காண்மின்களோ நஞ்சுண்ட கண்டன் தன்னை எண்தோள் வீசி நின்னாடும் பிரான் தன்னைக் கண்காள் காண்மின்களோ". என்றனர். இளங்கோ அடிகளாரும்

**பெரியவனை மாயவனைப் பேருலகம் எல்லாம்**
**விரிகமல உந்தியுடை விண்ணவனைக் கண்ணும்**
**திருவடியும் கையும் திருவாயும் செய்ய**
**கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே**
**கண்ணிமைத்துக் காண்பார்தம் கண்ணென்ன கண்ணே**

என்று கூறி இருப்பதையும் ஈண்டு நினைவுகொள்க. (142)

**கண்ணுத லான்புகழ் கேளார் செவிபொய்க் கதைஒலியும்**
**அண்ணுற மாதரும் மைந்தரும் கூட்டி அழும்ஒலியும்**
**துண்ணெனும் தீச்சொல் ஒலியும்அவ் அந்தகன் தூதர்கள்மொத்**
**துண்ணுற வாஎன் றுரப்பொலி யும்புகும் ஊன்செவியே.**

(பொ-ரை.) "நெற்றிக்கண்ணைப் பெற்ற சிவபெருமானுடைய புகழைக் கேட்காதவர்களின் காதுகள், பொய்க்கதை ஒலியையும், நெருங்கிப் பெண்களும் பிள்ளைகளும் சேர்ந்து கொண்டு அழுகின்ற ஒலியையும், திடுக்கிடும்படி கூறப்படும்

தீய சொற்களின் ஒலியையும், இயமனுடைய தூதர்கள், அடித்து, 'வ' என்று அதட்டிக்கூறும் ஒலியையும் கேட்கும் குற்றமுடைய செவிகளாகு." (எ-து.)

(அ-சொ.) கண்ணுதலான் - நெற்றிக்கண்ணுடைய சிவபெருமான். அண்உற-நெருக்கமாக. அந்தகன் - இயமன். மொத்துண்ணுற-அடிக்கப் படும் பொருட்டு உரப்பு ஒலி-அதட்டும் ஒலி. ஊன் - குற்றம்,

(இ-கு.) துண், ஒலிக்குறிப்பை உணர்த்தும் இடைச்சொல். ஊன் என்பது ஊனம் என்பதன் ஈற்றுக்குறை.

(வி-ரை.) இறைவன் திருப்புகழையே கேட்கும் பேற்றைச் செவிபெறுதல் வேண்டும். இன்றேல் அச்செவி பலவித கொடூரமான ஓசைகளையே கேட்கும் செவியாக அமைந்துவிடும். இது குறித்தே வாகீசர், "செவிகாள் கேண்மின்களோ சிவன் எம்இறை செம்பவளம் எரிபோல் மேனிப் பிரான்திறம் எப்போதும் செவிகாள் கேண்மின்களோ" என்று உணர்த்தியுள்ளனர்.

இளங்கோ அடிகளாரும் தம் சிலப்பதிகாரத்தில்,

**"மூவுலகும் ஈரடியால் முறைநிரம்பா வகைமுடியத்**
**தாவியசே வடிசேப்பத் தம்பியொடும் தான்போந்து**
**சோவரணம் போர்மடியத் தொல்இலங்கை கட்டழித்த**
**சேவகன்சீர் கேளாத செவியென்ன செவியே**
**திருமால்சீர் கேளாத செவியென்ன செவியே"**

என்று அறிவித்துள்ளதையும் உணரவும். (143)

**மணிகொண்ட கண்டனை வாழ்த்தார்தம் வாய்த்தெரு மண்உண்டவாய்**
**பிணிகொண்ட வாய்விடப் பிச்சுண்ட வாய்வரும் பேச்சற்றவாய்**
**துணிகொண்ட வாய்அனல் சூடுண்ட வாய்மலம் சோர்ந்திழிவாய்**
**குணிகொண்ட உப்பிலிக் கூழ்உண்ட வாய்எனக் கூறுபவே.**

(பொ-ரை.) "நீலமணி போன்ற கழுத்தையுடைய சிவபெருமானை வாழ்த்தாதவர்களின் வாய் வீதி மண்ணை உண்டவாய் என்றும், நோய்கொண்ட வாய் என்றும், விடம் பொருந்திய பித்தநீர் ஒழுகும் வாய் என்றும், பேச்சற்ற ஊமை வாய் என்றும், துண்டிக்கப்பட்ட வாய் என்றும் தீயினால் சூடு போடப்பட்ட வாய் என்றும், கோழை முதலான அழுக்குகள் வந்துகொண்டிருக்கும் நோய் கொண்ட இழிந்த வாய் என்றும், அளவுக்குட்பட்ட உப்பு இல்லாத கூழைக் குடிக்கின்றவாய் என்றும் அறிஞர்கள் சொல்லுவர்". (எ-து.)

(அ-சொ.) மணி-நீலமணி, பிணி-நோய். பிச்சு-பித்தநீர். துணி-துண்டித்தல். குணி-அளவு.

(இ-கு.) துணி குணி, முதல்நிலைத் தொழிற்பெயர்.

(வி-ரை.) விடத்திற்கு ஈண்டு நீல மணி உவமையாக வந்துளது. துணித்தல், குணித்தல் என்பன துணி, குணி என நின்றன. ஆளுடைய அரசுகள் தம் வாயை நோக்கி,

**வாயே வாழ்த்து கண்டாய் மதயானை உரிபோர்த்துப்**
**பேய்வாழ் காட்டகத்தா டும்பிரான் தன்னை வாயே வாழ்த்து கண்டாய்**

என்று உபதேசித்தல் காணவும்.

சிலப்பதிகாரம் இந்தக் கருத்தில்,

**மடந்தாழும் நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சம்**
**கடந்தானை நூற்றுவர்பால் நாற்றிசையும் போற்றப்**
**படர்ந்தா ரணம்முழங்கப் பஞ்சவர்க்குத் தூது**
**நடந்தானை ஏத்தாத நாஎன்ன நாவே**
**நாராய ணாஎன்ன நாஎன்ன நாவே.**

என்று கூறியிருப்பதையும் உற்று நோக்குக. (144)

**சகம்இலை யேஎன் றுடையானை எண்ணலர் தங்கள்நெஞ்சம்**
**சுகம்இலை யேஉணச் சோறிலை யேகட்டத் தூசிலையே**
**அகம்இலை யேபொருள் ஆஇலை யேவள்ள லார்இலையே**
**இகம்இலை யேஒன்றும் இங்கிலை யேயென் றிரங்கும்நெஞ்சே.**

(பொ-ரை.) "மனமே! ஆளுவதற்கு நாடு இல்லையே என்று எண்ணி ஏக்கமிட்டுக்கொண்டு எல்லாவற்றையும் தமக்கு உடைமையாகக் கொண்ட இறைவனை எண்ணாதவர்களின் உள்ளம், எப்போதும் சுகம் இல்லை என்றும், உண்ணச் சோறு இல்லை என்றும், இடுப்பில் கட்ட ஆடை இல்லை என்றும், இருக்க வீடு இல்லை என்றும், சொத்தாக வைத்திருப்பதற்குப் பொருள் இல்லை என்றும், பசுமாடு இல்லை என்றும், நாம் கேட்டபோதெல்லாம் கொடுக்கக்கூடிய வள்ளல் இல்லை என்றும், இந்த உலக போகம் எதுவும் இல்லை என்றும், ஒன்றும் இந்த உலகத்தில் இல்லை என்றும் நினைந்துகொண்டும் சொல்லிக்கொண்டு இரக்கப்பட்டுக் கொண்டு இருக்கும். நீ இத்தகைய எண்ணங்களைக் கொள்ளாதே". (எ-து.)

(அ-சொ.) சகம்-உலகம். தூசு-ஆடை. அகம்-வீடு. வள்ளலார்-இல்லை என்னாது கொடுப்பவர். இகம்-இவ்வுலக இன்பம். ஆ-பசுமாடு. இரங்கும்-வருந்தும்.

(வி-ரை.) இப்பாட்டு நம் வள்ளலார் தம் உள்ளத்திற்கு அறிவுறுத்தும் முறையில் அமைந்துளது. இதன் கருத்து, இறைவனை எண்ணாதவர்கள் எதுவும் தமக்கு இல்லையே என்று வருந்துவர். ஆனால் இறைவனை என்றும் சிந்தித்தவண்ணம் இருப்பவர்கள் எல்லாவற்றையும் பெற்று இன்புடன் இருப்பர் என்பது. (145)

**பொங்கரும் பேர்முலை மங்கைக் கிடம்தந்த புத்தமுதே**

**செங்கரும் பேநறும் தேனே மதுரச் செழுங்கனியே**
**திங்களும் கங்கையும் சேர்ந்தொளிர் வேணிச் சிவக்கொழுந்தே**
**எங்களை ஆட்கொண்டும் என்னே துயரில் இருத்துவதே.**

(பொ-ரை.) "மேலே புடைத்து எழுந்த அருமை வாய்ந்த பெரிய முலையினையுடைய உமாதேவியார்க்கு இடப்பக்கத்தைத் தந்த புதிய அமுதமே! செங்கரும்பே! நல்ல வாசனை மிக்க தேனே! இனிய வளமான பழமே! சந்திரனும் கங்கையாறும் சேர்ந்து விளங்கும் சடைமுடியுடைய சிவக்கொழுந்தே! எங்களை ஆட்கொண்ட பிறகும், எங்களைத் துன்பத்தில் ஆழச்செய்வது என்ன முறைமை?" (எ-து.)

(அ-சொ.) நறும்-நல்ல மணம் வீசும். மதுரம்-இனிமை. செழும்கனி-வளமான பழம். திங்கள்-சந்திரன். வேணி-சடை. என்னே-என்ன முறைமை.

(இ-கு.) பொங்கு+அரும்+பெருமை+முலை.

(வி-ரை.) இறைவன் திருச்சடை சந்திரனுக்கும் கங்கைக்கும் இருப்பிடம். இவற்றிற்கு மட்டும் இருப்பிடம் அன்று. ஏனைய பொருள்களுக்கும் அஃது இருப்பிடம். இதனை நம் தாண்டக வேந்தர் சுவைபட,

**"அங்கட் கடுகைக்கு முல்லைப் புறவம் முறுவல்செய்யும்**
**பைங்கண் தலைக்குச் சுடலைக் களரி பருமணிசேர்**
**கங்கைக்கு வேலை அரவுக்குப் புற்றுக் கலைநிரம்பாத்**
**திங்கட்கு வானம் திருஒற்றி யூரர் திருமுடியே"**

என்று பாடியிருப்பதைக் காண்க. (146)

**வில்லைப்பொன் னாக்கரம் கொண்டோய்வன் தொண்டர் விரும்புறச்செங்**
**கல்லைப்பொன் ஆக்கிக் கொடுத்தோய்நின் பாதம் கருத்தில்வையார்**
**புல்லைப்பொன் னுக்கொளும் புல்லர்கள் பால்சென்று பொன்அளிக்க**
**வல்லைப்பொன் ஆர்புய என்பார் இஃதென்சொல் வாணர்களே.**

(பொ-ரை.) "மேரு மலையை வில்லாகக் கொண்ட திருக் கரத்தையுடையோய்! உன்னால் வலிய ஆட்கொள்ளப்பட்ட தொண்டராம் சுந்தரர் விருப்பம் கொள்ள செங்கற்களைப் பொன்னாக மாற்றிக் கொடுத்த வள்ளலே! உன் திருவடிகளைக் கருத்தில் வைத்துச் சிந்திக்காத சொல் செல்வம் படைத்த புலவர்கள், புல்லைக் கூடப் பொன் போல எண்ணி மறைக்கும் அத்தனை ஈயாக் குணம் கொண்டவர்களிடம் சென்று, அந்த உலோபிகளைப் பார்த்து, 'அழகு நிறைந்த வன்மை மிக்க தோள்களை யுடையவனே! எங்களுக்கும் பொன்னைத் தருக என்று கேட்கிறார்களே. அவர்களின் அறியாமைதான் என்னே!" (எ-து.)

(அ-சொ.) வன் தொண்டர்-சுந்தரமூர்த்தி சுவாமிகள். புல்லர்-அற்பர்; பொன் - அழகு. ஆர்-நிறைந்த சொல் வாணர். சொல் செல்வம் படைத்த புலவர்கள். வல்லை-வன்மை.

(இ-கு.) பொன் ஆக என்பது பொன்னா என நின்றது தொகுத்தல் விகாரம் பற்றி என்க. பால் - ஏழன் உருபு.

(வி-ரை.) தாருகாட்சன் - வித்யுன்மாலி, கமலாட்சன் என்னும் மூன்று அரக்கர்கள் மூன்று கோட்டைகளைக் கொண்டு, தேவர்களைத் துன்புறுத்தி வந்தார்கள். இதன் பொருட்டு அவர்களை இறைவர் அழிக்க மேரு மலையை வில்லாகக் கொண்டனர். இதுவே "வில்லைப் பொன்னாக்கரம் கொண்டோய்" என்பதில் அடங்கிய வரலாறு. மேருமலை பொன்மலை என்றும் கூறப்படும். "வாரார் சிலை கலை மெய் மாதங்கம் அம்மானை" என்பது அருணைக் கலம்பகம்.

குமரகுருபரர் மேருமலை வில்லாக வளைந்தது குறித்துக் கூறும் காரணம் சுவை தருவது. அதாவது, மேருமலை இறைவனது தோளின் சீரைத் தான் பெறாமையால் அது வணங்கி வளைந்து வில்லாயிற்றாம். இந்தக் கருத்தை,

**பார்பெற்ற வல்லிக்கும் பாகீ ரதிக்கும்மெய்ப் பாதியும்அத்**
**தார்பெற்ற வேணியும் தந்தார் தியாகர் தடம்புயத்தின்**
**சீர்பெற்றி லேம்என்று நாணால் வணங்கிச் சிலைஎனவும்**
**பேர்பெற்ற தால்பொன் மலைகுனித் தார்எம் பிரான்என்பரே.**

என்னும் பாடலில் காண்க.

சிவபெருமான் நம்பி ஆரூரரைத் தடுத்தாட் கொள்ள வந்தபோது, வந்தவர் சிவபெருமான் என்று உணராத காரணத்தால் இறைவரை, "பித்தனோ மறையோய்" என்றும் "பழைய மன்றாடி போலும் இவன்" என்றும் வன்மைகள் பேசினார். இதனால் சிவபெருமான் சுந்தரருக்கு வந்தொண்டன் என்னும் தீட்சா நாமம் சூட்டினார். "மற்றும் நீ வன்மை பேசி வந்தொண்டன் என்னும் நாமம் பெற்றனை" என்னும் பெரிய புராண அடியைக் காண்க.

பங்குனி உத்தரத் திருநாள் நெருங்கியது. அதன் பொருட்டுப் பொன் பெறப் புறப்பட்டார். திருப்புகலூரை அடைந்தார் இத் தலம் நன்னிலம் ரெயில் அடியிலிருந்து நான்கு கல் தொலைவில் உள்ளது. இங்குள்ள குளம் வியக்கத்தக்க முறையில் அமைந்திருக்கும். இது கோவிலுக்கு அகழி போன்றிருக்கும். இங்குச் சித்திரை மாதம் அப்பர் சுவாமிகளுக்கு நடக்கும் விழாவை ஒவ்வொருவரும் கண்டு களிக்க வேண்டும். அதிலும் அப்பர் இறைவன் திருவடியில் கலக்கும் சித்திரை சதய நட்சத்திர விழாவைக் கட்டாயம் பார்த்தல் வேண்டும். அப்பர் மோட்சம் அடைந்த நாள் அது. அப்பர் இறைவன் திருவடியில் கலக்க விரும்பிப் பாடிய தாண்டகத்தில் "சிங்கமே உன்னடிக்கே போதுகின்றேன் திருப்புகலூர் மேவிய தேவதேவே" என்று பாடியுள்ளனர். இந்த அடிக்குத் தவறாகப் பொருள் கண்டு, சிவபெருமான் சிங்க வடிவில் அப்பரை விழங்கி விட்டார் என்ற முறையில் ஒரு சிற்பத்தையும், சிவபெருமான் அப்பரை விழுங்குவதுபோலச் செய்து வைத்தனர். அச்சிற்பம் பல ஆண்டுகள் இருந்தது. பிறகு நல்ல உணர்ச்சி மிக்க சைவர்கள் அவ்வாறு சிற்பத்தை அமைப்பது தவறு என்று எடுத்துக் காட்டி, அச் சிற்பத் தோற்றத்தை நீக்கிவிட்டனர். இறைவர் அப்பரைச் சிங்க வடிவில் விழுங்கினார் என்பது உண்மையாய் இருந்திருந்தால் சேக்கிழார் கூறி இருப்பர். சேக்கிழார் வாக்கு "அண்ணலார் சேவடிக்கீழ் ஆண்டரசு அமர்ந்திருந்தார்" என்பது.

திருப்புகலூரில் இரண்டு பாடல் பெற்ற தலங்கள் உண்டு. இரண்டும் அடுத்தடுத்தே உள்ளன. முதல் தலத்தின் பெயர் திருப்புகலூர்த் தேவத்தானம். அடுத்த தலம் திருப்புகலூர் வர்த்தமா னீச்சரம். திருப்புகலூர்ப் பெருமான் சிறிது சாய்ந்து காணப்படுவர். அதுவே அவர், கோணப்பிரான் என்று கூறப்படுவார்.

“கோணப் பிரானைக் குறுகக் குறுகா கொடுவினையே” என்பது அப்பர் வாக்கு. வர்த்தமானீச்சரத் தலத்தில் முருக நாயனார் மலர்த்தொண்டு செய்ததைத் திருஞான சம்பந்தர் “முருகன் முப்போதும் செய் முடிமேல் வாசமா மலருடையார் வர்த்தமா னீச்சரத்தரசே” என்று பாடி அறிவித்துள்ளனர்.

இன்னோரன்ன பெருமைக்குரிய தலத்திற்குத்தான் சுந்தரர் பொன் வேண்டிச் சென்றான். சென்ற நாள் இரவு அங்கிருந்த செங்கற்களைத் தலையணையாகக் கொண்டு உறங்கினார். காலையில் எழுந்தபோது அவை அனைத்தும் பொன் கற்களாகத் துலங்கியதைக் கண்டு உள்ளம் உவந்து

**தம்மை யேபுகழ்ந் திச்சை பேசினும் சார்வினும் தொண்டர் தருகிலாப்**
**பொய்மை யாளரைப் பாடாதே எந்தை புகலூர் பாடுமின் புலவீர்காள்**
**இம்மை யேதரும் சோறும் கூறையும் ஏத்த லாம்இடர் கெடலுமாம்**
**அம்மை யேசிவ லோகம் ஆள்வதற்கி யாதும் ஐயுற வில்லையே**

என்று பாடியருளினார். இந்த வரலாறே “வன் தொண்டர் விருப்புறச் செங்கல்லைப் பொன்னாக்கிக் கொடுத்தோய்” என்னும் வரியில் அடங்கி உளது. (147)

**கூத்துடை யாய்என் உடையாய்முத் தேவரும் கூறுகின்ற**
**ஏத்துடை யாய்அன்பர் ஏத்துடை யாய்என்தன் எண்மைமொழிச்**
**சாத்துடை யாய்நின் தனக்கே பரம்எனைத் தாங்குதற்கோர்**
**வேத்துடை யார்மற் றிலைஅருள் ஈதென்தன் விண்ணப்பமே.**

(பொ-ரை.) “உலகம் உய்யத் திருநடனம் புரியும் கூத்தப் பெருமானே! என்னை அடிமையாக உடையவனே! பிரம்மா, திருமால், உருத்திரன் ஆகிய மூன்று தேவர்களும் புகழ்ந்து கூறுகின்ற புகழ்ச்சிகளைக் கொண்டவனே! மெய் அன்பர்கள் போற்றும் போற்றுதலையும் ஏற்றுக் கொள்பவனே! என்னுடைய மிக எளிமையான சொல்லால் ஆகிய பாமாலைகளையும் சாத்திக்கொள்ளும் கருணா மூர்த்தியே. நான் தளராதபடி என்னைத் தாங்குவது உன்னுடைய பொறுப்பே ஆகும். வேறு தலைவர் எவரும் எனக்குக் கிடையாது. ஆகவே, அருள் செய்வாயாக. இதுவே என் விண்ணப்பம்.!” (எ-து.)

(அ-சொ.) முத்தேவர்-பிரம்மா, திருமால், உருத்திரனாகிய மூன்று தேவர்கள். ஏத்து-போற்றுதல். எண்மை-எளிமை. சாத்து-அணிதல், மற்று-வேறு. பரம்-பொறுப்பு. வேத்துடையார்-தலைவராய் அமைபவர்.

(இ-கு.) ஏத்து, சாத்து என்பன முதல் நிலைத் தொழிற்பெயர். பரம் என்பது பாரம் என்பதன் முதற்குறை. வேந்து என்பது, வேத்து என ஆயது வலித்தல் விகாரம். இது என்பதன் நீட்டல் விகாரம் ஈது என்பது.

(வி-ரை.) உருத்திரரைச் சிவபெருமானாகக் கருதுதல் அறியாமையினால் உண்டான கருத்து. உருத்திரர் வேறு. சிவம் வேறு. இந்த உண்மையினை நன்கு உணர்த்தவே தான் மணிவாசகப் பெருமானார்,

**பூவேறு கோனும் புரந்தரனும் பொற்பமைந்த**
**நாவேறு செல்வியும் நாரணனும் நான்மறையும்**
**மாவேறு சோதியும் வானவரும் தாம்அறியாச்**
**சேவேறு சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பி**

என்று பாடி அருளினர். மாவேறு சோதி ஈண்டு உருத்திரன். சேவேறு சோதியே முழு முதற் பரம்பொருளாம் சிவபெருமான். (148)

**வெப்பிலை யேஎனும் தண்விளக் கேமுக்கண் வித்தகநின்**
**ஒப்பிலை யேஎனும் சீர்புக லார்புற்கை உண்ணுதற்கோர்**
**உப்பிலை யேபொருள் ஒன்றிலை யேஎன் றுழல்பவர்மேல்**
**தப்பிலை யேஅவர் புன்தலை ஏட்டில் தவம்இலையே.**

(பொ-ரை.) “வெம்மை இலை என்று கூறத்தக்க முறையில் குளிர்ந்து விளங்கும் ஒளிவளர் விளக்கே! மூன்று கண்களைக் கொண்ட பேரறிவாளனே! உனக்கு எவரும் ஒப்பு இல்லை’ என்று உன் புகழைக் கூறாதவர்கள், ‘கஞ்சி உணவுக்குப் போடக்கூட உப்பு இலையே. பணம் ஒன்றும் இல்லையே’, என்று திரிபவர்கள் ஆகிய இவர்கள் மீது தவறில்லை. ஏனெனில் உன்னைப் புகழக் கூடிய தவம் அவர்கள் அற்பமான தலை ஏட்டில் இல்லாமையே ஆகும்” (எ-து.)

(அ-சொ.) வெப்பு-வெம்மை. தண்விளக்கு-குளிர்ந்த விளக்கு. வித்தக-பேரறிவாளனே. புற்கை-கஞ்சி உணவு. உழல்பவர்-திரிபவர். புன்தலை-கீழ்த்தரமான தலை.

(இ-கு.) தண்மை+விளக்கு.

(வி-ரை.) இறைவன் பேரொளிப் பிழம்பே ஆயினும், அவனது காட்சி அன்பர்களுக்குத் தண்மையாகவே காணப்படும். ஆதலின் “வெப்பிலையே எனும் தண் விளக்கே” எனப்பட்டது. இறைவனுக்கு ஒப்பு எவரும் இலர். இதனை முறையே திருவள்ளுவரும், மணிமொழியாரும், “தனக்குவமை இல்லாதான்”. “ஒப்புனக்குஇல்லா ஒருவனே” என்று கூறுதல் காண்க. இப்பாட்டின் கருத்து இறைவனைப் புகழும் தவம் இல்லாதவர்கள் உப்புக் கூட இன்றி வருந்துவர் என்பதாம்.

**எனைப்பெற்ற தாயினும் அன்புடை யாய்எனக் கின்பம்நல்கும்**
**உனைப்பெற்ற உள்ளத் தவர்மலர்ச் சேவடிக் கோங்கும்அன்பு**
**தனைப்பெற்ற நல்மனம் தாம்பெற்ற மேலவர் சார்பைப்பெற்றால்**
**வினைப்பெற்ற வாழ்வின் மனைப்பெற்றம் போல மெலிவநின்றே.**

(பொ-ரை.) "என்னைப் பெற்றெடுத்த தாயைக் காட்டிலும் அன்புடைய பெருமானே! எனக்கு இன்பம் தருகின்ற உன்னைத் தம் இறைவனாகக் கொண்ட மனம் பெற்றவர்களின் திருவடிகளில் பெருகும் அன்பைப் பெற்ற நல்ல மனத்தையுடைய மேலோர்களின் தொடர்பைக் கொண்டால் தீவினையுடன் வாழ்கின்ற வாழ்வில், வீட்டு மாடுபோல் இளைக்க வேண்டிய தில்லையே". (எ-து.)

(அ-சொ.) நல்கும் - கொடுக்கும். சார்பு-தொடர்பு. வினை-தீவினை. மனைப்பெற்றம் - வீட்டு மாடு.

(இ-கு.) செம்மை+அடி.

(வி-ரை.) வீட்டு மாட்டின் மெலிவுக்குக் காரணம், அதன் உரிமையாளன் அதன் பசி நீங்கும் வரையில் உணவு அளிக்க மாட்டான். ஆகவே, அது மெலிவுறுகிறது ஆனால் ஊரில் மேய்ந்து வரும் மாடு பல இடங்களில் சென்று மேய்வதால் உடல் பருத்து வாடாமல் வதங்காமல் இருக்கும். இந்த உண்மையினை உணர்ந்த நம் வள்ளலார். நாம் இறைவனுடைய அன்பர்களின் தொடர்பைப் பெற்றால். "ஊர் மேயும் மாட்டைப் போலக் கவலையற்று இருக்கலாம்" என்பதை எதர்மறை முகத்தால் "மனைப் பெற்றம் போல மெலிவதின்றே" என்றனர்.

**அன்பர்பணி செய்யஎன்னை ஆளாக்கி விட்டுவிட்டால்**
**இன்பநிலை தானேவந் தடையும் பராபரமே**

என்னும் பாடல் கருத்தே நம் ஐயாவின் பாட்டில் பொதிந்துளது. (150)

**நிறைமதி யாளர் புகழ்வோய் சடைஉடை நீள்முடிமேல்**
**குறைமதி தான்ஒன்று கொண்டனை யேஅக் குறிப்பெனவெ**
**பொறைமதி யேன்தன் குறைமதி தன்னையும் பொன்அடிக்கீழ்**
**உறைமதி யாக்கொண் டருள்வாய் உலகம் உவப்புறவே.**

(பொ-ரை.) "நிறைவான அறிவுடைய பெருமக்களால் புகழப்படும் பெருமானே! நீ சடையாகிய நீண்ட முடிமீது, பிறைச் சந்திரனைக் கொண்டுள்ளாய். அந்தக் குறிப்பின்படி, கல் போன்ற அறிவுடையவனான எனது குறைந்த அறிவையும் ஏற்று உன் அழகிய திருவடிக்கீழ்ப் பொருந்தும் அறிவாகக் கொண்டு உலகம் மகிழ அருள் செய்வாயாக." (எ-து.)

(அ-சொ.) மதி-அறிவு. பொறை-கல். பொன் - அழகிய. உறை-பொருந்தும். உவப்ப-மகிழ.

(இ-கு.) தான் - அசைச்சொல், உலகம் - இட ஆகுபெயர்.

(வி-ரை.) தன் கலைகள் எல்லாம் குறைந்து சிவபெருமானை அடைக்கலம் புகுந்தபோது, சிவபெருமான் அதனைக் குறைவுடைய மதி என்று தள்ளாமல் ஏற்று, உயர்ந்த தானத்தில் வைத்துக் காப்பாற்றினார். இந்தத் குறிப்பு இறைவர் குறைந்த மதியினரையும் ஏற்று அருள்வார் என்பதைக் குறிப்பதாகும். ஆகவே, வள்ளலார் இறைவரை நோக்கி, "இறைவரே என்மதி பொறை (கல்) மதிதான். குறைமதி

(குறிந்த அறிவுதான்) என்றாலும், சென்னியில் வைத்து ஆதரிக்காவிட்டாலும், உனது அழகிய திருவடியிலாகிலும் வைத்து ஆதரிப்பீராக” என்று வேண்டுவாராயினார். (151)

**துடிவைத்த செங்கை அரசேநல் லூரில்நின் தூமலர்ப்பொன்**
**அடிவைத்த போதெங்கள் அப்பர்தம் சென்னி யதுகுளிர்ந்தெப்**
**படிவைத்த தோஇன்பம் யான்எணும் தோறும்இப் பாவிக்குமால்**
**குடிவைத்த புன்தலை ஒன்றோ மனமும் குளிர்கின்றதே.**

(பொ-ரை.) ‘உடுக்கையினைக் கொண்ட நல்ல திருக்கரமுடைய நடராசப் பெருமானே! திருநல்லூர் என்னும் திருத்தலத்தில், உனது தூய்மையான தாமரை மலர்போன்ற அழகிய திருவடியினை அப்பர் பெருமானின் திருமுடிமீது வைத்தபோது அத்திருவடி இன்பம் எப்படி இருந்ததோ? என்னால் அறிய முடியவில்லையே. இந்த நிகழ்ச்சியை நான் நினைக்கும்போதெல்லாம் இந்தப் பாவியின் மயக்கம் குடியாகக் கொண்டுள்ள என் அற்பமான தலை மட்டுமா குளிர்கின்றது? என் மனமும் அன்றோ குளிர்கின்றது?” (எ-து.)

(அ-சொ.) துடி-உடுக்கை. தூ-தூய்மையான. பொன் - அழகிய. அப்பர் - திருநாவுக்கரசர். மால் - மயக்கம். குடிவைத்த-குடியாகக் கொண்ட. புன் - அற்பமான செங்கை-நல்ல திருக்கரம்.

(இ-கு.) செம்மை+கை. சென்னியது என்பதில் உள்ள அது என்பது பகுதிப்பொருள் விகுதி. மால்+உரிச்சொல். மனமும், என்பதில் உள்ள உம் இறந்தது தழுவிய எச்ச உம்மை.

(வி-ரை.) திருநாவுக்கரசருக்கு உள்ள பெயர்களுள் அப்பர் என்பதும் ஒன்று. இப்பெயர் திருஞானசம்பந்தரால் திருநாவுக்கரசருக்கு அமைந்ததாகும். திருஞானசம்பந்தர் திருப்புகலூரில் முருகநாயனார் திருமடத்தில் எழுந்தருளி இருந்தார். இந்த நிலையில் திருநாவுக்கரசரும் திருப்புகலூர் இறைவனை வணங்க ஆர்வத்துடன் வந்துகொண்டிருந்தார். இதனை அறிந்த சம்பந்தர் அவரை எதிர்கொண்டு அழைக்கச்சென்றார். அதுபோது, திருநாவுக்கரசர் திருஞானசம்பந்தர் திருவடிகளை வணங்கும்போது, ஆளுடைய பிள்ளையார் “இவ்வளவு பெரியவர் தம் திருவடியில் பணிதல் கூடாது. இவர் தந்தை போன்றவர்” என்று கருதி வாகீசரின் திருக்கரங்களைப் பற்றி அவர் திருவடிகளை வணங்கி அப்பரே (தந்தையீர்) என்று விளித்தனர். இந்த உண்மையினைப் பெரிபுராணம்,

**“தொழுதணைவுற் றாண்டஅர சன்புருகத்**
**தொண்ர்குழாத் திடையே சென்று**
**பழுதில்பெருங் காதலுடன் அடிபணியப்**
**பணிந்தவர்தம் கரங்கள் பற்றி**
**எழுதரிய மலர்க்கையால் எடுத்திறைஞ்சி**
**விடையின்மேல் வருவார் தம்மை**
**அழுதழைத்துக் கொண்டவர்தாம் அப்பரே**
**எனஅவரும் அடியேன் என்றார்”**

என்று அறிவித்தல் காண்க.

இத்தகைய பெருமைக்குரிய அப்பர் திருச்சத்தி முற்றத் தலத்தை அடைந்தார். அதுபோது, அங்குச் சிவக்கொழுந்தென்னும் திருப்பெயருடன் திகழும் சிவபெருமானை நோக்கி (நம் ஐயாவும் நூற்று நாற்பத்தாறாவது பாட்டில் "திங்களும் கங்கையும் சேர்ந்தொளிர் வேணிச் சிவக்கொழுந்தே" என்று இத் திருப்பெயரை அமைத்துப் போற்றுதல் காண்க.)

**"கோவாய் முடுகி அடுதிறல் கூற்றம் குமைப்பதன்முன்**
**பூவார் அடிச்சுவ டென்மேல் பொறித்துவை போகாவிடின்**
**மூவா முழுப்பழி மூடும்கண் டாய்முழங் கும்தழற்கை**
**தேவா திருச்சத்தி முற்றத் துறையும் சிவக்கொழுந்தே"**

என்று பாடித் தம் திருமுடிமீது இறைவர் திருவடிகளைச் சூட்ட வேண்டினார். அதுபோது, சிவக்கொழுந்தீசர் அப்பர் பெருமானை நோக்கி, "அன்பனே நீ திருநல்லூருக்கு வருக. அப்போது உன் எண்ணத்தை முடித்துவைப்போம்" என்றருளினார். அக் கட்டளையினைப் பெற்ற அப்பர் திருநல்லூர் வந்துற்றார். நல்லூர்ப் பெருமானை வணங்கினார். அதுபோது, சிவபெருமான் "உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம்" என்றவர்தம் சென்னிமிசைப் பாதமலர் சூட்டினான். இதனை, அப்பர்பெருமானார் தம் திருவாக்கில்,

**"நினைந்துருகும் அடியாரை நைய வைத்தார்**
**நில்லாமே தீவினைகள் நீங்க வைத்தார்**
**சினந்திருகு களிற்றுரியைப் போர்வை வைத்தார்**
**செழுமதியின் தளிர்வைத்தார் சிறந்து வானோர்**
**இனந்துருவி மணிமகுடத் தேறத் துற்ற**
**இனமலர்கள் போதவிழ்ந்து மதுவாய்ப் பில்கி**
**நனைந்தனைய திருவடிஎன் தலைமேல் வைத்தார்**
**நல்லூர்எம் பெருமானார் நல்ல வாறே"**

என்று பாடியிருப்பதைக் காண்க.

இந்த வரலாற்றுக் குறிப்பே நல்லூரின் "தூமலர்ப்பொன் அடிவைத்தபோது எங்கள் அப்பர் தம் சென்னிஅது குளிர்ந்து" என்னும் வரிகளில் அமைந்துளது.

திருச்சத்தி முற்றம் என்பது தாராசுரம் இரயில் நிலையத்தில் இருந்து இரண்டு கல் தொலைவில் உள்ளது. இறைவி இறைவனைத் தழுவி முத்தம் இட்டதாகக் கருதப்படுகிறது. இந்த உண்மையினை விளக்கும் முறையில் கோவிலில் சிற்ப உருவமும் அமைக்கப்பட்டிருக்கிறது. இறைவி இங்குப் பூசித்ததை அப்பர்பெருமான் "மட்டார் குழலி மலைமகள் பூசை மகிழ்ந்தருளும், சிட்டர் திருச்சத்தி முற்றத்துறையும் சிவக்கொழுந்தே" என்று பாடியும் உள்ளனர். சத்திமுத்தம் என்று இருக்க வேண்டியது சத்திமுற்றம் என்றாயது என்பது சிலர் கருத்து. பதிகத்தில் சத்திமுற்றம் என்றுதான் உளது. இத் தலத்து இறைவர் பெயர் சிவக்கொழுந்தீசர். இறைவியார் திருப்பெயர் பெரியநாயகி.

இத் தலத்தின் அடுத்த வீதியில் இருப்பது திருப்பட்டீச்சுரம். இத்தலத்து இறைவர் திருஞானசம்பந்தருக்குத் தம் முன் இருந்த நந்தியை விலகச்செய்து காட்சி கொடுத்துள்ளனர், மேலும், திருஞானசம்பந்தருக்கு முத்துப் பந்தல் தந்த தலமும் இதுவே.

திருநல்லூர், வடதிசை கயிலை எனப்படும். இத்தலம் சுந்தரப்பெருமான் கோயில் இரயில் நிலையத்திலிருந்து தெற்கே ஒன்றரை கல் தூரத்தில் உள்ளது. இறைவர் கலியாண சுந்தரேசுவரர், பெரியாண்டேசுரர், பஞ்சவர்ணேசுரர் என்றும், இறைவியார் கலியாணசுந்தரி, பர்வதசுந்தரி என்றும் கூறப்படுவர். கோச் செங்கட் சோழர் கட்டிய மாடக் கோயில்களுள் ஒன்று. அமர்நீதி நாயனார் தம் மனைவியாருடனும், குழந்தையுடனும் முத்திபெற்ற தலம். இதனை ஆளுடைய அரசு,

**"நாட்கொண்ட தாமரைப் பூத்தடம்**
**சூழ்ந்தநல் லூர்அகத்தே**
**கீட்கொண்ட கோவணம்கா என்று**
**சொல்லிக் கிறிபடத்தான்**
**வாட்கொண்ட நோக்கி மனைவியொடும்**
**அங்கோர் வாணிகனை**
**ஆட்கொண்ட வார்த்தை உரைக்கும்**
**அன்றோஇவ் அகல்இடமே"**

என்று பாடியுள்ளனர்.

இங்குள்ள இலிங்கம் சுவர்ண சாயையுடனும், ஐந்து நிறங்களுடனும் விளங்கும் சிறப்புடையது. அகத்தியர் வண்டு வடிவுடன் இறைவனைப் பூசித்துள்ளனர். இதனால் இறைவர் திருமேனியில் சிறு சிறு சந்துகள் உள்ளன. இஃது அகத்தியர்க்கு இறைவர் திருமணக்கோலத்துடன் காட்சிதந்தருளிய தலம். (152)

**ஒருமுடி மேல்பிறை வைத்தோய் அரிஅயன் ஒண்மறைதம்**
**பெருமுடி மேல்உற வேண்ட வராதுனைப் பித்தன்என்ற**
**மருமுடி ஊரன் முடிமேல் மறுப்பவும் வந்ததவர்**
**திருமுடி மேல்என்ன ஆசைகண் டாய்நின் திருவடிக்கே.**

(பொ-ரை.) "ஒப்பற்ற திருமுடிமீது பிறைச் சந்திரனை வைத்துள்ள சந்திர சேகரப் பெருமானே! திருமாலும் பிரமனால் நல்ல வேதங்களும் ஆகிய இவர்கள் தம் தம் முடிமீது உன் திருவடிகளை வைக்குமாறு வேண்டியும், அவர்களின் வேண்டுகோளுக்கு உடன்படாமல், உன்னைப் பித்தன் என்ற நம்பி ஆரூரரது மணம் வீசும் திருமுடிமேல் நீ உன் திருவடிகளைச் சூட்டியபோது, அவர் மறுப்பவும், தம் குறையை முடிக்க நில உலகில் வந்து பிறந்த நல்தவம் வாய்க்கப்பெற்ற அந்தத் திருநாவலூரின் சிறந்த திருமுடிமீது மீண்டும் மீண்டும் உன் திருவடிகளை வைக்க உன் திருவடிகட்கு என்ன ஆசையோ? தெரியவில்லையே!" (எ-து.)

(அ-சொ.) ஒரு-ஒப்பற்ற, அரி-திருமால். அயன் - பிரமன். ஒண்மறை-பொருள் பொலிவு நிறைந்த வேதம். மரு-வாசனை. ஊரன் -திருநாவலூரராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள். திரு-சிறந்த.

(இ-கு.) அரி அயன் ஒண்மறை, உம்மைத்தொகை.

(வி-ரை.) அரி என்பது, அரன் என்பதன் பெண்பால் ஆகவே அரி இறைவனுடைய சத்திகளில் ஒன்று "அரி அலால் தேவி இல்லை" என்பது அப்பர் திருவாக்கு.

இறைவர் சுந்தரருடைய திருமணத்தில் வந்துற்று "நீ என் அடிமை" என்றனர். அதுபோது நம்பி ஆரூரர், பிராம்மணர்களுக்குப் பிராம்மணர் அடிமை ஆதல் இன்று நீர் சொல்லத்தான் கேட்கின்றேன். ஆகவே நீர் பித்தரோ" என்று கூறினர். இதுவே இங்கு "உனைப் பித்தன் என்ற மருமுடி ஊரன்" என்ற வரியில் அமைந்துள்ள வரலாற்றுக் குறிப்பு.

திருநாவலூரர் திருவதிகைக்கு இறைவனை வணங்கப் புறப்பட்டார். அத்தலம் திருநாவுக்கரசரால் கைத்தொண்டு செய்யப் பெற்றது என்னும் நினைவாலே அத்தலத்தை மிதிக்க அஞ்சி, அத்தலத்துக்குப் பக்கத்தே இருந்த சித்தவடம் என்னும் மடத்தில் படுத்துக்கொண்டிருந்தார். திருவதிகை வீரட்டானேசுவரர், இவரை ஆட்கொள்ள இவர் படுத்திருந்த இடத்திற்கு அருகே வந்து சுந்தரர் திருமுடி மீது தம் திருவடி படும்படி உறங்குவார் போலப் படுத்துக் கொண்டிருந்தனர். சுந்தரர் தம் முடிமேல் திருவடி படும்படி பொய் உறக்கம் கொண்டிருந்த பெரியவரை நோக்கி, "ஐயன்மீர்! உம் பாதம் என்தலைமேல் படுகிறதே" என்றனர், அப்பொழுது வலிய வந்து ஆட்கொள்ளும் வள்ளல், "ஐயா! என்னுடைய மூப்புப் பருவம் திசை தெரியாமல் மறைக்கின்றமையினால், உம் முடிமீது என் கால பட நேர்ந்தது" என்றார். இதனைக் கேட்ட ஆளுடைய நம்பிகள் முதியர் படுத்திருந்த இடத்தை விட்டுச் சற்றுத் தள்ளிப் படுத்துக் கொண்டனர். அப்போதும் திருவீரட்டானேசுவரர் தம் திருவடிகளைச் சுந்தரர் திருமுடிமீது படும்படி பொய் உறக்கம் கொள்வாராயினார். இதனை உணர்ந்த திருநாவலூரர் சிறிது சினந்து, "நீர் யாவர்? பல முறை என்னை மிதிக்கின்றீரே" என்று வினாவினார். அந்நிலையில் இறைவர். "எம்மை அறியாயோ?" என்று கூதி மறைந்தனர். நம்பீ, ஆரூரர் வந்தவர் திருவதிகை வீரட்டானேசுவரர் என்று அறிந்து தாம், இறைவர் வந்து தம்மை ஆட்கொண்டருளியதை உணராமல் போனோமே என்று வருந்தி,

**தம்மானை அறியாத சாதியார் உளரே**
**சடைமேல்கொள் பிறையானை விடைமேல்கொள் விகிர்தன்**
**கைம்மாவின் உரியானைக் கரிகாட்டில் ஆடல்**
**உடையானை விடையானைக் கறைக்கொண்ட கண்டத்**
**தெம்மான்தன் அடிக்கொண்டென் முடிமேல் வைத்திடும்என்னும்**
**ஆசையால் வாழ்கின்ற அறிவிலா நாயேன்**
**எம்மானை எறிகெடில வடவீரட் டானத்**
**துறைவானை இறைபோதும் இகழ்வன்போல் யானே.**

என்று பாடி அருளினார். இந்த வரலாற்றுக் குறிப்பே “ஊரன் முடிமேல் மறுப்பவும் வந்ததவர் திருமுடிமேல் என்ன ஆசை கண்டாய் நின் திருவடிக்கே” என்னும் வரியில் அமைந்துளது.

திருவதிகை வீரட்டானம் பண்ணுருட்டி இரயில் நிலையத்திற்குக் கிழக்கே ஒரு கல் தொலைவில் உளது. இறைவர் திரிபுராந்தரேசுவரர் இறைவி திரிபுரசுந்தரி. இங்குத்தான் திருபுரதகனம் நடந்தது என்பர். இங்கு இறைவர் திருஞானசம் பந்தருக்கு நடனக் காட்சியைக் காட்டியுள்ளனர். அப்பருடைய சூலை நோயை நீக்கிய தலமும் இதுவே. திலகலதியார் (அப்பரின் தமக்கையார்) திருத்தொண்டு செய்த தலம் இது.

**வேல்கொண்ட கையும்முந் நூல்கொண்ட மார்பமும் மென்மலர்ப்பொன்**
**கால்கொண்ட ஒண்கழல் காட்சியும் பன்னிரு கண்ணும்விடை**
**மேல்கொண்ட செஞ்சுடர் மேனியும் சண்முக வீறும்கண்டு**
**மால்கொண்ட நெஞ்சம் மகிழ்வதெந் நாள்என்கண் மாமணியே.**

(பொ-ரை.) “என் கண்போன்ற சிறந்த மணியே! உலக மயக்கத்தில் ஈடுபட்டுள்ள என் மனம் வேலைக் கொண்ட திருக்கரத்தையும், பூணல் அணிந்த மார்பையும், மென்மையான மலர்போன்ற அழகிய திருவடியில் அணிந்துள்ள ஒளியுடைய வீரத்தண்டை அணிந்த காட்சியையும் பன்னிரண்டு கண்களையும், இரடப வாகனத்தின் மீது எழுந்தருளிவரும் செம்மையான சுடர் போன்ற திருமேனியையும், ஆறு திருமுகங்களுடன் விளங்கும் ஒளியையும் கண்டு எந்த நாள் பெருமகிழ்ச்சி அடையுமோ? தெரியவில்லையே?”. (எ-து.)

(அ-சொ.) முந்நூல் - முப்புரி நூலாகிய பூணல். பொன் - அழகிய. ஒண் கழல் - ஒளியுடைய வீரத்தண்டை. விடை-இரடபம். வீறு-ஒளி. மால் - மயக்கம்.

(இ-கு.) மலர்ப்பொன், உவமத்தொகை, மால், உரிச்சொல்.

(வி-ரை.) இந்தப் பாட்டில் நம் வள்ளலார் “முருகப் பெருமானும், சிவபெருமானும் வேறல்லர். இருவரும் ஒருவரே” என்பதை நன்கு விளக்கி யுள்ளனர். இந்த உண்மையினைக் கந்தபுராணத்தின் மூலமும் நன்கு உணரலாம். தேவர்கள் சூரபதுமன், சிங்கமுகாசுரன் முதலான அசுரர்களால் மிகவும் துன்புற்றனர். அவர்களை அழித்துத் துன்பத்தினின்று நீங்கச் சிவபெருமானிடம் சென்று, சூரபதுமனைக் கொல்லத்தக்க ஒரு குமாரனைத் தர வேண்டும் என்று வேண்டினர். அவர் வேண்டுகோளுக்குச் செவி சாய்த்த சிவபெருமான் ஆறு திருமுகங்களுடன் விளங்கினார். சரவணப் பொய்கையில் பன்னிரண்டு கரங்களுடனும் விளங்கினார். இவ்வாறு சிவபெருமான் காட்சி அளித்ததை,

**“வந்திக்கும் மலரோன் ஆதி வானவர் உரைத்தல் கேளா**
**புந்திக்குள் இடர்செய் யற்க புதல்வனைத் தருதும் என்னா**
**அந்திக்கு நிகர்மெய் அண்ணல் அருள்புரிந் தறிஞர் ஆயோர்**
**சிந்திக்கும் தனது தொல்லைத் திருமுகம் ஆறும் கொண்டார்”**

**“அருவமும் உருவும் ஆகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்**
**பிரமமாய் நின்ற சோதி பிழம்பதோர் மேனி ஆகக்**

**கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள்பன் னிரண்டும் கொண்டே**
**ஒருதிரு முருகன் வந்தாங் குதித்தனன் உலகம் உய்ய".**

**"மறைகளின் முடிவால் வாக்கால் மனத்தினால் அளக்கொணாமல்**
**நிறைவுடன் யாண்டும் ஆகி நின்றிடும் நிமல மூர்த்தி**
**அறுமுக உருவாய்த் தோன்ற அருளொடு சரவ ணத்தின்**
**வெறிகமழ் கமலப் போதின் வீற்றிருந் தருளி னானே"**

என்னும் கந்தபுராணச் செய்யுட்களால் உணர்க. (154)

**விண்பூத்த கங்கையும் மின்பூத்த வேணியும் மென்முகமும்**
**கண்பூத்த நெற்றியும் பெண்பூத்த பாகமும் கார்மீடறும்**
**தண்பூத்த பாதமும் பொன்பூத்த மேனியும் சார்ந்துகண்டே**
**மண்பூத்த வாழ்க்கையை விண்பூத்த பூவின் மதிப்பதென்றே.**

(பொ-ரை.) "ஆகாயத்தில் தோன்றிய கங்கை யாற்றையும் மின்னலைப் போன்று விளங்கும் திருச்சடையையும், மென்மையான திருமுகத்தையும், கண்விளங்கும் நெற்றியையும், உமை அம்மை பொருந்தி யிருக்கும் இடப்பாகத்தையும், கரிய விடம் பொருந்திய கழுத்தையும் குளிர்ந்த மலர்கள் பொருந்தப் பெற்ற திருவைகளையும், பொன்னிறமான திருமேனியையும் நெருங்கிச் சென்று கண்ட பிறகு உலகில் வாழும் இந்தப் பொய்யான வாழ்க்கை, ஆகாயத் தாமரை போன்றது என்று எண்ணி வெறுத்து ஒதுக்குவது எந்த நாளோ தெரியவில்லையே" (எ-து.)

(அ-சொ.) விண்-ஆகாயம். வேணி-சடை. பெண்-உமாதேவி. கார்-கரிய விடம். மிடறு-கழுத்து.

(இ-கு.) கார், பண்பாகுபெயர். தண்மை+பூத்த.

(வி-ரை.) இறைவன் திருவடி குளிர்ச்சியுடன் விளங்குவதற்குக் காரணம், அன்பர்கள் பூசைசெய்யும்போது அப்பாதங்களிலிடும் மலர்களால் என்க. இறைவன் பொன்னார் மேனியன் என்று சுந்தரர் பாடி இருப்பதனால் ஈண்டுப் பொன்பூத்த மேனி எனப்பட்டது. தாமரை குளத்தில்தான் மலருமே ஒழிய ஆகாயத்தில் மலராது. ஆனால் புலவர்கள் விண் பூத்த கஞ்சம் (தாமரை) என்றும் பாடுவர். இவ்வாறு பாடுவது இப்பொருள் உவமை அணி கருதி என்க. இங்கு நம் ஐயா 'விண்பூத்த' என்று கூறி இருப்பதன் கருத்து, இல்பொருள் உவமை அணிக்கு எடுத்துக்காட்டாக இருப்பதற்காக மட்டும் அன்றி, விணில் தாமரை மலர்வது பெரிய ஆதலின், அதுபோல உலக வாழ்வும் பொய்யாகும் என்பதையும் விளக்குவதற்காகவே ஆகும். இதனையே "மண்தந்த வாழ்க்கையை விண்பூத்த பூவின் மதிப்பதென்னே" என்றனர். (155)

**தண்மதி யோஅதன் தண்அமு தோஎனச் சார்ந்திருள்நீத்**
**துண்மதி யோர்க்கின் புதவும்நின் பேர்அருள் உற்றிடவே**
**எண்மதி யோடிச்சை எய்தா தலையும்என் ஏழைமதி**
**பெண்மதி யோஅன்றிப் பேய்மதி யோஎன்னை பேசுவதே.**

(பொ-ரை.) "குளிர்ந்த சந்திரனோ?அல்லது அச்சந்திரனிடத்தில் உள்ள குளிர்ந்த அமுதமோ? என்று உணர்ந்து உன்னை அடைந்து தம் அஞ்ஞான இருளை ஒழித்துக் கொண்ட உள்ளத்தே அறிவு பெருக்கம் கொண்ட யோகியர்களுக்குப் பேரின்பத்தைத் தருகின்ற உன் திருவருளைப் பெற்றிட எண்ணும் அறிவும், ஆசையும் கொள்ளாது உலகச் சிற்றின்பத்தில் அலைகின்ற இந்த அறிவற்ற என் அறிவைப் பெண் அறிவு என்று கூறுவதா? அன்றிப் பேய் அறிவு என்று கூறுவதா? என்னென்று கூறுவது?" (எ-து.)

(அ-சொ.) இருள்-அஞ்ஞானம். உள்மதி-மெய்ஞ்ஞான அறிவு, எய்தாது-அடையாமல். என்னை-என்ன.

(இ-கு.) இருள்+நீத்து+உள்+மதி எனப் பிரிக்க, இன்பு+உதவும் மதியோடு என்பதன் ஓடு, எண்ணும் பொருள் தரும் இடைச்சொல்.

(வி-ரை.) சந்திரன் தன்னிடம் குளிர்ச்சியை மட்டும் பொருந்தப் பெறாமல் அமுதத்தையும் கொண்டு விளங்குவன். இந்த அமுதம்தான் நெல் முதலியவற்றிற்குப் பாலைத் தருவது. உள்மதி என்பது ஈண்டு ஞானக்கண். இதுகுறித்தே "அகத்தில் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்" என்றனர் திருமூலர். ஈண்டு உள்மதியோ என்பவர்கள் இறைவனை உள்ளத்தே ஞானக் கண்ணால் இறைவனைக் கண்டு இன்புறும் யோகியர்கள். பெண்கள் எவ்வளவு கற்பினும், அவர்கள் புத்தி ஒருவழிப் படாததாகும். "பெண்புத்தி பின்புத்தி" என்பது ஆன்றோர் கருத்து. அச்சொல் அதுபோது பணம் இன்மை காரணமாக அமைந்த சொல் அன்று. அறிவு இன்மை என்னும் பொருளில் ஆகும். இதனால்தான் நம் ஐயா 'பெண்மதியோ' என்றனர். "நுண்ணறி வுடைய நூலொடு பழகினும், பெண்ணறி வென்பது பெரும் பேதைமைத்து" என்பது ஆன்றோர் கருத்து. பேய் புத்தியும் ஒருவழிப்பட்டது அன்று. ஆகவேதான் மந்த புத்திக்கும் மால்கொண்ட புத்திக்கும் பேய் மதியை ஈண்டு ஒப்புக்காட்டியுள்ளார்.

**பிட்டுக்கும் வந்துமுன் மண்சுமந் தாய்என்பர் பித்தன்என்ற**
**திட்டுக்கும் சீர்அருள் செய்தளித் தாய்என்பர் தீவிறகு**
**கட்டுக்கும் பொன்முடி காட்டிநின் றாய்என்பர் கண்டிடஎன்**
**மட்டுக்கும் வஞ்சகத் தெய்வம்என் கோமுக்கண் மாணிக்கமே.**

(பொ-ரை.) "மூன்று கண்களைக்கொண்ட மாணிக்கமே! உன்னை முன் ஒருசமயம் பிட்டு வாங்கி உண்பதற்காகச் சென்று மண் சுமந்தாய் என்று சொல்லுவர். உன்னைச் சுந்தரர் பித்தன் என்று கூறியும்கூட அவருக்குச் சிறப்பையும் திருவருளையும் புரிந்தாய் என்பார்கள். தீய விறகு கட்டையை உன் அழகிய முடிமேல் வைத்துக் காட்சி அளித்தாய் என்பர். ஆனால் நான் மட்டும் உன்னைக்கண்டு இன்புறக் காட்சி அளிக்காமல் நீ இருப்பதால் உன்னை வஞ்சகமான தெய்வம் என்று கூறலாமா?" (எ-து.)

(அ-சொ.) மட்டு - அளவு. என்கோ-என்று கூறட்டுமா?

(இ-கு.) சீர் அருள், உம்மைத்தொகை.

(வி-ரை.) பிட்டுக்கு மண் சுமந்ததை எண்பத்திரண்டாவது பாடலின் விரிவுரையிலும், பித்தன் என்று தீட்டியதை நூற்று ஐம்பத்துமூன்றாவது பாட்டின் விரிவுரையிலும் "விறகு கட்டுக்குப் பொன்முடி காட்டி" எனும் தொடரில் அமைந்த வரலாற்றை இருபத்தேழாவது பாட்டின் விரிவுரையிலும் காண்க. வள்ளலார், பல அன்பர்கட்கு மட்டும் அருள் செய்து, எனக்கு மட்டும் அருள்செய்யாமல் இருப்பது உன் வஞ்சகத்தைக் காட்டுகிறதே என்று இப் பாட்டின் வழி கூறுவது நம் பெருமானிடத்தில் நம் வள்ளலாருக்கு இருக்கும் உரிமையை உணர்த்துவதாகும். (157)

**மையிட்ட கண்ணியர் பொய்இட்ட வாழ்வில் மதிமயங்கிக்**
**கையிட்ட நானும்முன் மெய்இட்ட சீர்அருள் காண்குவனோ**
**பையிட்ட பாம்பணி யையிட்ட மேனியும் பத்தர்உள்ளம்**
**மொய்விட்ட காலும்செவ் வைஇட்ட வேலுங்கொள் முன்னவனே.**

(பொ-ரை.) "படம் எடுத்தாடும் பாம்பாகிய ஆபரணங்களை அணிந்த திருமேனியும் பத்தர்களின் உள்ளத்தில் இறுக்கமாகப் பதிய வைத்த திருவடிகளையும் செம்மையாக முத்தலை வேலாம் சூலத்தையும் கையில் கொண்ட முக்கண் மூர்த்தியே! மைபூசிய கண்களையுடைய பெண்களின் பொய்யான வாழ்க்கையில் அறிவு கெட்டு அப்பொய் வாழ்வின் நடத்தையில் கலந்த நான் உனது உண்மையான சீரிய திருவருளை என்றேனும் காண்பேனோ?" (எ-து.)

(அ-சொ.) பை-பாம்பின் படம். மொய்-இறுக்கம். வேல்-முத்தலைச் சூலம். மதி-அறிவு. கை-ஒழுக்கம்.

(இ-கு.) சீர்மை+அருள். (158)

**தவமே புரியும் பருவம்இ லேன்பொய்ச் சகநடைக்கண்**
**அவமே புரியும் அறிவிலி யேனுக் கருளும்உண்டோ**
**உவமேயம் என்னப்ப டாதெங்கும் ஆகிஔிர் ஔியாம்**
**சிவமேமுக் கண்ணுடைத் தேவேநின் சித்தம் தெரிந்திலனே.**

(பொ-ரை.) "உவமேயம் காட்டப்படாமல் எங்கும் நிறைந்த ஔியாய்த் திகழும் சிவமே! மூன்று கண்களையுடைய தெய்வமே! தவத்தை மேற்கொள்ளும் பருவமும் இல்லாதவன், பொய்யான இந்த உலக நடையில் வீண் செய்கைகளையே செய்து கொண்டிருக்கு அறிவற்றாவன் ஆன எனக்கு உன் திருவருள் கிடைக்குமோ? கிடைக்காதோ? இதைப்பற்றி உன் திருவுள்ளத்தில் என்ன எண்ணியுள்ளாயோ? என்னால் ஏதும் அறிந்து கொள்ள முடியவில்லையே." (எ-து.)

(அ-சொ.) சகம் - உலகம். அவம் - வீண் செயல்கள்.

(இ-கு.) நடைக்கண் என்பதன்கண், ஏழன் உருபு.

(வி-ரை.) மாம்பழத்தின் இனிமையை உணர்த்தும் போது, அப்பழம் கற்கண்டு போல இனிக்கிறது என்று கூறும் போது கற்கண்டு போல இனிக்கிறது என்று கூறும் போது கற்கண்டு, உவமானம் எனவும், மாம்பழம் உவமேயம் எனவும்

அறியப்படும். அதாவது உபமானம் பெரும்பாலும் நன்கு தெரிந்த பொருளாகவும், உபமேயம் அந்த அளவுக்கு நன்கு தெரியாத பொருளாகவும் இருக்கும் எனலாம். உலகில் எந்தப் பொருளையும் உவமானம் காட்டி விளக்கிவிடலாம். ஆனால் சிவபெருமானை மட்டும் உவமை கூறி விளக்க முடையாது. அவன் உவமை இல்லாதவன். அவனுக்கு உவமை கூறப்பட்டால். அவ்வுவமைப் பொருள் சிவபெருமானைக் காட்டிலும் உயர்ந்த பொருளாகி விடும். இதனை நன்கு உணர்ந்தே நம் மணிவாசகப் பெருமான் 'ஒப்பு உனக்கு இல்லா ஒருவனே' என்றனர். ஆகவே, தான் நம் ஐயா இங்கு "உவமேயம் என்னப்படாது எங்கும் ஆகி ஒளிர் ஒளியாம் சிவமே" என்றனர். இறைவன் ஒளிவடிவினன். இவனுக்கு ஒளிவடிவு இன்றெனில் உலகு இருள்மயம் தான். இது குறித்தே அப்பர் பெருமான், "தேசவிளக்கெலாம் ஆனாய் நீயே" என்றனர். நம் ஐயாவும் சோதியின் பெருமையினை அருட்பெருஞ்சோதி அகவலில் விரிவாக எடுத்து மொழிந்தும் அமையாது சோதி என்னும் தலைப்பின் கீழ்ப் பல்வேறு வகையான சோதிகளையும் அருளிச் செய்வார் ஆயினார். அந்த உண்மைகளை நம்மனோர்க்கு முன்கூட்டி அறிவிக்கவே "எங்கும் ஆகி ஒளிர் ஒளியாம் சிவமே" என்றனர். (159)

**மட்டுண்ட கொன்றைச் சடைஅர சேஅன்று வந்திஇட்ட**
**பிட்டுண்ட பிச்சைப் பெருந்தகை யேகொடும் பெண்மயலால்**
**கட்டுண்ட நான்சுகப் பட்டுண்டு வாழ்வன்இக் கல்மனமாம்**
**திட்டுண்ட பேய்த்தலை வெட்டுண்ட நாளில்என் தீமைஅற்றே.**

(பொ-ரை.) "தேன் பொருந்திய கொன்றை மலரைச் சடையில் அணிந்துள்ள அரசே! முன்னொரு சமயம் வந்தி அம்மையார் கொடுத்த பிட்டை உண்ட பிச்சாடனமூர்த்தியாம் பெருந்தகையே! கொடுமையான பெண்களின் மோகத்தால் கட்டுண்ட நான் இந்தக் கல்போன்று கடினமான மனமாகிய வசையினைப் பெற்ற என் பேய்த்தலை வெட்டுப்பட்டுத் துண்டிக்கப்பட்டபோதுதான், என் தீமைகளை ஒழிந்து சுகப்பட்டு உன் அருளை உணர்ந்து வாழ்வேன். அதுவரையில் உன் திருவருளை உணராமல் பெண்மயலில் சிக்கித்தான் இருப்பேன்" (எ-து.)

(அ-சொ.) மட்டு-தேன். திட்டு-வசை.

(இ-கு.) பெருந்தகை, அன்மொழித்தொகை.

(வி-ரை.) வந்தியிட்ட பிட்டுண்ட வரலாற்றை ஏழாவது பாட்டின் விரிவுரையில் காண்க. இறைவனுக்கு ஈசுவரன் என்னும் பெயரும் உண்டு. இதன் பொருள் செல்வம் என்பது. இதனைத் திருஞான சம்பந்தர் கூறிய செல்வன் கழல் ஏத்தும் செல்வம் செல்வமே!" என்னும் வரியாலும் உணரலாம். அப்படி இருந்தும் அவன் "பிச்சைப் பெருந்தகை" என்று கூறப்படுவானேன் எனில், அவன் எல்லாம் துறந்த ஞானிகள் பிச்சை ஏற்று உண்டு நிட்டை கூடி இறை அருள் பெறத் தானே நடந்து காட்ட வேண்டி இருத்தலின் பிச்சைப் பெருந்தகை ஆயினான். இந்த உண்மையினை நம் திருமூலர்,

**"பரந்துல கேழும் படைத்த பிரானை**
**இரந்துணி என்பர்கள் ஏற்றுக் கிரங்கும்**
**நிரந்தர மாக நினையும் அடியார்**
**இரந்துண்டு தன்கழல் எட்டச்செய் தானே"**

என்று பாடியுள்ளனர்.

பெண்மயல் கொடுமையானது என்பதை ஞானிகள் நன்கு உணர்ந்துள்ளனர். அதனால் தான் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளும்,

**"சேய்கொண் டாரும்கமலச் செம்மலுட னேஅரவப்**
**பாய்கொண்டா னும்பணியும் பட்டீச்சு ரத்தானே**
**நோய்கொண்டா லும்கொளலாம் நூறுவய தாம்அளவும்**
**பேய்கொண்டா லும்கொளலாம் பெண்கொள்ளல் ஆகாதே"**

என்றனர். (160)

**ஆட்டுக்குக் கால்எடுத் தோய்நினைப் பாடலர் அங்கியற்றும்**
**பாட்டுக்குப் பேர்என்கொல் பண்என்கொல் நீட்டிஅப் பாட்டெழுதும்**
**ஏட்டுக்கு மைஎன்கொல் சேற்றில் உறங்க இறங்கும்கடா**
**மாட்டுக்கு வீடென்கொல் பஞ்சணை என்கொல் மதித்திடினே.**

(பொ-ரை.) "திருக்கூத்து இயற்றுவதற்குக் காலைத் தூக்கியவனே! அப்படிப்பட்ட உன்னைப் பாடாமல் வேறு யார் யாரையோ அடுத்துப் பாடுகின்றவர்களின் பாட்டுக்குப் பெயர் ஏன்? இசை ஏன்? நீட்டி அப்பாட்டை எழுதுதற்கு மை ஏன்? சேற்றில் உறங்க இறங்கும் கடா மாட்டுக்கு வீடும் பஞ்சு மெத்தையும் ஏன்? இவற்றைச் சிறிது சிந்தித்துப் பார்த்தால் அப் பாடல்கள் பயன் இல்லை என்பது புலனாகும்" (எ-து.)

(அ-சொ.) பண்-இசை, மதித்திடின் - சிந்தித்தால்.

(இ-கு.) ஆடு என்னும் முதல் நிலைத் தொழிற் பெயர் புணர்ச்சியில் ஆட்டு என ஒற்று இரட்டித்தது. பெயர் என்பது பேர் என ஆயது மரூஉ வழக்கு.

(வி-ரை.) இறைவனைப் பாடுகின்ற பாட்டே அருட்பாட்டு, திருப்பாட்டு. அவ்வாறு இறைவனைப் பாடாதவர்களின் பாட்டுக்கு தெருப்பாட்டு, மருள்பாடு. சிலர் நல் அருள் தரும் இறைவனைப் பாடாமல் உலோபிகளைப் பாடுவதனால்தான் இவர்களுக்குச் சேற்றில் உறங்க இறங்கும் எருமைக்கடா ஒப்புக் கூறப்பட்டது. என்கொல் என்பதற்கு ஏன் என்று பொருள் காண்க. கடா மாடு சேற்றில் உறங்கும் தன்மையது. அதனை வீட்டில் பஞ்சணை மீது படுக்க வைப்பதில் பயன் உண்டோ? பயன் இல்லை. அதைப் போலவே இறைவனைப் பாடாதவர்களின் பாட்டும் பயன் இல்லை என்பதாம். ஆகவே இப்பாட்டிற்கு ஏடும், மையும், பேரும், இசையும் தேவை இல்லை என்பது நம் ஐயா இப்பாட்டின் மூலம் விளக்க வந்த கருத்து. (161)

**ஒப்பற்ற முக்கண் சுடரேநின் சீர்த்தி உறாதவெறும்**
**துப்பற்ற பாட்டில் சுவையுள தோஅதைச் சூழ்ந்துகற்றுச்**
**செப்பற்ற வாய்க்குத் திருஉள தோசிறி தேனும்உண்டேல்**

**உப்பற்ற புன்கறி உண்டோர்தம் நாவுக் குவப்புவதே.**

(பொ-ரை.) "ஒப்பு இல்லாத மூன்று கண்களையுடைய ஒளி வடிவாம் இறைவனே! உன் புகழ் அமையப் பெறாத பொலிவு இல்லாத வெற்றுப் பாட்டில் சுவை உண்டோ? உன் புகழுடைய பாட்டைக் கற்றுப் பேசத் தெரியாத வாய்க்குச் சிறப்பு உண்டா? சிறிதாகிலும் சிறப்பு உண்டு என்று சொல்வது, உப்பு இல்லாத மிகமட்டமான கறி உணவை உண்டவர்கள் நாவுக்கு மகிழ்ச்சி உண்டு என்று சொல்வது போன்றதாம்". (எ-து.)

(அ-சொ.) சீர்த்தி-புகழ். துப்பு-பொலிவு. செப்பு-பேச்சு. திரு-பெருமை. புன் - கீழ்த்தரமான. கறி மரக்கறி உணவு. உவப்பு-மகிழ்வு.

(இ-கு.) செப்பு-திசைச்சொல்.

(வி-ரை.) பாட்டு எனில் அதில் இறைவன் புகழ் பொருந்தி இருக்க வேண்டும் என்பது நம் வள்ளலாரின் கருத்து. இறை புகழ் அற்ற மாட்டு உப்பில்லாத புன்கறி உணவுக்கு ஒப்பாகும். வாய்க்குப் பெருமை இறைவன் புகழ் நிறைந்த பாட்டைப் பாடுவதே ஆகும். (162)

**சேல்வரும் கண்ணி இடத்தோய்நின் சீர்த்தியைச் சேர்த்திஅந்த**
**நால்வரும் செய்தமிழ் கேட்டுப் புறத்தில் நடக்கச்சற்றே**
**கால்வரும் ஆயினும் இன்புரு வாகிக் கனிமனம்அப்**
**பால்வரு மோஅதன் பால்பெண் களைவிட்டுப் பார்க்கினுமே**

(பொ-ரை.) "சேல் மீனைப் போன்ற கண்ணுடைய பார்வதி தேவியை இடப்பக்கத்தே கொண்ட உமா மகேசுவரனே! நால்வர்களும் உன் புகழைச் சேர்த்துப் பாடியுள்ள தமிழ்ப்பாடல்களைக் கேட்ட பிறகு வெளியே செல்லக் கால் வருமா? ஒருவேளை கால் நடக்கலுற்றாலும், நால்வர்களின் தமிழ்ப்பாட்டைக் கேட்டு இன்புறுவாகிக் கனிகின்ற மனம் அப்பால் வருமா? வராது. நால்வர் பாடல்களில் ஈடுபட்டவர்களிடம் அழகிய பெண்களை விட்டுப் பார்த்தாலும், மனம் அப்பெண்கள் பக்கம் செல்லாது" (எ-து.)

(அ-சொ.) சேல்-சேல்மீன். கண்ணி-கண்களையுடைய மீனாட்சி. நால்வர் - அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர். தமிழ்-தமிழ்ப்பாடல்கள்.

(இ-கு.) நால்வர், தொகைக் குறிப்பு. தமிழ், கருவி ஆகுபெயர்.

(வி-ரை.) நால்வர்களுடைய பாடல்கள் முழுவதிலும் சிவபெருமான் புகழே பேசப்பட்டுள்ளது. உமாதேவியார், முருகன், கணபதி ஆகியவர்களின் கீர்த்தி இறைவனுக்கு மனைவி, மக்கள் எனும் முறையில் மட்டும் கூறப்பட்டுள்ளது. நால்வர்களின் தமிழ்ப்பாட்டின் சிறப்பைக் கூறவந்த சைவ எல்லப்ப நாவலர்,

**"சைவத்தின் மேற்சம யம்வே றிலைஅதில் சார்சிவமாம்**
**தெய்வத்தின் மேல்தெய்வம் இல்எனும் நான்மறைச் செம்பொருள்வாய்**
**மைவைத்த சீர்திருத் தேவா ரமும்திரு வாசகமும்**
**உய்வைத் தரசெய்த நால்வர்பொன் தாள்எம் உயிர்த் துணையே"**

என்றார்.

தாயுமான சுவாமிகள், 'மொழிக்கு மொழி தித்திப்பாகும் மூவர் சொலும் தமிழ்' என்று பாராட்டியுள்ளனர். நால்வருள் மூவர் பாடியவை தேவாரம் என்றும், மாணிக்கவாசகர் பாடியது திருவாசகம் என்றும் அறியப்படுதலின் தாயுமானவர் தேவாரம் பாடிய மூவரை விதந்து கூறினார்.

ஆராய்ச்சி கண்கொண்டு காணும்போது சம்பந்தர் பாடல் திருக்கடைக் காப்பு என்றும், சுந்தரர் பாடிய பாட்டுத் திருப்பாட்டு என்றும், அப்பர் பாடிய பாட்டுத் தேவாரம் என்றும் கருதப்படுகிறது. இந்த உண்மையினை நமக்கு அறிவித்த பெரியார் திருப்போரூர் சிதம்பர சுவாமிகளே ஆவர். அவர் சாந்தலிங்க சுவாமிகளின் நூல்களான வைராக்கிய சதகம், கொலை மறுத்தல், அவிரோத உந்தியார் முதலான நூல்களுக்கு உரை எழுதும்போது நால்வர்களுடைய திருவாக்குகளை மேலே கூறிய பெயர்களால் குறிப்பிட்டுள்ளனர். அந் நால்வர்களின் பாடல்களுக்கு எப்பெயர்கள் இருப்பினும் அவை யாவும் தமிழ் மொழியினால் அமைந்தன என்பதை எவரும் மறுக்கமுடியாது. எனவேதான் நம் வள்ளலார், "நால்வரும் செய்தமிழ்" என்றனர்.

நால்வர்களுடைய தமிழ், என்றும் மனத்தை உருக்க வல்லது. அதனைக் கேட்டுக்கொண்டிருந்தால் மனம் எதிலும் ஓடாது. கால்களும் வேற்றிடம் போகத் துணியா.

திருஞானசம்பந்தர் திருக்கச்சிமேற்றளித் தலத்திற்கு எழுந்தருளியபோது பதிகம்பாட, அப்பதிகத்தைக் கேட்ட திருமால் உருகிச் சிவரூபம் பெற்றனர். இதனால் அம்மூர்த்தி உருகீசர் என்னும் பெயருடன் இன்றும் விளங்குகின்றார்.

திருநாவுக்கரசர் திருப்பாடல்களைக் கேட்டுக்கொண்டிருந்த மறைக்காட்டீசர், வேதம் பூசித்து மூடப்பட்டிருந்த கதவைத் திறப்பதற்குத் தாமதித்தார். அவ்வாறு தாமதித்தமைக்குக் காரணம் அப்பர் பாடலைக் கேட்டுக்கொண்டே இருக்கவேண்டும் என்பதற்காகவே ஆகும்.

சேரமான் பெருமாள் நாயனார் பூசைமுடித்து நிற்கும் போது, சிலம்பொலியை எழுப்ப வேண்டிய நடராசப் பெருமான், தம்முன் சுந்தரர் பாடிக்கொண் டிருந்ததனால் அதில் ஈடுபட்டுச் சிலம்பொலியை நிகழ்த்தாது இருந்து விட்டனர்.

மாணிக்கவாசகர் பாட்டில் இறைவர்க்கு இருந்த ஈடுபாட்டால் "பாவை பாடின வாயால் ஒரு கோவை பாடுக" என்றனர். இன்னோரன்ன காரணங்களால் நால்வர் பாடல்களைக் கேட்டுக்கொண்டிருந்தால் மனம் எங்கும் நாடாது என்பது புலனாகின்றதன்றோ?

நால்வர் பாட்டின் ஈடு பாட்டால் பெண் இச்சைகூட மறந்துபோகும் என்பது உண்மை. வெறும் புகழ்ச்சி அன்று. இதனை நம் ஐயாவின் வாக்கைக் கொண்டே நிறுவலாம். அவ்வாக்கு,

**சேமம்மிகும் திருவாத வூர்த்தேஎன் றுலகுபுகழ்**
**மாமணியே நீஉரைத்த வாசகத்தை எண்ணுதோறும்**
**காமம்மிகு காதலன்தன் கலவிதனைக் கருதுகின்ற**
**ஏமமுறு கற்புடையாள் இன்பினும்இன் பெய்துவதே**

என்பது. இன்னோர் அன்ன காரணங்களால்தாம் நம் ஐயா

**"நால்வர் செய்தமிழ் கேட்டுப் புறத்தில் நடக்கச் சற்றே கால்**
**வருமாயினும் இன்புருவாகிக் கனி மனம் அப்பால் வருமோ**
**அதன்பால் பெண்களை விட்டுப் பார்க்கினுமே" என்றனர்.**

**கார்முகம் ஆகப்பொன் கல்வளைத் தோய்இக் கடையவனேன்**
**சோர்முகம் ஆகநின் சீர்முகம் பார்த்துத் துவளுகின்றேன்**
**போர்முகம் ஆகநின் றோரையும் காத்தநின் பொன்அருள்இப்**
**பார்முகம் ஆகஎன் னோர்முகம் பார்க்கப் பரிந்திலதே.**

(பொ-ரை.) "பொன் மலையாகிய மேருமலையை வில்லாக வளைத்த வன்மை மிக்கோய்! இந்தக் கடைப்பட்டவனாகிய நான் சோர்ந்த முகம்கொண்டு சீர்மை பொருந்திய உன் முகத்தைப் பார்த்துத் திருவருள் பெறாமையால் வாடுகின்றேன். நீ உன் நேர் நின்று போர் தொடுத்தவர்களையும் காத்துத் திருவருள் புரிந்தவன். அந்த அருள், இந்த உலகில் நான் நல்லவனாக இருக்க என் முகத்தைப் பார்த்து இரக்கங்கொண்டிலதே!" (எ-து.)

(அ-சொ.) கார்முகம் - வில். பொன்கல் - பொன்மலை (மேருமலை). துவளுகின்றேன் - வாடுகின்றேன். பொன் - சிறந்த. பார் - உலகம்.

(இ-கு.) சோர்முகம், வினைத்தொகை. சீர்முகம், பண்புத்தொகை. முகம் எனும் சொல் பன்முறை ஆளப்பட்டமையின் இது சொல் பின்வரு நிலை அணி.

(வி-ரை.) கல்லை வளைத்தோய் என்று விளித்ததன் குறிப்பு, என் கல்லான மனத்தையும் உருகவைக்கக் கூடாதா என்பது. இறைவன் தன்னை எதிர்த்து நின்று போரிட்டவர்கட்கும் அருள்புரிபவன். இதற்குப் பல எடுத்துக் காட்டுகளை இயம்பலாம் எனினும், திரிபுரதகன நிகழ்ச்சியை மட்டும் இங்குக் கூறலாம். முப்புராதிகள் வித்தியுன்மாலி, கமலாட்சன், தாரகாட்சன் என்பவர்கள். இவர்களுக்குத் துணையாய் இருந்தவர்கள் சுதன்மன், சுசீலன், சுபுத்தி என்பவர்கள். இவர்களை இறைவர் அழிக்காமல் இருவரைத் தம் கோயில் வாயில் காவலராகவும் ஒருவனைத் தன் நடனத்தின்போது குடமுழா வாசிக்கவும் திருவருள் புரிந்தனர். இந்த உண்மையினைச் சுந்தரர் திருப்புன்கூர்ப் பதிகத்தில்,

**மூவெயில் செற்ற ஞான்றுய்ந்த மூவரில்**
**இருவர் நின்திருக் கோயிலில் வாய்தல்**
**காவ லாளர்என் றேவிய பின்னே**
**ஒருவன் நீகலி காடரங் காக**
**மானை நோக்கியோர் மாநடம் மகிழ**
**மணிமு ழாமுழக் கவ்வருள் செய்த**

**தேவ தேவநின் திருவடி அடைந்தேன்**
**செழும்பொ ழில்திருப் புன்கூர்உ ளானே.**

என்று பாடியுள்ளனர்.

இந்த வரலாற்றை மணிமொழியார் “உய்ய வல்லார் ஒரு மூவரைக் காவல்கொண்டு எய்யவல்லானுக்கே உந்திபற” என்றும், திருநாவுக்கரசர் திரிபுரத்தோர் மூவருக்குச் செம்மை செய்த தலையானை” என்றும் திருஞானசம்பந்தர் “மூவார்புரங்கள் எரித்த அன்று மூவர்க்கருள் செய்தரர்” என்றும் கூறுதல் காண்க. இந்த உண்மையினை உளங்கொண்டே நம் ஐயா “போர் முகமாக நின்றோரையும் காத்த நின்பொன் அருள்” என்றனர். (164)

**வான்வளர்த் தாய்இந்த மண்வளர்த் தாய்எங்கும் மன்உயிர்கள்**
**தான்வளர்த் தாய்நின் தகைஅறி யாஎன் தனைஅரசே**
**ஏன்வளர்த் தாய்கொடும் பாம்பைஎல் லாம்தள் ளிலைவளர்த்தாய்**
**மான்வளர்த் தாய்கரத் தார்நினைப் போல வளர்ப்பவரே.**

(பொ-ரை.) “அரசே, நீ வானுலகத் தேவர்களை வளர்த்தனை; இந்த மண்ணுலக மக்களை வளர்த்தனை; உலகெங்கும் துன்ப நிலைபெற்ற உயிர்களை எல்லாம் வளர்த்தனை; கொடிய பாம்புகளையும் வெறுத்துத் தள்ளாமல் வளர்த்தனை; கையில் ஏந்திய மானையும் வளர்த்தனை; உன் பெருமையினைச் சிறிதும் உணராத என்னை ஏன் வளர்த்தாய்? நீ இவ்வாறு எல்லோரையும் வளர்த்து வருவதால் உன்னைப் போல் வளர்ப்பவர் எவரும் இலர் என்னும் உண்மை புலனாகிறது அன்றோ” (எ-து.)

(அ-சொ.) வான் - வான் உலகத் தேவர். மண் - மண்ணுலக மக்கள். மன் - நிலைபெற்ற. தகை-பெருமை, தகுதி.

(இ-கு.) வான், மண் இடஆகு பெயர்கள். மன், உரிச்சொல், தகை, பண்புப்பெயர், ஆர், மரூஉ வழக்கு.

(வி-ரை.) முப்பொருள்கள் ஆவன பதி, பசு, பாசம் என்பன. இம்மூன்றும் அனாதி. இதனைத் திருமூலர்,

**“பதிபசு பாசம் எனப்பகர் மூன்றில்**
**பதியினைப் போல்பசு பாசம் அனாதி**
**பதியினைச் சென்றணு காப்பசு பாசம்**
**பதியணு கில்பசு பாசம் நிலாவே”**

என்று அறிவிப்பர். தாயுமான்வரும் “என்று நீ அன்று நான் உன் அடிமை அல்லவோ” என்று கூறுதலும் கா1ண்க. ஆகவேதான் ஈண்டு “மன் உயிர்கள்” எனப்பட்டது. (165)

**அற்கண்டம் ஓங்கும் அரசேநின் தன்அடி யார்மதுரச்**
**சொற்கண்ட போதும்என் புல்கண்ட நெஞ்சம் துணிந்துநில்லா**
**திற்கண்ட மெய்த்தவர் போல்ஓடு கின்ற தெறிந்ததுதீங்**

**கற்கண் டெனினும்அக் கல்கண்ட காக்கைநிற் காதென்பரே.**

(பொ-ரை.) "இருண்ட கழுத்து விளங்கும் அரசே! உன் அடியவர்களின் இனிய மொழிகளால் ஆகிய உன் புகழ் நிறைந்த பாடல்கலைக் கண்டபோதும், அவற்றில் தோயாமல் அற்பத் தன்மை கொண்ட என் மனம் துணிவு கொண்டு நிற்காமல் மோட்ச உலகைக் கண்ட உண்மைத் தவசிகளைப் போல ஓடுகின்றது. இஃது எப்படி இருக்கிறது எனின், கல்லைக் கண்டு பழகிய காக்கை தன்மீது எறியப் பட்டது கற்கண்டு எனினும் அதுவும் கல்லென்று பயந்து பறந்தோடுவது போன்றது". (எ-து.)

(அ-சொ.) அல் - இருள். கண்டம்-கழுத்து. மதுரச் சொல், இனிய சொல்லால் ஆகிய தோத்திரப் பாடல்கள். புல் - அற்பமான. இல் - மோட்ச வீடு. எறிந்தது - வீசியது.

(இ-கு.) அல், பண்பாகுபெயர் சொல், கருவி ஆகுபெயர்.

(வி-ரை.) இருள் கருநிறமானது விடமும் கருநிறமானது. ஆகவே ஈண்டு, இருள் விடத்தைக் குறிக்க வந்துளது. மதுரச் சொல்லாவது மதுரமான சொல்லால் ஆகிய பன்னிரண்டு திருமுறைகள் பதினான்கு சைவ சித்தாந்த சாத்திரங்கள் முதலியன. திருமுறைகளைக் கண்டு அவற்றில் ஈடுபடாது அவற்றை விட்டு ஆன்மா விலகுவது, கற்கண்டையும் கல் என்று எண்ணி ஓடும் காக்கை போன்றது என்பது உவமையினால் அறியவரும் கருத்து. உண்மையை அறியாத நிலையில் விரைவது பொருத்தமற்றது என்பதை விளக்கவே "இல்கண்ட மெய்த்தவர்போல என்னெஞ்சம் ஓடுகின்றது" என்றனர். (166)

**சொல்லுகின் றோர்க்கமு தம்போல் சுவைதரும் தொல்புகழோய்**
**வெல்லுகின் றோர்இன்றிச் சும்மா அலையும்என் வேடநெஞ்சம்**
**புல்லுகின் றோர்தமைக் கண்டால்என் ஆம்கொல் புகல்வெறும்வாய்**
**மெல்லுகின் றோர்க்கொரு நெல்அவல் வாய்க்கில் விடுவர்அன்றே.**

(பொ-ரை.) "உனது புகழை வாயாரச் சொல்கின்றவர்களுக்குத் தேவாமுதம்போல் இன்பம் தருகின்ற பழம்பெரும் புகழுடைய பெருமானே! தன்னை வெல்லுபவர்கள் எவரும் இலர் என்ற காரணத்தால் வீணே அலைகின்ற பொய்வேடம் பூண்டுள்ள எனது மனம், எனைவந்து அடைகின்ற இயம தூதர்களைக் கண்டால் அப்போது அம்மனம் என்னசெய்யவல்லது? நீதான் இதற்கு விடைதருதல் வேண்டும். வெறும் வாய் மெல்லுகின்றவர்களுக்கு அவல் கிடைத்தால் வேண்டா என்பார்களா?" (எ-து.)

(அ-சொ.) புல்லுகின்றோர்-வந்து சேர்பவர்கள். புகல் - சொல். வாய்க்கில் - கிடைத்தால். விடுவர் அன்றே-வேண்டா என்பார்களா?

(இ-கு.) தொன்மை+புகழ் இன்றி, குறிப்பு வினை எச்சம். கொல், அசைச்சொல்.

(வி-ரை.) இறைவன் புகழ் அன்றும், இன்றும், என்றும் உள்ள புகழ். ஆகவேதான் புகழ் தொல்புகழ் ஆயிற்று. மேலும், அவனே காலம் கணிக்கப்படாத

மிக மிக தொன்மை வாய்ந்தவன். இந்த உண்மையினை நம் திருவாதவூரர், "முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம் பொருளே" என்றனர். மேலும், "சொல்பதம் கடந்த தொல்லோன் காண்க" என்றும் கூறியுள்ளனர். அப்பர் பெருமானாரும், "முளைத்தானை எல்லார்க்கும் முன்னே தோன்றி" என்றும் குறித்துள்ளனர். இறைவன் புகழை நினைக்க நினைக்க அமுதம்போல் இனிக்க வல்லது என்பதையும் நம் மணிமொழியார், "சட்டோ நினைக்க மனத்தமுதாம் சங்கரன்" என்றனர். இவற்றை எல்லாம் எண்ணியே நம் ஐயா, "சொல்லுகின்றோர்க் கமுதம்போல் சுவைதரும் தொல் புகழோய்" என்றனர். நமந்தமர் நலியில் இறைவன் திருவடிதான் துணை என்பதை நம் சுந்தரர்,

**"அந்த ணாளன்உன் அடைக்கலம் புகுத**
**அவனைக் காப்பது காரணம் ஆக**
**வந்த காலன்தன் ஆருயிர் அதனை**
**வவ்வி னாய்க்குன் வன்மைகண் டடியேன்**
**எந்தை நீஎனை நமன்தமர் நலியில்**
**இவன்மற் றென்அடி யான்என விலக்கும்**
**சிந்தையால் வந்துன் திருவடி அடைந்தேன்**
**செழும்பொ ழில்திருப் புன்கூர்உ ளானே"**

என்று பாடி உணர்த்தியுள்ளனர்.

வள்ளலார் இங்கு உணர்த்தவந்த கருத்து இயதூதர் வந்தால் அவர்கள் உயிர்களைக் கொண்டு போவார். ஆகவே அந்த நிலையினை நான் அடையாமல் காப்பாற்றப்பட வேண்டியது உன் கடனாகும் என்றார். இப் பாட்டின் ஈற்றில் உலகப் பழமொழி ஒன்று அமைந்திருப்பதைக் காண்க. (167)

**சீர்இடு வார்பொருள் செல்வர்க்க லாமல்இத் தீனர்கட்கிங்**
**கார்இடு வார்பிச்சை ஆயினும் பிச்சன் அசடன்என்றே**
**பேர்இடு வார்வம்பு பேச்சிடு வார்இந்தப் பெற்றிகண்டும்**
**போர்இடு வார்நினைப் போற்றார்என் னேமுக்கண் புண்ணியனே.**

(பொ-ரை.) "மூன்று கண்களைப் பெற்ற புண்ணியனே! இவ்வுலகத்தவர்கள் பொருட்செல்வம் மிகுதியாகப் பெற்றவர்கட்கே சிறப்புச் செய்வர். இவர்களிடம் யாசகர்கள் சென்று கேட்டால் பிச்சை இடுவார்களா? இடமாட்டார்கள். இடாமல் போயினும் யாசகர்களைத் தம் வாய்க்கு வந்தபடி பைத்தியக்காரன் என்றும், மூடன் என்றும் கீழ் மகன் என்றும் பேரிட்டு இழித்துப் பேசிச் சண்டை யிடுவர். வம்பு பேச்சும் பேசுவர். இந்தத் தன்மையினை மக்கள் கண்கூடாகப் பார்த்தும் உன்னைப் போற்றாமல் இருக்கின்றார்களே! அவர்களின் அறியாமைதான் என்னே!" (எ-து.)

(அ-சொ.) சீர் - சிறப்பு.தீனர் - யாசகர். அசடன் - கீழ்மகன், மூடன். பெற்றி - தன்மை.

(இ-கு.) அல்லாமல் என்பது அலாமல் என நின்றது இடைக்குறை.

(வி-ரை.) உலகில் செல்வம் படைத்த மக்கள் தம்மைப் போன்ற செல்வர்களுக்கே பல சிறப்புகளையும், உதவிகளையும் புரிவர். ஏழை எளியவர்களுக்கு ஈய மாட்டார்கள். இக்கருத்தை மழைமேல் வைத்து பாடப்பட்ட ஒரு பாடலையும் ஈண்டு அறிதல் நலம். அப்பாடல்,

**கதிர்பெறு செந்நெல் வாடக் கார்க்குலம் கண்டு சென்று**
**கொதிதிரை கடலில் பெய்யும் கொள்கைபோல் குவல யத்தில்**
**மதிதனம் படைத்தபேர்கள் வாடினோர் முகத்தைப் பாரார்**
**நீதிமிகப் படைத்தோர்க் கீவார் நிலையிலார்க் கீய மாட்டார்**

என்பது. இந்தக் கருத்தே நம் ஐயாவின் பாட்டின் முதல் அடியில் பொருந்தியுள்ளது.

நம் ஐயா, “செல்வர்களிடம் சென்று கேட்டால் அவர்கள் பிச்சையும் இடார், அத்துடன் இன்றி நம்மைப் பைத்தியக்காரன் என்றும், மூடன் என்றும் வாய்க்கு வந்தவாறு பேசிப் போய்விடுவார். ஆகவே இறைவனைப் போற்றுங்கள். இறைவன் பொருள் தருவான் என்று நமக்கு அறிவுரை கூறும் கருணை உள்ளத்தைப் பார்க்கின்ற போது,

**வந்தவர் யாவர்காண் கவிராசர் எந்தஊர்**
**வடகாசி எங்கு வந்தீர்**
**மகராசன் என்றுனது, கீர்த்தியைக் கேட்டுன்மேல்**
**மதுரகவி பாடி வந்தோம்**
**சந்ததமும் வித்துவான் அல்லன்நீ என்னுடைய**
**தாதைமூ தாதை வழியில்**
**தமிழ்கேட்ட தியாவர்காண் தலைமுறையில் இல்லாத**
**தாழ்விதைச் செய்து வந்தீர்**
**இந்தமொழி மற்றும்ஒரு தரம்நீர் உரைக்கிலோ**
**இரணகளம் ஆகும் அப்பால்**
**ஏகும்என் றோதிடும் புல்லர்தம் பால்செலாது**
**எனைஆள இதுதருணமே**
**சிந்திக்கும் அன்பருக்கு அருள்மழை சொரிந்ததிக**
**செல்வம் கொழிக்கும் முதலே**
**தேசிகம் பூத்தஉமை நேசபொன் அம்பலவ**
**தேசிக சிரோ ரத்னமே,**

என்று அஷ்டாவதானம் சரவணப் பெருமாள் கவிராயர் பாடியுள்ள பாடல் நினைவுக்கு வருகிறது. (168)

**சேலுக்கு நேர்விழி மங்கைபங் காஎன் சிறுமதிதான்**
**மேலுக்கு தெஞ்சையுள் காப்பது போல்நின்று வெவ்விடய**
**மாலுக்கு வாங்கி வழங்கவும் தான்சம் மதித்ததுகாண்**
**பாலுக்கும் காவல்வெம் பூனைக்கும் தோழன்என் பார்இதுவே.**

(பொ-ரை.) “சேல் மீனுக்கு ஒப்பான கண்ணைப்பெற்ற உமாதேவியாரை இடப்பக்கத்தே கொண்ட இறைவனே! எனது அற்ப அறிவானது, என் உள்ளத்தை தீய வழியில் செல்லாமல் காப்பது போல் மேலுக்கு நடித்துக் கொடிய உலக விடயங்களாகிய காம மயக்க உணர்வில் திருப்பிக்கொண்டு சென்று தீமையையே அடையச் செய்ய எண்ணியுள்ளது. இந்த அறிவின் செயல் பாலுக்கும் காவல் கொடிய பூனைக்கும் தோழன் என்னும் பழமொழிக்கு எடுத்துக்காட்டாக இருக்கிறது”. (எ-து.)

(அ-சொ.) மதி - அறிவு. விடயமால் -காமஇன்பம். மால் - மயக்கம்.

(இ-கு.) தான், அசைச் சொல், காண், முன்னிலை அசைச்சொல்.

(வி-ரை.) பூனை பாலைக் கண்டால் எவ்வாறேனும் பருகிவிடும். இதனால் வீட்டில் இருப்பவர் பாலைப் பூனை பருகா திருக்கக் காத்து வருவர். சிற்சில சமயங்களில் தாம் வளர்க்கின்ற பூனைக்கும் துணையாக இருந்து பாலைப் பருகவும் விட்டு விடுவர். இவ்வாறு ஆக்கத்திற்கும் அழிவுக்கும் செயல்புரிகின்றவர்களின் தன்மையினை “பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன்” என்னும் பழமொழியால் இழித்து உரைப்பர். இந்த உவமையினையே நம் ஐயா ஈண்டு எடுத்துக் காட்டித் தம் அறிவு, மனத்தைத் தீய வழியில் செலுத்தாதபடி காப்பது போல் நடித்து, இறுதியில் அம் மனத்தைக் காம மயத்தில் இழுத்துச் செல்கிறது என்பதை விளக்கியருளினர். (169)

**இணையேதும் இன்றிய தேவே கனல்இனன் இந்தெனும்முக்**
**கணையே கொளும்செங் கரும்பே பிறவிக் கடல்கடத்தும்**
**புணையே திருஅருள் பூரண மேமெய்ப் புலம்அளிக்கும்**
**துணையே என்துன்பம் துடைத்தாண்டு கொள்ளத்துணிந்தருளே.**

(பொ-ரை.) “ஒப்பு ஏதும் கூற ஒண்ணாத தேவ தேவனே! அக்கினியையும், சூரியனையும், சந்திரனையும் மூன்று கண்களாகக் கொண்டுள்ள செங் கரும்பே! பிறவியாகிய கடலைக் கடப்பதற்குப் படகாக உள்ள திருவருள் நிறைந்த முழுப் பொருளே! உண்மை, அன்பர்கட்கு உண்மை அறிவையே தருகின்ற துணைவனே! என்னுடைய துன்பங்களை நீக்கி ஆட்கொள்ள நீ துணிவு கொள்வாயாக”. (எ-து.)

(அ-சொ.) இணை-ஒப்பு. கனல்-நெருப்பு. இனன் - சூரியன், இந்து-சந்திரன். கணையே-கண்களையே. புணை-தெப்பம். பூர்ணம் - முழுப்பொருள். புலம்-அறிவு.

(இ-கு.) அனல், இனன், இந்து உம்மைத்தொகை. கணையே என்பது கண்ணையே என்பதன் தொகுத்தல் விகாரம். கொளும் என்பதும் தொகுத்தல் விகாரமே.

(வி-ரை.) இறைவனுக்குச் சோமன், சூரியன், அக்கினி ஆகிய மூன்றும் கண்களாக விளங்குபவை. இந்தக் குறிப்பைத் தொல்காப்பியம்,

**கொடிநிலை கந்தழி வள்ளி என்ற**
**வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்**

**கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே.**

என்று கூறுதலையும் காண்க.

இறைவனுக்கு இவ்வாறான முக்கண்கள் உண்டு என்பதைச் சமண நூலாகிய திருக்கலம்பகமும், “நெருப்புமிழ் நெடு நோக்கினை” எனவும், “மூன்று கண் முனித்தலைவனை” என்றும் போற்றுகிறது. நம்மாழ்வாரும் “உரைக்கின்ற முக்கட்பிரான்” என்றும், “கண்ணுதலான்” என்றும் சிவபெருமானைப் புகழ்கின்றார். ஆகவே, முக்கண் எந்தத் தெய்வங்களுக்கும் இன்மையின் நம் ஐயா இந்தத் திருவருள் முறையீட்டில் மிகுதியாக இறைவனுடைய முக்கண்களையே எடுத்து மொழிந்துள்ளார். இறைவனுக்குச் சூரியனும், சந்திரனும் கண்களாக இருப்பதனால்தான் அவையும் போற்றப்படுகின்றன. இதனை,

**“திங்களைப் போற்றுதும், திங்களைப் போற்றுதும்”**

என்றும்

**“ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றதும்:**

என்றும் சிலப்பதிகாரம் போற்றுதல் கொண்டு தெளிக.

இறைவன் திருவடிதான் பிறவிப் பெருங்கடலைக் கடத்தற்குரிய புணை இதனைத்தான் திருவள்ளுவர்,

**பிறவிப் பெருங்கடல் நீந்துவர், நீந்தார்**
**இறைவ னடிசேரா தார்.**

என்று அறிவித்துள்ளனர். இவற்றை எல்லாம் அறிவிக்கவே நம் வள்ளலார் “கனல் இனன், இந்து எனும் முக்கணையே கொளும் செங்கரும்பே,” என்றும் “பிறவிக்கடல் கடத்தும் புணையே” என்றும் அறிவித்துள்ளனர். (170)

**நிலைகாட்டி ஆண்டநின் தாட்கன்பி லாதன்பில் நீண்டவன்போல்**
**புலைகாட் டியமனத் தேன்கொண்ட வேடம் புனைஇடைமேல்**
**கலைகாட்டிக் கட்டு மயிர்த்தலை காட்டிப்புன் கந்தைசுற்றி**
**முலைகாட்டி ஆண்மகன் பெண்வேடம் காட்டு முறைமையன்றே.**

(பொ-ரை.) “இறைவ! சொரூப நிலையினைக் காட்டி ஆட்கொண்ட உனது அருளினிடத்துச் சிறிதும் அன்பு இலாதவன் நான். அத்தகையவனாகிய நான் இழிந்த மனமும் உடையவன். ஆனால் நான் மிக்க அன்புடையவன் போல் பொய்த் தோற்றம் கொண்டு நடிப்பவன். இந்தப் பொய் வேடம் எது போன்றது எனில், இடுப்பில் புடவையை அணிந்து, தலையில் பொய் மயிர்கட்டி, மார்பில் பல கந்தைகளை ஒன்று சேர்த்து முலைபோல் கட்டிய ஆண்மகன், பெண்வேடம் காட்டி விளங்குவது போன்ற முறைமையுடையதாம்” (எ-து.)

(அ-சொ.) நீண்ட-மிக்க. புலை-இழிவு. கலை-புடவை. புன் - சிறிய.

(வி-ரை.) இறைவன் அன்பர்களை ஆட்கொள்ளும் முறை பலவாகும். அவன் ஆணவ மலம் ஒன்றே உடையவர்களின் உள்ளத்தில் உள்வொளியாகி நின்று திருவருள் புரிவன். ஆணவ மலம் ஒன்றே உடையவர் விஞ்ஞானகலர் எனப்படுவர். ஆணவம், கன்மம் ஆகிய இருமலமுடையவர்களுக்கு அம்மை அப்பராக விடைமீது வந்து காட்சிதந்த் அருள் செய்வர். இவ்விரு மலமுடையவர்கள் பிரளயாகலர் எனப்படுவர். ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலம் உடையவர்களைக் குருவடிவில் வந்து திருவருள் புரிவன். இவர்கள் சகலர் எனப்படுவர். இங்கு நிலைகாட்டி ஆண்ட என்பதன் கருத்து சொரூப நிலை காட்டி ஆண்ட திருவருளையே ஆகும்.

நம் வள்ளலார் காலத்தில் தெருக்கூத்துகள் மிகுதி. அப்போது ஆண்களே பெண் வேடம் பூண்டு நடிப்பர். பெண் வேடம் பூண்டாலும் உண்மையில் அவர்கள் ஆண்களே. இந்த உவமையினை இங்கு நம் ஐயா கூறுவதன் கருத்து. தாம் அன்புடையவன் போல நடித்தல், ஆண் மகன் பெண் வேடம் பூண்டு நடிப்பது போன்றது என்பதாம். (171)

**விடநாகப் பூண்அணி மேலோய்என் நெஞ்சம் விரிதல்விட்டென்**
**உடனாக மெய்அன்புள் ஊற்றாக நின்அருள் ஊற்றிடுதற்**
**கிடனாக மெய்ந்நெறிக் கீடாகச் செய்குவ திங்குனக்கே**
**கடனாக நிற்பது கண்டேன்பின் துன்பொன்றும் கண்டிலனே.**

(பொ-ரை.) "விடம் பொருந்திய பாம்பை ஆபரணமாகப் பூண்டுள்ள மேலான பரம்பொருளே! என் உள்ளம் உலக இன்பங்களின் பொருட்டுப் பரவுதல் அற்று இருக்கச் செய்வதும், மெய் அன்பு ஊற்றெடுத்துப் பெருகச் செய்வதும், நின் திருவருள் ஊற்றினை இடமாகக் கொண்டு மெய்யான வழியில் செலுத்தச் செய்வதும் உன்னால்தான் முடியும் என்பதை உணர்ந்துள்ளது. மேலும், உன் கடமை என்பதையும் அறிந்துளது. இந்த உண்மையினைக் கண்ட பிறகு நான் துன்பம் எதையும் கண்டிலேன்" (எ-து.)

(அ-சொ.) பூண் - ஆபரணம்.

(இ-கு.) இடன், மொழி ஈற்றும் போலி.

(வி-ரை.) நெஞ்சம் விரிதல் விடுதலாவது உள்ளம் பல்வேறு எண்ணங்களில் செல்லாமல் ஒருமனப்பட்டுத் தியான நிலையில் இருப்பது இது குறித்தே நம் அப்பர் "ஒன்றி இருந்து நினைமின்கள் உன்தமக்கு ஊனம் இல்லை" என்றனர். இந்த நிலையை நாம் அடைந்தால் அருள் ஊற்றிடுதற்கு இடனாக மெய்ந்நெறிக் காளாகச் செய்து கொள்ள முடியும். அப்போது இறைவன் தானே வந்து இன்பம் தந்து துன்பம் துடைத்துப் பேரருள் புரிவான். இங்கு நம் வள்ளலார் இறைவன்தான் நம்மை நல்வழியில் படுத்த முடியும் என்னும் குறிப்பை இப்பாட்டின் வழி நன்கு உணர்த்தியுள்ளனர். (172)

**நயப்படு மோர்நின் அருள்எனக் கின்றெனில் நாய்மனம்என்**
**வயப்படு மோதுயர் மண்படு மோநல்ல வாழ்வைஎன்னால்**
**செயப்படு மோகுணம் சீர்ப்படு மோபவம் சேரச்சற்றும்**
**பயப்படு மோமலம் பாழ்படு மோஎம் பசுபதியே.**

(பொ-ரை.) "எங்கள் ஆன்ம நாயகனே! இன்பம் நிறைந்ததும், ஒப்பற்றதும் ஆகிய உன் திருவருள் எனக்கு இல்லை என்றால், நாய்போல் அலையும் என் மனம் என் வசப்படுமா? துயரம் கீழ்ப்படுமா? நல் வாழ்வை என்னால் செயல்படுத்த முடியுமா? குணம்தான் ஒழுங்கு படுமா? பிறப்பில் சேரச் சிறிதெனும் பயப்படுமா? மும்மலங்கள் தாம் நீங்குமா?" (எ-து.)

(அ-சொ.) நயம் - இன்பம். பவம் - பிறப்பு. பசு-ஆன்மா. பதி-தலைவன். ஓர்-ஒப்பற்ற.

(வி-ரை.) இறைவன் திருவருளால்தான் மனம் வயப்படுவதும், துயர் நீங்குவதும், வாழ்வில் செயல் படுவதும், குணம் ஒழுங்குபடுவதும், பிறவி நீங்குவதும், மும்மலங்கள் ஒழிவதும் இயலும் என்பதை நம் ஐயா இப்பாட்டில் விளக்கியுள்ளனர். மண்படுதலாவது தரமட்டமாகி இல்லாது போதல். சிவபெருமான் எல்லா உயிர்களுக்கும் தலைவன் ஆதலின் பசுபதி எனப்பட்டான். (173)

**சோபம்கண் டார்க்கருள் செய்வோய் மதிக்கன்றிச் சூழ்ந்திடுவெம்**
**தீபம்கண் டாலும் இருள்போம்இவ் ஏழை தியங்கும்பரி**
**தாபம்கண் டாய்அருள் செய்யாதென் குற்றம் தனைக்குறித்துக்**
**கோபம்கண் டாலும்நன் றையாஎன் துன்பக் கொதிப்பறுமே**

(பொ-ரை.) "ஊனினை உருக்கி உள்ஒளி பெற்றவர்களுக்குத் திருவருள் புரியும் இறைவனே! தலைவனே! ஆகாயத்தில் தோன்றும் சந்திரனுக்கே அல்லாமல், சூழ்ந்துள்ள விளக்கைக் கண்டாலும் உலகை மூடிய இருள் விலகும். இந்த அறிவீனனான நான் உலக விடயத்தில் மயங்கியுள்ளேன். என் இரங்கத்தக்க நிலையை நீ கண்டும் உணர்ந்தும் உள்ளாய். இந்த நிலையில் எனக்கு அருள் செய்யாமல் என் குற்றத்தைக் குறித்துக் கோபம் கொண்டாலும் சரி. அது நல்லதே. அப்போதாகிலும் என் துன்பத்தின் வேகம் ஒழியும் அன்றோ?" (எ-து.)

(அ-சொ.) சோபம் - ஒளி. மதி-சந்திரன். தியங்கி - மயங்கி, ஐயா-தலைவனே.

(வி-ரை.) இருள் சந்திரனைக் கண்டால்தான் நீங்கும் என்பதில்லை. விளக்கைக் கண்டாலும் விலகும். அதுபோல இறைவன் தண்ணருள் காட்டினால்தான் துயர்தீரும் என்பதில்லை. மறக்கருணையினால் கோபம் கொள்ளினும் துன்பம் குறைதற்கு வழி உண்டு இந்தக் கருத்தையே இந்தப் பாட்டின் வழி நம் ஐயா நமக்கு உணர்த்தியுள்ளனர். ஊனினை உருக்கி உள் ஒளி பெருக்குகின்றவர்களுக்கு இறைவன் திருவருள் புரிதலின் "சோபம் கண்டார்க்கு அருள் செய்வோய்" என்றார். (174)

**எல்லாம் உடைய இறைவ னேநினை ஏத்துகின்ற**
**நல்லார் தமக்கொரு நாளேனும் பூசை நயந்தியற்றிச்**
**சொல்லால் அவர்புகழ் சொல்லாதிவ் வண்ணம் துயர்வதற்கென**
**கல்லாமை ஒன்றுமற் றில்லாமை ஒன்றிரு காரணமே.**

(பொ-ரை.) "எல்லாப் பொருளையும் உடைமையாகக் கொண்ட பெருமானே! உன்னைப் போற்றுகின்ற நல்லவர்களுக்கு ஒரு நாளாகிலும் வழிபாட்டினை அன்போடு செய்து, வாயால் அவர்களின் புகழைக் கூறாமல் இவ்வாறு துயரில் வருந்துவதற்குக் காரணம், அவர்களின் பெருமையினைக் கற்காமையும், அறிவு இல்லாமையும் ஆகிய இரண்டுமே ஆகும்." (எ-து.)

(அ-சொ.) ஏத்துகின்ற-போற்றுகின்ற. நயந்து - விருப்புற்று. இவ்வண்ணம் - இந்தவிதம்.

(இ-கு.) வண்ணம், இடைச் சொல்.

(வி-ரை.) ஆண்டவனினும் அடியார்களே சிறந்தவர்கள். அவர்களைப் பூசிப்பதனாலும், புகழ்வதனாலும் ஆண்டவன் திருவருளைப் பெறலாம். தம்மைப் பூசிப்பதினும் தம் அடியாரைப் பூசிப்பதையே இறைவரும் விரும்புவர். இந்த உண்மையினைத் திருமூலர்,

**படமாடக் கோயில் பகவற்கொன் றீயில்**
**நடமாடக் கோயில் நம்பர்க் கங்காகா**
**நடமாடும் கோயில் நம்பர்க் கொன்றீயில்**
**படமாடும் கோயில் பகவற் கதாமே**

என்றனர். தாயுமானவரும்,

**"அன்பர்பணி செய்யஎனை ஆளாக்கி விட்டுவிட்டால்,**
**இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே"**

என்று கூறியுள்ளனர்.

இவ்வாறு அடியவர்களைப் பூசிக்கப் புகழக் கல்வியும் அறிவும் தேவை என்பதை இந்தப் பாட்டின் வழி நம் ஐயா வற்புறுத்தியுள்ளனர். (175)

**பிறையாறு கொண்டசெவ் வேணிப் பிரான்பதப் பேறடைவான்**
**மறையாறு காட்டும்நின் தண்அரு ளேஅன்றி மாயைஎன்னும்**
**நிறையாறு சூழும் துரும்பாய்ச் சுழலும்என் நெஞ்சில்உள்ள**
**குறையாறு தற்கிடம் வேறில்லை காண்இக் குவலயத்தே.**

(பொ-ரை.) "பிறைச் சந்திரனையும், கங்கை ஆற்றையும் கொண்ட சிவந்த சடாபாரத்தையுடைய சிவபெருமானே! என் உள்ளம் நீர் நிறைந்த ஆற்றின் நீர்ச்சுழியில் அகப்பட்ட துரும்புபோல உலக மாயையாம் துன்ப நீர் நிறைந்த நீர்ச்சூழலில் அகப்பட்டுத் துயர் உறுகிறது, ஆகவே, உன் திருவடிப் பேற்றை அடைவதற்கு உன் வேதமார்க்கமாகிய உன் திருவருள் அன்றி வேறு வழி இல்லை. எனவே, துயர்நீர்ச் சுழியிலிருந்து என்னைக் காப்பாயாக". (எ-து.)

(அ-சொ.) பதப்பேறு-திருவடி இன்பம். மறை ஆறு-வேதமார்க்கம். குவலயம் - உலகம்.

(இ-கு.) பிறை ஆறு, உம்மைத் தொகை. பதம், குறுக்கல் விகாரம். அடைவான், வான்ஈற்று விளை எச்சம். காண் முன்னிலை அசைச்சொல் பிரான், அண்மைவிளி.

(வி-ரை.) வேதமார்க்கமாவது நால்வர்கள் பாடியுள்ள வேதமாகிய தேவார திருவாசகம் கூறும் வழிகள். அவைகள் கூறும் மார்க்கங்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன இவையே வேறு வகையிலும் கூறப்படும். அவை தாசமார்க்கம், சத்புத்திர மார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என்பன. இவை இருப்பினும் இவற்றின்படி ஒழுகுதற்கு இறைவன் திருவருள் மிக மிக இன்றியமையாதது. "அவன் அருளாலே அவன் தாள் வணங்கி" என்பதன்றோ நம் முன்னோர் ஆணை. ஆகவேதான் நம் வள்ளலார் "நின் தன் அருளே அன்றி வேறு இல்லை" என்றனர். (176)

**மாலறி யாதவன் அன்றேஅத் தெய்வ வரதனும்நின்**
**காலறி யாதவன் என்றால்அக் காலைஎக் காலைஎமைப்**
**போலறி யாதவர் காண்பார்முன் கண்டமெய்ப் புண்ணியர்தம்**
**பாலறி யாதவன் நான்இது கேட்டுணர் பாலன்அன்றே.**

(பொ-ரை.) "இறைவனே! நீ திருமாலால் அறியப் படாதவன் அல்லனோ? அந்தத் தெய்வமாகிய வரதனும் அந்தக் காலத்தில் உன் திருவடியை அறியாதவன் என்றால், எந்தக் காலத்தில் எங்களைப்போல் உன்னைக் காணாதவர்கள் காணமுடியும்? முன்பு உன்னைக் கண்ட மெய்ப்புண்ணியர்களை அடைந்து உன்னை அறியும் அறிவையும் பெறாதவன் நான். மேலும் கேட்டு அறியும் தன்மையுடையவனும் அல்லன்". (எ-து.)

(அ-சொ.) அக்கால் - அந்தக் காலம். எக்கால் - எந்தக்காலம்.

(இ-கு.) மால் அறியாதவன், மூன்றன் தொகை. காலை என்பதில் உள்ள ஐ சாரியை.

(வி-ரை.) வரதன் என்பது திருமாலுக்குரிய திருப்பெயர்களில் ஒன்று. சிதம்பரத்தில் நடராசப் பெருமான் திருக்கோயிலின்முன் திருமால் கோயிலும் ஒன்று உண்டு. அங்குள்ள திருமால் மாணிக்கவாசகர் காலத்தில் நடராசப்பெருமான் "திருவடி நோக்கித் தண்டனிடும் முறையில் படுத்துக்கொண்டிருந்தார். இந்தக் காட்சியைக் கண்ட மாணிக்கவாசகப் பெருமான், திருமால் இவ்வாறு நடராசப்பெருமான் திருவடி முன் படுத்திருப்பதன் காரணம், இறைவனை நோக்கித் திருவடியைக் காட்டுக என்று வேண்டுவதற்காகவே ஆகும் என்று பாடியுள்ளனர். அந்தப் பாட்டு,

**"புரம்கடந் தான்அடி காண்பான் புவிவிண்டு புக்கறியா**
**திரங்கிடெந் தாய்என் றிரப்பத் தன்ஈர் அடிக் கென்இரண்டு**
**கரங்கடந் தான்ஒன்று காட்டமற் றாங்கதும் காட்டிடென்று**
**வரம்கிடந் தான்தில்லை அம்பல மூன்றில்அம் மாயவனே"**

என்பது. இவ்வாறு திருமால் நடராசப் பெருமான் திருவடியில் வீழ்ந்து வணங்குவதுபோல இருப்பது தம் சமயத்துக்கு இழுக்கென்று உணர்ந்த

திருமாலியர்கள், பெருமாள் நடராசர் பக்கம் காலை நீட்டிக்கொண்டு இருக்கும் அமைப்பில் பெயர்த்து வைத்துவிட்டனர்.

இறைவன் திருமால் முதலான தேவர்கட்கு அறியப்படாதவன் ஆயினும், உண்மை அன்பருக்கு அறியப்படுபவனே. இதனை அப்பரே,

**"தேடிக் கண்டுகொண்டேன் திருமாலொடு நான்முகனும்**
**தேடித் தேடொணாத் தேவனை என்னுளே தேடிக் கண்டுகொண்டேன்"**

என்று அறுதியிட்டு உறுதிப்படுத்தினார்.

சைவ எல்லப்ப நாவலர்,

**"கண்ணருக்கும் போதருக்கும் காண்பரிதாய் கண்பறித்த**
**திண்ணருக்கு நன்றாய்த் தெரிந்ததே"**

என்று உணர்த்தியுள்ளனர். ஆகவே, புண்ணியர் இறைவனைக் காண்பர் என்பது தெரிகின்றதன்றோ?

இந்தக் கருத்துகளை எல்லாம் நம் ஐயா இப் பாட்டில் நன்கு படம் பிடித்துக் காட்டியுள்ளனர். வள்ளலார் தம் பணிவு தோன்றவே தம்மை ஈண்டு அறியாதவன் என்று தம்மைக் கூறிக் கொள்கின்றனர். (177)

**ஒன்றேஎன் ஆர்உயிர்க் கோர்உற வேஎனக் கோர்அமுதே**
**நன்றேமுக் கண்ணுடை நாயக மேமிக்க நல்லகுணக்**
**குன்றே நிறைஅருட் கோவே எனது குலதெய்வமே**
**மன்றே ஒளிர்முழு மாணிக்க மேஎனை வாழ்விக்கவே.**

(பொ-ரை.) "ஒப்பற்ற ஒரு பொருளே! எனது அருமையான உயிர்க்கு உற்ற உறவே! எனக்குரிய ஒப்பற்ற தேவாமுதமே! மூன்று கண்களையுடைய தலைவனே! நற்குணமலையே! அருள்நிறைந்த தலைவனே! என்குல தெய்வமே! பொற்சபையில் விளங்கும் முழுமுதல் மாணிக்கமே! நீ என்னை நன்று வாழவைக்க வேண்டுகின்றேன்." (எ-து.)

(அ-சொ.) அமுது-தேவமுதம். கோ - தலைவன். மன்று-பொன் அம்பலம்.

(வி-ரை.) "ஒன்றே குலம், ஒருவனே தேவன்" என்பது அனுபவ ஞானிகளின் கருத்தாதலின், 'ஒன்றே' என்று பெருமான் குறிக்கப்பட்டுள்ளான். இறைவன் ஒருவனே நமக்கு உறவாவான். இது குறித்தே நம் அப்பர் பெருமானார்,

**"அப்பன்நீ அம்மைநீ ஐயனும்நீ**
**அன்புடைய மாமனும் மாமியும்நீ,**
**ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும்நீ**
**ஒருகுலமும் சுற்றமும் ஓர்ஊரும்நீ"**

என்று அருளியுள்ளனர். (178)

**தாழ்வேதும் இன்றிய கோவே எனக்குத் தனித்தபெரு**
**வாழ்வே நுதல்கண் மணியேஎன் உள்ள மணிவிளக்கே**
**ஏழ்வேலை என்னினும் போதா இடும்பை இடுங்குடும்பப்**
**பாழ்வே தனைப்பட மாட்டேன் எனக்குன் பதம்அருளே.**

(பொ-ரை.) "எந்தவிதச் சிறுமையும் இல்லாத தலைவனே! என்னுடைய ஒப்பற்ற பெருவாழ்வே! நெற்றிக்கண் படைத்த மணியே! எனது உள்ளத்தில் இரத்தின தீபமாக விளங்கும் ஒளியே! என் துன்பத்தின் பரப்பைக் கூறப்போனால் ஏழு கடலினும் பரந்ததாக அமையும். ஆகவே, இந்தத் துன்பப் பெருக்கம் நிறைந்த குடும்ப வேதனையைப் பொறுக்க முடியவில்லை. எனக்கு உன் திருவடிப் பேற்றை அருள்வாயாக." (எ-து.)

(அ-சொ.) கோ-தலைவன். தனித்த-ஒப்பற்ற. நுதல்-கண். வேலை-கடல். இடும்பை-துன்பம்.

(இ-கு.) நுதல்கண், ஏழந்தொகை. போதா, பலவின்பால் வினைமுற்று. பதம், குறுக்கல் விகாரம்.

(வி-ரை.) திருமால் சலந்தரன் மனைவியை விரும்பியதும், பிரமன் தான் படைத்த பெண்ணை விரும்பியதும், இந்திரன் அகலிகையை விரும்பியதும் தாழ்வான செயல்கள். இத்தகைய இழிசெயல்கள் சிவபெருமானிடத்தில் இன்மையில் அவன் "தாழ்வேதும் இன்றிய கோவே" எனப்பட்டான்.

**வண்டுகொண் டார்நறும் கொன்றையி னான்தன் மலர்அடிக்குத்**
**தொண்டுகொண் டார்தம் சுகத்துக்கும் வாழ்க்கைச் சுழலில்தள்ளும்**
**பெண்டுகொண் டார்தம் துயருக்கும் ஒப்பின்று பேசில்என்றே**
**கண்டுகொண் டாய்இனி நெஞ்சேநின் உள்ளக் கருத்தெதுவே.**

(பொ-ரை.) "மனமே! வண்டுகள் நிறைந்து மணம் வீசும் கொன்றை மலர் அணிந்த இறைவனுடைய மலர் போன்ற திருவடிகளில் தொண்டு பூண்ட மெய்யடியவர்களின் சுக வாழ்விற்கும், வாழ்க்கையாகிய சுழல் காற்றில் தள்ளுகின்ற பெண்டுகளைக் கொண்டவர்களின் துன்பத்துக்கும் நிகர் இல்லை என்பதைக் கண்டுகொண்டாய். இனி உன் மனக்கருத்து யாது?" (எ-து.)

(அ-சொ.) ஆர் - நிறைந்துள்ள. நறும் - வாசனை பொருந்திய. சுழல் - சுழல்காற்று. பெண்டு - பெண்கள்.

(இ-கு.) மலர் அடி, உவமத் தொகை. இன்று, குறிப்பு வினைமுற்று.

(வி-ரை.) நம் வள்ளலார், இறைவன் திருவடியில் அன்பு கொண்டவர்கள் அடையும் சுகத்தையும், பெண்டு பிள்ளைகளுடன் வாழ்பவர்களின் துன்பத்தையும் மனத்துக்கு எடுத்துக்கூறி இரண்டில் இறைவன் திருவடிக்குத் தொண்டு செய்து சுகமடையுமாறு உபதேசம் செய்வாராயினார். இறைவன் திருவடித் தொண்டில் இன்பம் உண்டு என்பதை நம் அப்பர்,

**"மாசில் வீணையும் மாலை மதியமும்**

**வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்**
**மூசு வண்டறை பொய்கையும் போன்றதே**
**ஈசன் எந்தை இணையடி நீழலே"**

என்று உணர்த்துதல் காண்க. மேலும் அவர் அத் திருவடித் தொண்டின் சுகத்தை,

**"நாமார்க்கும் குடிஅல்லோம் நமனை அஞ்சோம்**
**நரகத்தில் இடர்ப்படோம் நடலை இல்லோம்**
**ஏமாப்போம் பிணிஅறியோம் பணிவோம் அல்லோம்**
**இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை**
**தாமார்க்கும் குடிஅல்லாத் தன்மை யான**
**சங்கரன்நல் சங்கவெண் குழையோர் காதில்**
**கோமார்க்கே நாம்என்றும் மீளா ஆளாய்**
**கொய்ம்மலர்ச் சேவடிஇணையே குறுகி னோமே"**

என்று பாடியும் அறிவித்துள்ளனர். இதனால்தான் "கொன்றையினான் தன் மலர் அடிக்குத் தொண்டு கொண்டார் சுகம் உறுவர்" என்பதை நம் ஐயா அறிவித்துள்ளனர்.

சிவப்பிரகாச சுவாமிகள் இறைவன் தாளை சிந்திப்பதால் ஏற்படும் இன்பத்தையும், பெண்டுகளால் வரும் துன்பத்தையும் ஒருங்கே வைத்து உணர்த்தி இருப்பதை,

**"நிட்டையிலே இருந்துமனத் துறவடைந்த பெரியோர்கள் நிமலன் தாளைக்**
**கிட்டையிலே தொடுத்துமுத்தி பெறும்அளவும் பெரியசுகம் கிடைக்கும் காம**
**வெட்டையிலே மதிமயங்கிச் சிறுவருக்கும் மணம்பேசி விரும்பித் தாவி**
**கட்டையிலே தொடுத்துநடுக் கட்டையிலே கிடத்துமட்டும் கவலை தானே"**

என்னும் பாட்டால் நன்கு எடுத்து மொழிந்துள்ளனர். (180)

**மலங்கவிழ்ந் தார்மனம் வான்கவிழ்ந் தாலும்அவ் வான்புறமாம்**
**சலங்கவிழ்ந் தாலும் சலியாதென் புன்மனம் தான்கடலில்**
**கலங்கவிழ்ந் தார்மனம் போலே சலிப்பது காண்குடும்ப**
**விலங்கவிழ்ந் தால்அன்றி நில்லாதென் செய்வல் விடையவனே.**

(பொ-ரை.) "இடப வாகன மூர்த்தியே! மும் மலங்களை அறுத்தவர்களின் மனமானது, வானமே நிலை மாறிக் கவிழ்ந்தாலும், அந்த வானத்திற்கு வெளியே உள்ள கடல் புரண்டாலும் ஒருபோது சஞ்சலம் உறாது. ஆனால், எனது கீழ்த்தரமான மனமோ எனில், கடலில் சென்றவர்களின் மனம் கப்பல் கவிழ்ந்தபோது எப்படிக் கலங்குமோ, அதுபோலச் சஞ்சலம் உறுகிறது. ஆகவே, எனது குடும்பமாகிய கால் விலங்கு, கை விலங்கு அவிழ்க்கப்பட்டால் அன்றி, என் மனம் துன்பப்படுவதிலிருந்து ஓயாது. நான் என்ன செய்வேன்?" (எ-து.)

(அ-சொ.) மலம் - மும்மல அழுக்கு. வான் - ஆகாயம். புறம் - வெளியே. சலம் - கடல். சலியாது-கலங்காது. புன் - அற்பம். கலம் - கப்பல். விடையவன் - இரடபவாகனனான சிவபெருமான்.

(இ-கு.) தான் - அசைச்சொல். காண்-முன்னிலை அசைச்சொல்.

(வி-ரை.) மலங்களாவன ஆணவம், கன்மம், மாயை என்பன. மும்மலத்தை அழித்தவர்கள் இறைவன் திருவடிகளில் உறுதியான பற்றுக் கொண்டிருப்பதனால் இயற்கை நிகழ்ச்சிகளால் கடல் கொந்தளிப்போ, பூமி அதிர்ச்சியோ, வானத்தில் மாறுபாடோ, எது நேரினும் அவற்றைப் பற்றிச் சிறிதும் மனம் சலியார். இதனைத் திருநாவுக்கரசர்,

**வானம் துளங்கில்என் மண்கம்பம் ஆகில்என் மால்வரையும்**
**தானம் துளங்கித் தலைதடு மாறில்என் தண்கடலும்**
**மீனம் படில்என் விரிசுடர் வீழில்என் வேலைநஞ்சுண்**
**டூனம்ஒன் றில்லா ஒருவனுக் காட்பட்ட உத்தமர்க்கே.**

என்று உணர்த்தி இருப்பதைக் காண்க. (181)

**மைகொடுத் தார்நெடுங் கண்மலை மானுக்கு வாய்ந்தொருபால்**
**மெய்கொடுத் தாய்தவர் விட்டவெம் மானுக்கு மேவுறஓர்**
**கைகொடுத் தாய்மயல் கண்ணியில் வீழ்ந்துள் கலங்குறும்என்**
**கொய்கொடுத் தாழ்மன மானுக்குக் காலைக் கொடுத்தருளே.**

(பொ-ரை.) “இறைவனே! மை நிறைந்து விளங்கும் நீண்ட கண்களைப் பெற்றவளும், பர்வதராசனுக்குத் திருமகளாகத் தோன்றியவளுமாகிய பார்வதிதேவிக்கு உனது இடப்பாகத்தைக் கொடுத்தாய். தாருகாவனத்து இருடிகள் ஏவிய கொடிய மானுக்கு அது பொருந்தி இருக்க உனது ஒப்பற்ற கையைக் கொடுத்தாய். உலகமையலாகிய வலையில் அகப்பட்டுத் துன்பத்தில் ஆழ்ந்து இருக்கும் மனமாகிய மானுக்கு உன் திருவடிப் பேற்றைத் தந்தருள்வாயாக.”(எ-து.)

(அ-சொ.) மலைமான் - பர்வதராசன் மகள் பார்வதி. ஒருபால் - ஒருபக்கம்(இடப்பக்கம்). மெய் -உடல். தவர் - தவசிகள் (தாருகாவனத்து இருடிகள்). மேவுற-பொருந்த. கண்ணி-வலை.

(இ-கு.) மலைமான் -உவம ஆகுபெயர்.

(வி-ரை.) இறைவி தட்சனுக்கு மகளாய்ப் பிறந்தாள். வளர்ந்தாள்; மணப்பருவம் உற்றாள். அதுபொது அவளுக்குத் தாட்சாயணி என்பது பெயர். இறைவன் தட்சன் அனுமதி இன்றித் தாட்சாயணியைக் கொண்டு சென்றார். அதனால் கோபம் கொண்ட தட்சன் இறைவனையும், இறைவியையும் வெறுத்தான். ஒரு யாகத்தைச் செய்தான். அதற்குச் சிவபெருமானையும் தன் மகளையும் அழைத்திலன். அதனால் அவன் யாகம் வீரபத்திரரால் அழிக்கப்பட்டது. இத்தகைய தட்சன் மகள் தாட்சாயணி என்னும் பெயர் தனக்கு இருக்கக் கூடாது என்று கருதினாள் உமாதேவி. இந்த நிலையில் பர்வதராசன் தனக்கு மகவு வேண்டித் தவம் கிடந்தான். அந்தத் தவத்தின் பயனாகப் உமாதேவி அவனுக்கு மகளாகத்

தோன்றினாள். இதுவே மலைமான் என்பதன் வரலாறு. விளக்கத்தைக் கந்தபுராணத்தில் காண்க. தாருகா வனத்து இருடிகள், தம் யாகம் சிவபெருமானால் அழிக்கப்பட்டதனால் வெகுண்டு மான் முதலியவற்றை ஏவி இறைவரைக் கொல்ல முயன்றனர். ஈறிலாத ஈசன் அவர்கள் ஏவியவற்றில் ஒன்றாகிய மானை ஏற்றுத் தம் கையில் கொண்டார். இதுவே "தவர்விட்ட வெம்மானுக்கு மேவுற்ற ஓர் கை கொடுத்தாய்" என்பதில் அமைந்த கதை. விளக்கத்தைக் கந்த புராணத்தில் காண்க.

நம் ஐயா இங்குப் பாடியுள்ள பாடலைப் படிக்குபோது, பொற்களந்தைப் படிக்காசுத் தம்பிரான் தேவிமீது பாடியுள்ள

**"வேல்கொடுத் தாய்திருச் செந்தூர்க் கம்மியின் மீதுவைக்கப்**
**கால்கொடுத் தாய்நின் மணவா ளனுக்குக் கவுணியர்க்குப்**
**பால்கொடுத் தாய்மத வேளுக்கு மூவர் பயப்படச்செங்**
**கோல்கொடு தாய்அன் னையேஎனக் கேதும் கொடுத்திலையே".**

என்னும் பாடல் நினைவுக்கு வருகிறது. (182)

**உடம்பார் உறுமயிர்க் கால்புழை தோறனல் ஊட்டிவெய்ய**
**விடம்பாச் சியஇருப் பூசிகள் பாய்ச்கினும் மெத்தென்னும்இத்**
**தடம்பார் சிறுநடைத் துன்பச்செய் வேதனை தாங்கரிதென்**
**கடம்பாநல் பன்னிரு கண்ணா இனியேனைக் காத்தருளே.**

(பொ-ரை.) "கடம்ப மலர் அணிந்தவனே! பன்னிரண்டு கண்களை யுடையவனே! உடம்பில் நிறைந்துள்ள மயிர்க்காலின் சந்துகள்தோறும் தீயை வைத்துக் கொடிய விடத்தைப் பாய்ச்சிய இரும்பினால் ஆகிய ஊசிகளை நுழைத்தாலும் மெத்தென்று இருக்கும் என்று சிலர் கருதுகின்ற இந்தப் பரந்த உலக நடையில் அமைந்த சிறிதளவு துன்பம் செய்கின்ற வேதனையை என்னால் தாங்க அரிது. ஆகவே, இனியவனாகிய என்னைக் காத்தருள்வாயாக்." (எ-து.)

(அ-சொ.) கடம்பம் -கடம்ப மலர். ஆர் - பொருந்திய. புழை-துவாரம். இருப்பு - இரும்பு. தடம் - பெரிய. பார்-பூமி.

(இ-கு.) தோறு, இடைச்சொல், இருப்பு, வலித்தல் விகாரம். தடம், உரிச்சொல்.

(வி-ரை.) இப்பாடலுக்குரிய விளக்கத்தை நூற்றைம்பத்து நான்காவது பாடலில் உள்ள விரிவுரை கொண்டும் தெளியவும். நம் ஐயா சிவபெருமானையும் முருகப் பெருமானையும் ஒன்றாகவே கருதி இருப்பதனால் சிவபெருமானை இடை யிடையே முருகப்பெருமானாகவே எண்ணிப் பாடியுள்ளனர். அந்த முறையில் பாடப்பட்டதே இச் செய்யுள். நம் ஐயா இந்தச் செய்யுளின் வழி உடலுக்கு துன்பம் எவ்வளவு இருப்பினும், அதைப் பொறுத்துக் கொள்ளலாம். ஆனால் உலக நடையில் ஏற்படும் சிறு மனவேதனை பொறுத்தற்கரிது என்று கூறியுள்ளனர். இப்பாடல் முருகன்மீதே பாடப்பட்டது எனினும் அமையும். (183)

**மண்ணாலும் மண்ணுற்ற வாழ்க்கையி னாலும்அவ் வாழ்க்கைக்குற்ற**

**பெண்ணாலும் நொந்துவந் தாரைஎலாம் அருள் பேறெனும்முக்**
**கண்ணாலும் பார்த்தைந்து கையாலும் ஈயும் கணபதிநின்**
**பண்ணாலும் மாமறை மேல்தாளை என்னுள் பதித்தருளே.**

(பொ-ரை.) "உலகத்தின் மண் ஆசையினாலும், உலகில் அமைந்த பொய் வாழ்க்கையின் ஆசையினாலும், அந்தப் பொய் வாழ்க்கைக்கு அமைந்த பெண்ணாசையினாலும் வாடி வருந்தி வந்தவர்களை எல்லாம் அருள் பேறாக அமைந்துள்ள மூன்று கண்களாலும் திருக்கண் சாத்தி. ஐந்து கைகளாலும் அருளைத் தருகின்ற விநாயகப்பெருமானே! இசையோடு ஒலிக்கப்படும் சிறந்த வேதங்களின் உச்சிமேல் பொருத்தும் உன் திருவடிகளை என் உள்ளத்துள் பதியச் செய்வாயாக." (எ-து.)

(அ-சொ.) மண் - உலகு. பண் - இசை. ஆலும் - ஒலிக்கும். மா-சிறந்த.

(இ-கு.) கணபதி, அண்மை விளி. மா, உரிச்சொல்.

(வி-ரை.) இப்பாட்டு விநாயகப் பெருமானை நோக்கி முறையிட்டுக் கொள்ளும் முறையில் அமைந்துளது. பெரும்பாலான பாடல்கள் சிவ பரம்பொருளிடமே முறையிட்டுக் கொள்ளும் முறையில் அமைந்திருந்தும், இரண்டோர் இடங்களில் முருகப்பெருமான் பரமாகவும், விநாயகப் பெருமான் பரமாகவும் முறையீடு அமைந்திருத்தற்குக் காரணம், நம் ஐயாவின் உள்ளம் முருகப் பெருமானும், விநாயகப் பெருமானும் சிவனே, வேறல்லர் என்பதை நாம் உணரவே ஆகும். இந்த உண்மை முன்பே உணர்த்தப்பட்டது. ஆண்டுக் காண்க.

சிவபெருமானே விநாயகர் என்பதைத் திருஞான சம்பந்தர் பாடியுள்ல,

**"பிடிஅதன் அருஉமை கொளமிகு கரியது**
**வடிகொடு தனதடி வழிபடும் அவர்இடர்**
**கடிகண பதிவர அருளினன் மிகுகொடை**
**வடிவினர் பயில்வலி வலம்உறை இறையே"**

என்னும் பாடலை ஊன்றிப் படித்தால் உணரலாம்.

மக்கள் மூவகை ஆசைகளுக்கு உட்பட்டவர்கள். அம் மூவகை ஆசைகள் மண், பொன், பெண் என்பன. அவற்றுள் ஈண்டு மண்ணாசை, பெண்ணாசை ஆகிய இரண்டாசைகளைக் குறிப்பிட்டனர். இவ்விரண்டன் வழிப் பொன்னாசையினால் ஏற்படும் துன்பத்தையும் அறிந்து அதனையும் ஒழித்துக் கணபதியின் கருணையினைப் பெறுதல் வேண்டும்.

பரசிவப் பொருளும், விநாயகப் பெருமானும் வேறல்லர் என்னும் குறிப்பினை இருவர்கட்கும் முக்கண் உள்ளமை கொண்டும் உணரலாம் என்பதை அறிவிக்கவே நம் ஐயா, "அருட்பேறெனும் முக்கண்" என்றனர். விநாயகருக்கு முக்கண் உண்டு என்பதை உமாபதி சிவமும் விநாயக வணக்கப் பாவில்,

**"வானுலகும் மண்ணுலகும் வாழமறை வாழப்**
**பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க**

**ஞானமதம் ஐந்துகரம் மூன்றுவிழி நால்வாய்**
**ஆனைமுக னைப்பரவி அஞ்சலிசெய் கிற்பாம்"**

என்று பாடி அறிவித்தல் காண்க. ஐந்துகரம் என்பன நான்கு கைகளும், துதிக்கையும் சேர்ந்தவை. ஈண்டு நால்வாய் என்பதன் பொருள் தொங்கும் வாய் என்பது.

நம் ஐயா, தம் பாட்டில் விநாயகப் பெருமான் ஐந்து கரங்களாலும் தம்மைச் சரண்புகுந்தவர்களுக்கு அருள் தருகின்றனர் என்று அறிவித்தனர். ஆனால், தணிகைப் புராணம் பாடிய கச்சியப்ப முனிவர் ஐந்துகரம் விநாயகப் பெருமானுக்கு இருப்பதற்குரிய காரணம் இன்னது என்பதைப் பற்றிப் பாடி இருப்பதையும் உணர்தல் இன்பம் தருவதாகும்.

**"பண்ணியம் ஏந்தும்கரம் தனக்காக்கிப்**
**பால்நிலா மருப்பமர் திருக்கை**
**விண்ணவர்க் காக்கி அரதனக் கலச**
**வியன்கரம் தந்தைதாய்க் காக்கித்**
**மண்ணில்ஆ ணவவெங் கரிபிணித் தடக்கிக்**
**கரிசனேற் கிருகையும் ஆக்கும்**
**அண்ணலைத் தணிகைவரை வளர்ஆபத்**
**சகாயனை அகம்தழீஇக் களிப்பாம்"**

என்பது பாட்டு. (184)

**வான்ஆள மால்அயன் வாழ்வாள அன்றிஇம் மண்முழுதும்**
**தான்ஆள நின்பதம் தாழ்பவர் தாழ்கஒண் சங்கைஅம்கை**
**மான்ஆல மெய்இடம் தந்தொய்துன் பற்ற மனம்அதொன்றே**
**நான்ஆள எண்ணிநின் தாள்ஏத்து கின்றனன் நல்குகவே.**

(பொ-ரை.) "ஒளி பொருந்திய வளையல்களை அழகிய கையில் அணிந்துள்ள உமாதேவி இடமாகக் கொண்டிருக்க இடப் பக்கத்தை ஈந்த இறைவர், திருமாலும் பிரமனும் அவர் அவர்கட்குரிய வைகுந்த லோகத்தையும், சத்திய லோகத்தையும் ஆளவும் நல்வாழ்க்கைகொண்டு ஆட்சி புரியவும், அன்றி இவ்வுலக முழுவதும் தாமே ஆளவும் விரும்பி உன் திருவடியை வணங்குவர். வணங்குக. ஆனால் நான் மட்டும், துன்பம் ஏதும் இல்லாத மனத்தை அடக்கி ஆள எண்ணி உன் திருவடிகளைப் போற்றுகின்றேன். ஆகவே, எனக்கு உன் திருவருளை தந்தருள்க." (எ-து.)

(அ-சொ.) ஒண் சங்கு - ஒளிவுடைய வளையல். அம்கை-அழகிய கை. மான் - மான் போலும் கண்களைக் கொண்ட உமாதேவி. வான் - மேல் உலகு (ஈண்டு வைகுந்தம், சத்திய லோகம்) ஏத்துகின்றேன் - போற்றுகின்றேன். நல்குக-தந்தருள்க.

(இ-கு.) மான், உவம ஆகுபெயர். மால் அயன், உம்மைத்தொகை. அன்றி, குறிப்பு வினைஎச்சம். பதம் குறுக்கல் விகாரம். தாழ்க, வியங்கோள் வினைமுற்று. தாழ்பவர், வினையால் அனையும் பெயர். மனம்+அது, அது பகுதிப்பொருள் விகுதி.

(வி-ரை.) இன்று இருந்து நாளை அழியும் சிற்றின்பத்தை விரும்பி இறைவனை வேண்டுகின்றவர்கள், மக்கள் மட்டும் அல்லர். மால் அயன் முதலிய தேவர்களும் ஆவர். பிரம்மாதி விஷ்ணுக்கள் இறைவனைத் தாழ்ந்து தம்தம் பதவியைப் பெற்றனர் என்பதைத் துர்வாச முனிவர் இந்திரனை நோக்கி,

**"வண்டுளறும் தண்துழாய் மாயோன் இறுமாப்பும்**
**புண்டரிகப் போதுறையும் புத்தேள் இறுமாப்பும்**
**அண்டர்தொழ வாழுன் இறுமாப்பும் ஆலாலம்**
**உண்டவனைப் பூசித்த பேறென் றுணர்ந்திலையால்"**

என்று கூறுமாற்றால் தெரிந்துகொள்ளலாம். இதனால், "மாலயன் வான்ஆள இறைவன் பதம் தொழுதனர்" என்பது புலனாதல் காண்க.

அரசரும் மற்றும் உள்ளோரும் நல் வாழ்வுடன் ஆளவும், உலகம் முழுவதும் தாமே ஆளவும் அவாவி நிற்பதை நம் தாயுமானவர்,

**"ஆசைக்கோர் அளவில்லை அகிலம்எல் லாம்கட்டி**
**ஆளினும் கடல்மீ திலே**
**ஆணைசெல வேநினைவர் அளகேசன் நிகர்ஆக**
**அம்பொன்மிக வைத்த பேரும்**
**நேசித்து ரசவாத வித்தைக் கலைந்திடுவர்**
**நெடுநாள் இருந்த பேரும்**
**நிலையாக வேஇனும் காயகற் பம்தேடி**
**நெஞ்சம்புண் ஆவர் எல்லாம்**
**யோசிக்கும் வேளையில் பசிதீர உண்பதும்**
**உறங்குவதும் ஆக முடியும்**
**உள்ளத்தே போதும்நான் நான்எனக் குளறியே**
**ஒன்றைவிட் டொன்று பற்றிப்**
**பாசக் கடற்குளே வீழாமல் மனதற்ற**
**பரிசுத்த நிலையை அருள்வாய்**
**பார்க்கும்இடம் எங்கும்ஒரு நீக்கம்அற நிறைகின்ற**
**பரிபூர ணானந் தமே"**

என்று விளக்குதல் காண்க.

இந்தக் கருத்துகளை உள் அடக்கினதுதான் நம் ஐயா பாட்டின் முதல் மூன்றடிகளின் கருத்து.

சங்க நூற்களில் ஒன்றாகிய பரிபாடலும் மக்கள் இன்னின்ன வேண்டி முருகப்பெருமானை வணங்குவர் என்பதை,

**"கருவயி றுறுகெனக் கடம்படு வோரும்**
**செய்பொருள் வாய்க்கெனச் செவிசார்த்து வோரும்**
**ஐஅமர் அடுகென அர்ச்சிப் போரும்"**

என்று உணர்த்துதலை ஓர்க. (185)

**ஈடறி யாதமுக் கண்ணாநின் அன்பர் இயல்பினைஇந்**
**தாடறி யாதுன் அருள்அன்றி ஊண்சுவை நாவைஅன்றி**
**மேடறி யாதுநல் பாட்டைக்கற் றோர்அன்றி மேல்சுமந்த**
**ஏடறி யாதவை என்அறி யாஎன் றிகழ்வரன்றே.**

(பொ-ரை.) "ஒப்பு அறியாத மூன்று கண்களைக் கொண்ட முழுமுதல் பரம்பொருளே! உலக மக்கள் உன் திருவருளைப் பெற்றால் அன்றி அன்பர்களின் குணநலன்களை உணரமாட்டார்கள். உணவின் சுவையை நாக்கு மட்டும் அறியுமே அன்றி, வயிறு உணராது. நல்ல செய்யுளின் சொல் அழகையும், பொருள் அழகையும், கற்றவர்கள்தாம் அறிவார்களே அன்றி, அச் செய்யுட்கள் எழுதப்பட்ட ஏடு உணராது. வயிறோ, ஏடோ ஏன் அறிந்துகொள்ளவில்லை என்று எவரும் இகழார்." (எ-து.)

(அ-சொ.) ஈடு - ஒப்பு. ஊண்- உணவு. மேடு - வயிறு.

(இ-கு.) நாடு, இட ஆகுபெயர். அறியா, எதிர்மறை குறிப்பு வினாமுற்று.

(வி-ரை.) நாக்கு, சுவை அறியும் அறிவைப்பெற்றது போலக் கற்றவர்கள் நல்பாட்டின் சீரிய பொருளை அறிகின்றமைக்கும் காரணம், இறைவன் திருவருள் அவர்களிடம் படிந்திருப்பதே ஆகும். இந்த வாய்ப்பினை வயிறும், ஏடும் பெறாமையின் சுவையையும், பாட்டின் சிறப்பையும் அறிய முடியவில்லை; இதனால்தான் "அவன் அருளாலே அவன் தாள் வணங்கி' என்றும், "காண்பார் ஆர்கண்ணுதலாய் நீ காட்டாக் காலே" என்றும், "அவன் அன்றி ஓர் அணுவும் அசையாது" என்றும் முறையே திருவாதவூரர், அப்பர், தாயுமானவர் அறிவித்துள்ளனர். நம் ஐயா, இங்கு அறிவிக்க வந்த கருத்து "இறைவ! உன் இயல்பினையும் உன் அடியார்களின் இயல்பினையும், நான் அறிந்து கொள்ளாமைக்குக் காரணம், உன் திருவருள் என்னிடம் இல்லாமையே ஆகும். ஆகவே அருள் செய்க" என்பதாம். அன்பர்களின் இயல்பைப் பற்றித் திருமந்திரம்,

**சித்தம் சிவமாய் மலமூன்றும் செற்றவர்**
**சுத்த சிவம்ஆவர் தோயார் மலபந்தம்**
**கத்தும் சிலுகும் கலகமும் கைகாணார்**
**சத்தம் பரவிந்து தானாம்என் றெண்ணியே**

என்று கூறுதல் காண்க. மேலும் சேக்கிழார் இறைவனுடைய அன்பர்களின் இயல்பை அப்பர் பெருமான் மீது வைத்துக் காட்டி

**தூயவெண் ணீறு துதைந்தபொன் மேனியும் தாழ்வடமும்**
**நாயகன் சேவடி தைவரும் சிந்தையும் நைந்துருகிப்**
**பாய்வது போல்அன்பு நீர்பொழியும் கண்ணும் பதிகச் செஞ்சொல்**
**மேயசெவ் வாயும் உடையார் புகுந்தனர் வீதியுள்ளே என்றும்**

**கையும் தலைமிசை புனைஅஞ் சலியன**

**கண்ணும் பொழிமழை ஒழியாதே**
**பெய்யும் தகையன கரணங் களுடன்**
**உருகும் பரிவின் பேறெய்தும்**
**மெய்யும் தரைமிசை விழுமுன் பெழுதரும்**
**மின்தாழ் சடையொடு நின்றாடும்**
**ஐயன் திருநடம் எதிர்கும் பிடும்அவர்**
**ஆர்வம் பெருகுதல் அளவின்றால்**

என்றும் அறிவித்தல் காண்க.

திருநீறு உருத்திராக்கம் அணிதலும், குருவை வழிபடுதலும் சிவ தோத்திரம் செய்தலும், மந்திரம் செபித்தலும் இறைவனை வழிபடுதலும், நல்லறம் புரிதலும், சிவபுராணம் கேட்டலும், சிவாலய பரிபாவனம் செய்வதும், சிவனடியாருடன் உண்ணலும், அடியார்க்களுக் கடியனாய்ப் பணிதலும் ஆகிய இப்பத்துக் குணங்களும் கூட அடியார்களின் இயல்புகளாம்.

நம் ஐயா, இங்குப் பாடியுள்ள பாட்டைப் படிக்கும்போது சுந்தரர் பாடியுள்ள,

**"கழுதை குங்குமம் தான்சுமந்து எய்த்தால்**
**கைப்பர் பாழ்புக மற்றது போலப்**
**பழுது நான்உழன் றுள்தடு மாறிப்**
**படுசு ழித்தலைப் பட்டனன் எந்தாய்**
**அழுதுநீ என்செய்தி மனனே**
**அங்க ணாஅர னேஎன மாட்டா**
**இழுதை யேனுக்கொர் உய்வகை அருளாய்**
**இடைம ருதுறை எந்தை பிரானே"**

என்னும் பாடல் நினைவுக்கு வரும். (186)

**சூடுண்ட பூனைக்குச் சோறுண்ட வாய்பின் துடிப்பதன்றி**
**ஊடுண்ட பால்இட்ட ஊண்கண்ட தேனும் உணத்துணியா**
**தீடுண்ட என்மனம் அந்தோ துயரில் இடிஉண்டும்இவ்**
**வீடுண்ட வாழ்க்கையின் வீழ்உண்ட தால்எம் விடையவனே.**

(பொ-ரை.) "எருதின் மீது வந்து காட்சி அளிக்கும் எங்கள் பெருமானே! சூடுகண்ட பூனைக்குச் சோறுண்ட வாய் துடிக்குமே அல்லாமல், பால் கலந்த உணவைக் கண்டாலும், அதை உண்ண முன்வராது. அந்தப் பூனையைப் போன்றது என் மனமும். ஐயோ, துன்பத்தில் நெறுக்குண்டும் துன்பத்தினின்று விடுதலைப்பெற்றும் வாழவேண்டிய அது மீண்டும் துயரிலேயே அழுந்திக் கிடக்கிறதே" (எ-து.)

(அ-சொ.) பூனை-பூனை. ஊண்-உணவு. ஈடு-ஒப்பு. ஈடுண்ட-ஈடுபட்ட. விடை-எருது. விடையவன் - சிவபெருமான்.

(இ-கு.) வீழ் உண்டதால் என்பதில் உள்ள ஆல், அசை.

(வி-ரை.) பூனைக்குப் பால்மீது மிகவும் விருப்பம் ஆதலின் அதற்கு விருப்பமான பால் நன்கு காய்ச்சப்பட்டு வெம்மையுடன் அதன்முன் கொண்டு வைக்கப்பட்டது. பூனை பாலைக் கண்டதும் அதனைப் பருக வாய் வைத்தது. பாலின் வெம்மை பூனையின் வாயைப் புண்ணாக்கியது. இந்த நிலை தனக்கு ஏற்பட்டதனால் எந்தப் பாலைக் காணினும் அது சூடானபால் என்று எண்ணி அஞ்சிப் பருகுவதில்லை.

இந்த உவமையை நம் ஐயா இப் பாட்டில் அமைத்த தன் குறிப்புத் துயரால் மிகவும் வாடியும் மீண்டும் உலக வாழ்க்கையில் தம் மனம் ஆழ்கிறதே. பூனையினுடைய அனுபவம் கூடத் தம் மனத்துக்கு இல்லையே என்பதை நாம் உணர்வதற்காகவே ஆகும். (187)

**கரங்காட்டி மைஇட்ட கண்காட்டி என்பெரும் கன்மநெஞ்சக்**
**குரங்காட்டிச் சேய்மையில் நிற்கின்ற மாதரைக் கொண்டுகல்லார்**
**உரங்காட்டிக் கோல்ஒன் றுடன்நீட்டிக் காட்டி உரப்பிஒரு**
**மரங்காட் டியகுரங் காட்டுகின் றோர்என் மணிகண்டனே.**

(பொ-ரை.) "நீலமணி போன்ற கழுத்தையுடைய சிவபெருமானே! அறிவு இல்லாதவர்கள் எங்கோ இருக்கின்ற மாதர்களைக் கொண்டு கையையும், மைஇட்ட கண்ணையும் காட்டி முற்பிறப்பில் செய்த கன்மங்கள் நிறைந்த என் மனமாகிய குரங்கை, குரங்காட்டிகள் தம் வன்மையைக் காட்டி ஒரு கோலை நீட்டித் தம் குரங்கை ஆட்டுவதுபோல ஆட்டுகின்றார்களே! ஏன் இப்படிச் செய்கின்றார்கள்?" (எ-து.)

(அ-சொ.) சேய்மை-தூரம். உரம் - வன்மை. உரப்பி - அதட்டி. மணி - நீலமணி.

(இ-கு.) மணி, உவம ஆகுபெயர்.

(வி-ரை.) வள்ளலார், தம்மை முன்பிறவியில் செய்த வல்வினையானது, மாதர் போகத்தில் மூழ்கச் செய்து துன்பத்திற்கு ஆளாக்குகின்றது. அந்தத் துன்பத்தில் நான் அகப்பட்டுத் துயர் உறுதல் போதாது என்று கருதி ஐம்புல வேடர்களாகிய ஐம்புலன்கள்தம் வன்மையினைக் கொண்டு இந்தப் பிறவியிலும் உலகப்பந்தம் என்னும் கோலை நீட்டி என்னைக் குரங்காட்டிகள், குரங்கை ஆட்டுவது போல ஆட்டுகின்றார்களே! ஏன் இப்படி வல்வினையும், ஐம்புல வேடர்களும் என்னை ஆட்டி வைக்கின்றனர் என்று முறையிட்டுக் கொள்ளும் முறையில் அமைந்தது இப்பாடல் ஈண்டுக் கல்லார் என்பவர் மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்புல வேடர்கள். இறைவன் உயிருடன் கலந்து உணர்த்தினால் அன்றி ஐம்புலன்களும் அறியும் ஆற்றல் இன்றி இருத்தல் பற்றி அவற்றைக் கல்லார் என்றனர்.

கோல் ஒன்று நீட்டுதலாவது நல்வினை தீவினை என்னும் கோலைக் குறிப்பதாகும். இந்த வினைகளினால்தாம் ஆன்மா ஆட்டப்படுகிறது. வள்ளலார் இந்த ஆட்டத்தினின்று தடுத்து ஆட்கொள்ளுமாறு இறைவனை வேண்டுகின்றார். (188)

**களங்கனி போல்மணி கண்டாநின் பொன்கழல் காணற்கென்சிற்**
**றுளங்கனி யாதுநின் சீர்கேட் கினும்அன் புறஉருகா**
**வளங்கனி காமம் சிறவாமல் சிற்றில் வகுத்துழலும்**
**இளங்கனி போல்நின்ற தென்செய்கு வேன்எம் இறையவனே.**

(பொ-ரை.) "எங்கள் தலைவனே! களங்கனி போலும் நீல நிறம் பொருந்திய அழகிய கழுத்தையுடையவனே! உனது அழகிய வீரத்தண்டை அணிந்த திருவடிகளைக் கண்டு இன்புறுதற்கு என் சிறு உள்ளம் உருகவில்லை. உன் சிறப்பைக் கேட்டாலும் அன்பு பொருந்த உருகவில்லை. எல்ல வளங்களும் கனிந்தும் உன்னருளைப் பெற விருப்பம் கொண்டிலது. ஆனால் சிறு வீட்டை மணலால் கட்டி வாழும் இளையபெண்ணைப் போல் நிற்கிறது. இதற்கு நான் என்ன செய்வேன்". (எ-து.)

(அ-சொ.) பொன் - அழகிய. கழல் - வீரத்தண்டை அணிந்த திருவடி. உற-பொருந்த; கனி - கன்னிப்பெண்.

(இ-கு.) கழல், தானி ஆகுபெயர், உருகா, ஈற்றுக்குறை. சிறு+இல். கனி, இடைகுறை. செய் +கு+வ்+ஏன், இதில் க் எதிர்காலம் காட்டும் இடைநிலை.

(வி-ரை.) களம் கனி, கருமையானது. காக்கையின் கருமைக்குக் களங் கனியை உவமை காட்டுவது புலவர் மரபு. இங்கு அக்கனி இறைவனது நீல கண்டத்தின் கருமைக்கு உவமை காட்டப்பட்டது. காமம் ஈண்டு இறைவன்மீது கொள்ள வேண்டிய பற்றை உணர்த்தி நிற்கிறது. மனம் இறைவனிடம் அன்பு காட்டாமை குறித்தும் உருகாமை குறித்தும் மாணிக்கவாசக சுவாமிகள் மனத்திற்குக் கூறுவது ஈங்கு நினைத்தல் தகும்.

**"ஆடு கின்றிலை கூத்துடை யான்கழற்**
**கன்பிலை என்புருகிப்**
**பாடு கின்றிலை பதைப்பதும் செய்கிலை**
**பணிகிலை பாதமலர்**
**சூடு கின்றிலை சூட்டுகின் றதுமிலை**
**துணைஇலி பிணநெஞ்சே**
**தேடு கின்றிலை தெருவுதோ றலரிலை**
**செய்வதொன் றறியேனே."**

என்பது மனம் நொந்து பாடிய பாடல்.

மக்களுக்குச் சிறக்கவேண்டிய காமம், பெண் காமம் அன்று. இறைவனிடம் கொள்ள வேண்டிய காமம் ஆகும். அந்தக் காமமே சிறக்கவேண்டியது. இது குறித்தே மாணிக்கவாசகரும், அப்பரும், சம்பந்தரும், சுந்தரரும், நம்மாழ்வாரும் தம்மை நாயகியாகவும், இறைவனை நாயகனாகவும் கொண்டு பற்பல அருட்பாடல்களைப் பாடினார்கள்.

சிற்றில் இழைத்தல் ஆவது சிறு பெண்கள் மணலாலும் சிறுசிறு கற்களாலும் வீடுகட்டி விளையாடும் ஓர் ஆட்டம் ஆகும். அப்படிச் சிற்றில் இழைத்துப்

பெண்கள் ஆடுவது போல் மீனாட்சி அம்மையாரும் ஆடினர் என்பதைக் குமரகுருபரர் அழகுறப் பாடி இருப்பதை ஈண்டு உணர்வோமாக.

**“வீக்கும் சிறுபைந் துகில்தோகை**
**விரியும் கலாபம் மருங்கலைப்ப**
**விளையாட் டயரும் மணல்சிற்றில்**
**வீட்டுக் குடிபுக் கோட்டிஇருள்**
**சீக்கும் சுடர்தூங் கழல்மணியின்**
**செந்தீ மடுத்த சூட்டடுப்பில்**
**செழுந்தாள் பவளத்துவர் அடுக்கித்**
**தெளிக்கும் நறும்தண் தேறல்உலை**
**வாக்கும் குடக்கூன் குழிசியில்அம்**
**மதுவார்த் தரித்த நித்திலத்தின்**
**வல்சி புகட்டி வடித்தெடுத்து**
**வயல்மா மகளிர் குழாம்சிறுசோ**
**றாக்கும் பெருந்தண் பணைமதுரைக்**
**கரசே தாலோ தாலேலோ**
**அருள்சூல் கொண்ட அங்கயற்கண்**
**அமுதே தாலே தாலேலோ.**

என்னும் பாடலைக் காண்க. இந்தக் குறிப்பில் தான் சிற்றில் வகுத்து உழலும் இளங்கனி” என்றனர்.

“காமம் சிறவாமல்” என்பதனை மனத்திற்கு ஏற்றாமல் இளங் கன்னிக்கு ஏற்றியும் பொருள் காணலாம். காமம் கனிந்தால் சிற்றில் இழைக்க எண்ணம் செல்லாது. அதனை இழைத்துவிட்ட பிறகு இளைய ஆண்பிள்ளைகள் கலைக்காதபடி காக்க மனமும் உழலாது. காமம் சிறந்து இருந்தால் மணம் முடித்துப் பேர் இல் இழைத்து மனம் உழலாது இனிது வாழ உள்ளம் இடங் கொடுக்கும். ஈண்டு நம் ஐயா கூறவந்த கருத்து, “அடியேன் திருவருளைப் பெறுதற்குரிய பக்குவம் உற்றிலேன். அதனால்தான் உலகமாகிய சிற்றின்பத்தில் உழல்கின்றேன். எனவே, அங்ஙனம் உழலாமல்படி காத்துப் பேரின்ப நிலையில் என்னை வைப்பாயாக” என்பதாம்.

**மாமத்தி னால்சுழல் வெண்தயிர் போன்று மடந்தையர்தம்**
**காமத் தினால்சுழல் என்தன்நெஞ் சோஉன்தன் காலைஅன்பாம்**
**தாமத்தி னால்தளை இட்டநெஞ் சோஇத் தகைஇரண்டில்**
**நாமத்தி னால்பித்தன் என்போய் நினக்கெது நல்லநெஞ்சே.**

(பொ-ரை.) “பெயர் அளவில் பித்தன் என்று கூறப்படுகின்ற இறையவனே! பெரிய மத்தினால் கடையப்படுகின்ற போது சுழல்கின்ற வெண்மையான தயிர்போல, பெண்களின் காமத்தினால் சுழல்கின்ற என்னுடைய மனமா? அல்லது மெய் அன்பர்கள் உன் திருவடிகளை அன்பாகிய கயிற்றினால் கட்டிய மனமா? இவ்வாறு

இரண்டுபட்ட குணங்கொண்ட மனங்களுள் எந்த மனம் உன் கருத்துக்கு உகந்த நல்லமனம்? கூறுக." (எ-து.)

(அ-சொ.) மா - பெரிய. தாமம் - கயிறு. தளையிட்ட-கட்டப்பட்ட. இத்தகை-இத்தன்மையான. நாமம் - பெயர்.

(இ-கு.) மா - உரிச்சொல். நெஞ்சொ என்பதன் ஓ வினா. நல்ல, குறிப்புப் பெயர் எச்சம்.

(வி-ரை.) பெண்களின் காமத்தால் மனம் அலைவதற்கு மத்தினால் கடையப்பட்ட தயிர் உவமை. இந்த உவமையினை நம் ஐயா மகாதேவ மாலையிலும் கூறியுள்ளனர்.

நாமம் என்பதற்கு, பெயர் என்பது பொருள். இந்தப் பொருளில்தான் கம்பர்தம் நூலில் இச் சொல்லை ஆண்டுள்ளார். அவ்வாட்சி அமைந்த பாடல்,

**"என்றுநான் முகன்முதல் யாரும் யாவையும்**
**நின்றபேர் இருளினை நீக்கி நீள்நெறி**
**சென்றுமீ ளாக்குறி சேரச் சேர்த்திடும்**
**தன்திரு நாமத்தைத் தானும் சாற்றியே"**

என்பது. இப் பாட்டின் கருத்து, இராமன் தன் திருமணத்திற்கு முன்பு குளித்துப் பின் தன் திருப்பெயராகிய "ஓன் நாராயணாய நம:" என்பதை ஓதினான் என்பது. இராமன் திருமாலின் அவதாரம் ஆதலின், திருமாலுக்குரிய நாமமாம் (பெயராம்) நாராயணன் என்பது இராமனுக்கும் உரியதாயிற்று. அதனால்தான் தன் திருநாமம் எனப்பட்டது. இந்த உண்மை இவ்வாறு இருக்கவும், வைணவ அன்பர்கள் நாமம் என்பதற்குத் திருமண் எனப் பொருள்கொண்டு, செய்யுளில் உள்ள "சாற்றியே" என்பதனையும் "சாத்தியே" என்று மாற்றியும் இராமன், நாமத்தை அணிந்துகொண்டான் என்பர். நாமத்தைத் திருமால் அணிந்திருந்தார் எனில் நம்மாழ்வார் தம் திருவாய்மொழியில் குறிப்பிட்டிருப்பர். அவர் திருமால் திருநீறே இட்டிருந்தார் என்பதை ஒளிமறைவின்றிக் குறிப்பிட்டுள்ளனர்.

"**கரிய மேனிமிசை வெளிய நீறுசிறி தேஇடும்**
**பெரிய கோலத் தடங்கண்ணன்"**

என்னும் பாடலைக் காண்க.

தமக்கும் திருநீறு இடவேண்டியதையும் நம்மாழ்வார் குறிப்பிட்டுள்ளனர். இதனைக் கீழ்வரும் அடிகளில் காண்க.

**கவளக் கடாக்களி றட்டபி ரான்திரு நாமத்தால்**
**தவளப் பொடிகொண்டு நீர்இட் டிடுமின் தணியுமே."**

திருமால் அடியார்கள் யாவரும் திருநீறு அணிந்திருந்தனர் என்பதையும் நம்மாழ்வார், "நீறு செவ்வே இடக்காணின் நெடுமால் அடியார் என்றோடும்" என்று

பாடி இருப்பது கொண்டு உணரலாம். நாமம் என்பதற்கு உண்மைப் பொருளைக் காணவேண்டும் என்பதற்காக இத்துணையும் இங்குக் குறிப்பிடவேண்டியதாயிற்று.

இறைவன் திருவடியை நெஞ்சில் நினைப்பதற்குரிய ஒரே வழி அன்புதான்.இதனை மணிமொழியார்,

**"ஆர்மின் ஆர்மின் நாள்மலர்ப் பிணையலின்**
**தாள்தளை இடுமின்"**

என்று கூறுதல் காண்க.

சகாதேவனும் கண்ணனை அன்பினால் பிணித்ததைப் பாரதம்,

**"மாயவனும் அன்பன் மனம்அறிவான் கட்டுகஎன்**
**றாய வடிவுபதி னாயிரம் கொண்டான்**
**தூயவனும் மூலமாம் தோற்றம்உணர்ந் தெவ்வுலகும்**
**தாய அடியிணைகள் தன்கருத்தி னால்பிணித்தான்"**

**"நீதேவன் என்றறிந்து நெஞ்சால் தனைக்கட்டும்**
**சாதேவன் கண்களிக்கத் தானேஆய் முன்நின்றான்**
**பூதே வரும்கனகப் பூங்கா நிழல்வைகும்**
**மாதே வரும்தேடிக் காணா மலர்அடியோன்"**

என்று கூறுதல் காண்க. அன்பினால் அன்றி மலராலும் திருவடிகளைப் பிணித்துத் திருவடிகளைப் பெறலாம். தாமம் என்பதற்குப் பூமாலை என்பதும் பொருள். ஆனால் அன்பினால் பிணிப்பதே சாலச் சிறந்தது.

இந்தக் கருத்தை நம் வள்ளலார் மாணிக்க வாசகர் திருவாக்கை அடிஒற்றிப் பாடியுள்ளார் என்பதைத் திருவாசகப் பாடல்களால் உணர்ந்து கொள்ளலாம். அப்பாடல்கள்,

**"வேனில்வேள் கணைகிழித்திட மதிசுடும் அதுதனை நினையாதே**
**மானி லாவிய நோக்கியர் படிறிடை மத்திடு தயிர்ஆகித்**
**தேனி லாவிய திருவருள் புரிந்தஎன் சிவனகர் புகப்போகேன்**
**ஊனி லாவிய ஒம்புதல் பொருட்டினும் உண்டுடுத் திருந்தேனே"**

**"மாழைமைப் பரவிய கண்ணியர் வன்மத் திடஉடைந்து**
**தாழியைப் பரவு தயிர்போல் தளர்ந்தேன் தடமலர்த்தாள்**
**வாழிஎப் போதுவந் தெந்நாள் வணங்குவன் வல்வினையேன்**
**ஆழிஅப் பாஉடை யாய்அடி யேன்உன் அடைக்கலமே"**

என்பன. (190)

**ஏற்றிவிட் டார்கொடி கொண்டோய் விளக்கினை ஏற்றபெரும்**
**காற்றிலிட் டாலும் இடலாம்நெல் மாவைக் கலித்திடும்நீர்**

**ஆற்றலிட் டாலும் பெறலாம்முள் காலை அடும்குடும்பச்**
**சேற்றலிட் டால்பின் பரிதாம் எவர்க்கும் திருப்புவதே.**

(பொ-ரை.) "இரடபத்தின் உருவமைந்த கொடியைக் கொண்ட இறைவனே! பெரிய காற்று வீசுகிறபோது விளக்கை ஏற்ற முயன்றநிலையில், அவ்விளக்கு அடிக்கடி அணைந்தாலும், மீண்டும் ஏற்றி ஒளிவிடச் செய்யலாம். மிக்க நீர் நிறைந்த ஆற்றில் நெல் அரிசியின் மாவை இட்டாலும், மீண்டும் அதனை ஒன்று சேரத்திரட்டி எடுக்கலாம். முள்ளைப்போல், துன்புறுத்தும் குடும்பமாகிய சேற்றில் காலை விட்டால் அதனின்று விலகி வருதல் மிகவும் கடினம் ஆகும்" (எ-து.)

(அ-சொ.) ஏறு-இரடபம். ஆர்-அமைந்த. கலித்திடும் - மிகுந்திடும். அடும் - துன்புறுத்தும்.

(இ-கு.) ஏறு+இல், ஒற்று இரட்டித்துள்ளது, பின்பு+அரிது.

(வி-ரை.) இறைவனுக்கு வாகனமும், கொடியும் இரடபம் ஆகும். இதனைச் சங்க நூலாம் புறநானூறு அழகுபட,

**"ஊர்தி வால்வெள் ளேறே சிறந்த**
**சீர்கெழு கொடியும் அவ்வே றென்ப"**

என்று அறிவித்தல் காண்க. இவ்வாறு இறைவன் எருதினைக் கொடியாகவும், வாகனமாகவும் கொண்டு காட்சி அளிப்பதன் கருத்து, அவன் பசு (ஆன்மாக்கள்) பதி என்பதை அறிவித்தற்காகவே ஆம். சேற்றில் சிக்கியவர்கள் அதனினின்று மீளுதல் அரிது. அதுபோலக் குடும்பச் சேற்றில் இருந்து மீளுதல் கடினம். எனவேதான், குடும்பத்துக்குச் சேறு உவமையாகக் கூறப்பட்டுள்ளது. குடும்பத்திற்கு அருணகிரியார் சமுத்திரத்தை உவமை கூறி அதனின்றும் மீண்டு இன்பம் பெறவேண்டி முருகனை நோக்கி,

**"நிலையான சமுத்திர மான சமுசார துறைகளில் மூழ்கி**
**நிசமான தெனப்பல பேசி அதனூடே**
**நெடுநாளும் உழைப்புள தாகிப் பெரியோர்கள் இடக்கரவாகி**
**நினைவால்நின் அடித்தொழில் பேணித் துதியாமல்**
**தலையான உடல்பிணி ஊறிப் பவநோயின் அலைப்பல ஏகிச்**
**சலமான பயித்தியம் ஆகித் தடுமாறித்**
**தவியாமல் பிறப்பையும் நாடி அதுவேரை அறுத்துனை ஓதித்**
**தலமீது பிழைத்திட வேநின் அருள்தாராய்"**

எனப் பாடி முறை இடுதல் காண்க.

திருமங்கை ஆழ்வாரும் குடும்பச் சேற்றில் அழுந்தி வருந்தித் திருமால் திருவருளைப் பெற வேண்டி,

**"தாயே தந்தைஎன்றும் தாரமேகிளை மக்கள்என்றும்**
**நோயே பட்டொழிந்தேன் நுனைக்காண்பதோர் ஆசையினால்**
**வேயேய் பூம்பொழிசூழ் விரையார்திருவேங்கடவா**

**நாயேன் வந்தடைந்தேன் நால்கிஆள் என்னைக் கொண்டருளே”**

என்று பாடியிருப்பதையும் காண்க. (191)

**தேரோங்கு காழிக்கண் மெய்ஞ்ஞானம் பால்உண்ட செம்மணியைச்**
**சீரோங்கு முத்துச் சிவிகையின் மேல்வைத்த தேவஉன்தன்**
**பேரோங்கும் ஐந்தெழுத் தன்றோ படைப்பைப் பிரமனுக்கும்**
**ஏரோங்கு காப்பைத் திருநெடு மாலுக்கும் ஈந்ததுவே.**

(பொ-ரை.) “தேர்விழாச் சிறப்புற நடக்கும் சீர்காழியில் மெய்ஞ்ஞானப் பாலைப் பருகிய நல்மணி போன்ற திருஞான சம்பந்தப் பெருமானைச் சிறப்பு மிக்க முத்துப்பல்லக்கின் மீது ஏறவைத்து இன்புற்ற தேவதேவனே! உன்னுடைய பெருமை விளங்கும் சிவாயநம என்னும் ஐந்தெழுத்து மகா மந்திரம் அன்றோ பிரம்மதேவனுக்குப் படைக்கும் ஆற்றலையும், அழகு மிகும் திருமாலுக்குக் காக்கும் வன்மையையும் தந்தது?” (எ-து.)

(அ-சொ.) காழி - சீர்காழித்தலம். செம்மணி - நன்மணியாம் திருஞானசம்பந்தர். சீர் - சிறப்பு. சிவிகை-பல்லக்கு. பேர் - பெருமை. ஐந்தெழுத்து - ஐந்தெழுத்தால் ஆகிய சிவாயநம என்னும் மகா மந்திரம். ஏர் - அழகு. காப்பு - காத்தல் தொழில். திரு- அழகிய சிறந்த. நெடுமால் - மகாவிஷ்ணு.

(இ-கு.) காழிக்கண், கண் ஏழன் உருபு. தேவ, அண்மை விளி. ஐந்தெழுத்து, தொகைக்குறிப்பு. படைப்பு, காப்பு இரண்டும் தொழிற்பெயர்கள்.

(வி-ரை.) சீர்காழியில் திருமுலைப்பால் திருவிழா மிகச் சிறப்பாக நடப்பதுபோலத் தேர் விழாவும் சிறப்பாக நடத்தலின் தேர் ஓங்கும் காழி என்றனர். காழி என்பது சீர்காழிக்குரிய பன்னிரண்டு திருப்பெயர்களுள் ஒன்று. இத்தலத்தில் காளி அம்மையார் பூசித்த காரணத்தாலும் காளிங்கன் என்னும் பாம்பு வழிபட்டதாலும் இத்தலத்திற்கு இப்பெயர் அமைந்துளது. ஆகவே, இதனை ஸ்ரீகாளி என்றும் கூறுவர். இத் தலம் சீர்காழி இரயில் நிலையத்திலிருந்து தென் கிழக்கே முக்கால் கல் தொலைவில் உள்ளது. இது திருஞானசம்பந்தர் பிறந்த தலம்.

இத்தலத்தில், குருலிங்க சங்கம வடிவில் சிவபெருமான் விளங்குகின்றார். பிரமீசர் இலிங்க வடிவிலும், தோணியப்பர் குருவடிவிலும், சட்டை நாதர் சங்கம வடிவிலும் காட்சி அளிக்கின்றனர். சட்டை நாதருக்கு ஆபதுத்தாரணர் என்னும் திருப்பெயரும் உண்டு. இவருக்குப் புனுகுசாட்டம் சாத்தும் காட்சி மிகவும் சிறப்புடையது. நரசிம்மமூர்த்தியினை அடக்கி அதன் சர்மத்தையும், வாமனாவதாரத்தை அடக்கி அதன் முதுகெலும்பைச் சட்டையாகவும் தண்டமாகவும் தரித்துள்ளனர். பிரமீசர் தேவியார் திருநிலை நாயகி என்றும், தோணியப்பர் தேவியார் பெரிய நாயகி என்றும் கூறப்பெறுவர். பிரமீசன் கீழும், தோணியப்பரும், சட்ட நாதரும் மேலே இருந்துகொண்டும் காட்சி அளிக்கின்றனர். மேலே

செல்லப்படிகள் உண்டு. சட்டை நாதரைக் கீழ் இருந்தும் தரிசிக்கலாம். ஆனால் சரிவரக் கண்டு களிக்க இயலாது. இத்தலத்துத் தீர்த்தம் பிரம்ம தீர்த்தம். மற்றும் பல தீர்த்தங்களும் உண்டு. இந்தத் தீர்த்தக் கரையில்தான் இறைவி தந்த ஞானப்பாலைத் திருஞானசம்பந்தர் உண்டனர். இதுவே திருநாவுக்கரசரும், திருஞானசம்பந்தரும் முதல் முதல் சந்தித்து இருவரும் நட்புக்கொண்ட இடம். சுந்தரர், திருஞானசம்பந்தர் பிறந்தருளிய பதி என்ற காரணத்தால் மிதிக்க, அஞ்சி, தலத்தை வலம் வந்தபோது சிவபெருமான் கயிலைக் காட்சியைக் காட்டி அருளிய தலம். திருநீலகண்ட யாழ்ப்பாணர் இங்கு வந்து திருஞானசம்பந்தரைத் தரிசித்து அவர் பதிகங்களை யாழில் அமைத்து, வாசிக்கத் தொடங்கிய தலம். கணநாத நாயனார் சமயப் பயிற்சிக்குரிய கல்லூரியை அமைத்துச் சிவநேசர்களுக்குப் பலவித பயிற்சி அளித்த தலம். திருஞானசம்பந்தர் பிறந்தருளிய வீடு இன்றும் இங்கு இரட்டைத் தெருவில் இருப்பதைக் கண்டு களிக்கலாம். இத் தலத்திற்கு உரிய பதிகங்கள் எழுபத்தொன்று. மாணிக்கவாசகர் பாடிய பிடித்தபத்து இத் தலத்தைச் சார்ந்ததே. திருஞானசம்பந்தர் ஞானப்பால் உண்ட வரலாற்றை நூற்றுமுப்பத்திரண்டாம் பாட்டின் விசேட உரையில் விளக்குமுறக் காண்க. இவ்வளவு சிறப்புகளையும் நம் ஐயா "தேர் ஓங்கு காழிக்கண் மெய்ஞ்ஞானப்பால் உண்ட செம்மணி" என்று குறித்துள்ளனர்.

திருநெல்வாயில் அரத்துறையைக் கண்டு வணங்கச் சம்பந்தர் காலால் நடந்து வந்தனர். அதற்குள் மாலை வந்துற்றதனால் அருகில் உள்ள மாறன்பாடியில் அன்று இரவு தங்கினார். திருவரத்துறை இறைவர் அத்தலத்துப் பிராமணர்களின் கனவில் முத்துப் பல்லக்கையும் முத்துப் பந்தலையும், முத்துக் குடையையும் எடுத்துச் சென்று திருஞானசம்பந்தருக்கு அளிக்குமாறு கட்டளை இட்டார். இவை கோவிலில் முன்பே இருந்தவை அல்ல. இறைவனால் சீர்காழிச் செம்மணிக்கென அப்பொழுது தோற்றுவிக்கப் பட்டவை. திருஞான சம்பந்தர் கனவிலும் இறைவர் முத்துப் பல்லக்கு முதலிய முத்துப் பல்லக்கு முதலியவற்றை ஏற்றுக்கொள்ளுமாறு பணிக்க அவரும் ஏற்றார். அது போது சம்பந்தர் பாடிய பதிகத்தின் தொடக்கம்,

**"எந்தை ஈசன்எம் பெருமான் ஏறமர் கடவுள்என் றேத்திச்**
**சிந்தை செய்பவர்க் கல்லால் சென்று கைகூடுவ தன்றால்**
**கந்த மாமலர் உந்திக் கடும்புனல் நிவாமல்கு கரைமேல்**
**அந்தண் சோலை நெல்வாயில் அரத்துறைஎம் அடிகள்தம் அருளே"**

என்பது. பிறகு தோணிபுரத் தோன்றலார் பல்லக்கை வலம் வந்து ஐந்தெழுத்தை ஓதி அதில் ஏறினார். இந்த வரலாற்றுச் சிறப்பையே நம் ஐயா, "செம்மணியைச் சீரோங்கு முத்துத் சிவிகையின் மேல்வைத்த தேவ" என்று வியந்து போற்றியுள்ளனர்.

திருநெல்வாயில் அரத்துறைத் தலம் பெண்ணாகடம் இரயில் அடியிலிருந்து தென்மேற்கே நாலு கல் தொலைவில் உள்ளது. இறைவன் திருப்பெயர் அரத்துறை நாதர்; இறைவியின் திருப்பெயர் ஆனந்தநாயகி. இதற்குப் பதிகம் ஒன்றுதான்.

இத்தலத்து இறைவர் திருஞானசம்பந்தருக்கு முத்துப்பல்லக்கு ஈந்ததை அருணகிரியார்,

**சிறுவ நிற்கருள் கவிகை நித்திலச்**

**சிவிகை யைக்கொடுத் தருள்ஈசன்**
**செகத லத்தினில் புகழ்ப டைத்தமெய்த்**
**திருவரத்துறைப் பெருமாளே**

என்று பாடி அறிவித்திருப்பதையும் காண்க.

ஐந்தெழுத்தின் மாண்பை அளவிட்டுக் கூற இயலாது. அதுவே எல்லா மந்திரங்கட்கும் தலைமை ஆயது. ஆக்கவும் அழிக்கவும் வல்லதும் அதுவே. ஆகவேதான், பிரமனும் திருமாலும் ஐந்தெழுத்தை ஓதியே படைப்புத் தொழிலையும், காப்புத் தொழிலையும் பெற்றுள்ளனர். யாவர்க்கும் ஐந்தெழுத்தே துணை என்பதைத் திருஞானசம்பந்தர்,

**"மந்திர நான்மறை ஆகி வானவர்**
**சிந்தையுள் நின்றவர் தம்மை ஆள்வன**
**செந்தழல் ஓம்பிய செம்மை வேதியர்க்**
**கந்தியுள் மந்திரம் அஞ்செ ழுத்துமே"**

என்றும், சிவவாக்கியர் பஞ்சாட்சரத்தை ஓதுவதால் ஏற்படும் நன்மையை,

**"சிவாயம் அஞ்செ ழுத்திலே தெளிந்து தேவர் ஆகலாம்**
**சிவாயம் அஞ்செ ழுத்திலே தெளிந்து வானம் ஆளலாம்**
**சிவாயம் அஞ்செ ழுத்திலே தெளிந்து கொண்ட வான்பொருள்**
**சிவாயம் அஞ்செ ழுத்திலே தெளிந்து கொள்ளும் உண்மையே"**

என்றும் கூறுதல் காண்க. (192)

**வேதனை யாமது சூதனை யாஎன்று வேதனையால்**
**போதனை யாநின் றுனைக்கூவும் ஏழையைப் போதனைகேள்**
**வாதனை யாதிங்கு வாதனை யாஎன்றுன் வாய்மலரச்**
**சோதனை ஆயினும் சோதனை யாசித் சுகப்பொருளே.**

(பொ-ரை.) "ஞானமும் இன்பமும் நிறைந்த பெரிய பொருளே! நான் பிரமனை அடைந்து என் துயரைக் கூறுவதால் அன்றித் திருமாலை அடைந்து அவனிடம் என் துன்பத்தைச் சொல்லிக்கொள்வதா? என்று வேதனைப்பட்டுப் பின் என் அறிவின் தூண்டுதலினால் உன்னையே கூவி அழைத்து முறையிடும் இந்த அறிவு இல்லாத என்னைப் பார்த்து 'மகனே! உன் துன்பம் யாது? இங்குவா' என்று திருவாய் மலர்ந்து அறிவு புகட்டிக் கேட்பாயாக. நான் உண்மை அன்பினன் என்பதையும் சோதித்துப் பார். அப்படிப் பரிட்சித்துப் பார்க்காமல் இருப்பதும் உன் சோதனையா? இறைவனே!" (எ-து.)

(அ-சொ.) சித் - ஞானம். வேதன் - வேதம் ஓதும் பிரமன். மதுசூதன் - மது என்னும் அரக்கனைக் கொன்ற திருமால். வேதனை-துயர். போதனை-உபதேசம். வாதனை-துன்பம். தனையா-மகனே. வாய்மலர- வாய் திறந்து கேட்க.

(இ-கு.) சித் சுகம், உம்மைத் தொகை. நின்று+உனை. யாது+இங்கு. வா+தனையா.

(வி-ரை.) "நான் பிரம்மாதி விஷ்ணுக்களை அடைந்து என் துயரைப் போக்கக் கேட்காமல், உன்னையே சரண்புகுந்தன்றோ கேட்கின்றேன். இஃது உண்மையா அன்றா என்பதைக் கேட்டறிந்து திருவருள் புரிக" என்று நம் ஐயா இறைவனிடம் முறையிடுகின்றனர். உலகில் உள்ள தந்தைமார்கள் உடலுக்குத் தந்தைமார்களாகத் இருக்கச் சிவபெருமான் ஆன்மாவிற்குத் தந்தையாக இருத்தலின், வள்ளலாரும் ஆன்மவர்க்கத்தில் ஒருவர் ஆதலின் தம்மை இறைவர், "தனையா வா" என்று அழைத்துக் கேட்கத் கூடாதா என்கின்றனர்.

**இன்பற்ற இச்சிறு வாழ்க்கையி லேவெயில் ஏறவெம்பும்**
**என்பற்ற புன்புழுப் போல்தளர் ஏழை எனினும்இவன்**
**அன்பற்ற பாவிஎன் றந்தோ எனைவிடில் ஐயவையத்**
**தென்பற்ற தாகமற் றில்லைகண் டாய்எனை ஏன்றுகொள்ளே.**

(பொ-ரை.) "ஐயனே! இன்பம் சிறிதும் இல்லாத இந்தச் சிறிய உலக வாழ்க்கையில் வெயில் ஏற ஏற வாடும் எலும்பு இல்லாத சிறு புழுவைப்போலத் தளர்கின்ற அறிவற்றவன் நான் என்றாலும், இவன் உள்ளத்தில் அன்பு இல்லாத மகாபாவி என்று எண்ணி, ஐயோ, என்னைக் கைவிட்டால், இந்த உலகில் உன் பற்றைத் தவிர வேறு ஆதரவு என்ன இருக்கிறது? ஆகவே, என்மாட்டு இரக்கம் காட்டி ஏற்றுக்கொள்வாயாக" (எ-து.)

(அ-சொ.) ஐய-தலைலனே, வெம்பும் - வாடும். புன் - சிரிய. வையம் - உலகம். ஏன்றுகொள்-ஏற்றுக்கொள்.

(இ-கு.) இன்பு+அற்ற, என்பு+அற்ற, அன்பு+அற்ற வையத்து+என்+பற்று, அது+ஆக, எனப் பிரித்துக் கொள்ளவும். கண்டாய், முன்னிலை அசைச்சொல். ஏற்று என்பது ஏன்று என் றாயது, மெலித்தல் விகாரம்.

(வி-ரை.) உலக வாழ்க்கை துன்பத்திற்கு இடமானது. இதனைச் சங்க நூலாம் புறநானூறு, "இன்னாது அம்ம இவ்வுலகம்" என்று கூறுகிறது. புழுவிற்கு எலும்பு இல்லை என்பதை நம் முன்னோர் கண்டுளர். ஆகவே அது வெயிலில் அகப்பட்டுக்கொண்டால் வாடி வதங்கிப் போகும். இந்த உண்மையினைத் திருவள்ளுவர் "என்பில் அதனை வெயில் போல் காயும்" என்று கூறியுள்ளனர். என்பில் அது என்றது புழுவை என்க. இதனை உன்னியே நம் ஐயா, "வெயில் ஏற வெதும்பும் என்பு அற்ற புன் புழு" என்றனர். (194)

**களம்கொண்ட ஓர்மணிக் காட்சியும் முச்சுடர்க் கண்அருளும்**
**வளம்கொண்ட தெய்வத் திருமுக மாட்சியும் வாய்ந்தபரி**
**மளம்கொண்ட கொன்றைச் சடையும்பொன் சேவடி மாண்பும்ஒன்ற**
**உளம்கொண்ட புண்ணியர் அன்றோஎன் தன்னை உடையவரே.**

(பொ-ரை.) "என்னை அடிமையாகக் கொள்ளக்கூடியவர்கள், நீ கழுத்தில்கொண்ட ஒப்பற்ற நீலமணிக் காட்சியையும், சந்திர சூரிய அக்கினி என்னும் மூன்று ஒளியுடைப் பொருள்களைக் கண்களாகக் கொண்ட அக் கண்களுலிருந்து பொழியும் அருளையும், வளமையைத் தன்னிடத்தே கொண்ட தெய்வீகத் திருமுகத்தின் மாட்சியையும், வாசனை பொருந்தப் பெற்ற கொன்றை

மலரை அணிந்த சடைமுடியையும் அழகிய செம்மையான திருவடிகளையும் தம் உளத்தில் கொண்ட புண்ணியர்கள் அல்லரோ" (எ-து.)

(அ-சொ.) களம்-கழுத்து. மணிக்காட்சி - நீலமணிபோன்ற விடத்தின் காட்சி. முச்சுடர்-சூரிய. சந்திர, தீ ஆகிய மூன்று ஒளியுடைய பொருள்கள். திரு - அழகிய. மாட்சி - மாண்பு. பரிமளம் - வாசனை. பொன் - அழகிய. சேவடி-செம்மையான திருவடி.

(இ-கு.) செம்மை+அடி.

(வி-ரை.) நான் இறைவனுடைய திருவடிக் காட்சியை உளத்தில் கொண்டவர்கட்குத் தான் அடிமை ஆவனே அன்றி, வேறு எவர்க்கும் உடைமைப் பொருளாகவோ, அடிமைப் பொருளாகவோ ஆகமாட்டேன் என்பது நம் ஐயா இப்பாட்டின் வழி கூறவந்த கருத்து. இறைவன் திருமுகம் "தெய்வத் திருமுக மாட்சி" என்று கூறுதற்குக் காரணம், அவனைக்கண்டு வணங்கச் செல்லும்போது அவன் குனித்த புருவத்துடனும், கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்புடனும் விளங்கி நம்மை "என்று வந்தாய்" என்று கேட்பது போல இருத்தலினால் என்க. இதனை அப்பர்,

**"குனித்த புருவமும் கொவ்வைச்செவ் வாயில்**
**குமிண்சிரிப்பும்**
**பனித்த சடையும் பவளம்போல் மேனியில்**
**பால்வெண்ணீறும்**
**இனித்த முடைய எடுத்தபொன் பாதமும்**
**காணப்பெற்றால்**
**மனித்தப் பிறவியும் வேண்டு வதேஇந்த**
**மானிலத்தே"**

என்றும்,

**"ஒன்றி இருந்து நினைமின்கள் உன்தமக் கூனம்இல்லை**
**கன்றிய காலனைக் காலால் கடிந்தான் அடியவற்காச்**
**சென்று தொழுமின்கள் தில்லையுள் சிற்றம் பலத்துநட்டம்**
**என்றுவந் தாய்என்னும் எம்பெரு மான்தன் திருக்குறிப்பே"**

என்றும் அறிவித்திருப்பது காண்க.

இறைவன் திருவுருவத்தைத் தம் உளத்தே கொள்வதற்குப் புண்ணியம் தேவை ஆதலின், அத்தகையவர்கள் இங்குப் புண்ணியர் எனப்பட்டனர். (195)

**காவிக்கு நேர்மணி கண்டாவண் டார்குழல் கற்பருளும்**
**தேவிக்கு வாமம் கொடுதோய்நின் மாமலர்ச் சேவடிப்பால்**
**சேவிக்கும் சேவகம் செய்வோரை ஆயினும் சேவிக்கும்**
**பாவிக்கு வாய்க்கில்என் ஆவிக்கும் நீண்ட பயன்அதுவே.**

(பொ-ரை.) "கருங்குவளை மலர்க்கு ஒப்பான கழுத்தையுடையவனே! தேன் வண்டுகள் மொய்க்கும் கூந்தலையுடைய கற்பும், அருளும் கொண்ட உமாதேவிக்கு இடப்பகுதியைத் தந்த அருளாளா! உன்னுடைய சிறந்த மலர் போன்ற செம்மையான திருவடிகளிடத்தில் வணங்கும் தொண்டைச் செய்பவர்களை ஆயினும் வணங்கும்பேறு இந்தப் பாவிக்கு அமையுமானால், அதுவே என் ஆன்மாவிற்குப் பெரும் பயன் ஆகும்" (எ-து.)

(அ-சொ.) காவி - கருங்குவளை மலர். நேர்-ஒப்பான. ஆர்-பொருந்திய. குழல் - கூந்தல். மணிகண்டன் - நீலமணிபோலும் நிறம் பொருந்திய விடம் தங்கிய கழுத்தையுடைய நீலகண்டன். வாமம் - இடப்பாகம். மா-சிறந்த. சேவகம் - தொண்டு.

(இ-கு.) நேர், உவம உருபு. கற்பருள், உம்மைத்தொகை. மா, உரிச்சொல்.

(வி-ரை.) இறைவி ஒருத்தியே கற்புக்குரியவள். இது குறித்தே தடாதகைப் பிராட்டியார் எனப்படுகின்றாள். எவராலும் கெடுக்க இயலாத கற்பையுடைய இறைவி என்பது இதன் பொருள். இறைவியின் கற்பு மேம்பாட்டைச் சிவப்பிரகாச சுவாமிகள்,

**"சோதிப் பதிஅன்றி வேறொரு தெய்வம் தொழுதற்கில்லை**
**ஓதில் பிறர்என அச்சம் உறாமல் உயிர்கள்எல்லாம்**
**தீதில் புதல்வர்கள் ஆயினர் ஆதலின்நீ கொள்கற்புப்**
**பேதிப்ப தன்றுகண் டாய்குன்றை வாழும் பெரியம்மையே"**

என்று கூறுகிறார். அவளது அருளின் மேன்மையினையும் அவரே,

**"நனைமாட்சி மென்கொன்றைத் தாரோன்**
**தரும்இரு நாழிநெல்லால்**
**வினைமாட்சி கொண்டுயிர் எல்லாம்**
**அளித்தருள் மேன்மையினால்**
**மனைமாட்சி எய்தும் உனக்கே**
**பெருங்கற்பு மாட்சிஅன்றிப்**
**பினைமாட்சி ஆர்க்குண் டுலகீன்ற**
**குன்றைப் பெரியம்மையே"**

என்று பாடியுள்ளனர், இவற்றை எல்லாம் உளத்தில் கொண்டே நம் ஐயா "கற்பருளும் தேவி" என்றனர்.

**"அன்பர்பணி செய்யஎனை ஆளாக்கி விட்டுவிட்டால்**
**இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே"**

என்று தாயுமானார் கூறுவதால் அடியார்களைச் சேவிப்பதனால் ஏற்படும் நன்மையினை உணரலாம். சிவனடியார்களைக் காணும் வாய்ப்பும், வணங்கா நிலையும், தொண்டு செய்யா இயல்பும் இன்றெனில் இந்தப் பிறப்பால் பயனில்லை என்பதைத் திருவிளையாடல் புராணம்,

**"சிவனடியார்க் கன்பிலாச் சிந்தையே**
**இரும்பேவல் செய்து நாளும்**
**அவனடியார் திறத்தொழுகா ஆக்கையே**
**மரம்செவிகண் ஆதி ஐந்தும்**
**பவனடியார் இடைச்செலுத்தாப் படிவமே**
**பாவைமறை பரவும் சைவ**
**தவநெறியல் லாநெறியே பவநெறியென்**
**றளியளாய்த் தளர்வாய் பின்னும்"**

என்று உணர்த்துதல் காண்க. இன்னோரன்ன காரணங்களால் தாம் நம் ஐயா "நின்மாமலர்க் சேவடிப்பால் சேவிக்கும் சேவகம் செய்வோரை ஆயினும் சேவிக்கப்பாவிக்கு வாய்க்கில் என் ஆவிக்கு நீண்ட பயன் இதுவே" என்றனர்.(196)

**கொங்கிட்ட கொன்றைச் சடையும்நின் ஓர்பசுங் கோமளப்பெண்**
**பங்கிட்ட வெண்திரு நீற்றொளி மேனியும் பார்த்திடில்பின்**
**இங்கிட்ட மாயையை எங்கிட்ட வாஎன் றிசைப்பினும்போய்ச்**
**சங்கிட்ட ஓசையில் பொங்கிட்ட வாய்கொடு தாண்டிடுமே.**

(பொ-ரை.) "மகரந்தப் பொடி நிறைந்த கொன்றைச் சடையையும், ஒப்பற்ற பசிய இளைய மாதாகிய உமை அம்மை பகிர்ந்துகொண்ட வேண்ணீற்றின் ஒளி நிறைந்த உனது திருமேனியையும் நான் பார்க்கும் பேற்றையும் பெற்றால், பிறகு இவ்வுலகில் மயக்கும் மாயையை நோக்கி, "என் அருகே வா" என்று அழைத்தால் அஃது அஞ்சி வாய்விட்டுச் சங்கு ஓசை இடுவது போலக் கத்திக்கொண்டு என்னை விட்டு நீங்கிடுமே". (எ-து.)

(அ-சொ.) கோங்கு - மகரந்தப் பொடி, தேன் - மணம். கோமளப் பெண்- இளைய உமாதேவி. ஓர் - ஒப்பற்ற.

(இ-கு.) ஓசையில், இல் எனும் ஐந்தன் உருபு ஒப்புப் பொருளில் வந்துளது. கொடு, தொகுத்தல் விகாரம்.

(வி-ரை.) இறைவி அகிலாண்ட கோடிகளை ஈன்றெடுத்தாலும், அவள் இளையளாகவே காட்சி அளித்தலின் அவளைக் கோமளப் பெண் என்றே வேதம் போற்றும், இதனைத் தாயுமானவர், "அகிலாண்ட கோடி ஈன்ற அன்னையே பின்னையும் கன்னிஎன மறைபேசும் ஆனந்த ரூப மயிலே" என்று கூறுதல் காண்க. ஆகவேதான் "பசுங்கோமளப் பெண்" எனப்பட்டாள். நீற்றிற்கு ஒளி உண்டு என்பதைச் சேக்கிழார் "அண்ணல் வெண்ணீற்றின் பேர் ஒளி போன்றது நீள் நிலா" என்று அறிவித்தலைக் காண்க. ஆகவேதான், "நீற்றொளிமேனி" எனப்பட்டது. இறைவனது திருவருள் காட்சியைப் பெற்றவர்கள் எதற்கும் அஞ்சார். இயமனையும்

கூடத் தம் அருகே வருக என்றும் அழைப்பர். இந்த உண்மையினை அருணகிரியார்,

**"தண்டா யுதமும் திரிசூல மும்விழத் தாக்கிஉன்னைத்**
**திண்டாட வெட்டி விழவிடு வேன்செந்தில் வேலனுக்குத்**
**தொண்டா கியஎன் அவிரோத ஞானச் சுடர்வடிவாள்**
**கண்டா யடாஅந்த காவந்து பார்சற்றென் கைக்கெட்டவே"**

என்றும்,

**"பட்டிக் கடாவில் வரும்அந்த காஉனைப் பார்அறிய**
**வெட்டிப் புறங்கண் டாலதுவி டேன்வெய்ய சூரனைப்போய்**
**முட்டிப் பொருதசெவ் வேல்பெரு மாள்திரு முன்புநின்றேன்**
**கட்டிப் புறப்பட டாசத்தி வாள்என்தன் கையதுவே"**

என்று வீராவேசத்துடன் பாடி இருக்கும் பாடல் கொண்டு தெளிக. தாயுமானாரும்,

**"மார்க்கண்டர்க் காக மறலிபட்ட பாட்டை உன்னிப்**
**பார்க்கின் அன்பர்க் கென்ன பயம்காண் பராபரமே"**

என்று கூறியதையும் அறிக. இன்னோரன்ன கருத்துகளை உளம் கொண்டே நம் வள்ளலார்,

**"இங்கிட்ட மாயையை எங்கிட்ட வாஎன்றிசைப்பினும்போய்ச்**
**சங்கிட்ட ஓசையில் பொங்கிட்ட வாய்கொடு தாண்டிடுமே"**

என்றனர். (197)

**வெம்பெரு மானுக்குக் கைகொடுத் தாண்ட மிகும்கருணை**
**எம்பெரு மானுக்கு விண்ணப்பம் தேவர்இனம் பிடியார்**
**தம்பெரு மானுக்கும் சார்மலை மானுக்கும் சாற்றும்ஐங்கைச்**
**செம்பெரு மானுக்கும் எந்தாய்க்கும் நான்பணி செய்யச்செய்யே.**

(பொ-ரை.) "கொடிய பெரிய மானுக்கும் கூட உன் திருக்கரத்தைத் தந்தாண்ட மிக்க கருணை கொண்ட எம்பெருமானே! உன் திருச்சமூகத்தில் ஒரு விண்ணப்பம்; அதாவது தேவர் உலகத்தில் ஐராவதம் என்னும் யானையால் வளர்க்கப்பட்ட தெய்வயானை அம்மையாரின் கணவனாம் முருகப்பெருமானுக்கும், அவனது தாயாகிய மலையரசனுக்கு மகளாகப் பிறந்த உமாதேவிக்கும், ஐந்து கைகளைக்கொண்ட செந்நிறமுடைய விநாயகப் பெருமானுக்கும், எம் தந்தையாகிய உனக்கும் அடியேன் தொண்டு செய்யும் வாய்ப்பை அளிக்க வேண்டும் என்பதாம்". (எ-து.)

(அ-சொ.) தேவர் இளம்பிடி - தெய்வயானை. தம் பெருமான் - முருகன். மலைமான் - உமாதேவி. சாற்றும் - சொல்லப்பெறும். ஐங்கைச் செம்பெருமான் - கணபதி. எந்தாய் - எம் தந்தையாம் சிவபெருமான். பணி-தொண்டு.

(இ-கு.) வெம்மை+பெருமான், பெரிய+மான், இளம்பிடி, மலைமான், இவை இரண்டும் அன்மொழித் தொகை, எந்தாய், மரூஉ.

(வி-ரை.) தாருகாவனத்து இருடிகள் சிவபெருமானைத் தாக்கத் தம் தவவலியால் அனுப்பப்பட்ட மான் ஆதலின் அது வெம்பெருமான் ஆயிற்று. தம்மை எதிர்க்க வந்த மானையும் தாம் ஏற்றுத் தம் இருவிரல்களில் பிடித்து ஏற்றிக்கொண்டமையின் "மானுக்குக் கை கொடுத்தாண்ட மிகும் கருணை எம்பெருமான்" எனப்பட்டார். நம் ஐயா சிவபெருமானின் குடும்பம் முழுமைக்கும் தொண்டு செய்ய விரும்பியதை அழகாக இப்பாடலில் அறிவித்திருப்பதைப் பன்முறை படித்து இன்புறவும். (198)

**சாற்றஅ னேகநல் நாஉள்ள தாயினும் சாற்றரிதாம்**
**வீற்றவ னேவெள்ளி வெற்பவ னேஅருள் மேவியவெண்**
**நீற்றவ னேநின் அருள்தர வேண்டும் நெடுமுடிவெள்**
**ளேற்றவ னேபலி ஏற்றவ னேஅன்பர்க் கேற்றவனே.**

(பொ-ரை.) "ஒளியுடையவனே! வெள்ளிமலையில் இருப்பவனே! திருவருள் பொருந்திய வெண்ணீற்றை அணிந்தவனே! நீண்ட சடைமுடியுடைய இரடபவாகனனே! அன்பர்கள் இடும்பூவை ஏற்றுக்கொள்பவனே! அன்பர்கட்கு உகந்தவனே! உன் திருப்புகழைக் கூறப் பல நாக்குகள் இருந்தாலும், உன் திருவருள் இல்லாமல் உன் புகழைக் கூற இயலாது. ஆகவே, அடியேனுக்கு நீ திருவருள் புரிய வேண்டும்". (எ-து.)

(அ-சொ.) வீறு-ஒளி. வெற்பு-மலை. ஏறு-இரடபம். பலி-அன்பர்கள் அர்ச்சிக்கும் மலர். சாற்ற-கூற. அரிது-கடினம்.

(இ-கு.) வீறு+அவன் எனப் பிரிக்க.

(வி-ரை.) வீறு என்பதற்குப் பிற எதற்கும் இல்லாத ஒரு தனி அழகு என்பது பொருள். இங்கு இறைவனுக்கு அவ்வழகு ஒளியினால் உண்டாயது. இவனுக்கு இருக்கும் ஒளி எவர்க்கும் இல்லை. இஃது அருட்பெருஞ்சோதி, அருட்பெருஞ்சோதியாம் இவனே எல்லாவற்றிற்கும் அழகு ஒளியாய் இருப்பவன். ஆதலின் வீற்றவனே எனப்பட்டான். அன்பர்கள் வேண்டுகிறபடி திருவருள் புரிபவன் ஆதலின், அன்பர்க்கேற்றவன் எனப்பட்டான். இந்தப் பாட்டின் வழி நம் ஐயா இறைவன் திருவருள் இருந்தால்தான், நாம் எதையும் செய்ய இயலும் என்பதை நம்மனோர் அறியச் செய்துள்ளனர். (199)

**பதியே சரணம் பரமே சரணம் பரம்பரமாம்**
**திதியே சரணம் சிவமே சரணம் சிவம்உணர்ந்தோர்**
**கதியே சரணம்என் கண்ணே சரணம்முக் கண்கருணா**
**நிதியே சரணம் சரணம்என் பால்மெய்ந் நிலைஅருளே.**

(பொ-ரை.) "எல்லா உயிர்கட்கும் தலைவனே அடைக்கலம்; மேலான பொருளே அடைக்கலம்; மேலான ஆகாயமாகி எங்கும் நிறைந்திருந்து யாவற்றையும், எவற்றையும் காக்கும் கடவுளே! அடைக்கலம்; மங்களப் பொருளே அடைக்கலம் புகுதற்குரிய பெருமானே அடைக்கலம்; என் கண் போன்றவனே!

அடைக்கலம்; மூன்று கண்களையுடைய கருணை நிறைந்த நிதியே! அடைக்கலம், அடைக்கலம். இவ்வாறு உன்னைப் பல்லாற்றாலும் விளித்து அடைக்கலம் புகுகின்றேன். ஆதலின் எனக்கு உன் உண்மைச் சொரூப நிலையைக் காட்டி அருள் செய்வாயாக." (எ-து.)

(அ-சொ.) பதி - தலைவன். சரணம் - அடைக்கலம். பரம் - மேலான பொருள். பரம்பரம் - மேலான ஆகாய வடிவாம் இறைவன் திதி - காக்கும் இறைவன். சிவம் - மங்களப் பொருள். கதி - அடைக்கலம் புகுதற்குரிய இடம் (கடவுள்). நிதி - சேம வைப்பு, என்பால் - என்னிடம். மெய்ந்நிலை-உண்மைச் சொரூபநிலை.

(இ-கு.) பரம்+அம்பரம்-பரம்பரம் இது வடமொழிப் புணர்ச்சி. சரணம், சரணம், அடுக்குத்தொடர்.

(வி-ரை.) "இறைவனே! உன்னை நான் இவ்வாறு பல வடிவில் விளித்துச் சரண் புகுகின்றேன். ஆனால், உன் உண்மை நிலை இன்னது என்பது தெரியாமல் திகைக்கின்றேன். அதனை அருள் செய்யின், அதனை என் உபாசனாமூர்த்தியாகக் கொண்டு வழிபடுவேன்" என்று நம் ஐயா, இறைவனிடம் முறையிடும் முறையில் அமைந்துளது. நம் ஐயா இறைவனது உண்மைச் சொரூப நிலை இன்னது என்பதைத் திருவடிப் புகழ்ச்சி, மகாதேவ மாலை ஆகிய இருநூல்களில் அறிந்து சொல்லி இருப்பினும், இறைவன் திருவாயினின்று உபதேச முறைப்படி வரவேண்டும் என்னும் கருத்தில் தான் "உன் மெய்ந்நிலை அருள்க" என்று வேண்டுகின்றனர். ஆன்மாக்கள் அடைக்கலம் புக வேண்டிய இடம் இறைவன் அடி தான் என்பதை உணர்த்தவே சரணம், சரணம் என்று ஒவ்வோர் முறையும் கூறியுள்ளனர் நம் ஐயா. இந்த உண்மையினை மாணிக்க வாசகர் முன்பே நமக்கு அடைக்கலப்பத்தைப் பாடி அறிவித்துள்ளனர். (200)

**என்உற வேஎன் குருவேஎன் உள்ளத் தெழும்இன்பமே**
**என்உயி ரேஎன்தன்அன்பே நிலைபெற்ற என்செல்வமே**
**என்அறி வேஎன்தன் வாழ்வேஎன் வாழ்வுக் கிடும்முதலே**
**என்அர சேஎன் குலதெய்வ மேஎனை ஏன்றுகொள்ளே.**

(பொ-ரை.) "என் சுற்றமே! என் குருவே! என் மனத்தில் எழுகின்ற இன்பமே! என் உயிரே! என் அன்பே! அழியாத என் செல்வமே! என் அறிவே! என் வாழ்வே! என் வாழ்க்கைக்கு அமைந்த மூலப் பொருளே! என் அரசே! என்குல தெய்வமே! என்னை ஏற்றுக்கொள்வாயாக." (எ-து.)

(அ-சொ.) முதல் - மூலதனம். ஏன்றுகொள் - ஏற்றுக்கொள்.

(இ-கு.) ஏன்று கொள், மெலித்தல் விகாரம்.

(வி-ரை.) மணி மொழியார் "ஆயிரம் திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ" என்றும், அப்பர் "பேராயிரம் பரவி வானோர் ஏத்தும் பெம்மானே" என்றும் அறிவித்திருப்பதற்கு ஏற்ப நம் ஐயா, இங்கு இறைவனைப் பலவாற்றாலும் விளித்து, அருளுமாறு வேண்டுகின்றார். (201)

**கான்போல் இருண்டஇவ் வஞ்சக வாழ்க்கையில் கல்நெஞ்சமே
மான்போல் குதித்துக்கொண் டோடல் அமுத மதிவிளங்கும்
வான்போல் குளிர்ந்த சிவானந்த வாழ்க்கையின் வாழ்வுறச்செந்
தேன்போல் இனிக்கும் சிவாய நமஎனச் சிந்தைசெய்யே.**

(பொ-ரை.) "கல்போன்று கடினமான மனமே! காட்டைப் போல் இருண்டுள்ள இந்த வஞ்சகம் நிறைந்த உலக வாழ்க்கையில் இருந்து கொண்டு மானைப்போலக் குதித்துத் துள்ளி ஓடாதே. சந்திரன் விளங்கும் வானத்தைப் போலக் குளிர்ந்த சிவானந்த வாழ்க்கையில் வாழத்தேன் போலத் தித்திக்கும் சிவாயநம என்னும் மந்திரத்தை எப்போதும் சிந்தனை செய்து கொண்டே இரு!" (எ-து.)

(அ-சொ.) கான் காடு. மதி - சந்திரன்.

(வி-ரை.) சிவானந்த வாழ்க்கை எவ்வாறு இருக்கும் என்பதை நம் வள்ளலார் நன்கு விளக்கமுறக் கூறிவிட்டனர். அது சந்திரன் விளங்கும் வானம் போலக் குளிர்ந்து காணப்படுமாம். பிறவி வெப்பத்தால் வருந்தியவர்கள் சிவானந்த வெள்ளத்தில் திளைக்கும்போது அமைதி நிலையில் பேரின்ப சுகத்தில் இருப்பர் என்பதை நமக்கு இங்கு நம் ஐயா, நன்கு உணர்த்துகின்றனர்.

சிவானந்தம் எனினும் சிவபோகம் எனினும் ஒன்றே. சிவபோக வாழ்வைப் பேசவந்த சீர்காழி நத்துவநாதர்,

**"நாதன்அவன் உடல்உயிராய் உண்டுறங்கி நடந்து
நானாபோ கங்களையும் தானாகச் செய்து
பேதமுற நின்றிவனைத் தானாக்கி விடுவன்
பெருகுசிவ போகமெனப் பேசுநெறி இதுவே"**

என்று விளக்கி யுள்ளனர்.

சிவாயநம என ஈண்டுக் குறித்துள்ள மந்திரம் நுண் ஐந்தெழுத்து மந்திரமாகும். அதாவது சூட்சும பஞ்சாட்சரம். நம் ஐயா தம் மனத்தை நோக்கி, "மனமே!சிந்தை செய்யே" என்று கூறினாரேனும், இதனை மனம் தானாக மனத்தில் உச்சரித்தல் கூடாது. இந்த நுண் ஐந்தெழுத்து மந்திரத்தை ஆசாரியன் வழியே கேட்டு உச்சரிக்க வேண்டும். இந்த உண்மையினை உண்மை விளக்கம் என்னும் நூல் குறிப்பாக உணர்த்தியுள்ளது. அஃது உணர்த்திய முறை,

**"சிவன்அருள் ஆவி திரோதமலம் ஐந்தும்
அவன்எழுத் தஞ்சின் அடைவாம்-இவன்நின்று
நம்முதலா ஓதுல்அருள் நாடாது நாடும்அருள்
சிம்முதலா ஓதுநீ சென்று"**

என்பது ஈண்டு, "நீ சென்று ஓது" என்பதன் குறிப்பு, நீ ஆசாரியனை அடைந்து அவன் மூலம் உபதேசம்பெற்று அதன் பிறகு ஓது என்பதாம்.

சிவாயநம, என்னும் மந்திரம் தேன்போல் இனிக்கும் என்பதை நம் திருமந்திரம்,

**“ஒன்றுகண் டீர்உல குக்கொரு தெய்வமும்**
**ஒன்றுகண் டீர்உல குக்குயிர் ஆவது**
**நன்றுகண் டீர்நல் நமச்சிவா யப்பழம்**
**தின்றுகண் டாற்கிது தித்தித்த வாறே”.**

என்று கூறுதல் காண்க. இவற்றை எல்லாம் உள்கொண்டே நம் வள்ளலார். “சிவானந்த வாழ்க்கையில் வாழ்வுறச் செந்தேன் போல் இனிக்கும் சிவாயநம” என்று கூறியுள்ளனர். (202)

**வேதன்என் கோதற வேண்டும்என் கோஎன விண்ணப்பம்செய்**
**பாதன்என் கோகடல் பள்ளிகொண் டான்தொழும் பண்பன்என்கோ**
**நாதன்என் கோபுர நாதன்என் கோஎங்கள் நம்பிக்குநல்**
**தூதன்என் கோஅவன் தோழன்என் கோநினைத் தூய்மணியே.**

(பொ-ரை.) “மிகத்தூய்மையான இரத்தினம் போன்ற சிவபெருமானே! பிரம்மனானவன் உன் திருவடியைப்பற்றி என் தலைவனே, என்னிடம் உள்ள குற்றங்களை நீக்க வேண்டும்” என்று சொல்லித் துதிக்கும் திருவடிகளை யுடையவன் என்று கூறுவேனோ? திருப்பால் கடலில் உறங்கும் திருமால் வணங்குகின்ற பண்பாளன் என்று கூறுவேனோ? நாத தத்துவமாய் உள்ளவன் என்று கூறுவேனோ? நாதத் தத்துவத்துக்கும் மேலான தலைவன் என்று கூறுவேனோ? எங்கள் நம்பி ஆரூரராகிய சுந்தரருடைய நல்ல தூதன் என்று கூறுவேனோ? அந்த நம்பி ஆரூரருடைய நண்பன் என்று கூறுவேனோ? இந்தப் பெயர்களில் உன்னை எந்தப் பெயரால் நான் கூறுவது என்பது தெரியவில்லையே” (எ-து.)

(அ-சொ.) தூய் - பரிசுத்தமான. தூய்மணி - சிவனார் வேதன் - பிரமதேவன். கோது - குற்றம். கோ-தலைவன். நம்பி-நம்பி ஆரூரர் (சுந்தரர்).

(இ-கு.) கோது+அற எனப் பிரிக்க.

(வி-ரை.) ஏனைய நவமணிகள் மாசுமறு உடையவை. அத்தகைய குற்றம் இறைவனாகிய மணிக்கு இன்மையின் “தூய் மணியே” என்றனர். அழகுறத் தானே படைத்த திலோத்தமையைக் காதலித்தது, மேனகை, இந்திர சபையில் ஆடுகையில் அவளை உற்றுப் பார்த்தது, தட்சன் யாகத்திற்குச் சென்றது முதலானவை பிரமனிட்ம் அமைந்த குற்றங்கள். அவை நீங்கவே அவன் இறைவன் திருவடிகளைத் தொழுதான். இந்தக் கருத்தே முதல் அடியில் அமைந்துளது. திருமால் சக்கரம் பெற இறைவனைத் தொழுதுள்ளான். ஆகவே இறைவனைப் “பள்ளி கொண்டான் தொழும் பண்பன்” என்றனர். அதி சூட்சும ஒலியே இங்குப் பரநாதம் கொள்க. இந்த நுட்பத்தை உணர்த்தவே அப்பர் “ஓசை ஒலிஎலாம் ஆனாய் நீயே” என்றனர். இதனால் ஒசைவேறு, ஒலி வேறு என்பதை உணர்க. ஆகவே இறைவன் இவ்வாறு விளங்கலின் நாதன் என்றும், பரநாதன் என்றும் கூறப்பட்டான். தன் காதளவு கேட்பது பரநாதம். எல்லோருடைய காதுகளிலும் கேட்கப் படுவது நாதம். இறைவன் சுந்தரர் பொருட்டுத் தூது சென்ற வரலாற்றைத் நூற்று முப்பத்து நான்காவது பாட்டின் விளக்க உரையில் காண்க.

சுந்தரர் மணக் கோலத்துடன் திருவாரூரை அடைந்தனர். புற்றிடங் கொண்டாரை வணங்கி நின்றார். அப்போது,

**“வாழிய மாமறைப் புற்றிடங்கொள் மன்னவன்**
**ஆரரு ளால்ஓர் வாக்குத்**
**தோழமை ஆக உனக்குநம்மைத் தந்தனம்**
**நாம்முன்பு தொண்டு கொண்ட**
**வேள்வியில் அன்றுநீ கொண்ட கோலம்**
**என்றும் புனைந்துநின் வேட்கைதீர**
**வாழிமண் மேல்விளை யாடு வாய்என்**
**றாரூரர் கேட்கஎழுந் ததன்றே”**

இதனால் நம்பி ஆரூரருக்கு இறைவர் தோழன் ஆயினர். ஆகவே, அன்று முதல் யாவரும் அடியார்கள் எல்லோரும் இவரைத் தம்பிரான் தோழர் என்றே அழைக்கலாயினர். இந்த உண்மையினைச் சுந்தரரே தம் திருவாக்கால் “தம்மைத் தோழமை அருளி” என்றும் “என்னுடைய தோழனுமாய்” என்றும் கூறுமாற்றால் உறுதிப் படுத்தலாம். இவற்றை எல்லாம் அறிந்தே ஈண்டு நம் ஐயா, “தோழன் என்கோ” என்று வினாவினார். இங்கு நம் ஐயா பாடியுள்ள பாட்டைப் படிக்கும்போது, நம்மாழ்வார் திருமாலைப்பற்றிப் பாடியுள்ள,

**“பங்கயக் கண்ணன் என்கோ பவளச்செவ் வாயன் என்கோ**
**அங்கதிர் அடியன் என்கோ அஞ்சன வண்ணன் என்கோ**
**செங்கதிர் முடியன் என்கோ திருமறு மார்பன் என்கோ**
**சங்குசக் கரத்தான் என்கோ சாதிமா ணிக்கத் தையே”**

என்னும் திருவாய்மொழிப் பாடல் நினைவுக்கு வருகிறது. (203)

**இயங்கா மனமும் கயங்கா நிலையும் இகபரத்தே**
**மயங்கா அறிவும் தியங்கா நெறியும் மகிழ்ந்தருள்வாய்**
**வயங்கா நிலத்தில் முயங்கா உயர்தவர் வாழ்த்துகின்ற**
**புயங்கா துதித்தற் குயங்கா தவர்உள் புகுந்தவனே.**

(பொ-ரை.) “என்றும் விளக்கம் உற்றிருக்காத இவ்வுலகில் பொருந்தாத உயர்ந்த தவர்த்தோர் வாழ்த்துகின்ற பாம்புகலை அணிந்த பரனே! உன்னைப் போற்றுதற்குச் சிறிதும் தடை ஏதும் செய்யாத உண்மை அன்பர்களின் உள்ளத்தில் புகுந்திருக்கும் இறையவனே! இங்கும் அங்கும் அலையாத மனத்தையும், கலக்கம் சிறிதும் இல்லாத நிலையையும் இந்த உலக இன்பத்திலும், மேலுலக இன்பத்திலும் மயங்காத அறிவையும், சோர்தல் அற்ற நல்வழியையும் அடியேனுக்கு நீ அருள்வாயாக”. (எ-து.)

(அ-சொ.) வயங்கா-விளக்கம் இல்லாத. முயங்கா-பொருந்தாத. புயங்கம் - பாம்பு. உயங்கா - தடை இல்லாத. இயங்கா-அலையாத. கயங்கா-கலக்கம் அடையாத. இகம் - இவ்வுலக இன்பம். பரம் - மேல் உலக இன்பம். தியங்கா-சோர்வு இல்லாத. நெறி-வழி.

(இ-கு.) உயர்தவர், வினைத் தொகை. இகபரம், உம்மைத்தொகை. புயங்கா-விளிவேற்றுமை.

(வி-ரை.) உலகம் அஞ்ஞான இருள் செறிந்திருந்தலின் அதனை வயங்கா நிலம் என்றனர். இந்த வயங்கா நிலத்தில் முயங்காதவர் என்றதனால் என்றும் விளக்கம் உற்றுத் திகழும் வீட்டுலகில் இன்பம் ஆர்ந்திருப்பர் என்பது தெரிகிறதன்றோ? "நிலமிசை நீடுவாழ்வார்" என்னும் தொடர்க்குப் பொருள் கூறிய பரிமேலழகர், "எல்லா உலகிற்கும் மேலாய் வீட்டுலகின்கண் அழிவின்றி வாழ்வார்" என்று விளக்கம் காட்டினர். அந்த விளக்கத்தை ஈண்டு நினைவில் கொணர்ந்து "வயங்கா நிலத்தில் முயங்கா உயர்தவர்" என்பதற்குரிய பொருளை நன்கு சிந்தித்தல் சாலச் சிறப்புடைத்து. இதே நேரத்தில், "துதித்தற்கு உயங்காதவர் உள் புகுந்தவனே" என்னும் அடிக்குரிய பொருலை "மலர்மிசை ஏகினான்" என்னும் திருக்குறள் அடிக்குப் பரிமேலழகர், "அன்பால் நினைவாரது உள்ளக் கமலத்தின்கண், அவர், நிறைந்த வடிவோடு விரைந்து சேறலின், ஏகினான் என இறந்த காலத்தில் கூறினார்" என்னும் விளக்கத்தையும் இன்புறவும்.

தாயுமானவரும் இறைவனை நோக்கி, "ஒன்றை விட்டு ஒன்றைப்பற்றிப் பாசக் கடற்குளே விழாமல் மனதற்ற பரிசுத்த நிலை அருள்வாய்" என்று வேண்டி உள்ளார். ஆதலின், நம் ஐயாவும் இயங்கா மனம் முதலியவற்றை இறைவனிடம் வேண்டுவாராயினார். (204)

**சிவசங்க ராசிவ யோகா சிவகதிச் சீர்அளிக்கும்**
**சிவசம்பு வேசிவ லோகா சிவானந்தச் செல்வம்நல்கும்**
**சிவசுந்த ராசிவ போகா சிவாகமச் செந்நெறிசொல்**
**சிவபுங்க வாசிவ ஞானிகள் வாழ்த்தும் சிவகுருவே.**

(பொ-ரை.) "சிவசங்கரனே! சிவபோகனே! சிவகதியாகிய வீட்டின்பத்தைத் தருகின்ற சிவசம்புவே! சிவலோகனே! சிவானந்தமாகிய செல்வத்தைத் தருகின்ற சிவமாகிய பேரழகனே! சிவமாகிய இன்பப் பெருக்கமே! சைவ ஆகமம் ஆகிய சன்மார்க்கம் அறிவிக்கும் சிவமாகிய இறையோனே! சிவஞானிகள் வாழ்த்துகின்ற சிவகுருவே!" (எ-து.)

(அ-சொ.) சிவம் - மங்களம். சங்கரன் - நன்மை செய்பவன். சிவகதி - வீட்டின்பம் (மோட்சம்). சம்பு - நலம் அளிப்பவன். நல்கும் - கொடுக்கும். சுந்தரன் - அழகன். போகன் - இன்பம் அளிப்பவன். செந்நெறி - சன்மார்க்கம், நல்வழி. புங்கவன் - சிறந்தவன்.

(இ-கு.) சிவம்+ஆனந்தம், சிவம்+ஆகமம், சைவம்+ஆகமம் என்றும் பிரிக்கலாம்.

(வி-ரை.) சிவம் என்னும் சொல் மங்கள் என்னும் பொருளது. இறைவன் ஒருவனே அழியாதவன் ஆதலின், அவனைச் சிவம் என்றே ஆன்றோர் கூறினார். இச்சொல் எந்தத் தெய்வத்தையும் சாராது, இதனை அறுதி இட்டு உறுதிப்படுத்தவே அப்பர் பெருமானார், “சிவன் எனும் நாமம் தனக்கே உரிய செம்மேனி அம்மான்” என்றனர். சிவன் ஒருவனே யோகியாகவும், போகியாகவும் இருந்து திருவருள் புரிபவன். தட்சணாமூர்த்தியாய் இருக்கும் தோற்றம் அவனது யோகக் காட்சியையும், அம்மை அப்பனாய் விளங்குவது அவனது போகத் தோற்றத்தையும் அறிவிப்பன் ஆகும். இவ்வாறு இறைவன் விளங்குதற்குக் காரணம் துறவிகளின் நன்மையின் பொருட்டும், இல்லறத்தார்களின் நன்மையின் பொருட்டுமே ஆகும். இதனைச் சிவஞானசித்தியார்,

**“போகியாய் இருந்து யிர்க்குப் போகத்தைப் புரிதல் ஓரார்**
**யோகியாய் யோக முத்தி உதவுதல் அதுவும் ஓரரர்”**

**“அன்றிஅவ் வேடம் எல்லாம் அருள்புரி தொழில்என்றோரார்”**

என்று கூறுதல் காண்க. ஆகவேதான் சிவன் “சிவயோகா சிவபோகா” எனப்பட்டான். சிவகதிச்சீர் என்பது இறவா பிறவா நிலையாகும். சிவம் எனும் கனி இன்பமும் ஆனந்தமும் செய்ய வல்லது. அதன் சுவையை மக்கள் துய்க்கவே அப்பர் கருணை உள்ளத்துடன்,

**“மனித்தர்காள் இங்கே வம்ஒன்று சொல்லுகேன்**
**கனிதந் தால்கனி உண்ணவும் வல்லீரே**
**புனிதன் பொற்கழல் ஈசன் எனும்கனி**
**இனிது சாலவும் ஏசற்ற வர்கட்கே”**

என்று உண்பிப்பார் ஆயினர். இந்த ஈசன் எனும் கனியெ ஈண்டுச் சிவானந்தச் செல்வம் எனப்பட்டது. சிவானந்தத்தின் தன்மை இன்னது என்பதை உணர்த்தவந்த குமரகுருபரர்,

**“புளகம்மெய் போர்ப்ப மொழிகள் தடுமாற**
**உள்ஒளி நாதம் புள்ஒலி முழங்க**
**ஞானஓர் அமுத பானம தார்ந்து**
**கருவிகள் கழன்று பரவசம் ஆகிப்**
**பரமா னந்தப் பரவையுள் படிந்து**
**பேரா இயற்கை பெற்றினி திருப்ப**
**ஆரா இன்பம்”**

என்று விளக்குவர்.

இறைவன் ஒருவனே பேரழகன். இது குறித்தே அவன் சோமசுந்தரன், கல்யாண சுந்தரன், அப்பர் சுந்தரன், சொக்கன் என்றெல்லாம் அழைக்கப் படுவானாயினான். சுந்தரமூர்த்தி சுவாமிகளின் ஆதி தோற்றத்திற்கு இறைவனது அழகுதான் காரணம். இந்த உண்மை கீழ்வரும் புராணங்களால் நன்கு புலனாகும்.

**“வெள்ளிவெண் கயிலா யத்துமேய நம்பெருமா னோர்நாள்**

தள்ளரும் ஆடி நோக்கத் தன்உரு அழகி தாகி
விள்ளரும் அதனுள் தோன்ற வியப்புமிக் கூரப் பார்த்துத்
துள்ளரும் மகிழ்ச்சி பொங்கச் சுந்தரம் வருக என்றான்"

-திருத்துருத்திப் புராணம்,

"கயிலைமலைத் தலையில்வளர் சிவபெருமான் ஒருநாள்
கண்ணாடி ஒன்றினைத்தன் கண்களால் பார்த்தான்
வெயில்உமிழ்தன் திருவுருவம் இயங்கியது கண்டு
மிகும்விழைவால் சுந்தர விரைந்து வருகென்றான்

பயில்பெரும் சாரூபம் எய்தத்தக்க தவமுறுவோர்
பக்குவத்தோன் உடன்அந்தப் படிவம்உற்று வந்தான்
எயில்எரித்த வாயினன்தன் பணிசெயுமா றமைத்தான்
இவ்வாறங் குமையவளும் இருமகளிர்ச் செய்தாள்"

-திருஆமாத்தூர் புராணம்.

சைவ சிந்தாந்த செந்நெறியே சைவாகம நெறி ஆகும். இந்த ஆகமம் இருபத்தெட்டு. இவற்றை அறுபத்தாறு முனிவர்கள் இறைவனிடம் உபதேச முறையில் கேட்டனர். இந்த ஆகமத்தின் நுண்பொருள் தேவர்களாலும் அறிதற்கரியது. ஆகவேதான் சைவாகமம் ஒரு சிலரால் மட்டும் உணர்தற்குரியதாகி உளது.

உலகில் ஒருசில தத்துவ ஞானிகள் வேதச் சார்பில் ஞான காண்டத்தின் முறைப்படி பரம்பொருள் ஒன்று என்று உணர்ந்து அந்தப் பரம்பொருள் வழி உலகம் இயங்குகிறது என்று கண்டனர். இந்த ஞான காண்டத்தின் தத்துவ அடிப்படையில் எழுந்த நூல்களே ஆகமங்கள் எனப்பட்டன.

இந்த சைவ ஆகமங்கள் வேதத்தின் கரும காண்டம், ஞான காண்டங்கட்குச் சிறந்த விளக்கங்களாக அமைந்து கொண்டிருந்தும், ஆதி சங்கராசாரியர் இவ் வாகமங்கள் வேதத்திற்கு ஒவ்வாத தீட்சை முதலான ஒழுக்கங்களைக் கூறுவன என்று புறக்கணித்தனர். இது குறித்தே "சைவாக மங்கள் நுண் பொருள்களைத் தம் அகத்தே கொண்டு திகழ்வன. அவற்றை ஒரு சிலரே அறிவர்" என்று கூறப்பட்டது. இதனை நம் குமர குருபரர் வாக்காம்,

"வேதம் என்னும் பாதவம் வளர்த்தனை
பாதவம் அதனில் படுபயன் பலவே, அவற்றுள்
இலைகொண் டுவந்தனர் பலரே தளிர்ஒரீஇ
அரும்பொடு மலர்பிஞ் சருங்காய் என்றிவை
விரும்பினர் கொண்டுகொண் டுவந்தனர் பலரே
அவ்வா றுறுப்பும் இவ்வாறு பயப்ப
ஒரும் வேதாந்தம்என் றுச்சியில் பழுத்த
ஆரா இன்பம் அருங்கனி பிழிந்து

**சாரம் கொண்ட சைவசித் தாந்தத்**
**தேனமு தருந்தினர் சிலரே”**

என்னும் வரிகளில் காண்க. இக் கருத்துகளை எல்லாம் உள்ளத்தில் கொண்டே நம் ஐயா, “சிவாகமச் செந்நெறி” என்றனர். (205)

**மதிதத்து வாந்த அருள்சிவ மேசின் மயசிவமே**
**துதிசித் தெலாம்வல்ல மெய்ச்சிவ மேசித் சுகசிவமே**
**கதிநித்த சுத்த சிவமே விளங்குமுக் கண்சிவமே**
**பதிசச்சி தாநந்த சித்சிவ மேஎன் பரசிவமே.**

(பொ-ரை.) “எல்லாராலும் மதிக்கத் தக்க சிறப்பு வாய்ந்த உண்மையின் முடிவான அருள்நிறைந்த சிவமே! அறிவு மயமான சிவமே! துதித்தற்குரிய எண்வகைச் சித்துகளிலும் வல்ல உண்மைச் சிவமே! அறிவும் இன்பமும் ஆன சிவமே! உயர்ந்த நிலைகளுக்குரிய அழியாத தூய சிவமே! விளங்குகின்ற மூன்று கண்களையுடைய சிவமே! எங்கும் நிறைந்த உண்மையுடைய சிவமே! அறிவு இன்ப வடிவான அறிவாம் சிவமே! எனது மேலான சிவபரம் பொருளே!” (எ-து.)

(அ-சொ.) மதி - மதித்தல். சின்மயம் - அறிவுமயம். சித்து-செயற்கரிய செயல்கள். (அறிவு என்பதும் பொருள்) கதி - உயர்ந்த மேல் நிலைகள். பதி - எங்கும் நிறைந்த. சத்து -உண்மை. பரசிவம் - மேலான சிவம்.

(இ-கு.) தத்துவ+அந்தம், சித்+மயம், சத்து+சித்து+ஆனந்தம்.

(வி-ரை.) இதற்கு முன் செய்யுளில் சிவத்தை அடைமொழியாக அமைத்துப் பாடினர். ஈண்டுச் சிவத்தை விளியாக அமைத்துப் பாடியுள்ளனர். மேல் பாட்டிலும் இந்தப் பாட்டிலும் சிவபெருமானுடைய அருவத் திருமேனியைப் புகழ்ந்து பாடியுள்ளனர். இதுவே இறைவனுக்குரிய சொரூப நிலைகள் எனப்படும். இச் சொருப நிலையை இறைவனுடைய இயற்கைத் தன்மை என்றும் கூறலாம்.

இறைவனுக்குரிய சொரூப நிலைக்கு வேறானது தடத்த வடிவமாகும். சொரூபம் தடத்தம் என்பன இரண்டும் இறைவனுக்குரிய வடிவங்களே. தடத்த வடிவமானது இறைவன் உமையோடு கூடி ஆக்கல், அளித்தல், அழித்தல் மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களைச் செய்ய மேற்கொள்ளும் உருவத் திருமேனி ஆகும். நடராசப் பெருமான், சந்திரசேகரர், சோமாஸ்கந்தர், பிட்சாடர் திருமேனிகள் தடத்த வடிவங்கள் ஆகும்.

சிவம் சொரூப வடிவமாதலின், அது முதல் நடு இறுதி இல்லாததாய், நின்மலமாய், நித்தியமாய், ஒன்றாய், அசலமாய், அகண்டாகார சச்சிதானந்தாத்துவய பரிபூரண பரஞ்சோதியாய் விளங்குவது.

தத்துவத்தின் முடிவும் அருள் பண்பும் கொண்டது சிவம் ஆதலின், தத்துவாந்த அருள்சிவமே எனப்பட்டது. இறைவன் அருள்சிவம் என்பதைப் பன்றிக்

குட்டிகளுக்குத் தான் தாய்ப் பன்றியாகச் சென்று பால் கொடுத்ததை எடுத்துக் காட்டலாம். இந்த உண்மையினை,

**“ஏனம் மென்பறழ் உறுகண்நோய்க் கிரங்கினார் இச்சை**
**ஆன அன்புதந் தத்துயர் அகற்றுவான் ஈன்ற**
**மான அன்புடைப் பேடையின் வடிவெடுத் தயரும்**
**கான வன்பறழ் கலங்கஞர் கலங்கநேர் வந்தார்**

**ஏனம் இன்னமும் காண்பரி தாகிய ஏனம்**
**ஆன மெய்ம்மயிர் முகிழ்த்திடத் தழுவிமோந் தருளின்**
**மான மென்முலை அருத்திமா வலனும்வன் திறலும்**
**ஞான மும்பெருந் தகையும்நல் குணங்களும் நல்கா”**

எனவரும் திருவிளையாடற் புராணத்துப் பன்றிக் குட்டிகளுக்கு முலை கொடுத்த படலத்துப் பாடல்களால் அறியலாம்.

இறைவன் முன் அணிமா, மகிமா, கரிமா, லகிமா, பிராப்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்னும் எண்வகைச் சித்திகளும் ஏவல் கேட்கும். உடலை மிகச் சிறிய உருவாகச் செய்தல் அணிமா. உடலைப் பெரிய உருவாகச் செய்தல் மகிமா. உடலை மலைபோல் மிக்க கனமாகச் செய்தல் கரிமா. உடலைத் துரும்பு போன்று மிக லேசாகச் செய்தல் லகிமா. விரும்பியதை விரும்பியபடி பெறுதல் பிராப்தி. வேறு ஓர் உடலில் புகுதல், விண்ணுலகில் உலாவல், இருந்த இடத்தில் விரும்பியவற்றைப் பெற்று இன்புறுதல், தன் உடல் ஒளியால் எல்லாப் பொருள்களையும் காணுதல் பிராகாமியம். எத்தகையோர்க்கும் மேம்பட்டு இருத்தல் ஈசத்துவம். எல்லாவற்றையும் தன்மயம் ஆக்கல். வசித்துவம். இவற்றில் வல்லவர் சிவம் ஆதலின் “சித்தெலாம் வல்ல மெய்ச்சிவமே” என்றனர். மேலும் சிவத்தின் சித்துகளை அறிய அவாவுவோர் திருவிளையாடல் புராணத்தில் உள்ள எல்லாம் வல்ல சித்தர் ஆன படலத்தில் காணவும். சச்சிதாநந்த சிற்சிவமே என்னும் சொரூப நிலைக்கு நேர் தடத்த நிலை சோமாஸ்கந்தர் மூர்த்தம் ஆகும். பரசிவம் என்று இங்கு நம் ஐயா குறிப்பிட்டுள்ள சொரூப நிலையின் உண்மை நிலைகளை விரிவாகக் காண விரும்புகின்றவர்கள் திருவடிப் புகழ்ச்சி, மகாதேவமாலை ஆகிய இவற்றின் முற்பகுதிகளில் பரக்கக் காண்பார்களாக. (206)

**கடும்புல வேடர்கள் ஓர்ஐவர் இந்தியக் கள்வர்ஐவர்**
**கொடுங்கர ணத்துட்டர் நால்வர்கள் வன்மலக் கோளர்ஐவர்**
**அடும்படை கோடிகொண் டுற்றார்மற் றேழையன் யான்ஒருவன்**
**இடும்படை யாதும்இ லேன்வெல்வ தெங்ஙன் இறையவனே.**

(பொ-ரை.) “இறையவனே! கொடிய ஐம்புலமாகிய வேடர்கள் ஐந்து பேர். இந்திரியங்கள் ஆகிய கள்வர்கள் ஐந்து பேர். கொடிய கரணங்கள் ஆகிய துட்டர்கள் நால்வர்கள். ஆன்மாவைத் தம் மயமாக்கிக் கொள்ள வலிய கொடிய மலங்கள் ஐந்து. மேலும் அவர்கள் என்னை அழிக்கக் கோடி ஆயுதங்களைக் கொண்டு அடைந்துள்ளனர். இவர்களுக்கு இடையே ஏழையாகியயான் ஒருவனே எதிர்க்கவேண்டியவனாக உள்ளேன். என்னிடம் என்னை எதிர்ப்பவர்கள்மீது

எறியக்கூடிய ஆயுதம் ஒன்றும் இல்லை. இங்ஙனம் இருக்க நான் என்னை எதிர்ப்பவர்களை எப்படி எதிர்ப்பேன்?" (எ-து.)

(அ-சொ.) புலம் - ஐந்து புலன்கள் (மெய், வாய், கண், மூக்கு, செவி) இந்தியக் கள்வர் - ஐம்புலன்களால் துய்க்கும் தொடு உணர்ச்சி, சுவை, பார்வை, நாற்றம், ஓசை என்பன. கரணத் துட்டர் நால்வர் - மனம், புத்தி, சித்தம், அகங்காரம். மலக் கோளர் ஐவர் - ஆணவ மலம், கன்ம மலம், மாயாமலம், திரோத மலம், மாயேயமலம். கோளர் - கொள்பவர்கள். இந்தியம் - இந்திரியம். அடும் - தாக்கும். படை-ஆயுதம். உற்றார் - அடைந்தார். எங்ஙன் - எப்படி.

(இ-கு.) இந்திரியம், என்பது இந்தியம் என ஆயது இடைக்குறை. கோள், முதல்நிலை திரிந்த தொழிற்பெயர். கொள், கோள் ஆயிற்று. மற்று, இடைச்சொல்.

(வி-ரை.) சைவசித்தாந்தத்தில் ஐம்புலன்கலை வேடர்கள் என்று கூறுவது மரபு. இதனை "ஐம்புல வேடரின் அயர்ந்தனை" எனவரும் சிவஞான போத நூற்பாவாலும், "துன்னிய ஐம்புல வேடர் சூழலில்பட்டு" எனவரும் சிவஞான சித்தியார் திருவிருத்தத்தாலும் அறிந்து கொள்க.

ஈண்டு இந்தியக் கள்வர் ஐவர் என்று பொதுப்படக் கூறினாரேனும் ஞானேந்திரியம் ஐந்தையும், கன்மேந்திரியம் ஐந்தையும் கொள்க. ஞானேந்திரியமாவது; அறிகருவி. கன்மேந்திரியம் ஆவது தொழில் கருவி. ஞானேந்திரியங்கள் சுரோத்திரம் (காது) தொக்கு (உடம்பு) சட்சு (கண்) சிங்ஙவை (நாக்கு) ஆக்கிராணம் (மூக்கு) என்பன. கன்மேந்திரியங்கள்: வாக்கு (வாய்) பாதம் (கால்) பாணி (கை) பாயுறு, குதம் (மலம் கழி கருவி) உபத்தம் குறி (சிறுநீர் கழி கருவி).

மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பன கரணங்கள். பற்றும் தன்மையது மனம். நிச்சயிக்கும் தன்மையது புத்தி. எழுச்சித் தன்மையது அகங்காரம். சிந்திக்கும் தன்மையது சித்தம்.

மலங்கள் மூன்று என்று கூறுவதும், ஐந்தெனச் சொல்லுவதும் சைவசித்தாந்த மரபாகும். மூன்று என்று கூறும்போது ஆணவம், கன்மம், மாயை என்பர். ஐந்தெனச் சொல்லும் போது திரோதம், மாயேயம் எனும் இரண்டையும் மும்மலங்களுடன் சேர்த்து ஐந்து மலங்கள் என்பர்.

ஆணவமலம், அறியாமை மிக உண்டாகும்படி ஆன்மாக்கள் தோறும் சகசமாய் அனாதியாய் இருக்கும். கன்ம மலம், ஆன்மாக்கள் தோறும் விரிந்து அனுபவமாய் நிற்பது. மாயாமலம், ஆன்மாக்களுக்கு உடல் முதலியவற்றைக் கொடுத்து மயக்கத்தைச் செய்ய வல்லது.

திரோதமலம், ஆணவ மலத்தோடும் கூடி நின்று, அது பக்குவம் ஆகும் அளவும் ஆன்மாவை மறைத்து அந்த ஆணவ மலத்தை நீக்குவது.

மாயேயமலம், ஆன்மாக்களின் இன்ப துன்ப விளைவுகளுக்கெல்லாம் இடமாய் நின்று அவற்றின் அறிவு இச்சை செயல்களை ஏகதேசப்படுத்துவது (குறைவுபடுத்தல்).

ஆன்மா, ஐம்புலங்களுடன் சிக்கிக்கொண்டிருப்பதால் புலன்களை வேடர் என்றும், இந்திரியங்கள் ஆன்மாவைத் தம் வயப்படுத்திக்கொண்டு செல்வதால் அவற்றைக் கள்வர் என்றும், கரணங்கள் ஒருவழிப்படாமல் ஆன்மாவை அலக்கழிப்பதால் அவற்றைத் துட்டர்கள் என்றும், மலங்கள் ஆன்மாவை விளங்கச் செய்யாது மறைத்துக் கொள்வதால் கோளர் என்றும் ஐயா இங்கு எடுத்து இயம்பினர்.

இந்திரியங்களையும், கரணங்களையும் அடக்கி அவற்றைத் தம் வழிப்படுத்து வதே உண்மை ஞானிகள் மேற்கொள்ள வேண்டிய முறை ஆகும். இங்ஙனம் அடக்கி அவற்றைத் தம் தம் போக்கில் போக ஒட்டாமல் ஒருவழிப்படுத்தியவர் சுந்தரர். இந்த உண்மையினைச் சேக்கிழார் பெருமான்,

**"ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள**
**அளப்பரும் கரணங்கள் நான்கும்**
**சிந்தையே ஆகக் குணம்ஒரு மூன்றும்**
**திருந்துசாத் துவிகமே ஆக**
**இந்துவாழ் சடையன் ஆடும்ஆ னந்த**
**எல்லையில் தனிப்பெருங் கூத்தின்**
**வந்தபேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து**
**மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்"**

என்று அறிவித்தல் காண்க.

ஆன்மா தன்னை மறந்து ஐம்புல வேடர் வலையில் அகப்பட்டுத் தத்தளிக்கும் நிலையில், இறைவன் கருணைகூர்ந்து ஞானாசாரியனாய் வந்து ஆன்மாவின் உண்மை நிலையினை அதற்கு உணர்த்தி இறைவனடி அடையச் செய்வன். இதனைச் சிவஞான போதம்,

"ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்டு
அன்னியம் இன்மையின் அரன்கழல் செலுமே"

என்று கூறுதல் காண்க.

இந்த நூல்பாவின் விளக்கமாகச் சிவஞானசித்தியார்,

**"மன்னவன்தன் மகன்வேடர் இடத்தே தங்கி**
**வளர்ந்தவனை அறியாது மயங்கி நிற்பப்**
**பின்னவனும் என்மகன்நீ என்றவரில் பிரித்துப்**
**பெருமையொடு தானாக்கிப் பேணு மாபோல்**
**துன்னியஐம் புலவேடர் சுழலில் பட்டுத்**
**துணைவனையும் அறியாது துயர்உறும் தொல்உயிரை**
**மன்னும்அருள் குருவாகி வந்தவரில் நீக்கி**
**மலம்அகற்றித் தானாக்கி மலர்அடிக்கீழ் வைப்பன்"**

என்று கூறி விளக்குதலையும் காண்க.

நம் ஐயா இறைவனை நோக்கி, "இறைவ! நான் ஒருவன். என்னை எதிர்ப்பவர்கள் பலர். அவர்களை வெல்வது அரிது. நீ துணைபுரிந்தால் அன்றி, நான் பிழைக்க வழியில்லை. ஆகவே, என்முன் ஞானாசாரியனாய் வந்து வேடர்களையும், கள்வர்களையும் துட்டர்களையும், கோளர்களையும் வென்று காக்கவேண்டும்" என்னும் குறிப்பில்தான், "அடும்படை கோடி கொண்டு உற்றார் மற்று ஏழையேன் யான் ஒருவன் இடும்படை யாதும் இலேன் வெல்வது எங்ஙன்" என்று முறையிடுவார் ஆயினார். (207)

**இடைக்கொடி வாமத் திறைவாமெய்ஞ் ஞானிகட் கின்பம்நல்கும்**
**விடைக்கொடி ஏந்தும் வலத்தாய்நின் நாமம் வியந்துரையார்**
**கடைக்கொடி போலக் கதறுகின் றார்பொய்க் கதைஅவர்தாம்**
**புடைக்கொடி யால்அன்றிப் புல்லால் எயிலைப் புனைபவரே.**

(பொ-ரை.) "பூங்கொடி போன்ற இடையினையுடைய உமாதேவியை இடப்பக்கத்தில் கொண்டு விளங்கும் இறைவனே! உன்னை உணரும் உண்மை அறிஞராம் பெருமக்களுக்கு இன்பந் தந்தருளும், இரடபக் கொடியினை ஏந்தும் வன்மை மிக்கவனே! உன் திருப்பெயரின் பெருமையினைப் போற்றிக் கூறமாட்டாதவர்கள், கடைகளின் கட்டப்பட்ட கொடி ஓய்வு சிறிதும் இன்றி அசைந்து சோர்ந்து காணப்படுவது போலப் பொய்க்கதைகளைப் பேசிக் கதறிச் சோர்வடைவர். அவர்கள் மதிலின் இடத்தை துணிக்கொடியால் அலங்கரிப்பதை விட்டுப் புல்லினால் அலங்கரிக்கும் அறிவீனர்கட்கு ஒப்பாவார்." (எ-து.)

(அ-சொ.) இடைக்கொடி - பூங்கொடி போன்ற நுணுகிய இடுப்பினைக் கொண்ட உமாதேவி. வாமம் - இடப்பக்கம். நல்கும் -தருகின்ற. விடை-இரடபம். வலத்தாய் - வன்மை மிக்கோனே. வியந்து - போற்றி. நாமம் -திருப்பெயர். புடை  இடம். எயில்-மதில். புனைபவர்-அலங்கரிப்பவர்.

(இ-கு.) இடைக்கொடி, முன் பின்னாகத் தொக்க உவமத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை.

(வி-ரை.) இறைவன் திருநாமமே உண்மையில் போற்றி உரைப்பதற்குரியது ஏனையவர்களின், நாமம் பொய்யானது. இந்த உண்மையினைத் திருவள்ளுவரும் "இறைவன் பொருள் சேர் புகழ்" என்று கூறினர். இதற்கு விளக்கம் கூற வந்த பரிமேலழகர் "இறைமைக் குணங்கள் இலர் ஆயினாரை உடையார் எனக் கருதி அறிவிலார் கூறுகின்ற புகழ்கள் பொருள் சேரா ஆதலின், அவை முற்றுமுடைய இறைவன் புகழே "பொருள்சேர் புகழ் எனப்பட்டது" என்று விளக்கினர்.

இறைவனது நாமத்தின் பெருமையைக் கூறுவதே சிறந்தது. ஏனையவை அத்தகையன அல்ல என்பதை அறிவிக்க வந்த பிரபுலிங்க லீலை,

"கன்றிய வைரிகள் காதும் காதையும்
வன்துயர் மதனநோய் வளர்க்கும் மாற்றமும்
புன்தொழி லினர்வறும் பொழுது போக்கலும்
அன்றருள் அல்லமன் அமல லீலையே."

என்று கூறி, மேலும் இறைவனது திருநாமம் கூறுபவர் எத்தகையர் என்பதையும் பொய்க்கதை சொல்பவர் எத்தகையர் என்பதையும் கூறவந்த பிரபு லிங்க லீலை,

**“புறம்கறை ஒழுகுசெம் புண்ணில் ஈஎன**
**வறும்கதை புல்லியர் கொள்வர் மாமலர்**
**உறும்கனி வண்டின்நல் அமலன்ஒண் கதையைப்**
**பிறந்துள பயன்பெறு பெரியர் கொள்வரே”.**

என்றுக் கூறுகின்றது. இந்தக் கருத்துகளை உளத்தில் கொண்டே வள்ளலார், “நின் நாமம் வியந்துரையார், கடைக்கொடிபோலக் கதறுகின்றார், பொய்க்கதை அவர் தாம், புடைக்கொடியால் அன்றிப் புல்லால் எயிலைப் புனைபவரே” என்றனர்.

கடைகளில் கொடிகள் கட்டிப் பறக்க விடுவது நம் தமிழ் நாட்டுச் செயல்களில் ஒன்று. இதனைச் சங்க நூற்களில் பரக்கக் காணலாம்.

“கூல மறுகில் கொடி எடுத்து” என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. “மேல் ஊன்றிய துகில்கொடியும்” “நறவு கொடைக்கொடி” “பல்வேறு உருவின்பதாகை” என்று பட்டினப் பாலை என்னும் நூல் கூறுகிறது. இந்த மரபை ஒட்டியே நம் ஐயா ‘கடைக்கொடி’ என்றனர்.

மதில்களில் கொடி கட்டப்பட்டதை, “கொடி மதில் நாட்கொடி நுடங்கும் வாயில்” “கொடிமதில் மூதூர்” என்று சிலப்பதிகாரமும், “துகில் கொடி மிதிலை மாடம்” என்று கம்பராமாயணமும் “வியன்மதில் குடுமிதோறும் காண்தகு பதாகை ஆடை” என வில்லிபுத்தூரார் பாரதமும் குறிப்பிடுதல் காண்க. (208)

**உருமத்தி லேபட்ட புன்புழுப் போல்இவ் உலகநடைக்**
**கருமத்தி லேபட்ட என்மனம் தான்நின் கழல்அடையும்**
**தருமத்தி லேபட்ட தின்றேஎன் றெண்ணும் தனையும்அந்தோ**
**மருமத்தி லேபட்ட வாளியைப் போன்று வருத்துவதே.**

(பொ-ரை.) “நல்ல பகல் வெய்யிலில் அகப்பட்டுக் கொண்ட சிறு புழுவைப்போல, இந்த உலக நடையாம் செயல்களில் அகப்பட்டுக் கொண்ட என்மனம் உன்னுடைய திருவடிகளை அடைந்து இன்ப நிலையினைப் பெறும் புண்ணியத்தைப் பெறவில்லையே என்பதை எண்ணும் போதெல்லாம் ஐயோ, மார்பில் பட்ட அம்பைப் போன்று வருந்துகின்றது.” (எ-து.)

(அ-சொ.) உருமம் - வெப்பம், வெயில். புன்புழு - சிறுபுழு. கழல் - வீரத்தண்டை அணிந்த பாதம். இன்றே-இல்லையே. மருமம் - மார்பு. வாளி-அம்பு.

(இ-கு.) தான், அசைச்சொல். கழல், தனிஆகுபெயர். இன்று, குறிப்பு வினைமுற்று.

(வி-ரை.) புழுவுக்கு எலும்பு இல்லை ஆதலின், அது வெயிலில் அகப்பட்டுக் கொண்டால் மிகவும் வருந்தும். ஆகவே, மனம் படும் துயருக்குப் புழு உவமை

காட்டப்பட்டது. உலக நடையாம் கருமம் வெயிலாகவும், மனம் புழுவாகவும் கூறப்பட்டன.

துன்பத்தின் மிகுதியை உணர்த்துவதற்கு புண்ணுடைய மார்பில் பட்ட வேலை உவமை கூறுவதும் மரபு. சிவபெருமான் பைரவ வடிவில் சிறுத்தொண்டரை அணுகி "ஒரு குலத்துக்கு ஒரு மகனாக இருப்பவனும், ஐந்து வயதுடையவனும் ஆகிய சிறுவனைத் தாய் பிடிக்கத் தந்தை அரிந்து சமைத்த கறி யுணவைத்தான் உண்பேன்" என்று சொன்னதற்குச் சேக்கிழார், மார்பில்பட்ட வேலைத்தான் உவமை காட்டினார். அந் நிகழ்ச்சிகளைக் கூறும் பாடல்கள்,

**"பண்பு மிக்க சிறுத்தொண்டர் பரிவு கண்டு பயிரவரும்**
**நண்பு மிக்கீரர் நாம்உண்ணப் படுக்கும்பசுவும் நரப்பசுவாம்**
**உண்ப தஞ்சு பிராயத்துள் உறுப்பில் மறுஇன் றேல்இன்னம்**
**புண்செய் நோவில் வேல்எறிந்தால் போலும் புகல்வதொன்றென்றார்"**

**"யாதும் அரிய தில்லைஇனி ஈண்ட அருளிச் செய்யும்என**
**நாதன் தானும் ஒருகுடிக்கு நல்ல சிறுவன் ஒருமகனைத்**
**தாதை அரியத் தாய்பிடிக்கும் பொழுதில் தம்மில் மனம்உவந்தே**
**ஏதம் இன்றி அமைத்தகறி யாம்இட் டுண்ப தெனமொழிந்தார்"**

என்பன.

இவ்வாறு சேக்கிழார் கூறிய உவமையைப் போலவே, இவருக்குப் பின்வந்த கம்பரும், விசுவாமித்திரர் இராமனைத் தம்முடன் அனுப்புமாறு தசரதனைக் கேட்டதற்கும் கூறியுள்ளார். அப்பாடல்,

**"எண்ணிலா அருந்தவத்தோன் இயம்பியசொல்**
**மருமத்தில் எறிவேல் பாய்ந்த**
**புண்ணிலாம் பெரும்புழையில் கனல்நுழைந்தால்**
**எனச்செவியில் புகுத லோடும்**
**உண்ணிலா வியதுயரம் பிடித்துந்த**
**ஆருயிர் நின்றூசல் ஆடக்**
**கண்ணிலான் பெற்றிழந்தான் எனஉழந்தான்**
**கடுந்துயரம் கால வேலான்"**

என்பது. இந்தக் கருத்துகளையே நம் ஐயா, "மருமத்திலே பட்ட வாளியைப் போன்று வருத்துவதே" என்றனர். (209)

**என்இறை வாஇமை யோர்இறை வாமறை யின்முடிபின்**
**முன்இறை வாமலை மின்இறை வாமலர் முண்டகத்தோன்**
**தன்இறை வாதிதித் தான்இறை வாமெய்த் தாபோதனர்உள்**
**மன்இறை வாஇங்கு வாஎன் றனக்குநல் வாழ்வருளே.**

(பொ-ரை.) "என் இறையவனே! தேவர்களின் தலைவனே! வேதங்களின் முடிமீதும், பின்னும், முன்னும் விளங்கும் இறைவனே! மலைமகளாம் பார்வதி தேவியின் தலைவனே! தாமரை மலர்மீது இருக்கும் பிரமன் தலைவனே! உன்

ஆணையால் காக்கும் தொழிலை மேற்கொண்டுள்ள திருமாலின் தலைவனே! உண்மைத் தவசிகளின் உள்ளத்தே பொருந்தியுள்ள இறைவனே! என்னை நோக்கி ‘அன்பனே! இங்கே என் அருகே வா’ என்று கூறி அழைத்து எனக்கு நல்வாழ்வு தருவாயாக” (எ-து.)

(அ-சொ.) இறைவா - தலைவே. இமையோர் - தேவர்கள். மறையின்முடி- வேதாந்தம். மலைமின் - பார்வதி. முண்டகம் - தாமரை. முண்டகத்தான் - தாமரையில் இருக்கும் பிரமன். திதித்தான் - காக்கும் தெய்வமான திருமால். மெய்- உண்மை. தபோதனர் - தவசிகள். மன் - நிலைத்திருக்கும்.

(இ-கு.) மலைமின், அன்மொழித்தொகை.

(வி-ரை.) வேத நான்கினும் மெய்ப்பொருளாய் இறைவன் விளங்குதலின் அவனை “மறையின் முடிபின் முன் இறைவா” என்றனர். இறைவி மின்னலைப் போலத் தோன்றி மறையும் அவ்வளவு நுணுகிய இடையினைப் பெற்றிருப்பதாலும் மலையரசனுக்குப் பெண்ணாகப் பிறந்தமையாலும், மலைமின் எனப்பட்டாள். இறைவன் பிரமாதி தேவர்கட்கு இறைவன் ஆதலின், “முண்டகத்தான் இறைவா திதித்தான் இறைவா” எனப்பட்டான். இந்த உண்மையினைச் சுந்தரர் மிகத் தெளிவாக,

**“மருவார் கொன்றை மதிசூடி மாணிக் கத்தின் மலைபோல**
**வருவார் விடைமேல் மாதோடும் மகிழ்ந்து பூதப் படை சூழத்**
**திருமால் பிரமன் இந்திரற்கும் தேவர் நாகர் தானவர்க்கும்**
**பெருமான் கடவூர் மயானத்துப் பெரிய பெருமான் அடிகளே”.**

என்று கூறுதல் காண்க.

இறைவர், “தபோதனர் உள்மன் இறைவர்” என்பது பூசலார் நாயனார் புராணத்தால் இனிதின் உணரலாம். அவர் தம் சிந்தையில் இறைவனை திருத்தி இறையடி புக்கவர். இதனைச் சேக்கிழார்,

**“அன்பரும் அமைத்த சிந்தை ஆலயத் தரனார் தம்மை**
**நன்பெரும் பொழுது சாரத் தாபித்து நலத்தி னோடும்**
**பின்பூபூ சனைகள் எல்லாம் பெருமையில் பலநாள் பேணிப்**
**பொன்புனை மன்றுள் ஆடும் பொன்கழல் நீழல் புக்கார்”**

என்று உணர்த்தியுள்ளனர்.

தில்லைக் கூத்தப் பெருமான் மணிமொழியாரைத் தில்லைக்கு வரப்பணித்தருளினர். இதனைத் திருவாதவூரரே,

**“நாயி னேனை நலமலி தில்லையுள்**
**கோலம் ஆர்தரு பொதுவினில் வருகென**
**ஏல என்னை ஈங்கொழித் தருளி**
**அன்றுடன் சென்ற அருள்பெறும் அடியவர்**
**ஒன்ற ஒன்ற உடன்கலந் தருளியும்”**

என்று அறிவித்துள்ளனர். இதனை மேலும் வற்புறுத்தும் முறையில்,

**“கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்**
**என்னப்பன் என்ஒப்பில் என்னையும்ஆட் கொண்டருளி**
**வண்ணப் பணித்தென்னை வாஎன்ற வான்கருணைச்**
**சுண்ணப்பொன் நீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ”**

என்றும் உணர்த்தியுள்ளனர். இவ்வாறே தம்மையும் இறைவன் வருக என அழைக்க வேண்டும் என்னும் கருத்தினால்தான், நம் ஐயா, “இங்கு வா என்று எனக்கு நல்வாழ் வருளே” என்று இறைவனிடம் முறையிடுவாராயினார். (210)

**கஞ்சத்தில் ஏர்முகம் அஞ்சத்தில் ஏர்நடைக் கன்னியர்கண்**
**நஞ்சத்தி லேஅவர் வஞ்சத்தி லேபட்டு நாண்உறும்புன்**
**நெஞ்சத்தி லேஅதன் தஞ்சத்தி லேமுக் கணித்தஎன்போல்**
**பஞ்சத்தி லேபிர பஞ்சத்தி லேஉழைப் பார்எவரே.**

(பொ-ரை.) “மூன்று கண்களைக் கொண்டு விளங்கும் அழியாப் பரம்பொருளே! என்னைப்போல் மாதர்களின் அழகிய முகமாகிய தாமரையிலும் அழகிய நடையாகிய அன்னத்திலும், கண்களாகிய விடப்பார்வையிலும், வஞ்சகவலையிலும் ஈடுபட்டும், வெட்கித் தலைகுனிந்தும், அற்ப மனத்தையே அடைக்கலமாகப் புகுந்தும், உலகத்தின் பஞ்சத்தில் சிக்கியும் திரிபவர்கள் யார் இருக்க முடியும்? ஒருவரும் இருக்கமாட்டார்கள்”. (எ-து.)

(அ-சொ.) நித்தன் - என்றும் அழியாத நித்தியப் பொருளாய் உள்ள இறைவன். கஞ்சம் - தாமரை. ஏர் - அழகிய. அஞ்சம் - அன்னம். உறும் - அடையும். நாண் - நாணம். புன் - அற்பம். தஞ்சம் - அடைக்கலம். பிரபஞ்சம் - உலகம்.

(இ-கு.) அம்ஸம் எனும் வடசொல் தமிழில் அஞ்சம் என்றாயது. கண்+நித்த, எனப்பிரிக்க.

(வி-ரை.) மக்கள் பெண்களின் முக அழகிலும், நடை அழகிலும், கண் பார்வையின் அழகிலும் அடிமையாகித் துன்புறுவது உலகில் காணப்படுதலின், அதனைத் தம்மேல் ஏற்றி நம் ஐயா இவ்வாறு பாடியுள்ளனர். ஆசைக்கு அடிமையாகின்ற காரணத்தினால் நாட்டில் பஞ்சம் ஏற்பட்ட காலத்திலும் வருந்தி உழைக்கவேண்டி இருப்பதால், “பஞ்சத்திலே பிரபஞ்சத்திலே உழைப்பார்” என்றனர் நம் ஐயா. பெண்களின் முகத்தைத் தாமரைக்கு உவமை காட்டுவது புலவர் மரபு. “பங்கய வதன மாதர்” என்றே கூறுவர்.

**“செய்யதா மரைகள் எல்லாம் தெரியவையர் முகங்கள் பூத்த**
**தையலார் முகங்கள் செய்ய தாமரை பூத்த அன்றே”**

என்று கம்பர் கூறுதல் காண்க.

இவ்வாறே புலவர்கள் பெண்களின் நடைக்கு அன்னத்தையும் உவமை கூறுவர். அப்படிக் கூறும்போது பெண்ணின் நடை அன்ன நடையினும் சிறந்தது என்றும் கூறுவர். சீதை நடையைக் கண்டு அன்னங்கள் ஒதுங்கிச் செல்லுமாம்.

இதனைக் கம்பர்,

**"ஓதிமம் ஒதுங்கக் கண்ட உத்தமன் உழையன் ஆகும்**
**சீதைகள் நடையை நோக்கிச் சிறியதோர் முறுவல் செய்தாள்"**

என்றும், பொதுவாக மாதர்களின் நடையைக் கண்டு அன்னம் நாணி நடப்பதை, "ஒண்சிலம்பார்ப்ப மாதர் ஒதுங்குதோ றொதுங்கும் அன்னம்" என்றும் கூறுவார் ஆயினார். ஆகவேதான், "அம்சத்தின் ஏர்நடை" எனப்பட்டது.

மாதர்களின் இரு கண்களில் ஒரு கண்ணில் அமுதத்தன்மையும், மற்றொரு கண்ணில் விடத்தின் தன்மையும் பொருந்தி இருக்கும். இதற்குக் காரணம் முறையே நயப்புடன் பார்க்கும் பார்வையினாலும், இணங்காத குறிப்பினால் பார்க்கும் பார்வையினால் ஆகும். இதனைத் திருவள்ளுவர்,

**"இருநோக் கிவள்உண்கண் உள்ள தொருநோக்கு**
**நோய்நோக்கொன் றந்நோய் மருந்து"**

என்றனர். இதனை நன்கு விளக்கும் முறையில் கம்பர்,

**"நஞ்சினும் கொடிய நாட்டம் அமுதென நயந்து நோக்கிச்**
**செஞ்சவே கமலக் கையால் தீண்டலும் நீண்ட கொம்பர்**
**தஞ்சிலம் படியின் மென்பூச் சொரிந்துடன் தாழ்ந்தஎன்றால்**
**வஞ்சிபோல் மருங்கு லார்மாட் டியாவரே வணங்கலாதார்"**

என்று கூறியுள்ளார். இதனால்தான் "கன்னியர் கண் நஞ்சத்திலே" என்று கூறப்பட்டது.

பெண்களை நம்பொணாது, அவர்கள் வஞ்சகர், என்பதைப் பட்டினத்தடிகள்,

**"கைப்பிடி நாயகன் தூங்கையி லேஅவன் கையைஎடுத்து**
**அப்புறம் தன்னில் அசையாமல் முன்வைத் த யல்வளவில்**
**ஒப்புடன் சென்று துயில்நீத்துப் பின்வந் துறங்குவனே**
**எப்படி நான்தம்பு வேன்இறை வாகச்சி ஏகம்பனே"**

என்று கூறுகின்றனர். இந்தக் குறிப்பையே நம் வள்ளலார் "அவர் வஞ்சகத்திலே பட்டு" என்றனர். (211)

**நான்முகத் தோனும் திருநெடு மாலும்மெய்ந் ஞானம்என்னும்**
**வான்முகக் கண்கொண்டு காணாமல் தம்உரு மாறியும்நின்**
**தேன்முகக் கொன்றை முடியும்செந் தாமரைச் சேவடியும்**
**ஊன்முகக் கண்கொண்டு தேடிநின் றார்சற் றுணர்விலரே.**

(பொ-ரை.) "நான்கு முகங்களையுடைய பிரம்ம தேவனும், அழகிய நெடுமாலாகிய விஷ்ணு மூர்த்தியும் மெய்ஞ்ஞானம் என்னும் தூய்மையான உள்முகமாகிய ஞானக்கண்கொண்டு பார்க்காமல், தமக்குள் உருமாறிச் சென்று தேன் நிறைந்த கொன்றை மாலை அணிந்த திருமுடியையும், செந்தாமரை மலர் போன்ற திருவடிகளையும், ஊனக்கண்கொண்டு தேடத் தொடங்கினர். இதனால் அவ்விருவர்களும் சிறிது அறிவில்லாதவர்களே ஆவார்." (எ-து.)

(அ-சொ.) நான்முகத்தோன் - பிரம்மன். வால் - தூய்மை. ஊன்முகக்கண் - ஊனக்கண். உணர்வு-அறிவு.

(இ-கு.) வால், உரிச்சொல். செம்மை+அடி. தேன் முகம் என்பதன் முகம், ஏழன் உருபு.

(வி-ரை.) திருமூலர் இறைவனைக் காணும் முறையினை அறிவிக்கும்போது "இறைவனைக் காண உள்முகக்கண், அதாவது ஞானக்கண் தேவை என்றும், முகத்தில் உள்ள கண் அதாவது ஊனக் கண் (குற்றமுள்ள கண்) கொண்டு காண இயலாது" என்றும் தெளிவுபட,

**"முகத்தில் கண்கொண்டு காண்கின்ற மூடர்காள்**
**அகத்தில் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்**
**மகட்குத் தாய்தன் மணாளனோ டாடிய**
**சுகத்தைச் சொல்என்றால் சொல்லுமா றெங்ஙனே"**

**"ஒன்றிநின் றுள்ளே உணர்ந்தேன் பராபரம்**
**ஒன்றிநின் றுள்ளே உணர்ந்தேன் சிவகதி**
**ஒன்றிநின் றுள்ளே உணர்ந்தேன் உணர்வினை**
**ஒன்றிநின் றேபல ஊழிகண் டேனே".**

என்னும் உபதேசம் செய்துள்ளனர்.பிரமனும் திருமாலும் இவ்வாறு இறைவனைக் காண முயலாமல், ஊன்முகக் கண்கொண்டு தேட முயன்றதனால்தான் இறைவனைக் கண்டிலர் என்பதை நன்கு அருணைக் கலம்பகம்,

**"மணிகொண்ட நெடுங்கடலில் விழிவளரும் மாதவனும்**
**அணிகொண்ட புண்டரிகம் அகலாத சதுமுகனும்**
**ஞானக்கண் அதுகொண்டு நாடுமா றுணராதே**
**ஏனத்தின் வடிவாகி எகினத்தின் வடிவாகி**
**அடிதேடி அறிவல்என அவனிஎலாம் முழுதிடந்தும்**
**முடிதேடி வருவல்என மூதண்டம் மிசைப்பறந்தும்**
**காணரிய ஒருபொருளாய்க் களங்கம்அற விளங்குபெரும்**
**சோணகிரி எனநிறைந்த சுடர்ஒளியாய் நின்றருள்வோய்"**

என்று கூறுகிறது. இவற்றை எல்லாம் உட்கொண்டே நம் வள்ளலார், "மெய்ஞ்ஞானம் என்னும் வான்முகக் கண்கொண்டு காணாமல் ஊன்முகக் கண்கொண்டு தேடி நின்றார்கள் சற்றுணர்விலரே" என்றனர். ஈண்டு 'ஊனக்கண் பாசம் உணராப்பதி". "ஞானக்கண்ணின் சிந்தை நாடி" என்னும் சிவஞான போத நூற்பாவின் பொருளை உணர்தல் நலம்.

பிரம்ம விஷ்ணுக்கள் இறைவனைக் காணாமைக்குக் காரணம் ஞானக்கண் இன்மை மட்டும் அன்று. மற்றொரு காரணமும் உண்டு. அதாவது இவர்கள் உருமாறித்தேட முயன்றதுதான். அன்னம் தேடிப்போக வேண்டிய இடம் தாமரை. பன்றி நாடிச் செல்ல வேண்டிய இடம் காடு. ஆகவே, இறைவனது திருவடியாகிய தாமரையை அன்ன வடிவெடுத்த பிரமன் தேட முயன்றிருக்க வேண்டும். சிவபெருமானது அடர்ந்த காட்டைப் போன்ற சடைமுடியினைப் பன்றி வடிவெடுத்த திருமால் நாடமுயன்றிருக்கவேண்டும். இப்படித் தேட முயலாமையினால்தான் இறைவனுடைய அடியையும் முடியையும் தேடிக் கண்டிலர். இந்த நுட்பமான கருத்தை நமக்கு அறிவித்தவர் திருக்கோவையாருக்கு உரை வகுத்த பேராசிரியர் ஆவார்.

“புரங்கடந்தான் அடிகளைக் காணுமாறு வழிபட்டுக் காண்கையாவது, அன்னத்திற்குத் தாமரையும் பன்றிக்குக் காடும் ஆதலால், இவர் இங்ஙனம் தத்தம் நிலைப்பரிசே தேடுதல். இவ்வாறு தேடாது தமது அகங்காரத்தினால் மாறுபட்டுப் பன்றி, தாமரையும், அன்னம் காடுமாகப் படர்ந்து தேடுதலால் கண்டிலர். இது நெறியல்லா நெறி ஆயினவாறு” என்பது அவ்வுரை. இதனைத் திருக்கோவையாரின் எண்பத்தாறாம் உரையில் காணலாம். இக்கருத்தினை நன்கு அறிந்தே நம் வள்ளலார். “தம் உருமாறியும் நின் தேன்முகக் கொன்றை முடியும் செந்தாமரைச் சேவடியும் தேடி நின்றார் சற்று உணர்விலரே” என்றனர். (212)

**இருவர்க் கறியப் படாதெழுந் தோங்கிநின் றேத்துகின்றோர்**
**கருவர்க்கும் நீக்கும் சுகுணைவெற் பேஎன் கவலையையிங்**
**கொருவர்க்கும் நான்சொல மாட்டேன் அவர்என் உடையவரோ**
**வெருவற்க என்றெனை ஆண்டருள் ஈதென்தன் விண்ணப்பமே.**

(பொ-ரை.) “பிரம்மன், திருமால் ஆகிய இருவர்களாலும் தேடிக் காண முடியாமல் அவர்கள் முன்னே தீப்பிழம்பாய் எழுந்து விளங்கும் பெருமானே, என்று போற்றுகின்றோர்களுடைய பிறப்புக்குக் காரணமாகிய கருவின் வகைகளை எல்லாம் நீக்குகின்ற கருணை மலையாம் இறைவனே! என் துன்பத்தை இங்கு ஒருவரிடமும் கூறிக்கொள்ள மாட்டேன். அவர்கள் எல்லாம் என்னை அடிமையாகக் கொண்டவர்களா? இல்லையே! ஆகவே இறைவா! நீ என்னை நோக்கி ‘அன்பனே அஞ்சாதே’ என்று கூறி ஆட்கொண்டருள்வாயாக. இதுவே என் முறையீடு.” (எ-து.)

(அ-சொ.) இருவர் - பிரம்ம விஷ்ணுக்கள். ஏத்துகின்றோர் - துதிக்கின்றவர்கள். கரு - பிறப்பு. வருக்கம் - வகை. வெற்பு-மலை. வெருவற்க-அஞ்சாதே. ஈது-இதுதான். விண்ணப்பம் முறையீடு”. (எ-து.)

(இ-கு.) இருவர், தொகைக் குறிப்பு. வெருவற்க, வியங்கோள் வினைமுற்று. ஈது, நீட்டல் விகாரம்.

(வி-ரை.) இறைவனை யார் போற்றுகின்றார்களோ அவர்களின் பிறப்பு நிச்சயமாக ஒழியும். இதனை மணி மொழியார் “பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்” என்றும், “நின் திருவருளால் என் பிறவியை வேர் அறுப்பவனே” என்றும், “என் பிறவியை வேரறுத்துப் பெரும் பிச்சுத்தரும் பெருமான்” என்றும் அறிவித்தல் காண்க.

ஆகவேதான் ஈண்டு, "ஏத்துகின்றோர் கருவர்க்கம் நீக்கும் கருணை வெற்பே" எனப்பட்டது.

பிறவி ஏழு. அவையே, தேவர், மக்கள், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்பன. இவற்றின் உள் பிரிவு ஒவ்வொன்றும் பல இலட்சம் ஆகும். தேவர் பிறப்பு பதினான்கு இலட்ச வகை. மனிதப் பிறப்பு ஒன்பது இலட்சம். விலங்கு, பறலை, நீர் வாழ்வன. ஆகிய இவற்றின் பிறப்பின் வகை தனித்தனிப் பத்து பத்து இலட்சம். (அதாவது முப்பது லட்சம்) ஊர்ந்து செல்லும் உயிர்வகைகளின் பிறப்புப் பதினொரு இலட்சம். தாவர வகையின் பிறப்பின் வகை இருபது இலட்சம். ஆகவே, எழுவகைப் பிறப்பின் யோனி பேதங்கள் எண்பத்துநான்கு இலட்சம் ஆகும். இந்தப் பிறப்பு வகைகள்,

**"ஊர்வ பதினொன்றாம் ஒன்பது மானுடம்**
**நீர்ப்பறவை நாற்காலோர் பப்பத்தாம்-சீரிய**
**பந்தமாம் தேவர் பதினால் அயன்படைத்த**
**அந்தமில்சீர்த் தாவரம்நால் ஐந்து",**

என்றும்,

**"நானிலநீர் பைமுட்டை நால்வகை யோனிசுரர்**
**மானுடநீர் வாழ்பறவை மாகிருமி-ஞானமிலா**
**மண்பட்ட தாவரம்என் றேழாய் வரும்பவநூ**
**றெண்பத்தி னான்கா யிரம்"**

என்றும், கூறப்பட்ட பழம்பாடல்களால் தெளிக.

திருஞானசம்பந்தர் எல்லா உயிர்களிடத்தும் இறைவன் நிறைந்துள்ளான் என்பதை உணர்ந்த வந்தபோது,

**"உரைசேரும் எண்பத்து நான்குநூ றாயிரமாம் யோனிபேதம்**
**நிரைசேரப் படைத்தவற்றின் உயிர்க்குயிராய் அங்கங்கே நின்றன்கோயில்**
**வரைசேரும் முகில்முழவ மயில்கள்பல நடமாட வண்டு பாட**
**விரைசேர்பொன் இதழிதர மென்காந்தன் கைஏற்கும் மிழலை ஆமே**

என்று அருளிச் செய்திருப்பதையும் ஈண்டு நினைவு கொள்க. இவற்றின் கருத்துகளையே நம் ஐயா, "கருவர்க்கம்" என்று மிகச் சுருங்கிய அளவில் உணர்த்திவிட்டனர்.

ஆளுடைய பிள்ளையார், இறைவன் ஒருவனே ஆன் மக்களையே அஞ்சேல் என்று கூறி அருள் புரிபவன் என்பதையும்,

**"புலன்ஐந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி அறிவழிந்திட்டு ஐம்மேலுந்தி**
**அலமந்த போதாக அஞ்சேல்என் றருள்செய்வான் அமரும் கோயில்**
**வலம்வந்த மடவார்கள் நடமாட முழவதிர மழைஎன் றஞ்சிச்**
**சிலமந்தி அலமந்து மரம்ஏறி முகில்பார்க்கும் திருவையாறே"**

என்றும் பாடியுள்ளனர்.

ஆளுடைய அடிகள். தமக்கு இறைவனைத் தவிர வேறு எவரும் அஞ்சாதே என்று கூற வல்லவர் இயலர் என்னும் முறையில்,

**“என்னைஅப் பாஅஞ்சல் என்பவர் இன்றிநின் றெய்த் தலைந்தேன்**
**மின்னைஒப் பாய்விட் டிடுதிகண் டாய்உவ மிக்கில் மெய்யே**
**உன்னைஒப் பாய்மன்னும் உத்தர கோசமங் கைக்கரசே**
**அன்னைஒப் பாய்எனக் கத்தன்ஒப் பாய்என் அரும்பொருளே”.**

என்று முறையிட்டுள்ளனர்.

ஆளுடைய நம்பிகளும் இறைவனை நோக்கி, தம்மை அஞ்சேல் என்று அருள் செய்யுமாறு வேண்டி,

**“வான நாடனே வழித்துணை மருந்தே மாசிலா மணியே மறைப்பொருளே**
**ஏன மாஎயி றாமையும் என்பும் ஈடுதாங்கிய மார்புடையானே**
**தேனெய் பால்தயிர் ஆட்டுகந் தானே தேவனே திருவாவடுதுறையுள்**
**ஆனை யேஎனை அஞ்சல்என் றருலாய்ஆ ரெனக் குறவமரர்கள் ஏறே”**

என்றும் பாடி வழிகாட்டி இருத்தலின், நம் வள்ளலாரும் இறைவனை நோக்கி “வெருவற்க என்றனை ஆண்டருள் ஈதென் விண்ணப்பமே” என்று வேண்டுவராயினர். (213)

**ஒண்ணுதல் ஏழை மடவார்தம் வாழ்க்கையில் உற்றிடினும்**
**பண்ணுதல் ஏர்மறை ஆயிரம் சூழும்நின் பாதத்தையான்**
**எண்ணுத லேதொழில் ஆகச்செய் வித்தென்னை என்றுகொள்வாய்**
**கண்ணுத லேகரு ணைக்கட லேஎன் கருத்திதுவே.**

(பொ-ரை.) “நெற்றிக்கண் படைத்த நிமலனே! கருணைக் கடலே! ஒளி பொருந்திய நெற்றியையுடைய பெண்களின் ஆசையில் ஈடுபடும் வாழ்க்கையில் சேர்ந்திருந்தாலும், இசையோடு சொல்லப் படுகின்ற அழகிய வேதங்கள் ஆயிரம் சூழ்ந்து போற்றும் உன் திருவடிகளை எண்ணும் பணியே எனக்கு அமையுமாறு செய்து, என்னை ஏற்றுக் கொள்வாயாக. இதுவே என் கருத்தாகு”. (எ-து.)

(அ-சொ.) கண்ணுதல் - நெற்றிக் கண்ணுடைய சிவபெருமான். நுதல் - நெற்றி, ஏழை. அறிவு குறைந்த மடவார், (இளம்பெண்கள்). உற்றிடினும் - சேர்ந்திருந்தாலும். பண்-இசை. ஏர்-அழகிய. மறை-வேதம். ஏன்றுகொள்-ஏற்றுக்கொள்.

(இ-கு.) கண்ணுதல், அன்மொழித்தொகை, ஒண்மை +நுதல், பண்+நுதல், எனப் பிரிக்க பெய்வித்து, பிறவினை.

(வி-ரை.) ஏழை என்பதற்கு ஈண்டுச் சொல்வக் குறைவு என்பது பொருள் அன்று. அறிவு குறைவு என்பதாம். வடமொழி வேதம் இசையோடு ஓதப் படுவதை இன்றும் கோயில்களில் கேட்கலாம். எனவேதான் “பண் நுதல் ஏர் மறை”

எனப்பட்டது. வேதம் நான்கே அன்றி ஆயிரமும் ஆகும். இந்த உண்மையினை "ஆயிர மறைக்கு ஒரு பொருளாய் இருப்பவன்" என்று குமரகுருபரர் கூறுதலால் உணர்கிறோம். இதனால்தான் ஈண்டு "ஏர் மறை ஆயிரம்" எனப்பட்டது.

நம்பி ஆரூரர் பரவை நாச்சியார் சங்கிலி நாச்சியார் ஆகிய இரு மடவார்களின் வாழ்க்கையில் ஈடுபட்டு இருந்தார் என்றாலும், இறைவனடியினை மறவாது அத்திருவடிப் பற்றிலே ஆழ்ந்திருந்தார். இந்த உண்மையினைச் சேக்கிழார்,

**"தென்னாவ லூர்மன்னன் தேவர்பிரான் திருவருளால்**
**மின்னாரும் கொடிமருங்குல் பரவைஎனும் மெல்லியல்தன்**
**பொன்னாரும் முலைஓங்கல் புணர்குவடே சார்வாகப்**
**பன்னாளும் பயில்யோகப் பரம்பரையின் விரும்பினார்**

**தன்னையா ளுடையபிரான் சரணார விந்தமலர்**
**சென்னியிலும் சிந்தையிலும் மலர்வித்துத் திருப்பதிகம்**
**பன்னுதமிழ்த் தொடைமாலை பலசாத்திப் பரவைஎனும்**
**மின்னிடையாள் உடன்கூடி விளையாடிச் செல்கின்றார்"**

என்று விளக்கிச் சென்றார். சிவப்பிரகாச சுவாமிகளும், சுந்தரருடைய சிற்றின்ப நிலையினும் இறைவன் திருவடிகளின் இன்பத்தினை மறவாதிருந்தமையினைப் பற்றி அறிவிக்கும் போது,

**"செல்வநல் ஒற்றி ஊரன் செய்யசங் கிலியால் ஆர்த்தும்**
**மல்லல்அம் பரவை தன்கண் மாழ்குற அமிழ்த்து மேனும்**
**அல்லும்நன் பகலும் நீங்கா தவன்மகிழ் அடியில் எய்தி**
**நல்லஇன் படைத்தி ருப்பன் நம்பிஆ ரூரன் தானே"**

என்று அறிவித்துள்ளனர்.

இந்த நிலை தமக்கு வேண்டும் என்னும் கருத்தினால்தான் நம் வள்ளலார் "மடவார்தம் வாழ்க்கையில் உற்றிடினும் * * நின் பாதத்தை யான் எண்ணுதலே தொழிலாகச் செய்வித்து என்னை ஏன்று கொள்வாய்" என்று வேண்டுதல் புரிந்தார். (214)

**தளைக்கின்ற மாயக் குடும்பப் பெருந்துயர் தாங்கிஅந்தோ**
**இளைக்கின்ற ஏழைக் கிரங்குகண் டாய்சிறி தேஇறகு**
**முளைக்கின்ற போதறுப் பார்போல்நின் நாமம் மொழித்திடுங்கால்**
**வளைக்கின்ற மாயைக்கிங் காற்றேன்முக் கண்ணுடை மாமணியே.**

(பொ-ரை.) "மூன்று கண்ணுடைய சிறந்த இரத்தினமே! என்னைக் கட்டுப்படுத்துகின்ற பொய் வாழ்வாகிய குடும்பத்தால் ஏற்படுகின்ற பெருந் துன்பத்தைத் தாங்கி ஐயோ, இளைத்து உருகிப் போகின்ற இந்த எளியவனாகிய எனக்கு இரக்கம் காட்டுவாயாக. பறவைக்கும் சிறிது இறகு முளைக்கின்றபோதே, அதன் சிறகுகளைக் கத்தரித்து விடுபவர்களைப்போல் எனக்குச் சிறிது உணர்வு வந்து உன் திருப்பெயரைச் சொல்லத் தொடங்கும்போதே, என்னை உலக

வாழ்க்கையாம் மாயை வளைத்துக்கொண்டு உன் திருப்பெயரைச் சொல்ல ஒட்டாமல் தடைப்படுத்துகிறதே. இந்தச் சூழ்நிலையினை என்னால் பொறுக்க முடியவில்லையே!" (எ-து.)

(அ-சொ.) மா-சிறந்த. தளைக்கின்ற-கட்டுப்படுத்துகின்ற, நாமம்-திருப்பெயர், மொழிந்திடுங்கால்-சொல்லத்தொடங்கும் போது. ஆற்றேன் - பொறுக்கமாட்டேன்.

(இ-கு.) மா - உரிச்சொல், கண்டாய். முன்னிலை அசைச்சொல்.

(வி-ரை.) மாயை என்பது, புவன போக தனுகரணங்களை உயிர்க்காய் வைத்து, மூவகை மலங்களில் மலமாய் இருந்துகொண்டு மயக்கமும் செய்யும். ஆதலின் "வளைக்கின்ற மாயைக்கு இங்கு ஆற்றேன்" என்று அஞ்சிக் கூறினார் நம் ஐயா. (215)

**மஞ்சடை வான நிறத்தோன் அயன்முதல் வானவர்க்கா**
**நஞ்சடை யாளம் இடும்மிடற் றோய்கங்கை நண்ணுகின்ற**
**செஞ்சடை யாய்நின் திருப்பெயர் ஆகச் சிறந்தஎழுத்**
**தஞ்சடை யார்கண்கள் பஞ்சடை யாமுன் அறிவிலரே.**

(பொ-ரை.) "மேகத்தைப்போன்ற நிறமுடைய திருமால் பிரமன் முதலான தேவர்களைக் காக்கும் கடவுள், நான் ஒருவனே அன்றி வேறு எவரும் இலர் என்பதற்கு அடையாளமாக விடத்தை ஏற்று அதனைக் கழுத்தில் வைத்துக் காட்டுகின்ற கருணா மூர்த்தியே! கங்காதேவி பொருந்தி இருக்கின்ற சிவந்த சடைமுடி யுடையோனே! உன் திருப்பெயராகச் சிறந்து விளங்குகின்ற நமசிவாய என்னும் மந்திரத்தை முதுமைப் பருவம் உற்று, கண்கள் பார்வை மங்கி வருவதற்கு முன் தம் உள்ளத்தில் வைத்துச் சிந்தியாதவர்கள் பெரிய மூடர்கள் ஆவார்" (எ-து.)

(அ-சொ.) மஞ்சு - மேகம். மஞ்சு அடைவான நிறத்தோன் - மேகநிறம் நிறைந்த திருமால். அயன் -பிரமன். வானவர்க்கா-தேவர்களுக்காக. மிடறு-கழுத்து. நண்ணுகின்ற-நெருங்கி வாழ்கின்ற. எழுத்து அஞ்சு-நமசிவாய என்னும் ஐந்தெழுத்தால் ஆகிய மகா மந்திரம். பஞ்சடைதல் - பார்வை மங்குதல்.

(இ-கு.) ஆக, என்பது ஆ என நின்றது தொகுத்தல் விகாரம் பற்றி என்க. அஞ்சு, ஐந்து என்பதன் முதல் போலி.

(வி-ரை.) திருமால் கருநிறத்தன் ஆதலின் அவனை "மஞ்சடைவான நிறத்தோன்" என்றனர். இறைவன் விடத்தை விழுங்கி விடாமல் அதனை அப்படியே கழுத்தில் தங்கவைத்ததன் குறிப்பு, அவனே எத்தகைய தீங்கினின்றும் உயிர்களைக் காத்தருள்பவன் என்பதைக் காட்டுதற்காகவே ஆகும். அத் திருநீலகண்டம் இறைவனின் கருணையின் அடையாளம். இந்த உண்மையினைச் சேக்கிழார்,

**"எவ்விடத் தும்அடியார் இடர்காப்பது கண்டம்"**

என்று கூறியுள்ளனர். இதனால்தான் அக் கண்டம் மறைநவில் அந்தணர்களால் என்றும் துதிக்கப்பட்டு வருகின்றது. எனவேதான், "வானவர்க்கா நஞ்சடையாளம் இடும்மிடற்றோய்" என்றனர்.

இறைவன் கங்கையினைத் தலையில் தரித்திருப்பதும் அவனது கருணையினைக் காட்டுவதாகும். இதனை நம்பி ஆரூரர், "பகீரதன் வேண்ட ஆர்த்துவந்திழியும் புனல் கங்கை நங்கையாளைச் சடைமிசைக் கரந்த தீர்த்தனே" என்று பாராட்டியுள்ளனர். இதனை எண்ணியே நம் ஐயாவும், "கங்கை நண்ணுகின்ற செஞ்சடையாய்" என்றருளிச் செய்தனர்.

"நந்தி (சிவபெருமான்) நாமம் நமச்சிவாயவே" என்று திருஞானசம்பந்தரும், "படைக்கலமாக உன்நமாத் தெழுத்தஞ்சும் என் நாவில் கொண்டேன்" என்று திருநாவுக்கரசரும் அருளிச்செய்திருப்பதால் இறைவர்க்குரிய திருப்பெயர் ஐந்தெழுத்தால் ஆகிய பஞ்சாட்சரம் என்பதை உணரவும். இது குறித்தே நம் வள்ளலார், "நின்திருப்பெயராகச் சிறந்த எழுத்து அஞ்சு" என்றனர்.

நாம் முதுமைப் பருவம் உற்றுக் கண் பார்வை குறைவதற்கு முன்பு இறைவன் திருப்பெயரைக் கூறி உய்யவேண்டும் என்ற கருணையினால்தான் திருவெண்காடரும்,

**"காலன் வரும்முன்னே கண்பஞ் சடைமுன்னே**
**பாலுன் கடைவாய் படுமுன்னே-மேல்விழுந்தே**
**உற்றார் அழுமுன்னே ஊரார் சுடும்முன்னே**
**குற்றாலத் தானையே கூறு"**

என்று உபதேசித்துள்ளார். இந்தக் கருணை உள்ளத்தினால் தான் வள்ளலாரும், "சிறந்த எழுத்தஞ்சு அடையார் கண் பஞ்சடைமுன் அறிவிலரே" என்று பாடிக்காட்டினார். (216)

**இலங்கா புரத்தன் இராக்கதர் மன்னன் இராவணன்முன்**
**மலங்காநின் வெள்ளி மலைக்கீழ் இருந்து வருந்திநின்சீர்**
**கலங்காமல் பாடிடக் கேட்டே இரங்கிக் கருணைசெய்த**
**நலங்காணின் தன்மையின் றென்அள வியாண்டையின் தண்ணியதே.**

(பொ-ரை.) "இலங்காபுரிக்கு அரசனும், அவ் இலங்கை இராட்சதர்களுக்குத் தலைவனும் ஆன இராவணன், முன் ஒரு சமயம் மனம் மயங்கி உன் வெள்ளிமலையின் கீழ் அகப்பட்டுக் கொண்டு வருந்திப் பின் உன் சீர்த்தியை அவன் மனம் கலங்காமல் பாடக் கேட்டு நீ அவன் பொருட்டு மிக்க இரக்கம் காட்டிக் கருணை செய்த உனது நலத்தின் மாண்பினைக் கண்டால், அத்தகைய உயர் கருணையினது தன்மையை என் அளவில் உணர்ந்து எங்கு அணுகிப் போற்ற முடியும்?"

(அ-சொ.) இராக்கதர்-இராட்சதர். மலங்கா நின்று-மனம் மயங்கி. யாண்டை-எங்கு. நண்ணியது-அணுகியது.

(இ-கு.) மலங்கா நின்று, செய்யா என்னும் வாய்ப்பாட்டு வினை எச்சம். இயாண்டை, என்பதில் உள்ள இ குற்றிய லிகரம் ஆகும்.

(வி-ரை.) இப்பாட்டு இறைவன் இராவணனுக்கு அருள் செய்த அருள் செயலை உணர்த்துவதாகும். இராவணனுக்கு இறைவன் செய்த திருவருளைச் சம்பந்தரும், அப்பரும், சுந்தரரும் பெரிதும் பாராட்டிப் பேசியுள்ளனர். மேலும் அப்பர் பெருமானார் நான்காம் திருமுறையில்,

**"அரக்கன் கயிலை மலைக்கீழ்க் கதற ஒருவிரலால்**
**அடர்த்தியின் னருள்செய்த உமாபதி"**

என்றும்,

**"முன்னிற்பவர் இல்லா முரண்அரக்கன் வடகயிலை**
**தன்னைப் பிடித்தெடுத்தான் முடிதடம் தோள்இற ஊன்றிப்**
**பின்னைப் பணிந்தேத்தப் பெருவாள் பேரொடும் கொடுத்த**
**மின்னில் பொலிசடை யான்இடம் வீழிம் மிழலையே"**

என்று ஆளுடைய பிள்ளையாரும்,

**"கைத்தலங்கள் இருபதுடை அரக்கர் கோமான்**
**கயிலைமலை அதுதன்னைக் கருதா தோடி**
**முத்திலங்கு முடிது ளங்க வளைகள் எற்றி**
**முடுகுதலும் திருவிரல்ஒன் றவன்மேல் வைப்பப்**
**பத்திலங்கு வாயாலும் பாடல் கேட்டுப்**
**பரிந்தவனுக் கிராவணன்என் றீந்த நாம**
**தத்துவனைத் தலைஆலங் காடன் தன்னைச்**
**சாராதே சாலநாள் போக்கி னேனே"**

என்று ஆளுடைய அரசரும்,

**"கருவரைபோல் அரக்கன் கயிலைம்மலைக் கீழ்க்கதற**
**ஒருவிரலால் அடர்த்தின் னருள்செய்த உமாபதிதான்**
**திரைபொரு பொன்னி நன்னீர்த் துறைவன் திகழ் செம்பியன்கோன்**
**நரபதி நன்னிலத்துப் பெருங்கோயில் நயந்தவனே"**

என்று ஆளுடைய நம்பிகளும் பாராட்டி இருப்பதைக் காண்க. இவ்வாறு பாடிப் பரவியதன் கருத்து, இறைவன் குற்றத்தையும் குணமாகக் கொண்டு இன்னருள் புரிபவன் என்பதற்காகவே ஆகும். இராவணன் செய்த குற்றம் இறைவன் வீற்றிருந்த மலையை அசைத்ததாகும். இராவணன் ஆணவத்திமிர் படைத்தவன். அவன் குபேரனிடமிருந்து பறித்துக் கொண்ட தேரின்மீது இவர்ந்து சென்ற போது, அவனது சாரதி இராவணனிடம் "ஐய, இது கயிலைமலை. இதன் மீது தேர் செல்லாது" என்று கூறவும் கேட்காது, செருக்குடன் அவனை முனிந்து "விடுவிடு" என்று கூறியது கொண்டு இந்த உண்மையினை உணரலாம். இதனை அப்பர் பெருமான்,

**"கடுதியதேர் செலாது கயிலாய மீது**
**கருதேல் உன்வீரம் ஒழிநீ**
**முடுகுவதன்று தன்மம்என நின்று பாகன்**

**மொழிவானை நின்று முனியா**
**விடுவிடுஎன்று சென்று விரைவுற் றரக்கன்**
**வரைமீதுற் றெடுக்க முடிதோள்**
**நெடுநெடிற்று வீழவிரல் உற்ற பாதம்**
**நிறைவுற்ற தென்றன் மனனே"**

என்று அறிவித்துள்ளனர்.

இத்தகைய கொடிய அரக்கனுக்கு அருள் புரிந்த இறைவனே இப்போது எனக்குத் திருவருள் செய்ய முன் வரவில்லையே என்று நினைந்தே,

**"தன்மை இன்று என் அளவியாண்டையின் நண்ணியதே"**

என்று வினவுவார் ஆயினர். (217)

**உடைஎன்றும் பூண்என்றும் ஊண்என்றும் நாடி உழன்றிடும்இத்**
**நடைஎன்றும் சஞ்சலம் சஞ்சலம் காண்இதில் நான்சிறியேன்**
**புடைஎன்று வெய்யில் உறும்புழுப் போன்று புழுங்குகின்றேன்**
**விடைஎன்று மால்அறம் கொண்டோய்என் துன்பம் விலக்குகவே**

(பொ-ரை.) "உனக்குரிய வாகனமாகத் திருமாலையும், தரும தேவதையையும் கொண்டு காட்சிதரும் இறைவனே! உடுக்க உடைவேண்டும் என்றும், அணிந்துகொள்ள நகைவேண்டும் என்றும், உண்பதற்கு உணவு வேண்டும் என்றும் தேடி அலைகின்ற இந்தப்போக்கு என்றைக்கும் துன்பம் துன்பமே ஆம். இந்தத் துயரத்தால், வெயில்தான் இருக்க இடம் என்று, அதில் அகப்பட்டுத் துன்புறுகின்ற புழுவைப்போல வாடி வதங்குகின்றேன். இப்படித் துயருறும் இத் துன்பத்திலிருந்து என்னை விலக்கித் திருவருள் செய்வாயாக" (எ-து.)

(அ-சொ.) விடை-இரடபம். மால் - திருமால். அறம் - தருமதேவதை. பூண்-நகை. ஊண்-உணவு. நாடி-தேடி. நடை-போக்கு. சஞ்சலம்-துன்பம்.புடை-இடம். உறும்-சேரும்.

(இ-கு.) மால் அறம், உம்மைத்தொகை. நடை, தொழிற்பெயர். சஞ்சலம் சஞ்சலம், அடுக்குத்தொடர். காண், முன்னிலை அசைச்சொல்.

(வி-ரை.) இறைவன் அரக்கர்களுக்கு காட்சி அளிக்கும்போது, மால் விடையிலும், அன்பர்கட்குக் காட்சி அளிக்கும்போது தரும விடையிலும் காட்சி தருவன். எனவேதான் "விட என்று மால் அறம் கொண்டோய்" என்றனர். "இடபமதாய்த் தாங்கினான் திருமால் காண் சாழலோ" என்று மணிவாசகர் கூறுவதுகொண்டு, திருமால் இறைவர்க்கு வாகனமாய் அமைந்திருத்தலைக் காண்க. ஊணுக்கும் ஊனுக்கும் பொருளில் வேறுபாடு உண்டு. ஊண், உணவு-ஊன், மாமிசம். "சாணும் (ஒருசாண் வயிறு) வளர்க்க அடியேன் படும் துயரம் சற்றல்லவே" என்றும், "பொன்னை நினைந்து வெகுவாகத் தேடுவர்" என்றும் பட்டினத்தடிகள் கூறியுள்ளவற்றை ஈண்டு நினைவு கூர்க. (218)

**நிலைஅறி யாத குடும்பத் துயர்என்னும் நீத்தத்திலே**

**தலைஅறி யாது விழுந்தேனை ஆண்டருள் தான்அளிப்பாய்**
**அலைஅறி யாத கடலேமுக் கண்கொண்ட ஆர்அமுதே**
**விலைஅறி யாத மணியே விடேல்இதென் விண்ணப்பமே.**

(பொ-ரை.) "அலையை அறியாத கடலே! மூன்று கண்கொண்ட அரிய அமுதமே! விலை மதிக்க முடியாத மாணிக்கமே! நிலையை உணராத குடும்பமாம் துயர் என்னும் வெள்ளத்தில் தலை தெரியாதபடி விழுந்து அழுந்தியுள்ள என்னை ஆண்டுகொண்டு திருவருள் புரிவாயாக. என்னைக் கைவிடாதே. இதுவே என் வேண்டுகோள்" (எ-து.)

(அ-சொ.) ஆர் அமுது - அருமையான அமுதம். நீத்தம் - வெள்ளம்.

(இ-கு.) தான், அசைச்சொல்.

(வி-ரை.) கடல், ஒன்றாக இருந்து பல ஆறுகளைத் தன்னகத்தே ஏற்றுக்கொள்வது போல, இறைவன் ஒருவனாக இருந்து பல சமயங்களாகிய ஆறுகளை எல்லாம் தன்னையே அடையச் செய்கின்றமையின், இறைவனைக் கடல் என்றனர். இயற்கைக் கடலுக்கும் இறைவனாம் கடலுக்கும் உள்ள வேறுபாடு அலை உண்மையும், அலை இன்மையும் ஆகும். நவமணிகளுக்கு விலையை மதிப்பிட முடியும். ஆனால், இறைவனாம் மணிக்கு இன்னவிலை என்று கூற முடியாது. ஆகவேதான் "விலை அறியாத மணியே" என்றனர். இந்தத் தருணத்தில் பகழிக் கூத்தர் பாடியுள்ள,

**"கத்தும் தரங்கம் எடுத்தெறியத்**
**கடுஞ்சூல் உளைந்து வலம்புரிகள்**
**கரையில் தவழ்ந்து வாலுகத்தில்**
**கான்ற மணிக்கு விலைஉண்டு**
**தத்தும் கரட விகடதட**
**தந்திப் பிறைக்கூன் மருப்பில்விளை**
**தரளம் தனக்கு விலைஉண்டு**
**தழைத்துக் கழுத்து வளைந்தமணிக்**
**கொத்தும் சுமந்த பசுஞ்சாலிக்**
**குளிர்முத் தினினுக்கு விலையுண்டு**
**கொண்டல் தரும்நித்தி லம்தனக்குக்**
**கூறும்தரம் உண்டுன கனிவாய்**
**முத்தம் தனக்கு விலைஇல்லை**
**முருகா முத்தம் தருகவே**
**முத்தம் சொரியும் கடல்அலைவாய்**
**முதல்வா முத்தம் தருகவே"**

என்னும் பாடலை நினைவு கூர்தல் இனிது.

அருணகிரிநாதர் "நிலையாத சமுத்திரமான சமுசாரத்துறைகளில் மூழ்கி நிசமான தெனப் பலபேசி அதனூடே" இருந்து துன்பப்படுவதைக் கூறினார். ஆதலின் அந்த முறைக்கேற்ப நம் வள்ளலார், "நிலையாத குடும்பத்துயர் என்னும் நீத்தத்திலே தலை அறியாது விழந்தேன்" என்று பாடி அருளினார். (219)

**மெய்யகத் தேகணப் போதும் விடாது விரும்புகின்றோர்**
**கையகத் தேநின் றொளிர்கனி யேநுதல் கண்கரும்பே**
**வையகத் தேநினை அல்லாமல் நல்துணை மற்றிலைஇப்**
**பொய்யகத் தேன்செயும் தீங்கா யிரமும் பொறுத்தருளே.**

(பொ-ரை.) “உடலுக்கு உள்ளே அமைத்து, சிறிது நேரமேனும் மறவாது எப்போதும் நினைந்து விரும்பி இருக்கின்றவர்களுக்கு உள்ளங்கை நெல்லிக் கனிபோல் இருந்து விளங்கிக் கொண்டிருக்கும் கனியே! நெற்றிக்கண் படைத்த கரும்பே! இவ்வுலகில் உன்னைத் தவிர்த்து எனக்கு வேறு நல்ல துணை இல்லை. ஆகவே, பொய்யையுடைய யான் செய்யும் தவறுகள் ஆயிரம் இருந்தாலும் அவற்றைப் பொறுத்தருள்வாயாக.” (எ-து.)

(அ-சொ.) மெய் - உடல். அகம் - இடம். கணப்போது-சிறிதுநேரம். கையகத்தே-கையில். நுதல் - நெற்றி. வையகம் - உலகம்.

(இ-கு.) அகம், ஏழன் உருபு.

(வி-ரை.) இறைவன் ஞானிகளின் உடலையே கோயிலாகக் கொண்டு விளங்குவன். இது குறித்தே. திருமூலர் “உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான், என்றும், “உடம்பினையான் இருந்து ஓம்புகின்றேனே” என்றும் கூறினர். அப்பர் பெருமானும் “காயமே கோயிலாக” என்று கூறியுள்ளனர். எனவேதான் “ஈண்டு மெய் அகத்தே கணப்போதும் விடாது விரும்புகின்றோர்” எனப்பட்டது, “மெய் அகத்தே கணப்போதும் விடாது” என்பதற்கு மெய்யை உள்ளத்தை விட்டுச் சிறிதும் நீக்காது விரும்புபவர் என்று பொருள் கூறினும் கூறலாம். உள்ளங் கையில் அமைந்த நெல்லிக்கனி தன் உருவத்தை ஒளி மறைவின்றிக் காட்டுவதுபோல இறைவன் உடல் அகத்தே ஆன்மப் பிரகாசமாய் விளங்குதலின் “கையகத்தே நின்றொளிர் கனியே” எனப்பட்டனன்.

தீங்கு ஆயிரம் என்பது மிகுதிப் படுத்திச் சொல்லியதாகும். விதுரர், கிருஷ்ணன் தம் வீட்டிற்கு வந்தபோது அவனுக்கு உணவு சமைக்கச் சமையல்காரர்கட்குக் குறிப்பாக உணர்த்தினர் என்பதைக் கூறவந்த வில்லிபுத்தூரார்,

“அறுநூறாயிரம்மடையர்தமை (சமையல்காரர்களை) நோக்கினார், அவர்களும் விரைவுடன் சமைத்தனர்” என்று கூறினார். இவ்வாறு சிறிதைப் பெரிதாக கூறுவது உயர்வு நவிற்சி என்னும் அணியின்பால்படும்.

நம் ஐயா தம்மைப் பொய்யகத்தேன் எனக் கூறிக் கொள்வது தம் அடக்கப் பண்பை வெளிப்படுத்துகிறது. திருவாதவூரரும், “யானே பொய் என் அன்பும் பொய்” என்று இறைவன் முன் கூறிக் கொள்வதைக் காண்க. (220)

**முலைக்கலங் காரம் இடும்மட வார்மயல் மூடிஅவர்**
**தலைக்கலங் கார மலர்சூடு வார்நின் தனைவழுத்தார்**
**இலைக்கலங் கார்அவ் இயமன்வந் தால்என் இசைப்பர்வெள்ளி**
**மலைக்கலங் கார மணியேமுக் கண்கொண்ட மாமருந்தே.**

(பொ-ரை.) “வெள்ளிமலையில் அழகுடன் வீற்றிருக்கும் மணியே! மூன்று கண்களைக் கொண்ட சிறந்த மருந்தே! முலைக்கு நகைகளை இட்டு அழகு செய்து கொள்ளும் பெண்களின் காமமயக்கத்தால் மூடப்பட்டமக்கள், அப்பெண்களின் தலைக்கு அழகு செய்ய மலரை அவர்களின் தலையில் சூட்டுவார்கள். ஆனால் உன்னைப் போற்றுதல் செய்யார். இலை வடிவான சூலப் படையுடைய கரிய நிறம் கொண்ட இயமன் வந்தபோது அவர்கள் என்ன பதில் சொல்லுவார்களோ? தெரிய வில்லையே!” (எ-து.)

(அ-சொ.) மா-சிறந்த அலங்காரம்-நகை அழகு. மயல் - காம மயக்கம். வழுத்தார் -துதிக்கமாட்டார்கள். இலை-இலை வடிவான. கலம் - வேலாயுதம். கார் - கரிய நிறம்.

(இ-கு.) மயல் மூடி, மூன்றன் தொகை. இலைக்கலம், உவமத்தொகை.

(வி-ரை.) “கொய்த மலரைக் கொடுங்கையினால் அணைத்து மொய்குழலில் சூட்டுவன் முன் வந்து” என்று நள வெண்பாவும்” “மின்னார் தமக்கோர் அரசே! வெறிவேங்கை வீயும் புன்னாக வீயும் கொணர்ந்தேன் புனைகிற்றி” என்று கந்த புராணமும் கூறுவதனால் பெண்கள் தலையில் மலரைச் சூட்டவும், சூடவும் மக்கல் பெரிதும் விரும்பினர் என்பது தெரிகிறது. எனவேதான் “தலைக் கலங்காரமலர் சூடுவார்” எனப்பட்டது.

இறைவன் பிறவி நோயைப் போக்கும் மருந்தாவான். “மந்திரமும், தந்திரமும் மருந்துமாகித் தீராநோய் தீர்த்தருள வல்லான் தன்னை” என்று அப்பரும். “மருந்தவை மந்திரம் மறுமை நன் நெறி அவை” என்று திருஞானசம்பந்தரும், நம் வள்ளலார்,

**“நல்ல மருந்திம் மருந்து - சுகம்**
**நல்கும் வைத்திய நாத மருந்து”**

**“பிறப்பை ஒழிக்கும் மருந்து-யார்க்கும்**
**பேசப் படாத பெரிய மருந்து**
**இறப்பைத் தவிர்க்கும் மருந்து-என்னுள்**
**என்றும் மதுரித் தினிக்கும் மருந்து**
**புத்தமு தாகும் மருந்து-பார்த்த**
**போதே பிணிகளைப் போக்கும் மருந்து**
**பத்தர் அருந்தும் மருந்து-அனு**
**பானமும் தானாம் பரம மருந்து”**

என்று பாடியுள்ளார். ஆகவேதான் இறைவனை “மாமருந்தே” என்று விளித்தனர். (221)

**புரிகின்ற விட்டகம் போந்தடி பட்டுப் புறங்கடையில்**
**திரிகின்ற நாய்க்கும் சிரிப்பாம்என் பாவிச் சிறுபிழைப்பைச்**
**சொரிகின்ற புண்ணில் கனல்இடல் போல்எனும் தோறும்நெஞ்சம்**
**எரிகின்ற தென்செய்கு வேன்பிறை வார்சடை என்அமுதே.**

(பொ-ரை.) "பிறைச்சந்திரனை அணிந்த நீண்ட சடையுடைய என் தேவாமுதம் போன்ற சிவபெருமானே! பாவியாகிய எனது அற்பப் பிழைப்பானது விரும்புகின்ற வீட்டினுள் சென்று அடிபட்டு மீண்டும் வீட்டில் பின்புறமாகத் திரிந்து கொண்டிருக்கும் நாய்க்குக்கூடச் சிரிப்பைத் தருவதாகும். ஆகவே, என் பிழைப்பை என் நிலையை எண்ணும் போதெல்லாம் சீழும் செந்நீரும் சொரிகின்ற புண்ணில் தீ பட்டால் எப்படி எரியுமோ அதுபோல என்மனம் எரிகின்றது. இதற்கு நான் என் செய்வேன்?" (எ-து.)

(அ-சொ.) வார் - நீண்ட. புரிகின்ற-விரும்புகின்ற. போந்து-சென்று.

(இ-கு.) வீட்டகம் என்பதில் உள்ள அகம், ஏழன் உருபு. புறங்கடை, இலக்கணப்போலி, நாய்க்கும், இழிவு சிறப்பும்மை. எணும் என்பது, எண்ணும் என்பதன் தொகுத்தல் விகாரம், தோறும், என்பது இடைச்சொல்.

(வி-ரை.) நாய் எந்த நேரமும் அலைந்துகொண்டே இருக்கும். அது போல மனமும் அலைதலில் மனம் நாயின் அலைச்சலுக்கு ஒப்பிடப்பட்டுள்ளது. "என் பிழைப்பு நாய் பிழைப்பு" என்று உலகர் கூறுவர் ஆதலின் அந்தக் குறிப்பை இப்பாடல் தெரிவிக்கின்றது. மேன்மேலும் துன்பம் வருத்துவதற்குச் சொரிகின்ற புண்ணில் கனல் இடல்போல் என்னும் உவமை கூறப்பட்டது. இவ்வுவமையின் விளக்கத்தை இருநூற்று ஒன்பதாம் செய்யுளின் விசேட உரையில் காண்க. (222)

**மனக்கேதம் மாற்றும் மருந்தே பொதுஒளிர் மாணிக்கமே**
**கனக்கே துறவென் கருத்தறி யாமல் கழறுகின்ற**
**தனக்கேளர் பால்சென் றடியேன் இதயம் தளர்வதெல்லாம்**
**நினக்கே தெரிந்த தெனக்கே அருள நினைந்தருளே.**

(பொ-ரை.) "மனத்துயரை மாற்றும் மருந்தே! எல்லார்க்கும் பொதுவில் ஒளியுடன் திகழும் மாணிக்கமே! பருத்த உடலைத் தாங்கிய எனக்கு உன்னைத் தவிர வேறு உறவு யார் உளர்? என் எண்ணத்தை உணராமல், கண்டவாறு பிதற்றுகின்ற செல்வம் நிறைந்த உறவினர்களிடம் சென்று அடியேன் மனம் தளர்வது உனக்குத் தெரிந்ததே ஆகும். ஆகவே எனக்கு அருள் செய்ய உள்ளத்தே எண்ணுவாயாக" (எ-து.)

(அ-சொ.) ஏதம் - துன்பம். கனம் - உடல் பருமன். கழறுகின்ற-கூறுகின்ற. தனம் - செல்வம். கேளர்-உறவினர்.

(இ-கு.) கனக்கு+ஏது+உறவு+என், எனப்பிரித்துப் பொருள் காண்க. பால், ஏழன் உருபு.

(வி-ரை.) **இறைவனாகிய மருந்து,**
**சஞ்சலம் தீர்க்கும் மருந்து-எங்கும்**
**தானேதான் ஆகித் தழைக்கும் மருந்து**
**அஞ்சல்என் றாளும் மருந்து-சச்சி**
**தானந்த மாக அமர்ந்த மருந்து"**

என்று வள்ளலார் பின்னால் கூறி இருக்கின்றார் ஆதலின் ஈண்டு "மனக் கேதம் மாற்றும் மருந்தே" என்றார். இறைவன் இன்னார் இனியர் என்னாமல் எவர்க்கும் பொதுவாய் நின்று திருவருள் புரிதலின் "பொது ஒளிர் மாணிக்கமே" என்றனர். "எல்லார்க்கும் பொதுவில் நடம் இடுகின்ற அரசே" என்பதும் நம் ஐயா வாக்குத்தானே. (223)

**மோகம் கலந்த மனத்தேன் துயரங்கள் முற்றும்அற்றுத்**
**தேகம் கலந்த பவம்தீர்க்கும் நின்பதம் சிந்திக்கும்நாள்**
**போகம் கலந்த திருநாள் மலைஅற் புதப்பசுந்தேன்**
**பாகம் கலந்தசெம் பாலே நுதல்கண் பரஞ்சுடரே.**

(பொ-ரை.) "மலையில் வியக்கும் முறையில் தோன்றிய பசுந்தேன் ஆகிய உமாதேவியை ஒருபாகத்தில் சேர்த்துக் கொண்டு விளங்கும் நல்ல அமுதமே! நெற்றிக் கண்ணையுடைய மேலான ஒளிப்பிழம்பே! ஆசை மிகுந்த மனத்தையுடைய நான், துன்பம் யாவற்றையும் நீக்கி, உடலில் சேர்ந்துள்ள பாவங்களைத் தீர்க்கும் உன் திருவடிகளை நினைக்கும் நாள்தான் பேரின்பம் சேர்ந்த சிறந்தநாள் ஆகும்". (எ-து.)

(அ-சொ.) அற்புதம் - ஆச்சரியம். நுதல் - நெற்றி. பரம்-மேலான. பவம்-பாவம், பிறப்பு. போகம்-இன்பம்.

(இ-கு.) பசுந்தேன், உவமத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. பவம் பதம், குறுக்கல் விகாரம்.

(வி-ரை.) இறைவி மலையரசன் மகிழ இமயமலையில் தோன்றினாள். பர்வதராசன் மகப்பேறு வேண்டி இமயத்தில் தவம் கிடந்தபோது, அவன் வியக்கும்படி அங்குள்ள பதுமை என்னும் குளத்தில் ஒரு தாமரையில் குழந்தையாய்த் தோன்றினாள். இந்த உண்மையினைக் கந்தபுராணம்,

**"மெய்த்தவம் இயற்றிய வெற்பன் காணிய**
**அத்தடம் மலரும்ஓர் அரவிந் தத்தின்மேல்**
**பைத்ததோர் குழவியின் படிவத் துற்றனள்**
**எத்திறத் துயிரையும் ஈன்ற தொன்மையாள்"**

என்று கூறுகின்றது. இங்ஙனம் தோன்றிய இறைவி இறைவனுக்குத் தேன் போன்று இனியள் ஆயினாள். இறைவன் அத் தேன் கலந்த பால் ஆயினன். இந்தப் பொருத்தங்களை எல்லாம் உள்ளடக்கியே நம் ஐயா, "மலை அற்புதப் பசுந்தேன் பாகம் காலந்த செம் பாலே" என்றனர். "மோக ஆசை முறியிட்ட பெட்டியை" என்று தாயுமானார் கூறி இருப்பதற்கேற்ப, நம் வள்ளலாரும், "மோகம் கலந்த மனத்தேன்" என்றனர். "தேகம் கலந்தபவம்" என்பதைப்பவம் கலந்த தேகம் எனக்கொள்க. இத்தகைய சரீரத்தை யாதனா சரீரம் என்னும் சைவசித்தாந்தம். "நின்பதம் சிந்திக்கும் நாள் போகம் கலந்த திருநாள்" என்னும் தொடரைப் படிக்கும்போது, "பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே"

என்னும் அப்பர் பெருமானின் அருள்வாக்கையும் நினைத்துக் கொள்ளவேண்டும். தேகம் கலந்த பவம் என்பதற்குத் தேகத்தோடு கலந்து பிறக்கும் பிறப்பு என்றும் பொருள் காணலாம். (224)

**கோல்ஒன்று கண்ட இறைமகன் வாழ்வினும் கோடிபங்கு**
**மேல்ஒன்று கண்டனம் நெஞ்சேஎன் சொல்லை விரும்பினிஅஞ்**
**சேல்ஒன்று கண்ட மணீயான் வரைப்பசும் தேன்கலந்த**
**பால்ஒன்று கண்டகண் கொண்டுயர் வாழ்வு பலித்ததுவே.**

(பொ-ரை.) “மனமே! செங்கோல் கொண்டு அரசாளும் அரசன் வாழ்வைவிடக் கோடி பங்கு மேலான வாழ்வு ஒன்றைக் கண்டோம். என் சொல்லை விரும்பு. இனி அஞ்சாதே. நீலமணி பொருந்திய கழுத்தையுடையவனது இடப்பக்கத்தே மலை அரசன் பெற்றெடுத்த பசுந்தேன் கலந்த பால்போல் சுவைக்கும் உமாதேவியைக் கண்கள் கண்டுவிட்டன. இதனால் உயர்ந்த வாழ்வு வாய்த்தது. ஆகவே உனக்கு இனி ஏது அச்சம். அஞ்சாதே” (எ-து.)

(அ-சொ.) கோல்-செங்கோல். இறை மகன் - அரசன். ஒன்று-பொருந்திய. கண்டம் - கழுத்து. மணியான். நீலமணி போலும் கழுத்தையுடைய சிவபெருமான். வரை-இமயமலை. பசுந்தேன் கலந்தபால் - உமாதேவி.

(இ-கு.) விரும்பு+இனி+அஞ்சேன் எனப்பிரிக்க. பசுந்தேன் கலந்த பால், அன்மொழித்தொகை.

(வி-ரை.) இப்பாடல் நெஞ்சிற்கு அறிவுறுத்தும் முறையில் அமைந்துளது. இறைவனை அம்மை அப்பராகக் காணும் காட்சி அரச வாழ்வினும் சிறந்தது என்பது இப் பாடலின் கருத்து. இந்தத் தருணத்தில் இந்திரன் மகன் சயந்தன்,

**“தண்தேன் துளிக்கும் தருநிழல்கீழ் வாழ்க்கைவெஃகிக்**
**கொண்டேன் பெருந்துயரம் வான்பதமும் கோதென்றே**
**கண்டேன் பிறர்தம் பதத்தழிவும் கண்டனனால்**
**தொண்டேன் சிவனேநின் தூமலர்த்தாள் வேண்டுவனே”**

என்று கூறியதாகப் பாடும் கந்தபுராணச் செய்யுளை நினைவு கூர்தல் நன்று.

மலைத்தேன் மிக்க இனிப்புடையது. அம்மலைத்தேன் ஈண்டு உமாதேவி. அவள் மலையரசன் மகளாகத் தோன்றினமையின் நம் ஐயா, ‘வரைப் பசுந்தேன்” என்றனர். தேன் கலந்த பால் என்பது தேனும் பாலும் கலந்த பால் என்று பொருள் காணும் முறையில் அமைந்திருப்பினும், பால் என்பதற்கு இடப்பாகம் என்னும் பொருள் கண்டு தேனாகிய உமாதேவி இறைவனுக்கு இடப்பாகத்தே பொருந்தியுள்ள இடம் என உணர்ந்து இன்புறுவோமாக. (225)

**புலைஅள வோஎனும் நெஞ்சக னேன்துயர்ப் போகம்எட்டும்**
**மலைஅள வோஇந்த மண்அள வோஅந்த வான்அளவோ**
**அலைஅள வோஅன்று மன்றுன்நின் றோங்கும் அருமருந்தே**
**இலைஅள வோஎனும் தேவே அறிந்தும் இரங்கிலையே.**

(பொ-ரை.) "சிதம்பரப் பொற் சபையில் நின்று விளங்கும் அருமருந்தே! அகல நீளம் பரப்பு என்னும் அளவு கூற முடியாத் தேவனே! என் அற்பமான குணம் எவ்வளவு என்று அளவிட்டுக் கூற முடியாது மிகுந்த அற்ப குணம் பொருந்திய மனமுடையவனாகிய எனது துன்பம் கலந்த இன்பத்தின் அளவு எட்டு மலையின் அளவோ? அன்று. இந்த உலகப் பரப்பளவோ? அன்று. அந்த ஆகாயப் பரப்பளவோ? அன்று. அந்தக் கடலின் பரப்பு அளவோ? அன்று இவ்வாறு மலையினும், உலகினும், ஆகாயத்திலும், கடலினும் பெரியனவாக என் துன்ப இன்பம் பெருகி இருப்பதை நீ தெரிந்திருந்தும் எனக்கு நீ இரக்கம் காட்டவில்லையே!" (எ-து.)

(அ-சொ.) புலை-அற்பக்குணம். போகம் - இன்பம். மண்-உலகு. அலை-கடல். மன்று-சிதம்பரப் பொற்சபை.

(இ-கு.) புலை, பண்பாகுபெயர், துயரப் போகம். பண்புத்தொகை. மண், அலை இரண்டும் சினைஆகுபெயர்கள்.

(வி-ரை.) இலை அளவோ என்பதை அளவோ இல்லை என்று மாற்றிப் பொருள் காண்க. இறைவன் எங்கும் எவ்விடத்தும் நிறைந்திருப்பதனால் அவனை அளந்து கூற முடியாது. மாணிக்க வாசகர் இறைவனுடைய அடி முடிகளின் அளவைப்பற்றிக் கூறவந்த போது,

> **"கீதம் இனிய குயிலே கேட்டியேல் எங்கள் பெருமான்**
> **பாதம் இரண்டும் வினவில் பாதாளம் ஏழினுக் கப்பால்**
> **சோதி மணிமுடி சொல்லில் சொல்இறந்து நின்ற தொன்மை**
> **ஆதிகுணம் ஒன்றும் இல்லான் அந்தம்இலான்வரக் கூவாய்"**

என்று, உணர்த்தியுள்ளார். ஆகவேதான் நம் ஐயா "இலை அளவோ எனும் தேவே" என்றனர்.

எட்டுமலைகள் ஆவன். கைலை, இமயம், மந்தரம், விந்தம், நிடத ஏமகூடம், நீலகிரி, கந்தமாதனம் என்பன.

துயர்ப்போகம் என்னும் தொடரைப் பார்க்கும்போது துயரமும், போகமும் என்று பொருள் காணும்படி தோன்றும். அது பொருள் அன்று. ஈண்டுத்துன்பமாகிய இன்பமே கருதப்படுகிறது. இங்ஙனம் நம் ஐயா கூறுவதன் கருத்து இன்பம் என்று கருதி அதனைத் துய்ப்பது பெரும் துன்பத்துக்கு வழி வகுப்பதாகும் என்பது. இதனை ஓர் எடுத்துக் காட்டினால் விளக்கில் விளக்கம் ஏற்படும்.

ஒருவன் தனியே காட்டுவழியே வருகின்றான். அவனை ஒரு யானை துரத்துகிறது. அதற்குப் பயந்து ஓடும்போது அவன் கண் முன்னே ஓர் ஆலமரம் காட்சி அளிக்கிறது. அதன் விழுது தொங்கிக் கொண்டிருக்கின்றது. யானைக்குப் பயந்து அதனைப் பற்றித் தொங்கலானார். யானை மரத்தின் அருகேயே இருந்தது. இந்த நிலையில் ஓர் அலி அவன் தொங்கிக் கொண்டிருந்த விழுதைப் பல்லால் கடித்துக்கொண்டிருந்தது. அவன் கீழே குதித்து ஓடலாம் என்றால் அவ்விழுதுக்கு கீழே இருந்த கிணற்றில்தான் குதிக்கவேண்டும். அக் கிணறு நீர் இன்றித் தூர்ந்து இருந்தது. ஆகவே, அங்குக் கொடிய பாம்புகள் நெளிந்து கொண்டிருந்தன.

தரையில் குதித்தால் யானை தாக்கிவிடும். இத்தகைய துன்ப நிலையில் அவன் தொங்கிக் கொண்டிருந்த விழுதுக்கு மேலே மரத்தின் கிளையின் தேன்கூடு இருந்தது. அதிலிருந்து தேன் சொட்டிக் கொண்டிருந்தது. அந்தத் தேனுக்கு ஆசைப்பட்டுப் பல துன்பங்களுக்கு இடையில் இருந்த அம் மனிதன் தன் நாவை நீட்டி அத்தேன் துளியைச் சுவைத்தான். இதைப்போலவே உலகில் துயர்மிக்கிருந்தும் சிறு இன்பத்தின் பொருட்டு மக்கள் அவதி உறுகின்றனர். ஆகவேதான் நம் ஐயா துயர்ப் போகத்தின் மிகுதிக்கு மலை, மண், வான், அலை முதலான உதாரணங்களைக் காட்டினார். (226)

**கல்என்று வல்என்று மின்னார் புளகக் கனதனத்தைச்**
**சொல்என்று சொல்லுமுன் சொல்லுமந் தோநின் துணைஅடிக்கண்**
**நில்என்று பல்ல நிகழ்த்தினும் என்மனம் நிற்பதன்றே**
**அல்என்று வெல்களம் கொண்டோய்என் செய்வ தறிந்திலனே.**

(பொ-ரை.) "இருள் நிறம் என்று சொல்லத்தக்க வெற்றி கொண்ட கழுத்தையுடைய சிவபெருமானே! என் மனம் ஐயோ! மின்னலைப்போலும் ஒளிபடைத்த பெண்களின் பருத்த முலைகளை மலைபோன்று திரண்டு உருண்டுள்ளது என்றும், சொக்கட்டான் காய்போன்று உள்ளது என்றும் புகழ்ந்து பாராட்டிச் சொல்லுக என்று யான் சொல்லுமுன் சொல்லத் தொடங்குகிறது. ஆனால், உன் திருவடிகளில் அன்புகொண்டு ஒருமனப்பட்டு நில் என்று பலமுறை கூறினாலும் அம்மனம் நிற்பது இல்லையே! இதற்கு நான் என்ன செய்வேன்? ஒன்றும் தெரியவில்லையே!" (எ-து.)

(அ-சொ.) கல் - மலை.வல்-சொக்கட்டான் காய். மின்னார் - மின்னலைப்போன்ற ஒளியுடைய பெண்கள். புளகம் - பருத்தல். கனதனம் -கனமான முலை. துணை-இரண்டு. பல-பலமுறை. நிகழ்த்தினும்-சொன்னாலும். அல்-இருள். களம்-கழுத்து.

(இ-கு.) பல்ல, விரித்தல் விகாரம்.

(வி-ரை.) மாதர்களின் முலை பருத்து வன்மையாய் இருத்தலின், அதற்கு உவமையாக மலையை உவமை காட்டுவது புலவர் மரபு. சொக்கட்டான் காய் அடி பருத்து, முனை சிறுத்து இருத்தலின், அதனையும் கொங்கைக்கு உவமை கூறுதல் கவிஞர்களின் இயல்பு. இதனை அவர் அவர்களின் இலக்கியங்களில் பரக்கக் காணலாம். அந்தக் குறிப்பில் தான், கல், வல் என்னும் உவமைகள் கொங்கைக்கு காட்டப்பட்டன. இந்தத் தருணத்தில்,

**"சிற்றம் பலமும் சிவனும் அருகிருக்க**
**வெற்றும் பலம்தேடி விட்டோமே-நித்தம்**
**பிறந்திடத்தைத் தேடுதே பேதைமா நெஞ்சம்**
**கறந்திடத்தை நாடுதே கண்"**

என்னும் பட்டினத்தார் பாடலை நினைவுகொண்டு, இத்துடன் சிவபோக சாரம் என்னும் நூல் மனத்தின் நிலையைப் பற்றி

**"ஆசைஅறாய் பாசம் விடாய் ஆனசிவ பூசைபண்ணாய்**

**நேசமுடன் ஐந்தெழுத்தை நீநினையாய்-சீசி**
**சினமே தவிராய் திருமுறைகள் ஓதாய்**
**மனமே உனக்கென்ன வாய்"**

என்று கூறியுள்ளதையும் எண்ணிக் கொள்ளவும். (227)

**கள்ளா டியகொன்றைச் செஞ்சடை யோய்நல் கனகமன்றின்**
**உள்ளா டியமலர்ச் சேவடி யோய்இவ் உலகியல்கண்**
**எள்ளா டியசெக் கிடைப்படல் போல்துன் பிடைஇளைத்துத்**
**தள்ளா டியநடை கொண்டேற்கும் நல்நடை தந்தருளே.**

(பொ-ரை.) "தேன் நிறைந்த கொன்றைப் பூவைச் சூடிய செஞ்சடையுடைய இறைவ! நல்ல பொன் சபையில் திருநடம் புரிகின்ற தாமரை மலர்போன்ற சிவந்த திருவ்டிகளையுடையோய்! இந்த உலக வாழ்க்கையில் செக்கில் இட்ட எள்ளைப் போலத் துன்பத்தால் நசுக்குண்டு சோர்ந்து தள்ளாடிய நடைகொண்டு வாழும் எனக்கு நல்ல போக்கை அருள் செய்வாயாக". (எ-து.)

(அ-சொ.) கள்-தேன். கனகம் - பொன். மன்று-சபை. நடை-போக்கு.

(இ-கு.) மலர்ச்சேவடி. உவமத்தொகை, சேவடி, பண்புத்தொகை. செம்மை+அடி, நடை, தொழிற்பெயர். (228)

**மருக்கா மலர்க்குழல் மின்னார் மயல்சண்ட மாருதத்தால்**
**இருக்கா துழலும்என் ஏழைநெஞ் சேஇவ் இடும்பையிலே**
**செருக்கா துருகிச் சிவாய நமஎனத் தேர்ந்தன்பீனால்**
**ஒருக்கால் உரைக்கில் பெருக்காகும் நல்இன்பம் ஓங்கிடுமே.**

(பொ-ரை.) "பூந்தோட்டத்தில் மலர்ந்த வாசனை மிக்க மலரை அணிந்த கூந்தலையுடைய மின்னல் ஒளிபெற்ற பெண்களின் காம மயக்கமாகிய பெருங் காற்றால் தள்ளுண்டு, சிறிதேனும் அமைதி கொண்டு இல்லாமல் அலைகின்ற என் அறிவற்ற மனமே! இந்தத் துன்பத்திலே திமிர்கொண்டு இராமல் உள்ளம் உருகிச் சிவாயநம என்று கூறவேண்டும் என்னும் நல்லுணர்ச்சியைப் பெற்று, அன்பினால் ஒருமுறையேனும் சிவாயநம என்று கூறினால் நல்ல இன்பம் ஓங்கிப் பெருக்கெடுத்து வரும்" (எ-து.)

(அ-சொ.) கா-பூந்தோட்டம். மரு-வாசனை. குழல்-கூந்தல். மின்னார்-மின்னல் ஒளி படைத்த பெண்கள். மயல் - காம மயக்கம். சண்டமாருதம் - பெருங்காற்று. புயல்காற்று. இடும்பை-துன்பம். செருக்காது-திமிர் கொள்ளாமல். ஒருக்கால்-ஒருமுறை.

(இ-கு.) நல்இன்பம் என்னும் சொல் பெருக்காகும் ஓங்கிடும் எனும் ஒரு சொற்களுக்கும் இடை நின்று இரண்டிற்கும் பொருள் இயைய அமைதலின், இஃது இடைநிலைத் தீபக அணி எனப்படும்.

(வி-ரை.) தேர்ந்து எனும் சொல்லால் சிவாயநம என்னும் மந்திரத்தைக் குரு மூலமாக உணரவேண்டும் என்பதை உணரவும். சிவாயநம என்று சொல்வதால் இன்பம் பெருக்காகும் ஓங்கும் என்பது முன்னுள்ள பாடல்களில் விளக்கப்பட்டுள்ளது. ஆண்டுக் காணவும்.

சிவஞான போதம் ஒன்பதாவது நூல்பா பஞ்சாட்சர மந்திரம் ஓத வேண்டும் என்பதை எடுத்து மொழிகிறது. அந்நூற்பா.

**உனக்கண் பாசம் உணராப் பதியை**
**ஞானக் கண்ணினில் சிந்தை நாடி**
**உராத்துனைத் தேர்த்தெனப் பாசம் ஒருவத்**
**தண்ணிழலாம் பதிவிதி எண்ணும்அஞ் செழுத்தே"**

என்பது. இதன் திரண்ட பொருள்,

"ஆன்ம ஞானத்தாலும் பாச ஞானத்தாலும் இறைவனை உணரமுடியாது. குரு உபதேசத்தால் ஞானக் கண்ணைப் பெற்றால்தான் இறைவனைச் சிந்தித்துக் காண முடியும். அப்போதுதான் உலகப் பாசம் பேய்த்தேர்ப் போன்றது என்னும் உணர்ச்சி வரப்பெற்றுப் பாசம் நீங்கப் பெறும். அப்பாசம் ஒழிய ஐந்தெழுத்தை ஆசாரியன் உபதேசம் செய்தபடி ஓதுக. அப்படி ஓதினால் இறைவன் பிறவியாகிய வெம்மை ஒழிய நிழலாக இருந்து அருள் செய்வான்" என்பது.

இந்தப் பஞ்சாட்சரம் தூலம், சூக்குமம் என இரு வகைப்படும். சிவாயநம என்பது சூக்கும பஞ்சாக்கரம். நமசிவாய என்பது தூல பஞ்சாக்கரம், தூல பஞ்சாக்கரத்தை ஓதினால் உலக சுகபோகம் கிடைக்கும். சூக்கும பஞ்சாட்சரத்தை ஓதினால் ஞானம் உண்டாகும். உலக நன்மையும் ஏற்படும். ஆகவேதான் நம் ஐயா ஈண்டுச் சூக்கும பஞ்சாக்கரத்தை ஓதும்படி தம் மனத்துக்கு அறிவுறுத்துகின்றார். இம் மந்திரத்தை உச்சரிக்கும்போது வாய்விட்டுக் கூறாமல் மனத்திலேயே சொல்லிக் கொள்ள வேண்டும். வாய் விட்டுச் சொல்லுவதால் பெரும் பயன் விளையாது. (229)

**மதிக்கண்ணி வேணிப் பெருந்தகை யேநின் மலர்அடிக்குத்**
**துதிக்கண்ணி சூட்டும்மெய்த் தொண்டரில் சேர்ந்துநின் தூயஒற்றிப்**
**பதிக்கண்ணி நின்னைப் பணிந்தேத்தி உள்ளம் பரவசமாக்**
**கதிக்கண்ணி வாழும் படிஅரு ளாய்என் கருத்திதுவே.**

(பொ-ரை.) "சந்திரனாகிய மாலையை அணிந்த சடாபாரத்தையுடைய பெருந்தகையே! உன் மலர் போன்ற திருவடிகளுக்குத் துதித்தலாகிய மாலையைச் சூட்டுகின்ற உண்மைத் தொண்டர் கூட்டத்தில் சேர்ந்து, உன் தூய்மையான திருஒற்றியூரை அணுகி உன்னைப் போற்றி வணங்கித் துதிக்கும் மனம், மகிழ்ச்சி அடையவும் மேல் கதியைக் கருதி வாழவும் உன் திருவருளைப் புரிவாயாக. இதுவே என் கருத்தாகும். (எ-து.)

(அ-சொ.) மதி - சந்திரன். கண்ணி-மாலை, வேணி-சடை. பெருந்தகை-பெருமையும், தகுதியும், வாய்ந்த இறைவன். தூய-பரிசுத்தமான. அண்ணி-நெருங்கி. ஏத்தி-துதித்து. கதி-உயர்நிலை. கணணி-கருதி.

(இ-கு.) பெருந்தகை, அன்மொழித்தொகை. மலர் அடி, உவமத்தொகை. தூய, குறிப்புப் பெயர் எச்சம். பதிக்கு+அண்ணி எனப் பிரிக்க.

(வி-ரை.) இறைவன் தலையில் சூடி இருக்கும் சந்திரன் தலை மாலைபோல இருத்தலின், அதனை மதிக்கண்ணி என்பர். அப்பரும், "மாதர்ப் பிறைக்கண்ணியானை" என்று கூறுதல் காண்க. துதிக்கண்ணி என்பதற்கு வாயால் போற்றுதலாகிய மாலை என்றும், துதித்தற்குரிய பாமாலை என்றும் பொருள் காணலாம்.

பட்டினத்தடிகள் இத் திருஒற்றியூர்ச் சிறப்பை,

**"கண்டங் கரியதாம் கண்மூன் றுடையதாம்**
**அண்டத்தைப் போல அழகியதாம்-தொண்டர்**
**உடல்உருகத் தித்திக்கும் ஓங்குபுகழ் ஒற்றிக்**
**கடல்அருகே நிற்கும் கரும்பு"**

என்றும்,

**"ஓடுவிழுந்து சீப்பாயும் ஒன்பத வாய்ப் புண்ணுக்**
**கிடுமருந்தை யான்அறிந்து கொண்டேன் - கடுவருந்து**
**தேவாதி தேவன் திருஒற்றி யூர்த்தெருவில்**
**போவார் அடியின் பொடி"**

என்றும் புகழ்ந்துள்ளனர். இன்னோர் அன்ன சிறப்புக்கு இத்தலம் உரியது ஆதலின், "தூய ஒற்றிப்பதி" எனப்பட்டது.

பிரமன் பத்மகற்பப் பிரளயகாலத்தில் இறைவன் திருவருள் பெறத் தவம் புரிந்தனன். அவன் யோகாக்கினி மத்தியில் தவம் இருந்தபோது இறைவன் விசித்திரமான பலகை வடிவோடு தோன்றி அவ்வக்கினியே கோயிலாக அமைய வீற்றிருந்து பிரளய வெள்ளத்தை ஒற்றிப்போகச் செய்தமையின் இத்தலம் ஒற்றியூர் என்னும் பெயர் பெற்றது. வாசுகி என்னும் பாம்பு இறைவரைப் பூசித்தது. அதனைத்தன் திருமேனியில் ஐக்கியம் செய்து கொண்டனர். அதனால் படம் பக்கநாதர் எனும் பெயரைப் பெற்றுச் சிவபெருமான் திகழ்கின்றார். ஏலேல சிங்கருக்கு மாணிக்கம் தந்தமையின் மாணிக்கத்தியாகர் எனப்படுகின்றார். இது சுந்தரர் சங்கிலியாரை மணந்த தலம். கலியநாயனார் திருவிளக்குத் தொண்டு செய்து முத்திபெற்ற தலம். பட்டினத்தடிகட்குப் பேய்க் கரும்பு தித்தித்த இடம். அவரும் முத்திபெற்ற தலம். இத்தலத்தில் அப்பர் பெருமானார்க்கும் பட்டினத்தடிகட்கும் தனித்தனி ஆலயங்கள் உண்டு. நம் வள்ளலார்க்கும் அண்மையில் உண்டான சிறந்த ஆலயம் ஒன்று உண்டு. இவ்வாலயங்கள் திருஒற்றியூர்க் கோயிலுக்குக் கிழக்கே ஒருகல் தொலைவில் உள்ளன. நம் ஐயாவின் தலை மாணாக்கராகிய தொழுவூர் வேலாயுத முதலியார் சமாதியும் இருப்பதாகத் தெரிகிறது.

இத்தலத்து இறைவர், படம்பக்கநாதர் தியாகர், புற்றிடம் கொண்டார் என்னும் பெயருடனும், இறைவியார் வடிவுடைநாயகி என்னும் பெயருடனும் விளங்குகின்றனர். இத் தலத்திற்கு அப்பர், சுந்தரர், சம்பந்தர் பாடிய மொத்த திருப்பதிகங்கள் எட்டு.

இத்தலம் சென்னையிலிருந்து வடக்கே ஐந்துகல் தொலைவில் உள்ளது. பஸ் போக்கு வரவு உண்டு. (230)

**இரைஏற்று துன்பக் குடும்ப விகார இருள்கடலில்**
**புரைஏற்று நெஞ்சம் புலர்ந்துநின் றேனைப் பொருள்படுத்திக்**
**கரைஏற்ற வேண்டும்என் கண்ணே பவத்தைக் கடிமருந்தே**
**திரைஏற்ற செஞ்சடைத் தேவே அமரர் சிகாமணியே.**

(பொ-ரை.) "என் கண்ணே! என் பிறப்பாகிய நோயை ஒழிக்கும் மருந்தே. அலைகளைக் கொண்ட கங்கை ஆற்றைச் சடையில் தரித்துக்கொண்ட செஞ்சடை யுடைய தேவனே! தேவர்களின் முடிமணியே! உணவை உண்டு துன்பம் நிறைந்த சமுசாரமாகிய கவலையுடைய இருள் கடலில் பொய் நிறைந்த உள்ளத்துடன் வாட்டம் கொண்டு நின்ற என்னையும் ஒரு பொருளாகக் கருதி இன்பக் கரையில் ஏறற் வேண்டும்". (எ-து.)

(அ-சொ.) பவம் - பிறப்பு. கடி-ஒழிக்கும். திரை-அலை (ஈண்டு கங்கை ஆறு). அமரர் - தேவர். சிகை-முடி. இரை-உணவு. விகாரம்-கவலை. புரை-பொய். புலர்ந்து-வாடி.

(இ-கு.) திரை, சினை ஆகுபெயர், சிகை+மணி.

(வி-ரை.) மெய் அடியவர்கள் எல்லாம் பிறப்பு எடுப்பதற்குப் பெரிதும் அஞ்சுவர். சுந்தரர் இறைவனை, "அறவா உனை வேண்டிக்கொள்வேன், இனிப் பிறவாமையே" என்று வேண்டுவதும் இது குறித்தே ஆகும். தாயுமானவர் பிறப்பு இறப்புக்கு அஞ்சி இறைவனை நோக்கி,

**"வஞ்சநமன் வாதனைக்கும் வன்பிறவி வேதனைக்கும்**
**அஞ்சே உனைஅடைந்தேன் ஐயா பராபரமே"**

என்று கூறி அடைக்கலம் புகுதல் காண்க. இவ்வாறு அஞ்சுதற்குரிய பிறப்பாகிய நோயை ஒழிப்பவன் சிவபெருமான் ஒருவனே ஆதலின், "கடிமருந்தே" என்று விளிக்கப்பட்டான். தேவர்கள் இறைவனை வணங்கும்போது அவனது திருவடியில் தம் முடி தோய வணங்குதலின் அவர்கள் முடிக்கு இறைவன் திருவடி மணியாக இருத்தலின், "சிரோமணியே" எனப்பட்டனன். கரை என்பது ஈண்டு முத்திக் கரையையே ஆகும். பிறப்பாகிய வெள்ளத்தில் தத்தளிக்கின்றவர்கட்கு இறைவன் திருவடி தெப்பமாக இருந்து அவர்களை முத்திக் கடலில் சேர்ப்பிக்கும். இந்தக் கருத்து,

**“பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்**
**இறைவ னடிசேரா தார்”**

என்னும் திருக்குறளில் அடங்கி இருத்தலைக் காண்க. இறைவனே கரை ஏற வைப்பவன் என்பதைச் சிவஞான சுவாமிகள், “புலிமிசை மேவும் கரை ஏறவிட்ட முதல்வா! உன்னை அன்றிக் கதியுண்டாமோ?” என்று பாடியுள்ளனர்.

இறைவனுக்கு அன்பர்களை முத்திக் கரையில் சேர்ப்பிக்கும் பேராற்றல் இருப்பதுபோல், அவன் திருவருள் பெற்ற அடியவர்களுக்கும் அவ்வாற்றல் உண்டு. இந்த உண்மையினைச் சிவப்பிரகாசர் சுந்தரரை நோக்கி,

**“வாங்குசிலை புரையும்உடல் எனும்குளத்தில் மூல**
**மலம்எனும்ஓர் வெங்கரவின் பகுவாயி னின்றும்**
**தீங்கில்உயிர் எனும்பனவக் குலமகனை ஆதி**
**திரோதாயி என்னும்ஒரு வெந்திறல்கூற் றுவதனால்**
**ஓங்குநா தாந்தமெனப் பெயரியஅக் கரையில்**
**உமிழ்வித்துச் சிவம்எனும்ஓர் தந்தையொடும் கூட்டாய்**
**கோங்கமுகை கவற்றும்இள முலைப்பரவை மகிழக்**
**குண்டையூர் நெல்மலைமுன் கொண்டஅருள் கடலே”**

என்று வேண்டுவதனால் விளங்குகிறது.

இக் கருத்துகளை எல்லாம் உளத்தில் கொண்டே நம் வள்ளலார், “கரை ஏற்ற வேண்டும்” என்று இறைவனை நோக்கி வேண்டுவார் ஆயினார். (231)

**போற்றிஎன் ஆவித் துணையேஎன் அன்பில் புகும்சிவமே**
**போற்றிஎன் வாழ்வின் பயனேஎன் இன்பப் புதுநறவே**
**போற்றிஎன் கண்ணுள் மணியேஎன் உள்ளம் புனைஅணியே**
**போற்றிஎன் ஓர்பெரும் தேவே கருணை புரிந்தருளே.**

(பொ-ரை.) “என் உயிர்க்குத் துணைவனே வணக்கம். என் அன்பில் புகும் சிவமே வணக்கம். என் வாழ்வின் பயனே வணக்கம். என் இன்பத்தேனே வணக்கம். என் கண்ணுள் விளங்கும் மணியே வணக்கம். என் மனத்தை அலங்கரிக்கும் அணிகலமே வணக்கம். என் ஒப்பற்ற மகாதேவனே வணக்கம். நீ எனக்குக் கருணை செய்வாயாக” (எ-து.)

(அ-சொ.) போற்றி-வணக்கம். நறவு-தேன். புனை-அலங்கரிக்கும். அணி-ஆபரணம், நகை. ஓர்-ஒப்பற்ற.

(இ-கு.) புனை அணி, வினைத்தொகை.

(வி-ரை.) வடமொழியில் இறைவன் திருப்பெயர்க்கு பின் நம: என்று சொல்லுவதுபோல் தமிழில் இறைவன் திருப்பெயர்க்குப் பின் போற்றி என்று கூறி அர்ச்சனை வழிபாட்டினை நாமே செய்யலாம். இவ்வாறு தமிழிலும் அர்ச்சனை செய்ய வேண்டும் என்ற கருத்தில்தான் மாணிக்கவாசகர் தம் திருவாசகத்தில் என்ற கருத்தில்தான் மாணிக்க வாசகர் தம் திருவாசகத்தில் போற்றித் திருவகவலையும்,

இடை இடையே பல போற்றிப் பாடல்களையும் பாடி அமைத்துள்ளனர். இந்த முறையினைப் பின்பற்றியே திருநாவுக்கரசரும் போற்றித் திருத்தாண்டகங்களைப் பாடியுள்ளனர்.

போற்றி என்னும் சொல்லைத் திருப்பெயருக்குப் பின்னே சொல்வது பெரும்பான்மை என்றாலும். முன்னே அமைத்துப் பாடுகின்ற முறையும் உண்டு என்பது மாணிக்கவாசகர் பாடியுள்ள பாடல்களின் வழி நமக்குத் தெரியவருகிறது.

**"போற்றியோ நமச்சிவாய புயங்கனே மயங்கு கின்றேன்**
**போற்றியோ நமச்சிவாய புகலிடம் பிறிதொன் றில்லை**
**போற்றுயோ நமச்சிவாய புறமெனைப் போக்கல் கண்டாய்**
**போற்றியோ நமச்சிவாய சயசய போற்றி போற்றி"**

**"போற்றிஇப் புவனம் நீந்திக் காலொடு வானம் ஆனாய்**
**போற்றிஎவ் உயிர்க்கும் தோற்ற மாகிநீ தோற்றம் இல்லாய்**
**போற்றிஎல் லாஉ யிர்க்கும் ஈறாய்ஈ றின்மை ஆனாய்**
**போற்றிஐம் புலன்கள் நின்னைப் புணர்கிலாப் புணர்க்கையானே"**

என்னும் திருவாசகப் பாடல்களைக் காண்க.

இவ்வாறு மணிமொழியாரை அடி ஒட்டியே நம் வள்ளலார் போற்றி என்னும் சொல்லை முன்னர் வைத்து இப்பாட்டைப் பாடியுள்ளனர்.

உலகம் ஐந்து மண்டலங்களாக அமைந்துள்ளது. அவை நிவிர்த்தி கலா மண்டலம் (இதற்குத் தலைவர் பிரமன்) பிரதிட்டா கலாமண்டபம், (இதற்குத் தலைவர் திருமால்.) வித்தியா கலா மண்டலம். (இதற்குத் தலைவர் உருத்திரர்.) சாந்தி கலா மண்டலம், (இதற்குத் தலைவர் மகேசுவரர்.) சாந்திய தீத கலா மண்டலம், (இதற்குத் தலைவர் சதாசிவம்) என்பன. இம் மண்டலங்கள் உள்ளுக்குள் பல பிரிவுகளைக் கொண்டுள்ளன. அவற்றின் விரிவு இங்கு வேண்டா. இம் மண்டலங்களுக்கும் மேலே உள்ளது பரவெளியாகும். இதுவே சிவபரத்திற்கு இருப்பாகும். இவரிடமே எல்லா மண்டலங்களும் மண்டலங்களுக்குரிய தலைவர்களும் ஒடுங்கி மீண்டும் தோற்றுவிக்கப்படுவர். இவ்வாறு ஒடுக்கித் தோற்றுவிப்பவரைச் சிவஞானபோதம் முதல் நூற்பாவில் ஒடுங்கி என்னும் சொல்லால் குறித்துள்ளது. இந்த ஒடுங்கியாம் சிவத்தையே நம் ஐயா ஈண்டு, "அன்பில் புகும் சிவமே"என்று குறிப்பிட்டுள்ளனர். (232)

இத்துடன் அம்மை அப்பருடைய திருவருள் துணையால் திருவருள் முறையீட்டிற்குரிய விரிவுரை ஒருவாறு முற்றுப்பெறுகிறது.

**திருச்சிற்றம்பலம்**

- - - - -